உ

பிர்மமே ஸத்யம்

சிவமயம்

வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு

ஸ்ரீ சற்குரு அமலானந்த சுவாமிகளின்
68 ஆம் ஆண்டு குருபூஜை பெருவிழா மலர்



திரட்டியவர்:
P.C. இராமலிங்கம்

வெளியீடு - 2018

ஸ்ரீ சற்குரு அமலானந்த ஞானபீடம்
சின்னமலை, சென்னை - 15.

PCR

பிரஹ்மமே சத்தியம்

வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு

திரட்டியவர்:

P.C.இராமலிங்கம்,

வேதாந்த சபை, குடியாத்தம்.

வெளியிடுபவர்:

ஸ்ரீ சற்குரு அமலானந்த ஞானபீடம்

சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை-15
9884135276

பதிப்புரை

உபநிடதங்கள், அத்வைத கருத்துக்களின் கருவூலம் என்றால் மிகையாகாது. உருவமாக காணப்படும் இவ்வுலகம் அருவத்திலிருந்து உண்டான ஒரு தோற்றம் மாத்திரமே என்பதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் வேதங்களும் உபநிடதங்களும் கூறியுள்ளன என்பதும் அக்கருத்துக்கள் இன்றைய விஞ்ஞான முடிபுகளோடு ஒத்துப்போகின்றன என்பதும் வியப்பிற்குரியதே. மனித வாழ்வின் இறுதியான நோக்கம் பொய்யான உலகின் மீது கொண்டுள்ள பற்றுகளை அறிவு பூர்வமாக விசாரித்துக் களைந்து, என்றும் தன் இயல்பான பூரணத் தன்மையின் ஆனந்தத்தில் நிலைப்பதுவே ஆகும். இதுவே மோட்சம் எனப்படும். வேதாந்தத்தின் இந்த அடிப்படை உண்மையை நாம் உணர, அனேக நூல்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து நம்மை படிப்படியாக அழைத்துச் செல்கின்றன. இந்நூல்கள் வடமொழியில் தோன்றி பின்னர் தமிழ் மொழி வாயிலாகவும் பயிலப் பெருகின்றன. ஆயினும் இவற்றில் உள்ள தத்துவக் கலைச்சொற்களுக்கு பொருள் எளிதாக புலப்படுவதில்லை. பல்லாண்டு காலம் இந்நூல்களைப் பயின்ற பின்னர் அல்லது நேரடியாக தக்க குருவினை அண்டிக் கேட்டால் ஒழிய இக்கலைச் சொற்களுக்கு எளிதில் பொருள் விளங்காது என்னும் நிலைமையில், ஆரம்ப நிலை முமுட்சுக்கள் இத்தகைய நூல்களைக் கற்கும்போது மிகவும் இடர்ப்படுகின்றனர் என்பது உண்மையே.

இந்நிலையில் வேதாந்தச் சொற்களுக்கு சரியான பொருளை அறிந்து கொள்ளும் வண்ணம் வேதாந்தக் கலைச்சொல் தொகுப்பு நூல் ஒன்று வெளியிட வேண்டும் என்ற விருப்பத்தினை முதன் முதலாக சென்னை பாடிய நல்லூர், தீர்க்கதரிசி கு.தியாகராஜன் சுவாமிகள், நம் பீடத்தில் நடந்த ஒரு சத்சங்க நிகழ்ச்சியில் வெளியிட்டார். அவர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேதாந்த சபைகளையும் ஒன்று கூட்டி ' கைவல்ய நவநீத மகாநாடு ' என்னும் பெரிய விழாவை சென்னையில் நடத்திக் காட்டிய அருளாளர். கணபதி பதிப்பகம் என்னும் ஒரு பதிப்பகத்தை நிறுவி அதன் மூலம், வேதாந்த, தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றை வெளியிட்டு அனைத்தையும் இலவசமாகவே வழங்கி மகிழ்ந்தவர். அவர் யதார்த்த சொருபம் அடைந்த பின்னர் அவரது துணைவியார் திருமதி பாலாமணி அம்மையாரும் இத்தகைய ஆன்மீகப்

பணிகளில் தாம் கொண்டுள்ள ஈர்ப்பின் காரணமாக, இந்நூல் வெளிவருவதற்கு இயன்ற பொருளுதவி செய்துள்ளார்கள்.

தீர்க்கதரிசி அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம், குடியாத்தம் திரு P.C இராமலிங்கம் அவர்கள் இந்த வேதாந்த கலைச்சொல் தொகுப்பினை **'வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு '** என்னும் நூலாகத் தொகுத்து அளித்துள்ளார். வேதாந்த சூடாமணி நூலை ஆதாரமாகக்கொண்டு நாநாஜீவவாதக்கட்டளை, வாசுதேவமனனம், விசாரசாகரம் போன்ற பல நூல்களிலிருந்தும் செய்திகளைத் தொகுத்து இத்தொகுப்பினை ஆக்கியுள்ளார். இவர், பிரமவித்யா பீடம், பாடியநல்லூர் மூலம் வெளிவரும் ' தத்போதம் ' என்னும் மாதாந்திர இதழில் *' கீதை காட்டும் பாதை '* என்னும் தலைப்பில் 'ஸ்ரீமத்பகவத் கீதை' என்னும் நூலுக்கு விரிவாக உரை எழுதிவருபவர். கைவல்ய நவநீத நூலுக்கு, முன்னோர் கண்ட உரைகளை எளியமுறையில் தொகுத்து ஒரு உரை நூலை இவர் ஆக்கித் தந்து, அதனை நம் அமலானந்த பீடம் முன்னரே வெளியிட்டுள்ளது.

வேதாந்தம் பயிலும் மாணாக்கர்கள் அனைவருடைய கையிலும் **'வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு '** என்னும் இந்நூல் இருந்தால் அவர்களுக்கு இது பெரிதும் பயன்படும் என்று கருதி இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். மேலும் இத்துறையில் நம்மை வழி நடத்திய தீர்க்கதரிசி கு. தியாகராஜன் அவர்கள் எண்ணத்தை ஈடேற்ற எங்களுக்கு ஒரு வாய்ப்பினை அருளிய இறைவன் கருணையைப் போற்றுகின்றோம்.

M. மேகநாதன்

ஸ்ரீ சற்குரு அமலானந்த ஞானபீடம்,

சென்னை – 15.

முகவுரை

மனிதனாகப் பிறந்துவிட்டால் உயர்ந்த கதியான பிறப்பு இறப்பு இல்லா நிலையை அடைய இரண்டு வழிமுறைகள் தான் உள்ளன. 1.செயலின் வழி 2.செயலின்மையின் வழி. பக்தியோகம், கர்மயோகம், இராஜயோகம் ஆகிய மூன்றும் செயல் வழி. ஞானமார்க்கம் செயலின்மை வழி. ஞானமார்க்கம் என்கிற அத்வைத வேதாந்தத்தில் ஈடுபடுவதற்கே முன்வினைப் பயனும், தீவிர ஆர்வமும் தேவை. ஏனெனில் வேதாந்தம் என்பது முடிந்த முடிவானது. இதற்கும் மேலாக ஒரு தத்துவம் சொல்கின்ற மார்க்கம் இல்லை. வேதாந்தத்தில் தத்துவங்களை விளக்கி பல நூல்கள் பல நூறாண்டுகளுக்கு முன்பாகவே எழுதப்பட்டுள்ளது. அவைகளில் சொல்லாத, விளக்காத ஒன்றைப் புதியதாக இக்காலத்தில் கண்டெடுக்க முடியாது. சில துறைகளில் இப்பொழுதெல்லாம் பி.எச்.டி ஆய்வு செய்கின்றார்கள். ஆனால் இதில் ஆய்வு மேற்கொள்வதற்கே இடமில்லாமல் அந்தக் காலத்திலேயே தர்க்க ரீதியாகவும், மற்ற வழிமுறையினர்கள் வாதாடினாலும் இறுதியாக மறுப்பு சொல்ல முடியாத வகையிலும் நூல்கள் எழுதப்பட்டுவிட்டன.

இத்தகைய வேதாந்த தத்துவ வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிந்து கொள்கின்றவாறு அகராதி ஒன்று தொகுக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு முதன் முதலில் வித்திட்டவர் தீர்க்கதரிசி தியாகராஜ சுவாமிகள் ஆவார். இவர் தமிழகம் முழுவதுமுள்ள வேதாந்த சபைகளை ஒருங்கிணைத்து வேதாந்திகளுக்கு என்றொரு மாநாடு நடைபெறக் காரணகர்த்தாவாக இருந்தவர். 'கைவல்ய நவநீத மாநாடு' என்ற பெயரில் முதல் இரு மாநாடுகளைச் செவ்வையாக நடத்திக் காண்பித்தவர். தமிழ் இலக்கியம், வேதாந்தம், கவிதைகள் என்று பல்வேறு துறைகளில் பல நூல்களைப் பதிப்பித்து இலவசமாகக் கொடுத்துள்ளார். அன்னார் யதார்த்த சொரூபம் அடைவதற்கு ஓரிரண்டு மாதங்களுக்கு முன்பாக சென்னை சைதாப்பேட்டை அமலானந்த பீட சத்சங்கத்தில் நீண்ட உரையாற்றினார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேசிய அந்த உரை தான் அனேகமாக அவருடைய கடைசி உரையாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அதில் பேசும் போது, மேடையில் இருந்துகொண்டே சிறியேனைப் பார்த்து "வேதாந்த அகராதி" ஒன்றைத் தயார் செய்யுமாறு அன்பு வேண்டுகோள் விடுத்தார். உரை முடிந்ததும் அவரிடம் "என்னால் முடியாத

ஒன்றைச் சொல்கின்றீரே, வேதாந்திகள் பலர் இருக்க என்னைக் காட்டி சொல்வது சரியாகப்படவில்லை" என்றதற்கு "உன்னால் முடியும், எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். வேதாந்தத்தில் கரைகண்டவர்களும், வித்தகர்களும் இருக்க 'இளங்கன்றான நமக்கு இப்பணி ஒத்து வராது' என்று என்னைப் பயம் வந்து சூழ்ந்து கொண்டது. பின்பு அன்னார் யதார்த்த சொருபம் அடைந்து விட்டார். அதன்பிறகு அகராதியைப் பற்றிய நினைவு வரவில்லை. இது குறித்து எங்களுடைய வேதாந்த சபையில் ஒருசமயம் பேச்சு எழுந்த போது, 'அகராதியைத் தொகுத்தால் இக்காலத்து மாணாக்கர்களுக்கு மட்டுமல்ல, பிற்காலத்தவர்களுக்கும் உபயோகமாக இருக்கும்' என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.

அதன்பிறகே, வேதாந்த வார்த்தைகளுக்கு உரிய அர்த்தம்-வரையறையை [definition] முடிந்த அளவுக்கு தொகுக்கும் பணியைத் துவக்கினேன். வேதாந்தம் என்பது சமுத்திரம். ஆழமும் கரையும் காண முடியாதது. இப்பணி கொசுவானது வங்கக் கடலில் புறப்பட்டு கடல்மார்க்கமாகப் பறந்து சென்று அரபிக் கடலைச் சுற்றி வர எண்ணியது போன்றதாகும். திருவருளும் குருவருளும் ஒருங்கிணைய சிறியேன் இந்த நூலினை முடித்து, எனது ஞானாசிரியர் வாலாசா தவத்திரு.ப.திருவேங்கடம் சுவாமிகளிடம் காண்பித்தேன். அவர் வேதாந்த மாணக்கர்களுக்கு மட்டுமல்ல, வேதாந்தம் போதிப்பவர்களுக்கும் உதவும் வகையில் அமைந்துள்ளது என்றார். இந்த நூலில் காணப்படும் அர்த்தம், நாநா சீவவாத கட்டளை, வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம், விசார சந்திரோதயம், வாசுதேவ மனனம், விசார சாகரம், தஞ்சை பிரமானந்த சுவாமிகள் உரை எழுதிய பஞ்சதசியின் டிப்ணி, தத்துவானுசந்தானம், விருத்திப் பிரபாகரம், வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா ஆகிய வேதாந்த நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளவை ஆகும். அந்த நூல்களிலிருந்து அப்படியே மாற்றம் செய்யாமல் தொகுத்தது மட்டுமே சிறியேனின் பணி. வேறொன்றும் பெரியதாகச் செய்து விடவில்லை. எந்தவொரு வேதாந்த சொற்களையும் எளிமைப்படுத்தவோ நடைமாற்றம் செய்யவோ முயற்சிக்கவில்லை. காரணம் அந்த நூல்களை எழுதியவர்கள் ஞானமடைந்த குருமார்கள். அவர்களிடமிருந்து வெளிப்பட்டவை மிகவும் பொருத்தமான சொற்கள் [opt words]. அதில் நுழைந்து ஏதாவது செய்யப்போக, அர்த்தம் மாறுபட்டு விடலாம் என்ற அச்சம். இந்நூல் முழுமைபெற்றது அல்ல. ஓரளவுக்குத் தொகுக்கப்பட்டதே. விடுபாடுகள் இருக்க வாய்ப்பு உள்ளது.

சிறியேனும் கற்றுக்குட்டி அளவில் தான் இருக்கிறேன். அதனால் இதில் தவறுகள் காணப்படின் வேதாந்திகளும் குருமார்களும் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இந்நூல் தொகுக்கப்பெறுவதற்குக் காரணமாக அமைந்தவர் சென்னை தீர்க்கதரிசி தியாகராாசன் சுவாமிகளே. அன்னாரது துணைவியார் திருமதி பாலாமணி அம்மையாரும் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார். மிகச் சாதாரணமான ஞானமின்றிய சிறியேன் தொகுத்த 'வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு' என்ற இந்த நூலினைச் சிறந்த முறையில் பிரசுரம் செய்பவரும், வேதாந்தம் படித்தோமா கேட்டோமா என்று காலம் கழிக்காமல் மாதந்தோறும் சத்சங்கம் நடத்தி பலரும் வேதாந்தம் கேட்பதற்கு நேரத்தையும் செல்வத்தையும் செலவழிப்பவரும், ஏற்கெனவே பல அரிய வேதாந்த நூல்களை வெளியிட்டவருமான அடக்கத்திலும் ஒருங்கிணைத்து செயல்படுவதிலும் சிறந்தோங்கும் சென்னை சைதாப்பேட்டை அமலானந்த பீடம் தவத்திரு மேகநாதன் மற்றும் ஶ்ரீதரன் சுவாமிகளுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று திகைத்து மலைத்து நிற்கின்றேன். அன்னாருக்கு என்னுடைய இருதய பூர்வமான நன்றியைச் சமர்ப்பித்து, அன்னார் வாழ்விலும், ஆன்மீக நெறிமுறைகளிலும் மேன்மேலும் ஓங்கி வளர இறைவனும், குருநாதர்களும் அருள் புரிய நெஞ்சாரப் பிரார்த்திக்கின்றேன்.

குடியாத்தம், வேலூர் மாவட்டம்
அலைபேசி: 99409-27133

P.C. இராமலிங்கம்,
வேதாந்த சபை.

கோவிலூர் மடாலயம்

04565-236846 கோவிலூர்-630 307

2-9-2018

கோவிலூர் ஆதீனம்

சீர் வளர் சீர் மெய்யப்பஞான தேசிக சுவாமிகளின் ஆசியுரை

இன்று நூல் வடிவில் நமக்குக் கிடைக்கும் வேதங்கள, உபநிடதங்கள் ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய அனைத்தும் முதன் முதலில் வடமொழியிலேயே தோன்றின.

ஆதியில், ' எழுதாக்கிளவி ' என்று அழைக்கப்பட்ட வேதங்கள், உபநிடதங்கள் அனைத்தும் சமஸ்கிருதத்திற்கும் முந்திய வேதமொழியில், குருவிடமிருந்து சீடர்களால் செவி வழியாக கேட்டு ஓதப்பட்டு குருபரம்பரையாகவே வந்து, நெடுங்காலத்திற்குப் பின்னர் அவை வடமொழியில் நூல் வடிவில் ஆக்கம் பெற்று வெளிவந்தன.

இதனாலேயே வேத, வேதாந்த, ஆகமங்களை வடமொழி வாயிலாகவே கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே வடமொழி கற்றவர்கள்தான் அவற்றை கற்கும் உரிமை உள்ளவர்கள் என்றும் அம்மொழியையும் குறிப்பிட்ட இனத்தார்கள் மட்டுமே கற்க உரிமை உடையவர்கள் என்றும், அத்தகைய வடமொழியில் அமைந்துள்ள வேத ஆகமங்களை பிற இனத்தவர் கற்பது 'தோஷம்' என்றும் கருதப்பட்டது. இக்காரணம் பற்றியே வடமொழி சாத்திர நூல்களைக் கற்றோரை சமுதாயத்தில் உயர்ந்தோர் என்றும் ஏனையோரைத் தாழ்ந்தோர் என்றும் கருதப்படும் வழக்கும் தோன்றியது. இவ்வாறான சூழ்நிலையில்தான்,

தென்னகத்தில், ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் அவர்களால் நிறுவப்பட்ட சிருங்கேரி சங்கர மடத்தில் குருமஹா சன்னிதானமாக வீற்றிருந்து, வேறுபாடின்றி அனைவர்க்கும் வேத வேதாந்தங்களைக் கற்பிப்பவராக ஸ்ரீமத் வித்தியாரண்ய சுவாமிகள் தோன்றினார். அவரிடம் வேதாந்த நூல்களை வடமொழியில் சிரவணம் செய்து அவை அனைத்தையும் தமிழில் மொழி பெயர்க்கவும், விளக்கவுரைகள் எழுதவும் ஆற்றல் பெற்ற மாணவர்கள் பலர் தோன்றினர். இத்தகைய ஸ்ரீமத் வித்தியாரண்ய சுவாமிகளிடம் பாடம் பயின்றவர்கள் பரம்பரையில் வந்தவர்களே 1. சுப்ரமணிய தேசிகர், 2.நயிந தேசிகர் 3 அழகப்ப தேசிகர் 4 வீரபத்திர தேசிகர் 5 முத்தைய தேசிகர் 6 உகந்தலிங்க ஞான தேசிகர் 7 முத்துராமலிங்க ஞான தேசிகர் போன்ற கோவிலூர் மடத்தைச் சார்ந்த ஆச்சார்யர்கள் ஆவார்கள். ஸ்ரீ தத்துவராயர், சிவஞான வள்ளலார் போன்றோர்கள் தமிழில் வேதாந்த நூல்களை இயற்றியதும் இக்காலத்தை ஒட்டியே தான் நிகழ்ந்தது என்றும் கருதலாம். இவர்களில் பலர் வேதாந்த மூல நூல்கள் அனைத்தையும் வடமொழி வாயிலாகவே சிரவணம் செய்து, அழகிய தமிழில் எளிய நடையில் அத்வைதக் கருத்துக்கள் கொண்ட வழி நூல்களையும், உரை நூல்களையும் ஆக்கியளித்தனர். தமிழில் விளங்கும் தலை சிறந்த தத்துவ நூலான கைவல்ய நவநீதத்தை இயற்றியருளிய ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகளின் குருவான ஸ்ரீமத் நாராயண தேசிகரும், தஞ்சையைச் சார்ந்த சிற்றூரான நன்னிலத்தில் இருந்து வெகு தொலைவில் இருந்த சிருங்கேரி சென்று ஸ்ரீமத் வித்தியாரண்யரிடம் பாடம் பயின்று திரும்பிய சீடரேயாவார்.

இவ்வாறு காலப்போக்கில் உருவாகிய தமிழ் வேதாந்த நூல்கள் 18,19 ஆம் நூற்றண்டுகளிலே சேகரிக்கப்பட்டு அவற்றுள் 16 நூல்களைத் தேர்ந்தெடுத்து ஒரு முறையான பாடத்திட்டத்தை உருவாக்கி, கோவிலூர் மரபு ஆச்சார்யர்கள், சீடர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினர். இதுவே இன்றும் கோவிலூர் மரபு வேதாந்தக் கல்வித் திட்டம் என்று சிறப்புடன் போற்றப்பட்டு விளங்குகின்றது.

18 19ம் நூற்றாண்டுகளிலும் அதற்கு முன்னரும் வாழ்ந்த, தமிழில் வேதாந்த நூல்களை இயற்றிய சாத்திர நிபுணர்கள் அனைவருமே வடமொழியையும் நன்கு பயின்று அம்மொழியில் வல்லவர்களாகவே விளங்கினர், அவர்கள் தங்களுக்குள்ளும் பிறமொழியாளர்களிடத்திலும் வடமொழியிலேயே பேசுவதையும், வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதுவதையும் வழக்கமாகக்

கொண்டிருந்தனர். அவர்கள், ஆதிசங்கரர் உரையை ஒட்டியே தமிழில் வேதாந்த நூற்களை எழுதினாலும், அவர்களுடைய உரை நுல்களும் செய்யுள் வடிவ மொழி பெயர்ப்புகளும் ஆதிசங்கரரின் பாஷ்யத்திற்கும் அவர் இயற்றிய பிரகரண நூற்களுக்கும் இணையாகவே விளங்கின.

இத்தகைய வேதாந்த நூல்களை தமிழில் இயற்றினாலும் வேதாந்தத்தின் நுண்ணிய கருத்துகளைக் கொண்ட தத்துவக் குறியீட்டுச் சொற்கள் (ஆத்மா, பிரமம், உபாதி, மாயை, அவித்தை போன்ற எண்ணிறந்த சொற்கள்) வடமொழிச் சொற்களாகவே அந்நூல்களில் ஆளப்பட்டன. பிற்காலத்தில் பல காரணங்களால் தமிழரிடையே வடமொழிப்பயிற்சி குன்றிய நிலையில், வேதாந்த நூல்களைக் கற்பதிலும், குறிப்பாக மேற்கண்ட தத்துவ குறியீட்டுச் சொற்களுக்குரிய பிரத்தியேகப் பொருளை அறிவதிலும் தமிழ் மொழி மட்டும் கற்றோர்க்கும் மற்றும் ஆரம்ப நிலை முமுட்சுகளுக்கும் இடர்ப்பாடு நேர்ந்தது. ஆகவே இத்தகைய கலைச்சொற்களைத் தொகுத்து அகராதி வடிவில் நூல்கள் வெளிவர வேண்டிய அவசியம் நிலவியது. இத்தேவையை நிறைவு செய்ய 1930 ம் ஆண்டு வாக்கிலேயே கோவிலூர் மரபைச் சார்ந்த ஸ்ரீ காசிகானந்த சுவாமிகள், வேதாந்த பதார்த்த மஞ்ஞரி, வேதாந்த சித்தாந்த முக்தாவலி, வேதாந்த சொற்களஞ்சியம், வேதாந்த பரிபாஷை வேதாந்த சஞ்ஞா போன்ற நூல்களை வெளியிட்டார்கள். இவற்றின் மூலம் பெரும்பாலான வார்த்தைகளின் பொருளைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது.

இதன் பின்னர் இத்துறையில் சில முயற்சிகள் சிறிய அளவில் ஆங்காங்கே நடைபெற்றன எனினும், வெளிவந்த நூல்கள் முமுட்சுகளின் தேவையை நிறைவு செய்வனவாகவும் இல்லை இவ்வகை நூல்கள் எளிதில் கிடைப்பனவாகவும் இல்லை. இந்நிலையில், வேதாந்த மாணவர்களுக்கு உதவவேண்டும் என்னும் பெரு நோக்கில், குடியாத்தம் வேதாந்த சபையைச் சார்ந்த திரு P.C. இராமலிங்கம் அவர்கள், ‘வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு ’ என்னும் பெயரில் இச்சிறந்த நூலை, பல நூல்களில் இருந்தும் தொகுத்து அளித்துள்ளார்கள். இது வேதாந்த தத்துவச் சொற்களுக்கு உரிய பொருளை விரிவாக அறிய முடியாமல் இடர்ப்படுவோருடைய சிரமங்களை பெரிதும் நீக்கும்.

தமிழில் உள்ள வேதாந்த நூல்களை கற்க முனையும் முமுட்சுக்கள் இனி தயக்கம் இன்றி ஆர்வமுடன் இத்துறையில் பயணிப்பர் என்று நம்புகிறோம்.

இந்நூலை முயன்று தொகுத்தளிக்கும் குடியாத்தம் திரு P.C. இராமலிங்கம் அவர்களை நாம் மிகவும் பாராட்டுகின்றோம். அவருடைய ஈடு இணையற்ற உழைப்பிற்கு நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

' வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு ' என்னும் இந்நூல் அனைத்து முமுட்சுகளுக்கும் துணையாக அமையும், அமைய வேண்டும் என்று நம் குருமுதல்வர் கோவிலூர் ஆண்டவர் திருவடி சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

அணிந்துரை

வேதாந்தம் என்று சொல்லக்கூடிய உபநிடதங்களின் முடிவு, ஜீவப்பிரஹ்ம ஐக்ய போதமே என்பது ஆதி சங்கரரால் நன்கு உறுதி செய்யப்பட்ட அத்வைத கோட்பாடு ஆகும். இது ஒரு கோட்பாடு மட்டுமல்லாமல் நன்கு விசாரணை செய்வோரின் அனுபவமுமாகும் என்பதால் இக்கோட்பாடு அனைத்துக் கோட்பாடுகளிலும் சிறந்தது எனப் போற்றப்படுகின்றது. இந்து மதத்திற்கும் மற்றும் அத்வைத சாத்திரத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளவை பிரஸ்தானத்திரயங்கள் என்று சொல்லக்கூடிய, உபநிடதங்கள், பிரம்மசூத்திரம் மற்றும் ஸ்ரீமத் பகவத் கீதை என்னும் மூன்று நூற்களுமாகும். இவையனைத்தும் வடமொழியிலேயே அமைந்துள்ளன. இன்று தமிழில் உள்ள எல்லா வேதாந்த நூல்களும் இவ்வடமொழி நூல்கள் வழி வந்தனவேயாகும். எல்லாவகை தத்துவ நூல்களும் காலப்போக்கில் தமக்கே உரிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ளும் இயல்புடையன. ஒரு சிறிய சொல் அல்லது சொற்றொடர் அந்த தத்துவ சாத்திரத்திற்கே உரிய தனிப்பட்ட விரிவான கருத்துக்களை கொண்டதாக இருக்கும். இவற்றை சங்கேத மொழி, குறியீட்டுச்சொல், கலைச்சொல், பரிபாஷை அல்லது Technical term, jargon என்று பல விதமாகக் கூறுவர். இச்சொற்களை மற்ற மொழிகளில் நேரடி மொழிபெயர்ப்பு செய்தால் அச்சொற்களின் முழுமையான பிரத்தியேகப் பொருளை அறிய இயலாது. மாறாக, அவ்வடமொழிச் சொற்களை அப்படியே பயன் படுத்தினால் எம்மொழியாளரோடு பேசினாலும் இச்சொற்களின் குறிப்புப்பொருள் முழுமையான கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏதுவாக அமையும். எனவேதான் இது போன்ற சொற்களை எந்த மொழி வேதாந்த நூற்களில் ஆயினும் சரி, அவற்றை வடமொழிச் சொற்களாகவே பயன்படுத்துவது வழக்கமாக அமைந்துள்ளது. தமிழில் அமைந்துள்ள வேதாந்த நூல்கள் அனைத்திலும் இவ்வகைச் சொற்கள் நிறைந்து காணப்படுகின்றன. வேதாந்த நூல்களைப் புதிதாகப் பயிலப் புகுவோர்க்கு இவ்வகைச் சொற்கள் சோர்வினைத் தருவது இயல்பு. ஆயினும் நூல்களைப் பயிலப்பயில பொருள் விளக்கம் தானே ஏற்படும். பல பழைய நூல்களில் இத்தகைய சொற்களின் பொருள் விளக்கம் தனி அட்டவணையாக நூலில் இணைக்கப்பட்டும் நூலின் பக்கங்களில் அடிக்குறிப்புகளாக எழுதப்படுவதுமான வழக்கம் இருந்து வந்தது. ஆயினும் வேதாந்த சொற்பொருள் அகராதி என்னும் தனி நூலாக தமிழில் அதிகளவில் பதிப்பிக்கப்படாதது ஒரு குறையாகவே இருந்து வருகிறது.

தமிழில் இயற்றப்பட்ட தலை சிறந்த வேதாந்த நூலாகிய கைவல்ய நவநீதத்திற்கு பல உரை நூற்கள் தோன்றியுள்ளன. அவை மறைந்து போகா வண்ணம் மீண்டும் பதிப்பித்து வேதாந்த மாணவர்கள் கையிலே தவழவிட்ட பெருமை, மறைந்த மனித நேயச்செம்மல், பாடிய நல்லூர் கணபதி பதிப்பக உரிமையாளர்

மற்றும் ஸ்ரீ நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் கைவல்ய நவநீத ஞானப்பெருமன்ற நிறுவனர் கு.தியாகராசன் சுவாமிகள் அவர்களையே சாரும். அவர் செய்ய விரும்பியவற்றுள் எஞ்சிய பணிகளில் ஒன்று, வேதாந்த கலைச்சொற்பொருள் அகராதியாக ஒரு நூலினை வெளியிட வேண்டும் என்பதாகும். '*இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்* ' என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, இப்பணியைச் செய்து முடிக்க அவர், குடியாத்தம் வேதாந்த ஞானசபை திரு P.C. இராமலிங்கம் அவர்களை வேண்டிக் கொண்டிருந்தார். திரு இராமலிங்கம் அவர்களும் அவர் வேண்டுகோளை நினைவிற்கொண்டு, நாநாஜீவவாதக்கட்டளை, வேதாந்த சூடாமணி, வாசுதேவ மனனம், விசாரசாகரம் போன்ற பல நூல்களில் அமைந்துள்ள சொற்பொருள் விளக்கங்களைத் தொகுக்கும் பெரும்பணியினை மேற்கொண்டு, **'வேதாந்த அருஞ்சொற்பொருள் திரட்டு'** என்னும் இந்நூலினை உருவாக்கியுள்ளார்கள். இதனை சென்னை சைதாப்பேட்டை சின்னமலையில் அமைந்துள்ள ஸ்ரீமத் சற்குரு அமலானந்த ஞானபீடம் வெளியிடும் பேற்றினைப் பெற்றுள்ளது. ஸ்ரீமத் அமலானந்த சுவாமிகளின் 68 வது குருபூஜை விழாவில் இந்நூல் வெளியிடப்பட உள்ளது. வேதாந்த மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்பட்டு, அவர்களுடைய ஆன்மீகப் பயணத்தை எளிதாக்கி, எல்லை நிலமாகிய பொதுவுணர்வு எனும் பரமானந்த சொருபத்தை அவர்கள் அடைந்து இன்புற, பரமன் அருள் புரிவானாக.

எல்லோர்க்கும் பரம்பொருள் தன்னைக் காட்டிக் கொடுப்பதாக.

பெருவெளிராமன்

ஸ்ரீ நன்னிலம் தாண்டவராய சுவாமிகள்

கைவல்ய நவநீத ஞானப்பெருமன்றம்.

வேளச்சேரி, சென்னை 16.8.2018



பொருள் அட்டவணை

வ.எ.	பொருள்	பக்கஎண்
	பகுதி-1	
1	மங்களா சரணம் வஸ்து நிர்த்தேசம்-நமஸ்காரம்-ஆசீர்வாதம்	40
2	வியாக்கியான லட்சணம் பதம்-பதார்த்தம்-வாக்கியயோசனை-வினா-விடை-பதச்சேதம்-விக்கிரகம்-அத்தியாகாரம்	40
	(2.1) சூத்திரம்-பாஷ்யம்-வார்த்திகம்	41
3	அந்வய லட்சணம் விசேஷணம்-விசேஷியம்-கருத்தா-கருமம்-கிரியை-உபோற்காதம்-அதிதேசம்-தந்திரம்-	41
	உபபாதனம்-வாக்கியஆபாசம்	42
4	அநுபந்த விவரம் விஷயம்-சம்பந்தம்-பிரயோசனம்-அதிகாரி	42
5	சாதன சதுஷ்டயம் நித்தியாநித்திய வஸ்து விவேகம்-இகமுத்திரார்த்த பலபோக	42
	விராகம்-சமாதி சட்க சம்பத்தி-முமுட்சுத்துவம்	43
	(5.1)ஏது-சொருபம் முதலியன	43-45
6	குருசேவை ஆப்தம்-அங்கம்-ஸ்தாநம்-சத்பாவம்	45
7	அதிகாரி கருமகாண்டி-பத்திகாண்டி-ஞானகாண்டி	45
	(7.1)கருமி-முமுட்சு-அப்பியாசி-அநுபவி-ஆருடன்	46
	(7.2)முக்கிய-அமுக்கிய அதிகாரி	46
	(7.3)அதிகார வழி-- விவேகம்-விரக்தி-தெய்வகதி	47
8	புருஷார்த்தம் தர்மம்-அர்த்தம்-காமம்-மோட்சம்	47
9	புருஷ வகை பாமரன்-விஷயி-ஜிஞ்ஞாசு-முக்தன்	48

	(9.1) உத்தம-மத்திம-கனிஷ்ட பாமரன்	48
	(9.2) உத்தம-மத்திம-கனிஷ்ட விஷயி	48
	(9.3) உத்தம-மத்திம-கனிஷ்ட ஜிஞ்ஞாசு	49
10	குரு போதக குரு-வேதக குரு-நிஷித்த குரு-காமிய குரு- சூசக குரு- வாசக குரு-காரக குரு- விகித குரு	49
11	அத்வைதப் பரம்பரை	50
12	உபதேசக் கிரமம் உத்தேசம்-இலக்கணம்-பரிட்சை	50
13	பிரயோஜனம் பரமப்பிரயோசனம்-அவாந்தரப் பிரயோசனம்	50
14	பிரமை-அப்பிரமை	50
	(14.1) பிரமை – ஈசுராசிரயம்-ஜீவாசிரயம்	
	ஜீவாசிரயப்பிரமை-பாரமார்த்திகம்-வியாவகாரிகம்	51

	பிரமாணங்கள்	
	(14.1.1) பிரத்தியட்சப் பிரமாணம்: பாகியம்-ஆந்தரம்- ஆன்மகோசரம் சுகாதி கோசரம்-விசிஷ்டான்ம விஷயம்-சுத்தான்ம விஷயம்	51
	(14.1.2) அனுமானப்பிரமாணம்:-சுவார்த்த–பரார்த்த	52
	(14.1.3) உவமானப் பிரமாணம் -	53
	(14.1.4) சப்தப் பிரமாணம் - ஆகாம்சை-சந்நிதி-யோக்கியதை	54
	(14.1.5) அருத்தாபத்திப் பிரமாணம்:-	54
	திருஷ்டாருத்தாபத்தி –	55
	அக்கியாதி-அசத்கியாதி-	55
	சத்கியாதி-ஆத்மக்கியாதி-	56

	அந்நியதாக்கியாதி- அநிர்வசனீயக்கியாதி	57
	சுருதாருத்தா பத்தி	58
	(14.1,6) அனுபலப்திப் பிரமாணம் -	58
	(14.1.7) சம்பவப் பிரமாணம்-	59
	(14.1.8) ஐதீகப் பிரமாணம்	59
	(14.1.9) பிரமாணங்களை ஒப்புக்கொண்டுள்ள மதப்பிரிவினர்	59
	(14.2) அப்பிரமை	60
	ஸ்மிருதி-அனுபவம்	
	அப்பிரமை பிரிவுகள்	
	(14.2.1) ஸ்மிருதி–வேகம்-பாவனை-ஸ்திதி ஸ்தாபகம்	61
	(14.2.2) யதார்த்த ஸ்மிருதி-	61
	யதார்த்த அனாத்ம ஸ்மிருதி-	
	யதார்த்த ஆத்ம ஸ்மிருதி-	62
	(14.2.3) அயதார்த்த ஸ்மிருதி-	62
	அயதார்த்த அனாத்ம ஸ்மிருதி-	
	அயதார்த்த ஆத்மஸ்மிருதி	
	(14.2.4) அனுபவம்-யதார்த்த அனுபவம்- அயதார்த்த அனுபவம்-	62
	(14.2.5) சம்சயம்-	62
	பிரமாண சம்சயம்-பிரமேய சம்சயம்- பிரமை சம்சயம்-கரண சம்சயம்-ஆத்ம கத சம்சயம்-அனாத்மகத சம்சயம்-	63
	(14.2.6) நிச்சயம்-யதார்த்த நிச்சயம்-அயதார்த்த நிச்சயம்	63
	(14.2.7) தர்க்கம்-	63
	(14.2.8) விபர்யயம்-	64
	(14.2.9) நிருபாதிக பிரமம்-பாகியம்-ஆந்தரம்-	64-65
	சோபாதிக பிரமம்-	65
	பாகியம்-ஆந்தரம்	66

	அந்தக்கரணவிருத்திவடிவம்-	67
	அவித்தியாவிருத்தி வடிவம்	67
15	தர்க்கம்	
	(15.1.) தர்க்கம்: சுதர்க்கம்-குதர்க்கம்	67
	(15.1.1,2) அபேத சாதக தருக்கம்- பேத பாதக தருக்கம்	67
	(15.2) யுத்தி	68
	(15.2.1) அபேத சாதக அனுமான முதலிய யுத்தி	68
	(15.2.2) பேத பாதக அனுமான முதலிய யுத்தி	69
16	தோஷங்கள்	70
	அதிவியாப்தி-அவ்வியாப்தி-அசம்பவம்-	70
	வியாகாதம்-புநருக்தி-சய தோஷம்	
	அதிசயம்-கௌரவம்-	
	ஆகந்துகம்-அன்யோன்ய ஆசிரயம்-அனவஸ்தா	71
	ஆத்மா ஆசிரயம்-சக்கிரிகா தோஷம்	
17	நியாயம் (திருஷ்டாந்தம்)	71
	கைமுதிக-சிம்மவலோக-	71
	காகதாளீய- குணோபசங்கர-கரம்லேடி-	72
	உஷ்டிரகுடிகா-ஸ்தாலீபுலாக-ஸ்தூணாகநந-	73
	மார்ச்சால-மர்க்கட நியாயம்-	
	சுந்தோபசுந்த-தூலாருந்ததி-சாகாசந்திர-	74
	பிரமரகீட-	
	குடஜிஹ்வா-அஸ்தபூஷணம்-சூசி கடாஹ	75
18	சம்பந்தம் - சையோக சம்பந்தம்-	75
	(18.1) கர்மஜம்-அந்நியதர கர்மஜம்-	75
	உபயதர கர்மஜம்	75
	(18.2) சையோகஜம்-	76
	(18.3) சகஜம்-	76
	(18.4) சமவாயம்	76
	(18.5) தாதாத்மியம்	76
19	பதார்த்த விவேகம்	77

	பாரமார்த்திகம்-வியாவகாரிகம்-பிராதிபாசிகம்-துச்சம்	
	பகுதி-2	
20	திருக்கு-திருசியம் (20.1) திருஷ்டா (20.2) சுயம்பிரகாசம்	78
21	ஆத்ம வகை (அவிவேக காலம்) மித்தையாத்மா-கௌணாத்மா-சீவாத்மா-முக்கியாத்மா	78 79
22	பேதங்கள் சுவகதம்-சஜாதீயம்-விஜாதீயம்	79
23	கற்பிதம் அத்தியாரோபம்-அபவாதம்	79
24	பிரமத்தின் சப்த விசேஷணங்கள் நித்தியம்-சுத்தம்-புத்தம்-முக்தம்-சத்தியம்-ஆனந்தம்-அத்வயம்	80 81
25	சத்து வடிவ பிரமத்தை அறிதற்குரிய இலக்கணம் அதத்வியாவிருத்தி-தடத்த-சொரூப லட்சணம்	81
26	ஆத்மாவின் சொரூப லட்சணம் சத்து-சித்து-ஆனந்தம்-நித்தியம்-பூரணம்	82
	(26.1)சொரூப லட்சணத்தில் உபாதியால் பேதம் (26.1.1) சத்து:- வியாவகாரிகம்-பிராதிபாசிகம்-பாரமார்த்திகம் (26.1.2) அசத்து (26.1.3) சித்து:- ஜீவன்-ஈசன்-கூடஸ்தன்-பிரமம் (26.1.4) ஆனந்தம்:- விஷயானந்தம்-பிரமானந்தம்-வாசனானந்தம்-முக்கியானந்தம்-நிஜானந்தம்-ஆத்மானந்தம்-அத்துவிதானந்தம்-வித்தியானந்தம் (26.1.5) நித்தியம்:- பிராகபாவம்-பிரத்துவம்சாபாவம்-	82 82 83 83

	அந்நியோந்நியாபாவம்- அத்தியந்தாபாவம்	84
	(26.1.6) பூரணம்:- கால-வஸ்து-தேச பரிச்சேதங்கள்	85
	(26.2) ஆத்மாவின் விசேஷணம் : 1.விதேயம் 2.நிஷேத்தியம்	85
27	சைதன்னிய சப்தகம் சுத்த-ஈசுவர-ஜீவ-பிரமாத்துரு-பிரமாண-பிரமேய- பல சைதன்னியம்	85
28	ஜீவ நாமாதி வியவகார கற்பனை விசுவ-தைசத-பிராஞ்ஞ பரியாய நாமம்	86
29	ஆத்மத் திரயம் ஜீவாத்மா-அந்தராத்மா-பரமாத்மா	86
30	ஈசுவர நாம பேதம் விராட்டு-இரணியகருப்பன்-அந்தரியாமி	87
31	ஈசுவரனது முக்கிய குணங்கள் சர்வஞ்ஞத்துவம்-சர்வேசுவரத்துவம்- சர்வநியந்திருத்துவம்- சர்வாந்தரியாமித்துவம்-சர்வ கர்த்துருத்துவம்- சர்வசக்தித்துவம்	87
32	ஈசுவரனது பிரபுத்துவ சாமர்த்திய குணங்கள் கர்த்துருத்துவம்-அகர்த்துருத்துவம்- அந்நிதாகர்த்துருத்துவம்	87
33	ஈசுவரனது கிருத்தியம் சிருஷ்டி-ஸ்திதி-சங்காரம்-திரோபவம்- அநுக்கிரகம்	88
34	காரணம் இருவகை உபாதான காரணம்-நிமித்த காரணம்	88
35	சமஷ்டி – வியஷ்டி	88
36	கூடஸ்த பரியாய நாமம்	89
37	பிரம்மத்தினது பரியாய நாமம்	89
38	திருக்கு விவேக சாரம்	89

39	பதார்த்தங்களில் ஐந்து அம்சங்கள் நாமம்-ரூபம்-அஸ்தி-பாதி-பிரியம்	90
	பகுதி-3	
40	மாயா சக்தியின் இலக்கணம்	91
41	மாயா லட்சணம் அசத்து-ஜடம்-துக்கம்-அநித்தம்-கண்டம்	92
42	மாயா அநிர்வாச்சியப் பிரகாரம் பின்னம்-அபின்னம்-பின்னாபின்னம்-சத்து- அசத்து-சதசத்து- சாவயவம்-நிரவயவம்-சாவயவநிரவயவம்	92
43	மாயையின் தோற்ற வகை துச்சம்-அநிர்வாச்சியம்-நித்தியம்	93
44	மாயா நாமங்கள் தமம்-மாயை-மோகம்-அவித்தை-அநிருதம் (44.1) பிரதானம் முதலியன– (44.2) மாயை முதலியன	93 94 94
45	மாயையின் தர்மங்கள் சங்கோசம்-விகாசம்	94
46	மாயையின் குணங்கள் அசுவதந்தரத்தன்மை-சுவதந்தரத்தன்மை	95
47	சிருஷ்டி கிரம சிருஷ்டி-யுகபத் சிருஷ்டி	95
48	ஜகத் காரண வாதங்களும் மறுப்பும் அகாரணம்-திருஷ்ட விரோத தோஷம் அபாவ காரணம்-திருஷ்ட விரோத தோஷம் சூனிய காரணம்- அசம்பவ வடிவ தோஷம் பரமாணு காரணம்- அசம்பவ வடிவ தோஷம் காலத்தின் காரணம்-அகாரணத்தன்மை வடிவ தோஷம் சுவபாவ காரணம்-வியபிசார வடிவ தோஷம் அதிருஷ்ட காரணம்- வியபிசார வடிவ தோஷம்	96 97

	நேர்ந்திடல் காரணம்- அசம்பவ வடிவ தோஷம் பஞ்சபூத காரணம்- அசம்பவ வடிவ தோஷம் பிரகிருதி காரணம்- அசம்பவ வடிவ தோஷம் அசங்க புருஷ காரணம்-அயோக்கியத்தன்மை வடிவ தோஷம் சையோக காரணம்-அபேட்சை வடிவ தோஷம் பரிணாமிபுருஷ காரணம்- அயோக்கியத்தன்மை வடிவ தோஷம்- பிரமம் காரணம்-விசேஷணங்களின் பங்க வடிவ தோஷம்	98
49	ஈசுவர சிருஷ்டி-ஜீவ சிருஷ்டி (49.1) கர்த்தா	98 98
50	தத்துவங்கள் உற்பத்தி	99
51	அந்தக்கரணங்கள்	101
52	ஞானேந்திரியங்கள்	101
53	பிராணாதி வாயுக்கள் (53.1) உப வாயுக்கள்	102
54	கர்மேந்திரியங்கள்	103
55	பஞ்சீகரணம்	103
56	தூல பூதங்கள் (56.1) பஞ்ச மகாபூதங்களின் 25 தத்துவங்கள்	104
57	தூல தேக தத்துவம்	105
58	சூக்குமதேக தத்துவங்கள் தூலதேகத்தில்உள்ள விவரம்	105
59	போக சாதனங்கள் (14 திரிபுடி)	106
60	ஜன்ம வகை (60.1,2)நால்வகை பிறப்பு-மூவகை சாதி-பஞ்ச பூதங்களில் தோன்றுபவை	107
61	உயிரினங்கள் ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை சட்பாவ விகாரங்கள்-சட்கோசத்துவம்	108 109
62	அவஸ்தைகளில் சீவனும் ஈசுவரனும்	109

	(62.1) சாட்சி	110
63	அவஸ்தைகளில் செயல்படும் தத்துவங்கள் இந்திரிய விவகாரம்-மனோராச்சியம் ஆதி ஆத்மீகம் முதலியவற்றில்	110
64	ஈசுவர ஜீவ காரண காரிய உபாதி	110
65	அட்டப் பிரகாசங்கள்	110
66	ஒடுக்கம்	110
67	பிரளய வகை நித்தியம்-நைமித்திகம்-பிராகிருதம்-ஆத்தியந்திகம்	114
68	சேதனம் நால்வகை பிரமாதா-பிரமாணம்-பிரமா-பிரமேய சேதனம் அவச்சேத வாதம்-ஆபாச வாதத்தின்படி பிரமாதா முதலியன	116 117
	(68.1) சேதனமும் ஆகாசமும் கடகாசம்-ஜலாகாசம்-மேகாகாசம்-மகாகாசம்	118
69	காரிய உதயம் விருத்தி-பரிணாமம்-ஆரம்பம்-விவர்த்தம் (69.1) காரியத்தின் நாசப் பிரிவுகள்: பாதம் - இலயம்	118 119
70	விஷயம் மூவகை பிரீதி-துவேஷம்-உபேட்சை	119
	(70.1) இச்சைக்கு விஷயமாவது பிரியதமம்-பிரியதரம்-பிரியம்-உபேட்சியமும் துவேஷியமும்	119
	(70.2) பிரியம்-மோதம்-பிரமோதம்	120
71	கிரந்தி (முடிச்சு) இருதய(அகங்கார)கிரந்தி-சம்சயக்கிரந்தி- கர்மக்கிரந்தி (71.1) அகங்காரம்: சாமானிய-விசேஷ-முக்கிய- அமுக்கிய அகங்காரம்	121
72	ஜன்மத்திற்குக் காரணமான கர்மத்தின் ஆரம்பகம்	122

73	புரியஷ்டகம் ஞானேந்திரியம்-கர்மேந்திரியம்-அந்தக்கரணம்-வாயுக்கள்-சூக்குமு பூதங்கள்-அவித்தை-காமம்-கர்மம்	123
74	கர்மம் மூவகை புண்ணியம்-பாவம்-மிசிரம் (74.1) வினை நால்வகை (74.2) கர்மத்தின் ஆசிரயம் (74.3) கர்மங்களின் பலன்	124 125
75	இராகத் துவேஷம் - (16)	126
76	வியாபகம் இருவகை ஆபேட்சிக வியாபகம்-நிராபேட்சிக வியாபகம்	127
77	பிரபஞ்ச வகை சாஸ்திரப் பிரபஞ்சம்--அசாஸ்திரப் பிரபஞ்சம் (தீவிர அசாஸ்திரப் பிரபஞ்சம்-மந்த அசாஸ்திரப் பிரபஞ்சம்)	
78	அதிட்டானம்-ஆரோபம் (78.1) ஆதாரம்-சமம்-விசேடம்	128
79	அநாதி	129
80	அவச்சேதகம் (80.1.1) விசேஷணம் (80.1.2) அவச்சின்ன உபாதி-பிரதிபிம்ப உபாதி-அத்தியாச உபாதி (80.1.3) உபலட்சணம் (80.1.4) உபரஞ்சகம் (80.2) அவச்சேத்தியம்::: விசிஷ்டம்-உபகிதம்-உபலட்சிதம்-உபரஞ்சிதம்	129 130 130
81	அத்தியாசங்கள் (81.1) அத்தியாச இலக்கணம் (81.2) அத்தியாசத்துக்கு உபாதான-நிமித்த காரணங்கள்	131

	(81.3) அத்தியாசத்துக்கு ஏது-சொருபம்-காரியம்- அவதி-பலம்	
	(81.4)அத்தியாசங்கள் அர்த்த அத்தியாசம்-ஞான அத்தியாசம் மித்தியாத்தியாசம்- இதராத்தியாசம்-இதரேதராத்தியாசம்- சத்தியாத்தியாசம்- நிருபாதிக அத்தியாசம்-சோபாதிக அத்தியாசம் தத்தரும அத்தியாசம்- சம்பந்த மாத்திராத்தியாசம்- அத்தியாசங்களை அறிவதன் பலன்-- காரண அத்தியாசம்-காரிய அத்தியாசம்- கேவல சம்பந்த அத்தியாசம்- சம்பந்த சகித அத்தியாசம்- கேவல தர்ம அத்தியாசம்-தர்ம சகித தர்மி அத்தியாசம்- அன்னியோன்னியாத்தியாசம்- அன்னியதராத்தியாசம் சொருபாத்தியாசம்-சம்சர்க்கத்தியாசம்	132 133 134 135 136 137 139
82	அவஸ்தைகள் சாக்கிரம்-சொப்பனம்- சுழுத்தி-துரியதம்-துரியாதீதம் (82.1) அவஸ்தைகளின் பகுப்பு- (82.2) அவஸ்தைகளின் தன்மை	140 143 143
83	தேகம் மூவகை தூலம்-சூக்குமம்-காரணம்	144
84	கோசங்கள் அன்னமயம்-பிராணமயம்-மனோமயம்- விஞ்ஞானமயம்-ஆனந்தமயம்	144
85	அகங்கார தாதாத்மியம் கருமஜம்-சகஜம்-பிரமஜம்	145

86	பிராந்தி பேதப்பிராந்தி--ஜீவ ஈசுவர பேதம்-ஜீவ ஜீவ பேதம்-ஜீவ ஜட பேதம்-ஈசுவர ஜட பேதம்-ஜட ஜட பேதம்- கர்த்திருத்துவ போக்திருத்துவ பிராந்தி-சங்கப் பிராந்தி-விகாரப் பிராந்தி-ஜகத் சத்தியத்துவப் பிராந்தி	146
	(86.1) பிராந்தி நிவர்த்தி	150
	(86.2) பிராந்தி (வேறு) விசம்வாதிப் பிராந்தி-சம்வாதிப் பிராந்தி	150
	பகுதி-4	
87	ஜீவ அவஸ்தை அஞ்ஞானம்-ஆவரணம்-விட்சேபம்-பரோட்ச ஞானம்- அபரோட்ச ஞானம்-தழல்கெடல்-குளிர்மையாதல்	151
	(87.1)ஜீவ அவஸ்தா சமன்வயம்	152
88	அபரோட்ச ஞானப் பிரயோசனம்	153
89	விசாரம்: -ஏது-பயன்-ஞானம்	154
90	பாத இலக்கணம் சாஸ்திரீயம்-யௌக்திகம்-பிராத்தியட்சிகம்	154
91	விருத்தி-முக்குண விருத்தி மூட விருத்தி-கோரவிருத்தி-சாந்த விருத்தி – ஸ்மிருதி- பாவனை-பிரயத்தனம்-உபேட்சை-அநுவிருத்தி	155
	(91.1) விருத்தி திரயம் துவித விருத்தி-சாட்சி விருத்தி-அகண்டாகார விருத்தி	156
	(91.2) பிரக்ஞை: ஸ்திதம்-அஸ்திதம்	157
92	வேதம் போதிக்கும் வாக்கிய வகை	157

	(81.3) அத்தியாசத்துக்கு ஏது-சொரூபம்-காரியம்- அவதி-பலம்	
	(81.4)அத்தியாசங்கள்	132
	அர்த்த அத்தியாசம்-ஞான அத்தியாசம்	
	மித்தியாத்தியாசம்-	
	இதராத்தியாசம்-இதரேதராத்தியாசம்-	133
	சத்தியாத்தியாசம்-	134
	நிருபாதிக அத்தியாசம்-சோபாதிக அத்தியாசம்	
	தத்தரும அத்தியாசம்-	135
	சம்பந்த மாத்திராத்தியாசம்-	
	அத்தியாசங்களை அறிவதன் பலன்--	
	காரண அத்தியாசம்-காரிய அத்தியாசம்-	
	கேவல சம்பந்த அத்தியாசம்-	136
	சம்பந்த சகித அத்தியாசம்-	
	கேவல தர்ம அத்தியாசம்-தர்ம சகித தர்மி அத்தியாசம்-	137
	அன்னியோன்னியாத்தியாசம்-	139
	அன்னியதராத்தியாசம்	
	சொரூபாத்தியாசம்-சம்சர்க்கத்தியாசம்	
82	அவஸ்தைகள்	140
	சாக்கிரம்-சொப்பனம்-	
	சுழுத்தி-துரியதம்-துரியாதீதம்	
	(82.1) அவஸ்தைகளின் பகுப்பு-	143
	(82.2) அவஸ்தைகளின் தன்மை	143
83	தேகம் மூவகை தூலம்-சூக்குமம்-காரணம்	144
84	கோசங்கள்	144
	அன்னமயம்-பிராணமயம்-மனோமயம்- விஞ்ஞானமயம்-ஆனந்தமயம்	
85	அகங்கார தாதாத்மியம்	145
	கருமஜம்-சகஜம்-பிரமஜம்	

86	பிராந்தி பேதப்பிராந்தி--ஜீவ ஈசுவர பேதம்-ஜீவ ஜீவ பேதம்-ஜீவ ஜட பேதம்-ஈசுவர ஜட பேதம்-ஜட ஜட பேதம்- கர்த்திருத்துவ போக்திருத்துவ பிராந்தி-சங்கப் பிராந்தி-விகாரப் பிராந்தி-ஜகத் சத்தியத்துவப் பிராந்தி	146
	(86.1) பிராந்தி நிவர்த்தி	150
	(86.2) பிராந்தி (வேறு) விசம்வாதிப் பிராந்தி-சம்வாதிப் பிராந்தி	150
	பகுதி-4	
87	ஜீவ அவஸ்தை அஞ்ஞானம்-ஆவரணம்-விட்சேபம்-பரோட்ச ஞானம்- அபரோட்ச ஞானம்-தழல்கெடல்-குளிர்மையாதல்	151
	(87.1)ஜீவ அவஸ்தா சமன்வயம்	152
88	அபரோட்ச ஞானப் பிரயோசனம்	153
89	விசாரம்: -ஏது-பயன்-ஞானம்	154
90	பாத இலக்கணம் சாஸ்திரீயம்-யௌக்திகம்-பிராத்தியட்சிகம்	154
91	விருத்தி-முக்குண விருத்தி மூட விருத்தி-கோரவிருத்தி-சாந்த விருத்தி - ஸ்மிருதி- பாவனை-பிரயத்தனம்-உபேட்சை-அநுவிருத்தி	155
	(91.1) விருத்தி திரயம் துவித விருத்தி-சாட்சி விருத்தி-அகண்டாகார விருத்தி	156
	(91.2) பிரக்ஞை: ஸ்திதம்-அஸ்திதம்	157
92	வேதம் போதிக்கும் வாக்கிய வகை	157

	விதி வாக்கியம்--- விதி-அபூர்வம்-பரிசங்கியா நிஷேத வாக்கியம்-சித்தார்த்த போதக வாக்கியம்	
93	வாக்கியம்	158
	(93.1) அவாந்தர வாக்கியம்	
	(93.2) மகா வாக்கிய சம்பந்தம்	159
	(93.3) மகா வாக்கிய சம்பந்தம்	
94	தத் துவம் பதங்களின் அர்த்தத் துவயம் வாச்சியார்த்தம்-இலட்சியார்த்தம்	160
95	லட்சணை பேதம் விட்ட லட்சணை-விடாத லட்சணை-விட்டுவிடாத லட்சணை	161
96	வாச்சியார்த்தம்-லட்சியார்த்தம் சக்தி விருத்தி-இலட்சணா விருத்தி அஜாதவாதம்-திருஷ்டி சிருஷ்டிவாதம்-சிருஷ்டி திருஷ்டி வாதம்- பிம்பப் பிரதிபிம்பவாதம்-காரிய காரண உபாதி வாதம்- அவச்சின்ன அனவச்சின்ன வாதம்- அவச்சேதவாதம்- ஆபாசவாதம்	161
	அர்த்தவாதம்: பூதார்த்த வாதம்-அபூதார்த்த வாதம்	
97	மகா வாக்கியார்த்தப் பிரபத்தி(விவாத) நிராகரணம்-பேதவாத மறுப்பு அர்த்த வாதம்-உபாசனாபர வாதம்- ஸ்துதிபர வாதம்-உபசார வாதம்- குணாசாதிருசிய வாதம்- ஜாதி வியக்திபர வாதம்-காரிய காரண வாதம்- குணகுணிவாதம்-விகார வாதம்-அம்ச அம்சிக வாதம்-பிம்ப பிரதிபிம்ப வாதம்	164
98	சாமானாதி கரணியம்	169

	முக்கிய சாமானாதி கரணியம்-பாத சாமானாதி கரணியம்	
99	உபாசனை (தியான) வகைகள் தியாதா-தியானம்-தியேயம்- பிரதீக வடிவம்-தியேயாநுசாரம்-(அகங்கிரக உபாசனை)	170
	(99.1)ஞானத்திற்கும் உபாசனைக்கும் பேதம் விதி-கர்த்தா இச்சை-அடம்-விசுவாசம்	171
100	வைராக்கியம் பரம்-அபரம்-யதமானம்-வியதிரேகி- ஏகேந்திரியம்-வசீகாரம்	174
	(100.1)விராகம் மந்தம்-தீவிரம்-தீவிரதரம்	175
	(100.2) சந்நியாசம் குடீசகம்-வெகூதகம்-ஹம்சம்-பரமஹம்சம்- விவிதிஷா-வித்வத்	175
101	தோஷ திருஷ்டி	177
102	முத்தி சித்திக்கும் வழி	177
103	பாவனாத் திரயம் சம்சய பாவனை-அசம்பாவனை-விபரீதபாவனை இவைகளில் ஒவ்வொன்றிலும் பிரமாணகதம்- பிரமேயகதம்- பிரத்தியேகாத்ம விஷயம்	177
104	முத்தி விக்கினம் அஞ்ஞானம்-சந்தேகம்-விபரீதம்	179
	(104.1) முத்தி விக்கினப் பரிகாரம் சிரவணம்-மனனம்-நிதித்தியாசனம்	179
105	சிரவணாதிகளின் ஏது-காரியம்-சொருபம்-அவதி-பலம்	180
106	சிரவண சககாரி காரணம் அங்கி சிரவணம்-அங்க சிரவணம்	181
	(106.1) ஷட்வித லிங்க தாற்பரியம் உபக்கிரம உபசங்காரம்-அப்பியாசம்-	182

	அபூர்வதை-பலம்-அருத்த வாதம்-உபபத்தி	
107	மனன சககாரி யுக்தி-தருக்கம்-அனுமானம்	183
108	*நிதித்தியாசன யோக பஞ்சகம்* மந்திரம்-ஸ்பரிசம்-பாவம்-அபாவம்-மகா யோகம்	184
109	பிரதிபந்தம் பூதப்பிரதிபந்தம்-வர்த்தமானப்பிரதிபந்தம்- ஆகாமியப்பிரதிபந்தம்	184
110	வாசனைகளும் பிரிவுகளும் சுத்தவாசனை- மலினவாசனை—லோகவாசனை- சாத்திரவாசனை— பாடம்-அர்த்தம்-அநுஷ்டான வாசனை தேகவாசனை—தேகத்தை விஷயப்படுத்துவது - குணங்களை விஷயப்படுத்துவது- சாஸ்திரியம்-லௌகீகம்	186
111	அஞ்ஞானத்தின் நாசம்	188
112	பிரதிபந்தக நிவர்த்தகம் ஞானம்-வைராக்கியம்-உபரதி இவைகளின் சொருபம்-காரியம்-அவதி (112.1) மோட்ச காரணம்	188 190
113	அஞ்ஞான பூமிகள் பீஜ ஜாக்கிரம்-ஜாக்கிரம்-மகா ஜாக்கிரம்- ஜாக்கிர சொப்பனம்- சொப்பனம்-சொப்பன ஜாக்கிரம்-சுழுத்தி-க்ஷீண - காட சுழுத்தி	191
114	ஞான பூமிகள் சுபேட்சை-விசாரணை-தனுமானசி-சத்துவாபத்தி- அசம்சத்தி- பதார்த்த பாவனை-துரியகாமி	192
115	115. மன நிக்ரகம் கிரம நிக்ரகம் - ஹட நிக்ரகம்	195

	(115.1) மனநாசம் உருவ நாசம்-அருவ நாசம்	
116	சமாதி : சவிகற்ப சமாதி - நிர்விகற்ப சமாதி- சப்தநுவித்தம்-சப்தநநுவித்தம்	195

	(116.1) சட்சமாதி பாகிய திருசியாநுவித்த சவிகற்ப சமாதி- பாகிய சத்தாநுவித்த சவிகற்ப சமாதி-பாகிய நிரவிகற்ப சமாதி- ஆப்பியந்தர திருசியாநுவித்த சவிகற்ப சமாதி- ஆப்பியந்தர சத்தாநுவித்த சவிகற்ப சமாதி-ஆப்பியந்தர நிர்விகற்ப சமாதி	196
	(116.2) சமாதிக்கு உதாரணம்	198
	(116.3) நிர்விகற்ப சமாதிக்கு விக்கினங்கள் லயம்-விட்சேபம்-கஷாயம்-ரஸாஸ்வாதம்	199
	(116.4) மேற்படி விக்கினங்களுக்கு நிவர்த்தி	200
117	ஞான பல சதுஷ்டயம்	200
	(117.1) துக்காபாவம்---இகலோக - பரலோக துக்காபாவம்	
	(117.2) சர்வகாமாப்தி-	201
	(117.3) கிருத கிருத்தியத்துவம்-	202
	(117.4) பிராப்த பிராப்பியத்துவம்	203
118	ஞானியின் லட்சணம்	203
119	119.மோட்சம் (முத்தி) : அனந்தத்தின் நிவர்த்தி - ஆனந்தப் பிராப்தி	204
	(119.1) முத்தி மார்க்கம்: கிரம முத்தி - சத்தியோ முத்தி	205
120	முத்தித் துவயம் : ஜீவன் முத்தி - விதேக முத்தி	205

121	ஞானப் பிரபாவம் - கரும விசாரம்	206
	(121.1) ஜீவன் முத்தனது கருமங்கள்	206
	(121.2) ஜீவன் முத்தனுக்குரிய சற்குணங்கள்-- மைத்திரி-கருணை-முதிதை-உபேட்சை	207
	(121.3) ஜீவன் முத்தனுக்குரிய பஞ்சப் பிரயோசனம்	207
	(121.3.1) ஞானரட்சை	
	(121.3.2) தவம்	208
	(121.3.3) சர்வசம்வாதம்	
	(121.3.4) துக்கநாசம்-(அவித்தை-அஸ்மிதை-ராகம்-துவேஷம்-அபினிவேசம்)-	
	(121.3.5) சுகாவிர்ப்பாவம்	209
	(121.4) ஜீவன் முத்தனுக்குரிய தச சின்னங்கள் அக்குரோதம்-வைராக்கியம்-ஜிதேந்திரியத்துவம்-சமை-தமை-ஜனப்பிரியத்துவம்-அலோபம்-கொடை-அபயம்-நிர்மதம்	209
122	ஞானியால் மக்களுக்கு உண்டாகும் நன்மைகள்	210
123	பிராரப்த கருமம் (123.1) பிராரப்த பஞ்சகம் உத்தமம்-மத்திமம்-கனிஷ்டம்-அதமதரம்-அதமதமம்	210
	(123.2) பிராரப்த கரும சம்ஸ்கார சதுஷ்டயம் தீவிர பிராரப்த கருமம்-மத்திய பிராரப்த கருமம்-மந்தப் பிராரப்த கருமம்-சுத்தப் பிராரப்த கருமம் சமஸ்காரம்	211
	(123.3) பிராரப்தத் திரயம்: இச்சா-அநிச்சா-பரேச்சாப் பிராரப்தம்	211

124	சீவன் முத்தர் நால்வகை: பிரம்ம வித்து-வரன்-வரியான்-வரிட்டன்	212
125	விதேக முத்தி	212
	(125.1) விதேக முத்தி அடையும் கிரமம்	213
	பிற்சேர்க்கை: வேதாந்த நூல்கள் பட்டியல்-தர்க்க சாஸ்திர சுருக்கம்-வேதாந்த அருஞ்சொற்பொருள்	

அகர வரிசைப்படி	
பொருள்	வரிசை எண்
அகங்காரம்	71.1
அகங்கார தாதாத்மியம்	85
அக்கியாதி வாதம்	14.1.5
அசத் கியாதி வாதம்	14.1.5
அசத்து	26.1.2
அஞ்ஞானத்தின் நாசம்	111
அஞ்ஞான பூமிகள்	113
அட்டப் பிரகாசங்கள்	65
அதிகாரி	7
அதிட்டானம்-ஆரோபம்	78
அத்தியாச இலக்கணம்	81.1
அத்தியாசங்கள்	81.4
அத்தியாசத்துக்கு உபாதான-நிமித்த காரணம்	81.2
அத்தியாசத்துக்கு ஏது, சொரூபம் முதலியன	81.3
அத்தியாரோபம்-அபவாதம்	23
அத்வைத பரம்பரை	11
அநாதி	79
அநிர்வசனீயக் கியாதி வாதம்	14.1.5
அநுபந்த விவரம்	4
அந்தக்கரணங்கள்	51
அந்நியதாக் கியாதி வாதம்	14.1.5
அந்வய லட்சணம்	3
அபரோட்ச ஞானப் பிரயோசனம்	88
அப்பிரமை	14.2
அவச்சேத்தியம்	80.2

அவஸ்தைகள் ஐந்து	82
அவஸ்தைகளில் சீவனும் ஈசுவரனும்	62
அவஸ்தைகளில் செயல்படும் தத்துவங்கள்	63
அவஸ்தைகளின் தன்மை	82.2
அவஸ்தைகளின் பகுப்பு	82.1
அவாந்தர வாக்கியம்	93.1
ஆத்மக் கியாதி வாதம்	14.1.5
ஆத்மத் திரயம்	29
ஆத்மாவின் விசேஷணம்	26.2
ஆதாரம்: சமம்-விசேடம்	78.1
ஆனந்த பேதம்	26.1.4
இராகத் துவேஷம்	75
ஈசவரன் கிருத்தியம்	33
ஈசவர சிருஷ்டி- ஜீவ சிருஷ்டி	49
ஈசவர நாமங்கள்	30
ஈசவர பிரபுத்துவ சாமர்த்திய குணத்திரயம்	32
ஈசுவரனது முக்கிய குணங்கள்	31
ஈசவர ஜீவ காரண காரிய உபாதி	64
உபதேசக் கிரமம்	12
உபரஞ்சகம்	80.1.4
உபலட்சணம்	80.1.3
உபாசனை வகைகள்	99
உபாதி மூவகை	80.1.2
உபவாயுக்கள்	53.1
உயிரினங்கள் - ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை	61
ஒடுக்கம்	66
கர்த்தா	49.1

கர்மம் மூவகை: புண்ணியம்-பாவம்-மிசிரம்	74
கர்மேந்திரியம்	54
கர்மஜ சையோகம்	18.1
கர்மம்- ஜன்மத்திற்குக் காரணமானவை	72
காரண வகை	34
காரியத்தின் நாசம் - பாதம் - இலயம்	69.1
காரியோதயம்	69
கிரந்தி	71
கிரம சிருஷ்டி	47.1
கிரம முத்தி	119.1
கிருத கிருத்தியத்துவம்	117.3
கிலேசம் ஐந்து	123.3.4
குரு	10
குருசேவை	6
கூடஸ்த பரியாய நாமம்	36
கோசங்கள்	84
கௌண ஆத்மா	21
சகஜ சையோகம்	18.3
சட்வித லிங்க தாற்பரியம்	106.1
சத்கியாதி வாதம்	14.1.5
சத்தியோ முத்தி	119.2
சத்து பேதம்	26.1.1
சத்து வடிவ பிரமத்தை அறிதற்கு உரிய இலக்கணம்	25
சந்நியாசம்	100.2
சமட்டி-வியட்டி	35
சமவாயம்	18.4
சமாதி – ஆறு விதம்	116.1

சமாதிக்கு உதாரணம்	116.2
சம்சயம்	14.2.5
சர்வ காமாப்தி	117.2
சாட்சி	62.1
சாதன சதுஷ்டயம்	5
சாமானாதி கரணியம்	98
சித்து பேதம்	26.1.3
சிரவணாதி ஏது, சொருபம் முதலியன	105
சிரவண சககாரி காரணம்	106
சுயம்பிரகாசம்	20.2
சுவகத-சஜாதீய-விஜாதிய பேதங்கள்	22
சூக்கும தேக தத்துவங்கள் தூல தேகத்தில்	58
சேதனமும் ஆகாசமும்	68.1
சேதனம் நால்வகை	68
சைதன்னிய சப்தகம்	27
சையோகஜ சையோகம்	18.2
சோபதிக பிரமம் (பிராந்தி)	14.2.10
ஞானத்திற்கும் உபாசனைக்கும் பேதம்	99.1
ஞானேந்திரியம்	52
ஞான பூமிகள்	114
ஞானியால் மக்களுக்கு உண்டாகும் நன்மைகள்	122
ஞானியின் லட்சணம்	118
தத்துவங்கள் உற்பத்தி	50
தத் துவம் பதஅர்த்தத் துவயம் (வாச்சியம்-லட்சணை)	94
தர்க்கம்	15.1
தாதாத்மியம்	18.5
திருக்கு-திருசியம்	20

திருக்கு விவேக சாரம்	38
திருஷ்டா	20.1
துக்காபாவம்	117.1
துக்கம் - ஆதிஆத்மீகம் முதலிய மூவகை	63.1
தூல தேக தத்துவம்	57
தூல பூதங்கள்	56
தேகம் மூவகை	83
தோஷங்கள்	16
தோஷ திருஷ்டி	101
நால்வகைப் பிறப்பு	60.1
நிதித்தியாசன யோக பஞ்சகம்	108
நித்தியத்தின் பேதம் - அபாவ சதுஷ்டயம்	26.1.5
நியாயம் (திருஷ்டாந்தம்)	17
நிருபாதிகப் பிரமம் (பிராந்தி)	14.2.9
நிர்விகற்ப சமாதிக்கு விக்கினங்கள்	116.3
நிர்விகற்ப சமாதிக்கு விக்கின நிவர்ததி	116.4
பஞ்ச மகாபூதங்களின் 25 தத்துவங்கள்	56.1
பஞ்சீகரணம்	55
பதார்த்தங்களில்-நாமருப-அஸ்தி-பாதி-பிரியம்	39
பதார்த்த விவேகம்	19
பாத இலக்கணம்	90
பரிச்சேதத் திரயம்	26.1.6
பாவனாத் திரயம்	103
பிரக்ஞை: ஸ்திதம்-அஸ்திதம், பாகியம்-ஆந்தரம்	91.2
பிரதிபந்தம் - பூத-வரத்தமான-ஆகாமியம்	109
பிரதிபந்த நிவர்த்தகம் -ஞானம்-வைராக்கியம்-உபரதி	112
பிரபஞ்ச வகை: சாஸ்திரம்-அசாஸ்திரம்	77

பிரமாணங்கள்	14.1.1
பிரமை-அப்பிரமை	14
பிரம்மத்தின் பரியாய நாமம்	37
பிரம்மத்தின் விசேஷணங்கள்	24
பிரயோஜனம்- பரம-அவாந்தர	13
பிரளய வகை	67
பிராந்தி	86
பிராரப்த கரும சம்ஸ்கார சதுஷ்டயம்	123.2
பிராரப்தத் திரயம்	123.3
பிராரப்த பஞ்சகம்	123.1
பிராப்தப் பிராப்பியத்துவம்	117.4
பிரியம்-மோதம்-பிரமோதம்	70.2
புரியஷ்டகம்	73
புருஷ வகை	9
புருஷார்த்தம்	8
போக சாதனங்கள் (14 திரிபுடி)	59
மகா வாக்கியம்	93.2
மகா வாக்கிய அர்த்த பேத நிராகரிப்பு	97
மகா வாக்கியம் சம்பந்தம்	93.3
மங்களா சரணம்	1
மனன சககாரி	107
மன நாசம்	115.1
மன நிக்கிரகம்	115
மாயா அநிர்வாச்சிய பிரகாரம்	42
மாயையின் குணங்கள்	46
மாயா சக்தியின் இலக்கணம்	40
மாயையின் தர்மங்கள்	45

மாயா தோற்ற வகை	43
மாயா நாமங்கள்	44
மாயா லட்சணம்	41
மித்தையாத்மா	21
முக்கியாத்மா	21
முத்தி சித்திக்கும் வகை	102
முத்தித் துவயம்	120
முத்தி விக்கினம்	104
முத்தி விக்கினப் பரிகாரம்	104.1
மூவகைச் சாதி	60.2
மோட்சம்	119
மோட்ச காரணம்	112.1
யுகபத் சிருஷ்டி	47.2
யுத்தி	15.2
யோனி பேதம்	61
லட்சணை பேதம்	95
வாசனைகளும் பிரிவுகளும்	110
வாச்சியார்த்தம்-இலட்சியார்த்தம்	96
வாயுக்கள்	53
விசாரம்	89
விசேஷணம்	80.1.1
விதேக முத்தி	125
விதேக முத்தி அடையும் கிரமம்	125.1
வியாக்கியான லட்சணம்	2
வியாபக வகை	76
விராகம்	100.1
விருத்தி – முக்குண விருத்தி	91

விருத்தி திரயம்	91.1
வினை நால்வகை	74.1
விஷயம் முவகை: பிரீதி-துவேஷம்-உபேட்சை	70
வேதம் போதிக்கும் வாக்கிய வகை	92
வைராக்கியம்	100
ஜகத் காரண வாதங்களும் மறுப்பும்	48
ஜீவ அவஸ்தை	87
ஜீவ அவஸ்தை சமன்வயம்	87.1
ஜீவனின் நாமங்கள்	28
ஜீவன் முத்தனது கருமங்கள்	121.1
ஜீவன் முத்தனுக்குரிய சற்குணங்கள்	121.2
ஜீவன் முத்தனுக்குரிய தச சின்னங்கள்	121.4
ஜீவன் முத்தனுக்குரிய பஞ்சப் பிரயோசனம்	121.3
ஜீவன் முத்தர் வகை	124
ஸ்மிருதி	14.2.1

பகுதி-1

1. மங்களா சரணம் : (3)

(நூலின் துவக்கத்தில் வாழ்த்து பாடுதல்)

வஸ்து நிர்த்தேசம்	:	நமஸ்காரம் முதலியன இன்றிக் கேவலம் நிர்க்குண வஸ்துவைத் துதி செய்தல்
நமஸ்காரம்	:	சகுண பிரம்மத்தை அல்லது குருவை வணங்குதல்
ஆசீர்வாதம்	:	நூலாசிரியர் தாம் விரும்பிய பொருளை அடைதற் பொருட்டு பரமேசுவரனைப் பிரார்த்தித்தல்.

2. வியாக்கியான லட்சணம்: (5)

(உரை எழுதும் இலக்கணம்)

பதம்	:	பதத்தைப் பிரித்து உரைத்தல்
பதார்த்தம்	:	பதப் பொருள் உரைத்தல் (பத+அர்த்தம்)
வாக்கிய யோசனை	:	வாக்கியத்தின் முடிபொருளை ஆராய்ச்சி வாயிலாக கூறல்
வினா	:	அதில் தோன்றும் வினாவைக் கூறல்
விடை	:	அதற்கு விடை கூறுதல்

பதச்சேதம்: செய்யுள்களின் பதங்களை தனித்தனியாகப் பிரித்தல்

விக்கிரகம்: தொகையுடையனவும் வேற்றுமையை ஈறாக உடையனவுமாகிய பதங்களுக்கு ஏற்ற அர்த்தத்தை அனுசரித்து அவற்றை வேறு வேறாக்கி அறிவித்தல்

அத்தியாகாரம் (அ) வாக்கிய சேஷம்: வாக்கியம் முடிதல் பொருட்டாயினும், பொருள்

முடிதல் பொருட்டாயினும் எஞ்சி நின்ற பதங்களை வருவித்து உரைத்தல்.
யோசனை=அந்வயம்=பொருத்தம்

(2.1)சூத்திரம்-பாஷ்யம்-வார்த்திகம்:

சூத்திரம்	:	சித்தாந்தத்தை ரத்தினச் சுருக்கமாகச் சொல்வது
பாஷ்யம்	:	அதற்கு விரிவுரை
வார்த்திகம்	:	இந்த விரிவுரையையும் சாங்கோபாங்கமாக விஸ்தரித்து விளக்குவது

3. அந்வய லட்சணம்: (5)

(அந்வயம் - பொருள் கொள்ளுதல்)

அந்வயம்	:	குலாளன் கருங்கடத்தைச் செய்தான் என்பதில்,
கருமை	:	விசேஷணம்
கடம்	:	விசேஷியம்
குலாளன்	:	கருத்தா
கருங்கடம்	:	கருமம்
செய்தான்		கிரியை

உபோற்காதம்: சொல்ல வந்த பொருளை புத்தியில் வைத்துக் கொண்டு, அப்பொருள் சித்திக்கும் பொருட்டு முதலில் வேறு பொருளைச் சொல்லுதல் உபோற்காதம் எனப்படும்.
அதிதேசம்: ஓரிடத்தில் எழுதப்பட்டிருக்கும் அல்லது சொல்லப்பட்டிருக்கும் அல்லது அறிவிக்கப்பட்டிருக்கும் அர்த்தத்தை மற்றோரிடத்திலும் எழுதவாவது, சொல்லவாவது, அறியவாவது ஆஞ்ஞாபித்தல். இதனையே மாட்டெறிந்தொழுகல் என்றும் சொல்வர்.

தந்திரம்: ஒருமுறை உச்சரிக்கப்பட்டு அநேக அர்த்தத்தைப் போதிப்பதாய் இருப்பது

உபபாதனம்: விஸ்தார பூர்வகமாய் யுத்தியோடு உச்சரித்தல் அல்லது விவாதம் செய்து சிந்திக்கச் செய்தல் உபபாதனம் எனப்படும்.

வாக்கிய ஆபாசம்: முன்பின் விரோதத்தால் வேறு அர்த்தத்தில் தாற்பரியம் உடைய வாக்கியம்.

4. அநுபந்த விவரம்: (4)

தன்னை அறிந்த பின்னர் முமுட்சுவை அந்த நூலோடு பொருத்துவது

விஷயம்	:	நூல் எதைக் குறித்து போதிக்கின்றதோ அதுவே விஷயம்
சம்பந்தம்	:	நூலில் சொல்லப்படும் பொருளுக்கும் நூலுக்கும் உள்ள தொடர்பு
பிரயோசனம்	:	நூலைக் கற்று உணர்வதால் ஏற்படும் பலன்
அதிகாரி	:	நூலினைப் படிப்பதற்குத் தகுதியுடையவன்

5. சாதன சதுஷ்டயம் : (4)

நித்தியாநித்திய வஸ்து விவேகம் (நித்திய அநித்தியம்)	:	(சச்சிதானந்த வடிவ) ஆத்மாவே நித்தியம். (ஜட வடிமாய் உள்ள) துவைதப் பிரபஞ்சம் அனைத்தும் அநித்தியம் (மித்தை) என்று அவற்றை விசாரித்து தெளிதல்.
இகாமுத்திரார்த்த பலபோக விராகம் (இக அமுத்திர அர்த்த பலபோக விராகம்)	:	காணப்படும் இவ்வுலகத்திற்கும் கேட்கப்படும் பரலோகத்திற்கும் அனுபவிப்பதற்கு உரிய விஷயம் அனைத்தும் கர்மத்தினால் கிடைப்பவை ஆதலின் மித்தை, துக்க சாதனமாகும் என்று அவைகளில் சித்தத்தைச் செலுத்தாது இருத்தல்.

சமாதி சட்க சம்பத்தி	:	சமை, தமை, திதிட்சை, உபரதி, சிரத்தை, சமாதானம்

(3.1) *சமை*	:	அந்தக்கரணம் அடக்கல்
(3.2) *தமை*	:	புறக்கரணம் அடக்கல்
(3.3) திதிட்சை	:	காமாதி காரணமாக வரும் துன்பங்களைப் பொறுத்தல்
(3.4) உபரதி	:	கருமம்எல்லாம் சுமை எனப்புத்தி பூர்வமாக உணர்ந்து விடுதல்
(3.5) சிரத்தை	:	வேதம், குரு வாக்கியத்தை உண்மை என்று துணிவாக நம்புதல்
(3.6) சமாதானம்	:	குருஉபதேசத்தை மனதில் பொருந்துமாறு திடமாகக் கொள்ளல்
முமுட்சுத்துவம்	:	எப்பொழுதும் ஒரு தன்மையாய் உள்ள மோட்ச விருப்பம்.

(5.1)சாதன சதுஷ்டயத்தின் ஏது, சொரூபம் முதலியன: (5)

<u>நித்திய அநித்திய வஸ்து:</u>

ஏது (காரணம்)	:	அந்தக்கரண சுத்தி இல்லாதவர்களுக்கு நித்தியஅநித்திய வஸ்து விவேகம் உண்டாகாது. ஆகவே அந்தக்கரண சுத்தியே இதற்கு ஏது.
சொரூபம்	:	பிரம்மமே நித்தியம் ஏனையவை அநித்தியம் என்று சாத்திரம் மூலமாக நிச்சயித்தல் சொரூபம்
காரியம்	:	சாத்திரம் மூலமாக நிச்சயித்ததைச் சதா சிந்தித்துக் கொண்டிருப்பது
அவதி (எல்லை)	:	நாம ரூப வடிவங்கள் அனைத்தும் அநித்தியம் அவை இல்லாதது நித்தியம் என்று நிச்சயித்ததை எவ்வகையிலும் நீங்காது நன்றாய் திடமாகக் கொண்டிருப்பது
பலம்	:	புண்ணிய லோகம் அடைவதே பலம்

<u>இகாமுத்திரார்த்த பலபோக விராகம்:</u>

ஏது (காரணம்)	:	சப்தம் முதலிய விஷயங்களில் தோஷ திருஷ்டி உண்டாகாத போது விராகம் உண்டாகாது. ஆகவே விஷயங்களில் உள்ள தோஷ திருஷ்டி ஏது
சொரூபம்	:	அவா இன்றி விஷயங்களைப் பற்றற விடுதல்
காரியம்	:	பற்றற விடுத்த விஷயங்களில் மீண்டும் சம்ஸ்கார வாயிலாக அவா தோன்றாது இருத்தல்
அவதி (எல்லை)	:	எங்கெங்கு நாம ரூபங்கள் உண்டோ அங்கங்கு துக்கம் உண்டு என்று காணுதல், நினைத்தல், சொல்லுதல் மூலமாக உணர்ந்து நாம ரூப விஷயங்களை எல்லாம் நரகமாகப் பார்த்தல்
பலம்	:	புண்ணிய லோகம் அடைவது பலம்

<u>சமாதி சட்க சம்பத்து:</u>

ஏது (காரணம்)	:	இயமம் நியமம் முதலியவைகள் இல்லாத போது சமாதி சட்க சம்பத்தி உண்டாகாது. ஆகவே இயமம் நியமம் பின்பற்றப்படுவதே ஏது
சொரூபம்	:	சித்த நிரோதமே சொரூபம்
காரியம்	:	வியவகாரத்தின் நாசமே காரியம்
அவதி (எல்லை)	:	பிரவிருத்தி அற்றுச் சுழுத்தி அவத்தையைப் போல் விஷயங்களை மறந்து இருத்தலே அவதி
பலம்	:	புண்ணிய லோகம் அடைவது பலம்

<u>முமுட்சுத்துவம்:</u>

ஏது (காரணம்)	:	சாது சங்கப் பழக்கம் இல்லாதபோது எப்பொழுதும் துக்க நிவர்த்தியும் தடையற்ற ஆனந்தமும் ஆகிய மோட்சத்தில் தீவிர இச்சை உண்டாகாது. ஆகவே சாது சங்கப் பழக்கமே ஏது
சொரூபம்	:	மனைவி மக்கள் தனம் பொருள்களில் சிறிதேனும் இச்சையின்றி மோட்சம் மாத்திரத்தில் உள்ள இச்சையே

		சொருபம்
காரியம்	:	நற்கல்வி அறிவுடைமை வைராக்கியம் முதலியவற்றை உடைய பிரம்ம நிஷ்ட குருவை அடைதலே காரியம்
அவதி (எல்லை)	:	குருவிற்குச் செய்யும் தொண்டு ஒன்றையே கைக்கொண்டு மற்ற கருமங்களை எல்லாம் விட்டு விடுதலே அவதி
பலம்	:	புண்ணிய லோகம் அடைவது பலம்

6. குரு சேவை: (4)

ஆப்தம்	:	சாதன சதுஷ்டயம் உடைய அதிகாரி குருவுக்குப் பிரியமாக ஒழுகுதல்
அங்கம்	:	குருவுக்கு கால்பிடித்தல், துணி தோய்த்தல் முதலான குற்றேவல் செய்தல்
ஸ்தாநம்	:	குருவின் வீடு, விளைநிலம் முதலியவற்றைக் காத்தல்
சத்பாவம்	:	குருவைக் கடவுள் என்று நம்புவது

7. அதிகாரி : (3)

கருமகாண்டி	:	தேகத்தில் யான் என்னும் அபிமான வடிவ அகந்தையையும், வீடு, செயல்களில் எனது என்னும் அபிமான வடிவ மமதையையும் உடையவன்
பத்திகாண்டி	:	தான் செய்யும் கருமம் அனைத்தையும் பயன் நோக்காமல் இறை அர்ப்பணமாகச் செய்பவன்
ஞானகாண்டி	:	மனம் வாக்கு காயத்தால் செய்யும் கருமங்களுக்கு சாட்சியாக இருப்பவன் என்பதை உணர்ந்தவன்

(7.1) அதிகாரி (வேறு): (5)

கருமி	:	ஆத்ம-அனாத்ம விசாரம் இல்லாமையாகிய முடத்தன்மையால் தன் வருணத்திற்கு உரிய

		கருமங்களை சாத்திர விதிப்படி செய்து வருபவன் (இவன் நூறு பிறவிகளில் முத்தி பெறுதற்கு உரியவன்)
முமுட்சு	:	மாயா பிரபஞ்சம் அசத்து என்று சாத்திர-விசார-யுத்தி வாயிலாக பரோட்சமாகத் தெளிந்து குருவின் பணிவிடையாகிய வெளிக்கருமத்தைச் செய்பவன் (இவன் மூன்று பிறவிகளில் முத்தி பெறுதற்கு உரியவன்)
அப்பியாசி	:	மாயா பிரபஞ்சம் கனவுலகம் போன்றது என்று தெளிந்து உள்ளே தியான முதலிய நற்கருமம் செய்பவன் (இவன் இரு பிறவிகளில் முத்தி பெறுதற்கு உரியவன்)
அனுபவி	:	தான் விட்ட உலக வியவகாரத்தைச் சிறிதும் நினையாமல் ஆத்ம-அனாத்ம விவேகம் உடையவன் (இவன் அடுத்து வரும் ஒரு பிறவியில் முத்தி பெறுதற்கு உரியவன்)
ஆரூடன்	:	தனது ஆத்ம ஞானத்தால் உலகநிலை தோன்றுதல் இன்றித் தன் மயமாகவே விளங்குகின்றவன் (இவன் இந்தப்பிறவியிலேயே முத்தி பெறுதற்கு உரியவன்)

(7.2) முக்கிய-அமுக்கிய அதிகாரி:

முக்கிய அதிகாரி	:	சகுணப் பிரம்மத்தின் சாட்சாத்காரம் வரைக்கும் வழிபாட்டைச் செய்து, ஈசுவரனது திருவருளால் விஷயங்களில் தீமையைக் கண்டு, விவேகம் வைராக்கியம் முதலிய சாதனங்கள் நிறைந்தவராகிச் சிரவண முதலிய வற்றில் முயற்சி செய்பவர்கள் முக்கிய அதிகாரி. இவர்களுக்கு ஒருமுறை செய்த சிரவண முதலியவற்றால் சீவன் முத்தியின்கண் முடிவை உடைய தத்துவஞானம் உண்டாகின்றது. (தத்துவ ஞானத்திற்கு முன்னமே வழிபாட்டினால் சித்த விசிராந்தி ஏற்பட்டதால், தத்துவ ஞானத்திற்குப் பின் வாசனை அழிவு-மனோநாச அப்பியாசம் வேண்டியதில்லை)
அமுக்கிய	:	சகுண பிரம்மத்தின் வழிபாடு இல்லாத புருஷர்கள்

அதிகாரி		விவேக முதலிய சாதனத்தோடு கூடி பிரம்மத்தை அறியும் விருப்பத்தால் சிரவண முதலியவற்றால் முயற்சி செய்பவர்கள் அமுக்கிய அதிகாரிகள். இவர்களுக்குச் சிரவணாதிகளினால் தத்துவ சாட்சாத்காரமோ அவசியம் உண்டாகின்றது. (தத்துவ ஞானத்திற்குப் பின் வாசனை அழிவு-மனோநாச அப்பியாசம் கண்டிப்பாகச் செய்தல் வேண்டும்)

(7.3) அதிகார வழி : (3)

விவேகம்	:	மாயா பிரபஞ்சத்திற்கு அதிஷ்டானமாய் இருப்பது யாது என்று விசாரனை செய்வதோடு சற்குருவை அடைந்து, அவரது உபதேசத்தால் பிரம்ம ஞானியாய் முத்தி பெறுவான் ஒருவன். இவ்வதிகாரி விவேகத்தால் முத்தி பெறுதற்கு உரியவன் ஆவான்.
விரக்தி	:	தேகாதி பிரபஞ்சத்தை மித்தை என்று உணர்ந்து, போகத்தில் உள்ள விருப்பத்தை ஒழித்து, சற்குருவை அடைந்து அவரது உபதேசத்தால் பிரம்ம ஞானியாய் முத்தி பெறுவான் மற்றொருவன். இவ்வதிகாரி விரக்தியால் (வைராக்கியத்தால்) முத்தி பெறுதற்கு உரியவன் ஆவான்.
தெய்வகதி	:	ஒரு சற்குரு மூர்த்தி தன் சீடனுக்குத் தத்துவ உபதேசம் செய்ய, அதனைப் பிறர் சொல்லக்கேட்டு, கேட்டவுடனே பிரம்ம ஞானியாய் முத்தி பெறுவான் இன்னொருவன். இவ்வதிகாரி தெய்வகதியால் (நிஷ்காமிய புண்ணிய கருமத்தின் பரிபாகத்தால்) முத்தி பெறுதற்கு உரியவன் ஆவான்.

8. புருஷார்த்தம்: (4)

1. தர்மம் 2. அர்த்தம் 3. காமம் 4. மோட்சம்

9.புருஷ வகை:(4)

1.பாமரன் 2.விஷயி 3. ஜிஞ்ஞாசு 4.முக்தன்

பாமரன்: இகலோகத்தில் விலக்கப்பட்டும் விதிக்கப்பட்டும்இருக்கின்ற போகங்களில் விருப்பம் உள்ள சாஸ்திர சம்ஸ்காரம் இன்றிய புருஷன் பாமரன் எனப்படுவான்.

விஷயி: சாஸ்திர அநுசாரமாக விஷய போகங்களை அனுசரித்துக் கொண்டு இக பர லோகங்களின் போகங்களை அடைய கர்மம் செய்பவன் விஷயி எனப்படுவான்.

(9.1) பாமரர் மூவகையினர்: 1. உத்தமன் 2. மத்திமன் 3. கனிஷ்டன்

உத்தம பாமரன்	:	சாத்திர உணர்ச்சி உடையவன் ஆயினும் இவ்வுலக போகங்களிலேயே பற்றுடையவன் உத்தம பாமரன் ஆவான்.
மத்திம பாமரன்	:	சாத்திரம் உணராதவனாய்ப் பிறர் வாயால் கேட்கப்பட்ட சாத்திர அர்த்தங்களில் விசுவாசம் வைத்தல் இன்றி இவ்வுலக போகங்களிலேயே பற்றுடையவன் மத்திம பாமரன் ஆவான்.
கனிஷ்ட பாமரன்	:	முற்றும் சாத்திர சம்ஸ்காரம் இன்றி இருத்தலால் இவ்வுலக போகங் களிலேயே விருப்புடன் இருப்பவன் கனிஷ்ட (அற்ப) பாமரன் ஆவான்.

(9.2) விஷயி மூவகையினர்: 1. உத்தமன் 2. மத்திமன் 3. கனிஷ்டன்

உத்தம விஷயி	:	வைகுண்டம் அல்லது பிரம்மாவின்லோகம் முதலியவற்றினது இச்சையினால் சகாம உபாசனையில் ஈடுபடுபவன் உத்தம விஷயி ஆவான்.
மத்திம விஷயி	:	சுவர்க்க லோகத்தின் இச்சையினால் சகாம கர்மத்தில் ஈடுபடுபவன் மத்திம விஷயி ஆவான்.
கனிஷ்ட விஷயி	:	இவ்வுலகத்து இராஜ்ஜியாதி போகங்களின் இச்சையினால் புண்ணிய கர்மத்தில் ஈடுபடுபவன்

		கனிஷ்ட விஷயி ஆவான்.

(9.3) ஜிஞ்ஞாசு மூவகையினர்: 1. உத்தமன் 2. மத்திமன் 3. கனிஷ்டன்

உத்தம ஜிஞ்ஞாசு	:	தீவிர ஜிஞ்ஞாசை உடையவனாய் நான்கு சாதனங்களோடு அல்லது மந்த போதத்தோடு கூடியவன் உத்தம ஜிஞ்ஞாசு ஆவான்.
மத்திம ஜிஞ்ஞாசு	:	மந்த ஜிஞ்ஞாசையினால் வேதாந்த சிரவணத்தில் ஈடுபடுபவன் மத்திம ஜிஞ்ஞாசு ஆவான்.
கனிஷ்ட ஜிஞ்ஞாசு	:	மந்த ஜிஞ்ஞாசையினால் நிஷ்காம கர்ம உபாசனையில் ஈடுபடுபவன் கனிஷ்ட ஜிஞ்ஞாசு ஆவான்.

10. குரு : (8)

போதக குரு	:	சுருதி-ஸ்மிருதி முதலிய சாத்திரங்களின் பொருள்களைப் போதிப்பவன்
வேதக குரு	:	சீடர்களுக்குத் தத்துவ அர்த்தங்களை விளங்கக்கூறி அறிவிப்பவன்
நிஷித்த குரு	:	வசியம், ஆக்ருஷணம் முதலிய வித்தைகளைக் கற்பித்து, அதன் மூலம் இம்மையில் சுகத்தையும், மறுமையில் கொடிய துக்கத்தையும் தருபவன்
காமிய குரு	:	தருமஉபதேசம் செய்து இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை தருபவன்
சூசக குரு	:	நித்திய அநித்திய வஸ்து விவேகத்தை உண்டாக்குவதன் மூலம் சமை முதலான ஆறும் ஒருங்கே வருமாறு செய்பவன்
வாசக குரு	:	விஷயம் அனைத்தும் மித்தை என்று கூறுவதன் மூலம் ஆத்மாவில் விருப்பம் உண்டாக்குபவன்
காரக குரு	:	சீவ பிரம ஐக்கிய ஞான உபதேசம் செய்பவன் [காரக (அ)காரணகுரு]
விகித குரு	:	(விதிப்படி வேதாந்த நூல்களைக் கற்று சரணாகதி அடைந்தவனுக்கு) ஐயத்தை நீக்குவது மூலம் நித்தியமாய் உள்ள மோட்சத்தை அருள்பவன்

11. அத்வைதப் பரம்பரை:

தட்சிணாமூர்த்தி—தத்தாத்ரேயர்--நாராயணன்--பிரம்மா—வசிட்டர்--சக்தி—பராசரர்-- வியாசர்--சுகர்--கௌடபாதர்--கோவிந்த பகவத்பாதர்--சங்கரர்--பத்மபாதர்--ஹஸ்தாமலகர்--தோடகர்--சுரேஸ்வரர்.

12. உபதேசக் கிரமம் : (3)

உத்தேசம்	:	சீடனுக்கு விளங்க அறிவிக்கும் பொருளைப் பெயர் மாத்திரமாக கூறுவது
இலக்கணம்	:	அப்பொருளில் உள்ள சிறந்த குறியினைக் கூறுதல்
பரீட்சை	:	அவ்விலக்கியப் பொருளில் அந்த இலக்கணம் இருக்கிறதா? இல்லையா? என்று அந்த இலக்கணத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தல்

13. பிரயோஜனம்:

பரமப் பிரயோசனம்	:	எதைவிட அதிகமாக வேறு பிரயோசனம் உண்டாகிறதில்லையோ அப்படிப்பட்ட முக்கியப் பிரயோசனம் (பலம்)
அவாந்தரப் பிரயோசனம்	:	பரமப் பிரயோசனத்திற்கு எது வாயிலோ (சாதனமோ) அது அவாந்தரப் பிரயோசனம்.

14. பிரமை-அப்பிரமை:

விருத்தி இருவகை: 1.பிரமை-ஞானம், அறிவு. 2.அப்பிரமை.

சைதன்யத்திற்குப் பெயர் போதம். அந்தச் சைதன்யமாகிய போதத்தால் பிரகாசிக்கப்படும் விருத்தி பிரமை (piramai) எனப்படும். (அல்லது) அந்த விருத்தியில் பிரதிபிம்பித்துள்ள சைதன்யமாகிய போதம் விருத்தி எனப்படும். [பிரமை (piramai)-அறிவு,ஞானம். பிரமம்-பிராந்தி. பிரஹ்மம்=பிரம்மம்]

(14.1) பிரமை: பிரமை இருவகைப்படும். 1.ஈசுராசிரயம் 2.ஜீவாசிரயம்.

சிருஷ்டியின் ஆதிகாலத்தில் பின்னர் உண்டாகும் ஜகத்தை விஷயம் செய்வதாகிய மாயா விருத்தியைச் சுருதியில் 'ஈட்சணம்' என்னும் பெயரால் கூறப்பட்டுள்ளது. அந்த மாயா விருத்தியில் பிரதிபிம்பித்துள்ள சைதன்யம் 'ஈசுராசிரயப் பிரமை' எனப்படும்.

அறியப்படாத அதாவது போதத்தால் விஷயீகரிக்கப்படாததாயும், பாதிக்கப்படாத தாயும் உள்ள விஷய ஆகாரமாகிய அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்துள்ள சைதன்யம் 'ஜீவாசிரயப் பிரமை' எனப்படும்.

இந்த ஜீவாசிரயப் பிரமை இருவகைப்படும். 1.பாரமார்த்திகத்தினது 2.வியாவகாரிகத்தினது என்பன. அதிகாரிக்குத் தத்துவமசி முதலிய வாக்கியங்களால் உண்டாகிய 'அகம்பிரம்மாஸ்மி' என்னும் பிரமை (ஞானம்) பாரமார்த்திகப்பிரமை எனப்படும். கடம், படம்(துணி) முதலியவான பிரபஞ்சத்தை விஷயம் செய்யும் 'இது கடம்' 'இது படம்' என்றல் முதலிய பிரமை வியாவகாரிகப் பிரமை எனப்படும். இந்த வியாவகாரிகப் பிரமை அறுவகைப்படும். 1.பிரத்தியட்சம் 2.அனுமிதி 3.உவமிதி 4.சாப்தம் 5.அர்த்தாபத்தி 6.அபாவப்பிரமை என்னும் பேதத்தால் ஆறுவிதமாகும். அந்த அறுவிதப் பிரமையின் பேதத்தால் பிரமைக் கரணமாகிய பிரமாணமும் 1.பிரத்தியட்சம் 2.அனுமானம் 3.உவமானம் 4.சப்தம் 5.அர்த்தாபத்தி 6.அனுபலப்தி என்னும் பேதத்தால் ஆறுவகைப்படும்.

பிரமாணங்கள்:

(14.1.1) பிரத்தியட்சப் பிரமை கரணம் பிரத்தியட்சப் பிரமாணம்:

சம்சார தசையில் பொய் என்று நிச்சயிக்கப்படாததும், நிகழ்காலத்ததும், பிரத்தியட்சமும் (புலன் அறிவுக்கு எட்டியதும்) யோக்யமும் (தகுதி உடையதும்) ஆகிய விஷய அவச்சின்ன (பொருளால் வளைபட்ட) சைதன்னியத்திற்கு அபின்னமான (வேறாக இல்லாததான) பிரமாண சைதன்யம் பிரத்தியட்சப் பிரமை (காட்சி அறிவு) என்பதே இலக்கணம். இது 1.பாகியம் 2.ஆந்தரம் என இருவகைப்படும்.

புறப்பொருளை விஷயப்படுத்துவது பாகியப் பிரத்தியட்சப் பிரமை எனப்படும். இதுவும் சப்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் என்னும் ஐந்து விஷயங்களால் ஐந்து வகைப்படும். இந்த ஐந்து பிரமைக்கும் ஐந்து ஞானேந்திரியங்கள் கரணங்களாம்.

அகப்பொருளை விஷயப்படுத்துவது ஆந்தரப் பிரத்தியட்சப் பிரமை ஆகும். இதுவும் ஆன்ம கோசரம், சுகாதி கோசரம் என இருவகையாம்.

ஆன்மாவை விஷயப்படுத்தும் பிரமை ஆன்ம கோசரம் எனப்படும். இது 1.விசிஷ்டான்ம விஷயம் 2.சுத்தான்ம விஷயம் என்னும் வேறுபாட்டால் இருவகையாம். நான் ஜீவன் என்னும் பிரமை விசிஷ்டான்மாவை விஷயப்படுத்துவது. அகம்பிரம்மாஸ்மி என்னும் பிரமை (ஞானம்) சுத்தான்மாவை விஷயப்படுத்துவது ஆகும்.

நான் சுகி, நான் துக்கி என்பன முதலிய சுக துக்க முதலியவற்றை விஷயப் படுத்துவது சுகாதி கோசரப் பிரமை ஆகும்.

ஆந்தரப்பிரத்தியட்சப்பிரமைக்குக்கரணம்ந்தரஇந்திரியமாகிய மனமேயாம்.

(14.1.2) அனுமிதிப் பிரமை கரணம் அனுமானப் பிரமாணம்:

இலிங்க ஞானத்தால் தோன்றும் ஞானம் அனுமிதிப் பிரமையாம். (உ-ம்) இம்மலை நெருப்புடையது, புகை இருப்பதால். எது எது புகை உடையதோ அது அது நெருப்புடையது, அடுக்களை போல. (இந்த பிரசித்த அனுமானத்தில் பட்சம்- மலை, சாத்தியம் (துணிபொருள்)-நெருப்பு, இலிங்கம்(ஏது)-புகை, திருஷ்டாந்தம்-அடுக்களை.)

எதன் ஞானத்தால் சாத்தியத்தின் (துணிபொருளின்) ஞானம் (அனுமிதி) உண்டாகின்றதோ அது இலிங்கம் (குறி)எனப்படும். அனுமிதி ஞானத்தின் விஷயம் சாத்தியம் எனப்படும். அவிநாபாவமாகிய (இன்றியமையாததாகிய) சம்பந்தத்தை வியாப்தி என்பர். எது இல்லாமல் எது உண்டாகாதோ அதன் அவிநாபாவ சம்பந்தம் அதில் இருக்கிறது. அது 'அக்கினியின்றி புகை உண்டாகாமையால் அக்கினியின் அவிநாபாவ சம்பந்தம் புகையில் இருக்கின்றது. அது புகையில் அக்கினியின் வியாப்தியாம்' என்பது.

இப்பிரமை 1.சுவார்த்த (தன்பொருட்டு) அனுமிதி 2. பரார்த்த (பிறர் பொருட்டு) அனுமிதி என இருவகையாம்.

ஒருவனுக்கு மற்றொருவன் உபதேசம் இல்லாமலே வியாத்திஞானம், இலிங்க ஞானம் முதலியவற்றால் உண்டாகும் அனுமிதி யாதோ, அது சுவார்த்த அனுமிதியாம்.

தான், மலையில் தீ இருப்பதை அறிந்து, மற்றவனுக்கு அத்தீயினைத் தெரிவிப்பது (முதலில் அந்த மலையில் தீ இருப்பதை தான் அனுமானத்தால் கண்டுகொண்டு, அதனை மற்றவனுக்குத் தெரிவிப்பது) யாதோ அது பரார்த்த அனுமிதி எனப்படும்.

(எந்த அனுமானத்திற்கு இலிங்கம் (ஏது) காரியமாய் (உருவ முதலியவற்றை அறிதலாகிய வியாபாரமாய்) இருக்கின்றதோ அது காரியலிங்க அனுமானம் என்பர்.

இந்த அனுமிதிக்கு உறுப்புகளாக நையாயிகர் 1.பிரதிஞ்ஞை(மலை தீயுடைத்து), 2.ஏது (புகை இருப்பதால்), 3.உதாரணம் (எது எது புகை உடையதோ அது அது தீ உடையது அடுக்களை போலும்), 4.உபநயம் (இதுவும் அவ்வாறே அதாவது இம்மலை அடுக்களை போல் புகையுடையது), 5.நிகமனம் (ஆதலால் இங்ஙனம் அதாவது புகை உடையதால் இம்மலை அடுக்களை போல் தீ உடையது) என்னும் ஐந்தினையும் உறுப்புகளின் கூட்டம் நியாயம் என்பர். சித்தாந்தத்தில் பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம் என்ற மூன்று உறுப்புகளின் கூட்டம் நியாயம் எனப்படும். அல்லது உதாரணம், உபநயம், நிகமனம் என்னும் மூன்று உறுப்புகளின் கூட்டம் நியாயம் எனவும் கொள்வர்.

(14.1.3) உவமிதிப் பிரமை கரணம் உவமானப் பிரமாணம்:

சாதிருசியத்தை (ஒப்புமையை) விஷயப்படுத்தும் பிரமை உவமிதிப் பிரமையாம். நகரத்தில் கோ(பசுப்) பிண்டத்தைப் பார்த்தவன், கவயம் என்னும் விலங்கு பசுவைப் போல் இருக்கும் என்பதைக் கேள்விப்பட்டு, காட்டிற்குச் செல்லும் போது கவயவத்தைக் கண்டு பசுவினை ஒத்ததாக இருக்கிறது என்ற ஞானம் உண்டாதல் உவமிதிப் பிரமை.

(14.1.4) சாப்திப் பிரமை கரணம் சப்தப் (ஆகமப்) பிரமாணம்:

வாக்கியமாகிய கரணத்தால் தோன்றும் பிரமை சாப்திப்பிரமை ஆகும். வாக்கியம் என்பது 1.ஆகாம்சை (அவாய்நிலை) 2.யோக்யதை (தகுதி), 3.சந்நிதி (அண்மை) என்னும் பதங்களின் கூட்டம் வாக்கியம் (தொடர்மொழி) ஆகும். வேதங்களும் அவற்றை மூலமாக உடைய சாத்திரங்களும் சப்தப் பிரமாணங்களாம்.

ஆகாம்சை: ஒரு சொல்லுக்கு எந்த சொல் இல்லாமல் அர்த்தம் முடிவுறாதோ, அந்த சொல்லுக்கும் அர்த்தத்தை முடிக்க உதவும் சொல்லுக்கும் உள்ள தொடர்பு வியவகாரம் ஆகாம்சை எனப்படும். 'கடம் கொண்டு வா' என்னும் வாக்கியத்தில் கேட்போனுக்குக் கடத்தைக் கொண்டு வருதல் என்னும் உணர்வு உண்டாகின்றது. 'கட' பதத்திற்கும் 'கொண்டு வா' பதத்திற்கும் ஒன்றற்கு ஒன்றுள்ள தொடர்பு ஆகாம்சை.

தகுதி: வேறு பிரமாணத்தால் வாதம்செய்து அறியத் தேவை இன்றி ஒரு வாக்கியத்தின் அர்த்தம் விளங்குவதே யோக்யதை ஆகும். 'கடம் கொண்டு வா' என்னும் வாக்கிய அர்த்தமாகிய 'கடத்தைக் கொண்டு வருதல்' எதுவோ, அது பிரத்தியட்சம் முதலிய ஒரு பிரமாணத்தாலும் வாதம் செய்யப்படுவது தேவையில்லாத ஒன்று. இதுவே அக்கட முதலிய பதங்களில் உள்ள தகுதியாம்.

சந்நிதி: பதங்கள் ஒரு தொடராக விரவி உச்சரித்தல் சந்நிதி எனப்படும். 'கடம் கொண்டு வா' என்னும் தொடர்மொழியில், 'கடம்' என்று உச்சரித்த பதத்திற்குப் பின், தொடர்ந்து இடைவிடாது 'கொண்டு வா' என்னும் சொற்களை உச்சரித்தல் சந்நிதி.

(14.1.5) அர்த்தாபத்திப் பிரமை கரணம் அர்த்தாபத்திப் பிரமாணம்:

சொல்லப்படும் பொருளின் அர்த்தத்தில் வேறு அர்த்தமுடைய கற்பனை அர்த்தா பத்திப் பிரமை ஆகும்.(அர்த்தஸ்ய+ஆபத்தி) அதாவது அதன் பொருள் அர்த்தத்தின் (பொருளின்) கற்பனை என்பதாம். இது திருஷ்டாருத்தா பத்தி (காட்சிப்பொருட்பேறு) என்றும் சுருதாருத்தாபத்தி (கேள்விப் பொருட்பேறு) என்றும் இருவகைப்படும்.

<u>திருஷ்டாருத்தாபத்தி:</u> பகல் காலத்தில் உணவு உண்ணாமல் உள்ள ஒருவனது உடம்பு இளைக்காமல் இருப்பதைக் கண்டு, உடல் இளைக்காமல் பருத்திருப்பதற்குக் காரணம் அவன் இரவில் உணவினை உண்ணுவான் என்று இரவு உணவைக் கற்பிக்கும் போது, இளையாமை-இரவு உண்பதால் பொருந்துமே தவிர வேறு வழிகளில் பொருந்தாது என்பது பெறப்படும். இவன் இரவு உணவு உண்பான் என்னும் கற்பித்தல் அல்லது உணர்வு திருஷ்டாருத்தாபத்திப் பிரமை ஆகும். (திருஷ்ட+அருத்த+ஆபத்தி)

(உ-ம்) தோஷம் உடையவனுக்கு, எதிரில் உள்ள கிளிஞ்சலில் வெள்ளியின் தோற்றத்தை விஷயப்படுத்தும் 'இது வெள்ளி' என்னும் பிரம (பிராந்தி) வடிவ விசிஷ்ட அனுபவஞானம் உண்டாகின்றது. வெள்ளியின் தோற்றத்திற்கு அதிஷ்டானமாகிய கிளிஞ்சலின் ஞானம் வந்த பின்னர், 'இது வெள்ளி அன்று' என்னும் பாதம் (பொய் நிச்சயம்) காணப்படுகின்றது. ஆதலால் அந்த வெள்ளியின் பாத்யத் தன்மை (உரிமை கொண்டாடுதல்) திருஷ்டார்த்தம். பாத்யத்தன்மையாகிய திருஷ்டார்த்தம் அந்த வெள்ளியைச் சத்தியம் என்று ஒப்புக்கொள்வதில் நிகழாமல், அதனைப் பொய்--மித்தை என்று ஒப்புக்கொள்வதில் நிகழ்கிறது. வெள்ளி என்ற மித்யாத் தன்மை கற்பிக்கப்படுகிறது இது திருஷ்டார்த்தபத்தி பிரமை எனப்படும்.

இந்த கிளிஞ்சல் வெள்ளி என்ற மயக்க வடிவ ஞானத்தைப் பற்றி பல மதத்தினர் வெவ்வேறு அபிப்ராயங்களைத் தெரிவிக்கின்றனர். அவை:

<u>அக்கியாதி வாதம்:</u> மீமாஞ்சகர் இந்த இடத்தில் அக்கியாதியை ஒப்புக்கொள்கின்றனர். (கியாதி – புத்தி) அவர்களது கருத்து: "எல்லா ஞானங்களும் யதார்த்தமே. ஒரு ஞானமும் அயதார்த்தம் அன்று. ஆகையால் பிரம ஸ்தலத்தில் (பிராந்தி உண்டாகும் இடத்தில்) 'இது வெள்ளி' என்னும் விசிஷ்ட பிரம ஞானத்திற்கு ஓர் பிரமாணமும் இல்லை.

<u>அசத்கியாதி வாதம்:</u> சூனியவாதிகளான மாத்தியமிகரும், சில தாந்திரிகர்களும் இத்தகைய புத்தியைக் கொண்டுள்ளனர். சூனியவாதியின் மதத்திலோ ஞாதா-ஞானம்-ஞேயம் முதலிய எல்லாப்

பொருள்களும் அசத்தாம். ஆகையால் அசத் கிளிஞ்சலில் அசத் வெள்ளியே 'இது வெள்ளி' என்னும் உணர்விற்கு விஷயமாகிறது.

தாந்திரிகர் மதத்திலோ கிளிஞ்சல் முதலிய வியவகாரிகப் பொருள்கள் அசத்து அன்று. ஆனால் அந்த கிளிஞ்சலில் தோற்றும் வெள்ளி அசத்தாம். ஆகவே 'இது வெள்ளி' என்னும் உணர்வு அசத்தான வெள்ளியை விஷயப்படுத்துகின்றது. கிளிஞ்சலைப் பற்றி ஞானம் உண்டான பின்னர், 'அசத்தான வெள்ளியே எனக்குத் தோன்றியது' என்ற அனுபவம் உண்டாவதால், பிரம (பிராந்தி) உணர்விற்கு விஷயமாகிய வெள்ளி முதலியவைகள் அசத்தே என்று கொள்ளவேண்டும்.

<u>சத்கியாதி வாதம்:</u> சில நூலாசிரியர்கள் (மற்றும் வைணவர்கள்) இதனை ஒப்புகின்றனர். அவர்களது அபிப்ராயம்:- "கிளிஞ்சலின் ஆரம்பக அவயவங் (உறுப்பு) களோடு வெள்ளியின் ஆரம்பக அவயவங்கள் எப்போதும் கலந்தேயிருக்கின்றன. கிளிஞ்சலின் அவயவம் எப்படி சத்தியமோ, அப்படி வெள்ளயின் அவயவமும் சத்தியமே. தோஷத்தோடு கூடிய கண் இந்திரியத்திற்கு அந்த அவயவங்களோடு எப்போது சையோக சம்பந்தம் உண்டாமோ,அப்போது அந்த அவயவங்கள் சத்தியமான வெள்ளியை உண்டாக்குகின்றன. இதனாலேயே அந்த வெள்ளியின் சத்தியத்தன்மையை விஷயப்படுத்தும் 'இந்த வெள்ளி சத்து' என்னும் பிரத்தியட்சம் யாவருக்கும் உண்டாகின்றது. கிளிஞ்சலின் ஞானத்தால் அந்த சத்திய வெள்ளியும் தனது அவயவத்தில் துவம்சம் ஆகிறது.

<u>ஆத்மக்கியாதி வாதம்:</u> ச்சணிக விஞ்ஞான வாதிகளான யோகசாரர் இதனை அங்கீ கரிக்கின்றனர். அவர்களது கருத்து:- தேகத்தின் அகத்துள்ள ச்சணிக விஞ்ஞானம் எதுவோ அதுவே ஆன்மா. அவ்விஞ்ஞான ஆன்மாவிற்கு வேறாகப் பிறிதோர் பொருள் அகத்தும் புறத்தும் இல்லை. ஆனால் எல்லாப் பொருள்களும் அந்த உணர்வின் ஆகார விசேடங்கள் ஆகும். ஆகையால் அந்த கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுதல் எதுவோ, அதுவும் அந்த அகத்து உணர்வின் தர்மமேயாம். அந்த அகத்து வெள்ளியே தோஷ வல்லமையால் புறத்தது போலத் தோன்றுகின்றது. இது வெள்ளி அன்று என்னும்

ஞானத்தால் அந்த வெள்ளி சொருபமாகப் பாதமாகின்றதில்லை. ஆனால் அந்த அகத்து வெள்ளியின்கண் இதுவெனும் வடிவப் புறத்ததின் பாதமே உண்டாகின்றது.

<u>அந்நியதாக்கியாதி வாதம்:</u> நையாயிகர் பிரம (பிராந்தி) ஸ்தலத்தில் இதனை ஒப்புகின்றனர். அவர் கருத்தாவது:- புற்று முதலிய இடங்களில் யதார்த்த பாம்பு உளது. அது கண்ணால் பார்க்கப்படுகின்றது. கண்ணின் இடத்தில் தோஷம் உளது. அதனது வலியினால் எதிரே சமீபத்தில் தோற்றம் அளிக்கின்றது. யதார்த்த பாம்பிற்கும் கண்ணுக்கும் மத்தியில் சுவர் முதலிய மறைப்புகள் இருந்தபோதிலும், தோஷத்தோடு கூடிய கண்ணால் மறைப்புடன் கூடிய பாம்பும் காணப்படுகின்றது. ஒரு பொருள் வேறு வடிவமாய்த் தோற்றுதல் அந்நியதாக்கியாதி எனப்படும். இவ்வாறு பிராந்தி ஞானத்தால் கிளிஞ்சல் முதலியவற்றில் பெறப்படும் வெள்ளி முதலியவை எவையோ அவைகட்கு இது வெள்ளி அன்று என்னும் ஞானத்தால் நிஷேதமும் சம்பவிக்கக்கூடும்.

சிந்தாமணிக்காரர்களது மதக் கருத்து:- தோஷத்தோடு கூடிய கண்ணால் புற்றில் உள்ள பாம்பின் ஞானம் உண்டாகுமாயின், மத்தியில் உள்ள ஏனைய பொருட்களின் ஞானமும் உண்டாக வேண்டும். அவ்வாறு உண்டாவதில்லை. ஆதலால் வேறு இடத்தில் உள்ள பொருளின் ஞானம் கண்ணில் இருக்க முடியாது. எப்படி இருக்கிறது எனில், தோஷத்தோடு கூடிய கண்ணில் கயிறு தனது நிச வடிவமாகத் தோற்றம் அளிக்காமல், பாம்பு வடிவமாகத் தோற்றம் அளிக்கிறது. அதனால் கயிறே அந்நியதா (வேறு பிரகார) பாம்பு வடிவமாக, கியாதி (புத்தி), தோற்றுதலும் சொல்லுதலும் ஆகும்.

<u>அநிர்வசனீயக் கியாதி வாதம்:</u> வேதாந்திகள் இதனைக் கூறுகின்றனர். அக்கருத்து:-

அந்தக்கரணத்தின் விருத்தி கண்ணின் மூலமாக வெளிப்பட்டு விஷயத்தின் சமான ஆகாரத்தை அடைகின்றது. அதனால் விஷயத்தின் ஆவரண (மறைப்பாகிய) பங்கமாக அதனது தோற்றம் உண்டாகின்றது. அங்கு அதற்குப் பிரகாசமும் சகாயம் செய்கின்றது. பிரகாசம் இன்றி பதார்த்தத்தின் தோற்றம் தெரியாது. எங்கே

கயிற்றில் பாம்பின் தோற்றப் பிராந்தி இருக்கின்றதோ, அங்கே அந்தக்கரணத்தின் விருத்தி கண் மூலமாக வெளிப்பட்டு, கயிற்றோடு அதன் சம்பந்தம் உண்டாகிறது. ஆயினும், தோஷமாகிய தடையினால் விருத்தியின் சொரூபம் கயிற்றில் உள்ள சமானாகாரம் ஆகவில்லை. ஆதலால் கயிற்றின் ஆவரணம் (மறைப்பு) நாசமாகவில்லை. இதன்படி, ஆவரண பங்கத்தின் நிமித்தம் விருத்தியின் சம்பந்தமாயினும், எப்போது கயிற்றின் ஆவரணம் பங்கமாக வில்லையோ, அப்போது கயிறு சேதனத்தில் உள்ள அவித்தையின்கண் சோபம் உண்டாகி, அந்த அவித்தை பாம்பின் ஆகார பரிணாமத்தை அடைகின்றது. அந்த அவித்தையின் காரியமாகிய பாம்பானது சத்தாகுமாயின், கயிற்றின் ஞானத்தால் அது பாதமாகாது. ஆனால் பாதமாகின்றது. ஆதலால் சத்து அல்ல. அசத்தாயின், மலடி மகன் போல் தோற்றம் அளிக்காது. ஆனால் தோற்றுகின்றது. ஆதலால் அசத்தும் அல்ல. எப்படியெனில், சதசத்தின் விலட்சணமாகிய (வேறாகிய)அநிர்வசனீயம் ஆகும்.

(அக்கியாதி, அசத்கியாதி, சத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி ஆகிய கருத்துக்கள் சிறந்தவை அன்று என்று வேதாந்த சித்தாந்தத்தில் கண்டிக்கப்பட்டு, அநிர்வசினீயக்கியாதி என்பதையே நிருபணம் செய்துள்ளனர். இந்நூல் அகராதி என்பதாலும், விரிவாகும் என்பதாலும் கண்டன வாதங்கள் இங்கே தரப்படவில்லை)

<u>சுருதாருத்தாபத்தி:</u> இராமன் என்பவன் வீட்டில் இல்லை என்று கூறினால், அதனைக் கேட்ட மற்றொருவன் அந்த இராமன் வேறோர் இடத்தில் இருப்பான் என்பதை ஆராய்ந்து கற்பிக்கும் இடத்து, இராமனது ஜீவனம் அவன் வேறோர் இடத்தில் இருப்பதால் பொருந்தும் அன்றி வேறு வழிகளால் பொருந்தாது என்பது பெறப்படும். அதனால் வேறோர் இடத்தில் இருத்தலைக் கற்பித்தல் அல்லது உணர்வு சுருதாருத்தா பத்திப் பிரமை எனப்படும்.

(14.1.6) அபாவப் பிரமை கரணம் அனுபலப்தி பிரமாணம்: அபாவத்தின் யதார்த்த ஞானம் எதனால் உண்டாகின்றதோ அது அநுபலப்திப் பிரமாணமாம். (அபாவம்=இன்மை, உபலத்தி=விளக்கம், அநுபலப்தி=விளங்காமை). "கொட்டகையில் யானை இருக்கிறதா?

பார்த்துச் சொல்" என்றால், அவன் பார்க்கும் போது யானை தெரியவில்லை அதனால் யானை இல்லை என்கிற ஞானம் உண்டாகும். அந்த ஞானம் அபாவப் பிரமை ஆகும். யானை விளங்காமை என்னும் அபாவம் அநுபலப்திப் பிரமாணம். யானை இல்லை என்னும் யதார்த்த ஞானம் அபாவப் பிரமையாம்.

இந்த அறுவகைப் பிரமாணங்களையும் மீமாம்சகர் பாட்ட மதத்திலும், வேதாந்தத் திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பௌராணிகர்கள் பின்வரும் சம்பவப் பிரமாணம், ஐதிகப்பிரமாணம் இரண்டினையும் சேர்த்து எட்டு பிரமாணங்களாகச் சொல்வர்.

(14.1.7) சம்பவப் பிரமாணம்: ஆயிரம் என்ற எண்ணில் நூறு என்ற எண் உண்டு என்று அறிகின்ற ஞானத்தில் ஆயிரம் என்னும் ஞானம் சம்பவப் பிரமாணமாம். நூறு உண்டு என்னும் ஞானம் அதனால் உண்டாகும் பிரமையாம். ஆயிரம் என்ற எண்ணானது, நூறு என்ற எண் இல்லாமல் வராது என்பதால், ஆயிரத்துக்குள் நூறு இருக்கிறது எனப் பொருள்.

(14.1.8) ஐதிகப் பிரமாணம்: இந்த ஆல மரத்தில் பேய் இருக்கிறது என்னும் சொல் சொல்லப்படுவதால் இந்த ஆல மரத்தில் பேய் இருக்கிறது என உண்டாகும் ஞானத்தில், சொல் நிகழ்ச்சி ஐதிகப் பிரமாணமாம். அந்த மரத்தில் பேய் இருக்கிறது என்னும் ஞானம் அந்த பிரமாணத்தின் பிரமையாம். இந்த மரத்தில் பேய் இருக்கின்றது என்று பிறர் கூற, அதனால் மற்றவர்க்கு மரத்தில் பேய் இருக்கின்றது என்னும் ஞானம் பரம்பரையாக உண்டாகின்றது என்பது பொருள்.

(14.1.9) பிரமாணங்களை ஒப்புக்கொண்டுள்ள மதப்பிரிவினர்: உலகாயதர் (சார்வாகர்) – பிரத்தியட்சம் மட்டும். ஜைனர்,பௌத்தர், வைசேஷிகர் - பிரத்தியட்சம், அனுமானம் இரண்டும். சாங்கியர், சைவர் - பிரத்தியட்சம்,அனுமானம், சப்தம் மூன்றும். நையாயிகர் - பிரத்தியட்சம்,அனுமானம்,சப்தம்,உவமானம் நான்கும். பிரபாகரர் - பிரத்தியட்சம்,அனுமானம்,சப்தம், உவமானம், அருத்தாபத்தி ஐந்தும். பட்டர் (மீமாம்சகர்), வேதாந்திகள் - ஆறு பிரமாணங்களும். பௌராணிகர் - எட்டு பிரமாணங்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

<u>*(14.2) அப்பிரமை:*</u>

பிரமைக்கு (அறிவு-ஞானத்திற்கு) வேறான ஞானம் எதுவோ அது அப்பிரமை எனப்படும். அது, கிளிஞ்சலில் 'இது வெள்ளி' என்றல் முதலிய ஞானம் பிரமை ஞானத்திற்கு வேறாவதால் 'அப்பிரமை' எனப்படும். ஆத்ம ஞானத்திற்குத் தடை வடிவான அசம்பாவனை-விபரீத பாவனையும் அப்பிரமை ஞானத்தில் அடங்கியனவே ஆகும். (பிரமை-சரியான அறிவு, அப்பிரமை-தவறான அறிவு) அப்பிரமை விருத்தி 1.ஸ்மிருதி 2.அனுபவம் என்று இருவகைப்படும்.

<table>
<tr><td colspan="7">அப்பிரமை பிரிவுகள்</td></tr>
<tr><td rowspan="4">1. ஸ்மிருதி</td><td rowspan="2">1.யதார்த்தம்</td><td colspan="3">அனாத்ம ஸ்மிருதி</td><td colspan="2"></td></tr>
<tr><td colspan="3">ஆத்ம ஸ்மிருதி</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="2">2.அயதார்த்தம்</td><td colspan="3">அனாத்ம ஸ்மிருதி</td><td colspan="2"></td></tr>
<tr><td colspan="3">ஆத்ம ஸ்மிருதி</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="12">2. அனுபவம்</td><td>1.யதார்த்தம்</td><td colspan="5"></td></tr>
<tr><td rowspan="11">2.அயதார்த்தம்</td><td rowspan="4">1.சம்சயம்</td><td rowspan="2">1.பிரமாண சம்சயம்</td><td colspan="2">1.பிரமை சம்சயம்</td><td rowspan="5"></td></tr>
<tr><td colspan="2">2.கரண சம்சயம்</td></tr>
<tr><td rowspan="2">2.பிரமேய சம்சயம்</td><td colspan="2">1.அனாத்மகத சம்சயம்</td></tr>
<tr><td colspan="2">2.ஆத்மகத சம்சயம்</td></tr>
<tr><td rowspan="7">2.நிச்சயம்</td><td>1.யதார்த்த நிச்சயம்</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="6">2.அயதார்த்த நிச்சயம்</td><td>தர்க்கம்</td><td></td><td></td></tr>
<tr><td rowspan="5">விபர்யயம்</td><td>நிருபாதிகப் பிரமம்</td><td>பாகியம் ஆந்தரம்</td></tr>
<tr><td>சோபதிகப் பிரமம்</td><td>பாகியம் ஆந்தரம்</td></tr>
<tr><td>(வேறுவகை)</td><td rowspan="3"></td></tr>
<tr><td>அந்தக்கரண விருத்திவடிவம்</td></tr>
<tr><td>அவித்தியா விருத்திவடிவம்</td></tr>
</table>

(14.2.1) ஸ்மிருதி: சம்ஸ்கார மாத்திரத்தால் உண்டாகும் ஞானம் ஸ்மிருதி எனப்படும். 'அவள் எனது தாய்', 'அவர் எனது தந்தை' என்பன முதலிய ஞானம் சம்ஸ்கார மாத்திரத்தால் உண்டாவது. சம்ஸ்காரமானது 1.வேகம் 2.பாவனை 3.திதிஸ்தாபகம்

(நிலைபெறுத்தல்) என மூவகை. கிரியையால் தோன்றுவதாயும், வேறு கிரியையைத் தோற்றுவிப்பதாயும் உள்ள சம்ஸ்காரம் வேகம் எனப்படும். (இது பாணம்-அம்பு முதலியவற்றில் உள்ளது). அனுபவ ஞானத்தால் தோன்றுவதாயும், ஸ்மிருதி ஞானத்தைத் தோற்றுவிப்பதாயும் உள்ள சம்ஸ்காரம் பாவனை எனப்படும். (இது வேதாந்த சித்தாந்தத்தில் அந்தக்கரணத்திலும், நையாயிக மதத்தில் ஆத்மாவிலும் உள்ளது. வேதாந்திகள் ஏற்றுக்கொண்டுள்ள அகங்காரத்தினையே ஆத்மா என நையாயிகர்கள் அறிகின்றார் ஆதலால்.) வேறு தன்மையாகச் செய்யப்பட்ட வஸ்துவை மீட்டும் அந்நிலையே ஆக்குவதாகிய சம்ஸ்காரத்தினைத் திதிஸ்தாபகம் எனச்சொல்வர். (இது வில், கிளை முதலியவற்றில் உள்ளது).

வேகம், திதிஸ்தாபகம் என்னும் இரண்டு சம்ஸ்காரங்கட்கும் கிரியையைத் தோற்று விக்கும் தன்மையே உளது. எனினும், பாவனை என்னும் சம்ஸ்காரத்திற்கு ஞானத்தைத் தோற்றுவிக்கும் தன்மையுளது. ஆதலால் ஸ்மிருதியின் இலக்கணத்தில் சம்ஸ்கார சப்தத்தால் 'பாவனை' என்னும் சம்ஸ்காரமே கருத்தாம்.

(14.2.2) யதார்த்த ஸ்மிருதி: யதார்த்த அனுபவத்தினால் உண்டாகும் சம்ஸ்காரத்தால் உண்டாகும் ஸ்மிருதி

யதார்த்த அனாத்ம ஸ்மிருதி: வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை, திருசியத் தன்மையால், கிளிஞ்சலில் வெள்ளி போல—என்னும் அனுமானத்தால் உண்டாகும் பிரபஞ்சத்தின் மித்தியாத்தன்மை அனுபவம் ஆகும். அந்த அனுபவத்தினால் உண்டாகும் சம்ஸ் காரத்தால் அதிகாரிக்கு உண்டாகும் பிரபஞ்ச மித்தியாத் தன்மையின் ஸ்மிருதி இதுவாம்.

யதார்த்த ஆத்ம ஸ்மிருதி: தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களால் உண்டான 'அகம் பிரம்மாஸ்மி' என்னும் அனுபவத்தால் உண்டாகும் சம்ஸ்காரத்தால் அதிகாரிக்கு உண்டாகும் பிரத்தியகபின்ன பிரம்மத்தின் ஸ்மிருதி இதுவாம்.

(14.2.3)அயதார்த்த ஸ்மிருதி: அயதார்த்த அனுபவத்தினால் உண்டாகும் சம்ஸ்காரத்தால் உண்டாகும் ஸ்மிருதி

அயதார்த்த அனாத்ம ஸ்மிருதி: மித்தியாப் பிரபஞ்சத்தில் உள்ள சத்தியத்தன்மையின் அனுபவம் மயக்கமே ஆகும். அயதார்த்த அனுபவத்தால் உண்டாகும் சம்ஸ்காரத்தால் உண்டாகும் பிரபஞ்ச சத்தியத் தன்மையின் ஸ்மிருதி இதுவாம்.

அயதார்த்த ஆத்ம ஸ்மிருதி: அகங்கார முதலியவைகளில் உள்ள ஆத்மத் தன்மை புத்தி அயதார்த்த அனுபவம் ஆகும். அந்த அயதார்த்த அனுபவத்தால் உண்டாகும் சம்ஸ் கரத்தால் உண்டான அகங்காரம் முதலியவைகளில் உள்ள ஆத்ம பாவனையின் ஸ்மிருதி அல்லது வாஸ்தவத்தில் கர்த்தாத்தன்மையில்லாத ஆத்மாவில் கர்த்திருத்தன்மை புத்தி யாகிய அயதார்த்த அனுபவத்தால் உண்டாகும் சம்ஸ்காரத்தால் உண்டாகும் கர்த்தாத் தன்மையின் ஸ்மிருதி இதுவாம்.

(14.2.4) அனுபவம்: மேற்கூறிய ஸ்மிருதி ஞானத்திற்கு வேறான ஞானம் எதுவோ அது அனுபவம் எனப்படும். (அனுபூதி=அனுபவம்) 'இது கடம்' 'இது வெள்ளி' என்பதில் ஞானம் ஸ்மிருதி ஞானத்திற்கு வேறாவதால் அனுபவமே ஆம்.

யதார்த்த அனுபவம்: பாதிக்கப்படாத பொருளை விஷயப்படுத்தும் பிரமை இதுவாம்.

அயதார்த்த அனுபவம்: பாதிக்கப்படும் பொருளை விஷய்மாக்கும் அனுபவம் இதுவாம்.

(14.2.5) சம்சயம்: ஒரே தர்மியின்கண் விளங்கும் ஒன்றுக்கொன்று விரோதமான நாநா(பல) பட்சங்களை விஷயப்படுத்தும் ஞானம் சம்சயம். (கம்பமோ, புருஷனோ என்னும் ஞானம் ஒரே கம்பமாகிய தர்மியிலாவது, புருஷனாகிய தர்மியிலாவது கம்பத்தின் தன்மை, புருஷத் தன்மை என்னும் விரோதமான பல பட்சங்களை விஷயப்படுத்தும் ஞானம்)

பிரமாண சம்சயம்: பிரமாணத்தில் உள்ள அசம்பாவனை இதுவாம்

பிரமேய சம்சயம்: பிரமேயத்தில் உள்ள அசம்பாவனை இதுவாம்.

பிரமை சம்சயம்: பிரமாணத்தால் பிறந்த பிரமை ஞானத்தில் உள்ள சம்சயம் இதுவாம்.

கரண சம்சயம்: பிரமாணத்தின் சொரூபத்தில் உள்ள சம்சயம் இதுவாம்.

(பிரமேய)அனாத்மகத சம்சயம்: ஒருவனுக்கு அனாத்மாக்களாகிய கம்பம் முதலியவற்றில் கம்பமோ, புருஷனோ என்று இவ்வாறு எந்த சம்சயம் உண்டோ அது இந்த சம்சயமாம். இது சாதாரண தர்மத்தின் தரிசனத்தால் (சாமானிய ஞானத்தால்) உண்டாகும்.
(பிரமேய)ஆத்மகத சம்சயம்: புருஷனுக்குத் தனது ஆத்மாவில் எந்த சம்சயம் உண்டா கின்றதோ, அது ஆத்ம சம்சயம் எனப்படும். இது அநேக பிரகாரங்களாகும். அதாவது ஒன்றுக்கொன்று முரண் உள்ள பொருள்களைக் கூறும் வாதிகளின் வசனங்களால் புருஷனுக்கு ஆத்ம சம்சயம் அநேக விதமாய் உண்டாகின்றது.
(14.2.6) நிச்சயம்: மேற்கூறிய சம்சயத்திற்கு விரோதியான ஞானம் நிச்சயமாம். இந்த நிச்சயமும் யதார்த்தம், அயதார்த்தம் என இருவகையாம்.
யதார்த்த நிச்சயம்: பயனிடத்து முடிவை உடைய ஞானம் யதார்த்த நிச்சயம் எனப்படும். அதாவது எந்த வஸ்துவின் நிச்சயத்திற்குப் பின்னர், பிரவிருத்தித்த புருஷனுக்கு அந்த வஸ்து பிராப்தமாகின்றதோ, அந்த நிச்சயம் இதுவாம்.
யதார்த்த அனுபவம்+யதார்த்த ஸ்மிருதி=யதார்த்த நிச்சயம்
அயதார்த்த நிச்சயம்: பயனில்லாத ஞானம் அயதார்த்த நிச்சயமாகும். அதாவது எந்த வஸ்துவின் நிச்சயத்திற்குப் பின்னர், பிரவிருத்தித்த புருஷனுக்கு அந்த வஸ்து பிராப்பதம் ஆகாதோ, அந்த நிச்சயம் இதுவாம். இது தர்க்கம், விபர்யயம் என இருவகையாம்.
(14.2.7) தர்க்கம்: புகையுடையதும் அக்கினி உடையதும் ஆகிய மலையில், அக்கினி இன்றேல், புகை இல்லை என்னும் தர்க்கத்தில் அயதார்த்த நிச்சயத்தன்மை தெளிவாக உள்ளது.

(14.2.8) விபர்யயம்: எந்த ஞானம் மித்தை யாகின்றதோ அந்த ஞானம் விபர்யயம் எனப்படும். கிளிஞ்சலில் வெள்ளி என்னும் ஞானமும், கயிற்றில் பாம்பு என்னும் ஞானமும் மித்தியா ஞானமாவதால் விபர்யயம் எனப்படும். இந்த விபர்யயமாகிய பிரமமும் (பிராந்தியும்) நிருபாதிக பிரமம், சோபாதிக பிரமம் என இருபிரிவாம்.

(14.2.9) நிருபாதிக பிரமம்: எந்தப் பிரமம் (பிராந்தி) அதிஷ்டானத்தின் ஞானத்தால் நிவர்த்தி யாகின்றதோ அது நிருபாதிகப் பிரமம் எனப்படும். கேவலம் அஞ்ஞானத்தினால் தோன்றிய பிரமம். எங்ஙனம்: கயிற்றில் உண்டாம் பாம்பின் பிரமமும், கிளிஞ்சலில் உண்டாம் வெள்ளியின் பிரமமும் கேவலம் அஞ்ஞானத்தினால் ஆகியனவாம். ஆதலால் நிருபாதிகப் பிரமம் எனப்படுகின்றது.

சஜாதீய ஞானத்தின் சம்ஸ்காரமும், பிரமாதாவினிடத்துள்ள தோஷமும், பிரமாணத்துள்ள தோஷமும், பிரமேயத்துள்ள தோஷமும், அதிஷ்டானத்தினது சாமானிய அம்சமாகிய இதந்தையின் ஞானமும் கயிற்றில் பாம்பு முதலிய பிரமத்தில் நிமித்த காரணமாம். அவை கயிறு அஞ்ஞானத்திற்குத் துணையாய் இருத்தலின் உபாதி வடிவமாம். அவ்வாறாயினும் (1)காரிய காலத்திருப்பது (2) காரிய காலத்திற்கு முன்னிருப்பது என்னும் பேதத்தால் நிமித்த காரணம் இருவகையாகும்.

(1)எதன் சந்நிதி இருக்கும்கால் காரியம் இருக்குமோ, இல்லாத போது காரியம் இராதோ, அது காரியகாலத்திருக்கும் நிமித்தமாம். அது சுவரில் உள்ள சூரியனது பிரதிபிம்பத்தினது சந்நிதியில் உள்ள ஜல பாத்திரம் போலவாம்.

(2)அதனின் வேறாய நிமித்தங்கள் எவையோ அவை காரிய காலத்திற்கு முன் இருப்பனவாம். அத்தன்மைய நிமித்தம் கயிற்றில் பாம்பு முதலிய பிரம ஸ்தானத்தில் இல்லை. ஆதலால் அவை நிருபாதிகப் பிரமமேயாம்.

இது பாகியம், ஆந்தரம் என இருவகையாம்.

<u>பாகிய நிருபாதிக பிரமம்:</u> கிளிஞ்சலில் வெள்ளி, கயிற்றில் பாம்பு முதலியவற்றில் 'இது வெள்ளி', 'இது பாம்பு' என்பதில் பிரம ஞானங்களோ பாகிய நிருபாதி பிரமம் ஆம்.

<u>ஆந்தர நிருபாதிக பிரமம்:</u> 'நான் அஞ்ஞானி', 'நான் பிரம்மத்தை அறிகிலேன்' என்னும் பிரமம் (பிராந்தி) ஆந்தர நிருபாதிக பிரமம் ஆகும். இந்தப் பிராந்தி நிதித் தியாசனத்தினால் நிவர்த்தியாகும்.

(14.2.10) சோபாதிக பிரமம்: எந்தப் பிரமம் (பிராந்தி) அதிஷ்டான ஞானம் உண்டான போதும் நிவர்த்தியாகின்றதில்லையோ, அது சோபாதிகப் பிரமம் எனப்படும். முற்கூறிய விலட்சணமான நிமித்த வடிவ உபாதியோடு கூடிய அஞ்ஞானத்தினால் தோன்றிய பிரமம் எதுவோ அது சோபாதிகப் பிரமமாம். எங்ஙனம்:

(1)கண்ணாடியில் அல்லது முகத்தில் பிரதிபிம்பத்தின் பிரமமும், ஜலத்தில் தலைகீழான புருஷனது அல்லது கரையில் உள்ள மரங்களது பிரமமும் போல. இதில் பிரதி பிம்ப ஸ்தலத்தில் பிம்பம் கண்ணாடி அல்லது ஜலம் என்பவற்றின் சந்நிதி உபாதியாம்.

(2)ஆகாயத்தில் கருமையின் அல்லது கொப்பரை வடிவத்தின் பிரமம்-- ஆகாசத்துள்ள கருமை ஸ்தானத்தில் சூரியாதிப் பிரகாசம் இருள் என்பவற்றின் சம்பந்தம் உபாதியாம். கொப்பரை வடிவ ஸ்தலத்தில் பிரம்மாண்டத்தின் சந்நிதி உபாதியாம்.

(3)கானல் சலத்தின் பிரமம்---கானல் ஜல ஸ்தலத்தில் மருபூமி சூரியனது கிரணம் என்பவற்றின் சம்பந்தம் உபாதியாம். (இவ்வாறு தக்கவாறு உபாதியின் கற்பனையைச் செய்து கொள்க)

இவைமுதலியன போல் உண்டாகும் பிரமம் உபாதியோடு கூடிய அதிஷ்டானத்தின் அஞ்ஞானத்தினால் ஆகியனவாம். ஆதலால் சோபாதிகப் பிரமமேயாம்.

இதுவும் பாகியம், ஆந்தரம் என இருவகைப்படும்.

<u>பாகிய சோபாதிக பிரமம்:</u> நிறமில்லாத படிக கல்லின் சமீபத்தில் செம்பரத்தம் பூ முதலான பொருட்கள் இருப்பின், 'படிகம் செம்மை' என்னும் பிரமம் உண்டாகின்றது. இதே போல், தத்துவவேத்தா புருஷனுக்கு எந்த ஆகாசம் முதலிய பிரபஞ்சத்தின் அனுபவம் உண்டாகின்றதோ அதுவும் பாகிய சோபாதிக பிரமம் ஆகும்.

<u>ஆந்தர சோபாதிக பிரமம்:</u> 'யான் கர்த்தா', 'யான் போக்தா' என்று ஆத்மாவில் உள்ள கர்த்திருத்துவ போக்திருத்துவ புத்தி எதுவோ, அது ஆந்தர சோபாதிக பிரமம் எனப்படும். அந்தப் பிரமத்தில் அந்தக்கரணமே உபாதி ஆகும். சொப்பனத்தில் உள்ள இரதம் முதலிய பதார்த்தங்களின் ஞானம் ஆந்தர சோபாதிக பிரமம் ஆகும். ஸ்மிருதி ஆகாது.

இவ்வாறு சொல்லப்பட்ட இருவகைப் பிரமங்களினின்றும்,

நிருபாதிகப் பிரமத்தினது ஸ்தலத்தில் அதிஷ்டான ஞானத்தினால் காரியத்தோடு ஆவரண விட்சேப ஏதுவான சக்தியோடு கூடிய அஞ்ஞானத்தின் நாசமும் பாதமும் உண்டாகின்றன. ஆதலால் அங்கு அதிஷ்டான சேஷமே அல்லது கற்பிதத்தினது சொருபத்தின் அபாவமே பாதத்தின் லட்சணமாம்.

சோபாதிகப் பிரமத்தினது ஸ்தலத்திலோ ஆவரணத்தோடு கூடிய அஞ்ஞானத்தின் ஆவரண ஏது சக்தியின் நாசமும் பாதமுமாகிய இரண்டும் உண்டாகின்றன. ஆனால் அஞ்ஞானத்தின் உபாதி வடிவ பிரதி பந்தத்தினது வசத்தால் விட்சேப வடிவ காரியத்தோடு கூடிய விட்சேப ஏதுவான சக்தியின் நாசமாகிய சொருப அபாவம் உண்டாகிறதில்லை. ஆனால் கேவலம் பாதமே உண்டாகின்றது. அதன் சொருபமோ எரிக்கப்பட்ட வஸ்திரம் அல்லது எரிக்கப்பட்ட தானியம் போல சிலகால பரியந்தம் தோன்றும். ஆதலால் அங்கு அதிஷ்டானத்தின் சேஷம் அல்லது ஆரோபிதத்தினது சொருபத்தின் அபாவம் பாதத்தின் லட்சணம் அன்று. ஆனால் மித்தியாத்துவ நிச்சயம் அல்லது மூன்று காலத்தின்மை நிச்சயம் பாதமாகிய நிவிருத்தியின் லட்சணமாம். இப்படி மண்ணில் கடம், பொன்னில் குண்டலம் என்பவற்றின் பிராந்தி ஸ்தலத்திலும் அகங்கார முதலிய பந்தத்தின் பிராந்தியிலும் சோபாதிகத் தன்மை இருக்கின்றது. ஏனெனின், உலக்கை முதலிய சாதனங்களின் நீங்கியிருத்தல், பிராரப்தம் என்னும் உபாதியிருக்கின்றது. ஆதலால் அங்கும் முற்கூறிய மித்தியாத்துவ நிச்சய வடிவ லட்சணம் உடைய நிவிருத்தியே சம்மதிக்கப்பட்டதாம். சொருபத்தின் அபாவம் அன்று.

அதிஷ்டானத்தின் சத்தியத்தன்மையின் நிச்சய வடிவமே அதிஷ்டானத்தின் மிஞ்சுதல் என்று கொள்ள வேண்டும்.

விபர்யயத்தின் இருவகைப் பிரிவுகளையும் வேறுவகையாகவும் பின்வருமாறு கூறுவர்.

<u>அந்தக்கரண விருத்தி வடிவம்:</u> சொப்பன பதார்த்தங்களின் ஞானமும், மனோராஜ்ஜியமும், மரித்துப்போன புத்திரர் முதலியோரின் பிரத்தியட்சமும் ஆகிய இவை முதலிய பிரமம் அந்தக்கரண விருத்தி வடிவமாகும்.

<u>அவித்தியா விருத்தி வடிவம்:</u> கிளிஞ்சலில் வெள்ளியின் ஞானமும், கயிற்றில் பாம்பின் ஞானமும் ஆகிய பிரமங்கள் அவித்தியா விருத்தி வடிவமாம்.

<u>*15.தர்க்கம்-யுத்தி:*</u>

<u>(15.1)தர்க்கம்:</u> அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் அல்லது புதியதான அர்த்தத்தைக் கற்பித்தல் தர்க்கமாம். இது சுதர்க்கம்-குதர்க்கம் என இருவகைப்படும். அவற்றுள், சுருதிக்கு விரோதமில்லாத தர்க்கம் சுதர்க்கமாம். சுருதிக்கு விரோதமான தர்க்கம் குதர்க்கமாம். இது சுஷ்க தர்க்கம் என்றும் சொல்லப்படும்.

தருக்கமாவது, ஆத்ம அனாத்ம விசார வினா விடை வடிவமாகிய 1.அபேதசாதக 2.பேத பாதக நியாய சல்லாபம் (வினா விடை உடைய சொற்கள்) என்பதாகும்.

(15.1.1)) அபேத சாதக தருக்கம்: ஜட சேதனமாகிய ஜகத்து யாதாகும் என ஐயம் எழுந்த போது, அறிவை அன்றி ஜகத்துக் காணப்படாமையின், அறிவாகிய பிரம்ம சொருபமே என்று சொன்னதற்கு, இருப்பினும் அறிவோடு சேர்ந்து காணப்படுகின்றதே எனின், அதுவும் இருக்கிறது-விளங்குகிறது-நன்றாய் இருக்கிறது எனப் பிரம்மத்தின் சச்சிதானந்த சொருபமாகவே காணப்படுகிறது. சச்சிதானந்தத்தோடு நாமமும் ரூபமும் காணப்படுகிறதே எனின், தங்கத்தில் கடகம் என்னும் நாமமும், வளையல் என்னும் நாமமும், வட்ட வடிவமும் தோன்றினும் அவைகள் தங்கத்தை விட வேறான அன்னியப்பொருளாகாமல் தங்கமே ஆகிறதோ, அதுபோல நாம ரூபங்கள் தோற்றினும் சச்சிதானந்த சொருபமாகிய பிரம்மத்திற்கு

அன்னியப் பொருளாகாமல் பிரம்ம சொரூபமே ஆகும் என்று இவ்வாறு வினா விடை வடிவில் உரையாடுவது ஆகும்.

(15.1.2) **பேத பாதக தருக்கம்:** ஜட சேதனமாகிய ஜகத்து இருக்கும் போது, பிரம்மம் எவ்வாறு அத்துவிதம் ஆகும் என ஐயம் எழுப்ப, ஜகத் என்பது பொருள் அல்லாததால் என்று பதில் சொல்ல, ஜகத்து எதனால் பொருள் அல்ல எனின், அது இன்மை வடிவமாக இருப்பதால் என்றதற்கு, எவ்வாறு என்றால், எது முன்னும் பின்னும் இல்லாததோ, அது மத்தியிலும் இல்லாததே ஆகும் என்னும் நியாய வாயிலாக ஆராயும் போது ஜகத்து சிருட்டிக்கு முன்னும், பிரளயத்திற்குப் பின்னும் இல்லாமல் போகிறது, ஆனால் மத்தியில் தோன்றுகிறது. அவ்வாறாயின் இல்லாதது தோன்றுமா எனின், நினைப்புக்கு முன்னும் பின்னும் தோற்றவில்லை, மத்தியில் மாத்திரம் தோற்றுகின்றது, இதுவும் இல்லாத பொருளாகிய கயிற்றில் பாம்பின் தோற்றம் போல் மித்தையாகத் தோற்றுவதால் ஜகத்து இல்லாத பொருளே ஆகும். ஆதலால் பிரம்மம் அத்துவிதமே என்பதாக உரையாடுவது.

(15.2) **யுத்தி:** இது கூடும், இது கூடாது எனத் தோன்றும் அறிவு யுத்தி எனப்படும்.

(15.2.1) **அபேத சாதக அனுமானம் முதலிய யுத்தி:** எது சச்சிதானந்த சொரூபமோ, அது பிரம்மத்திற்கு அன்னியம் அன்று. எது சச்சிதானந்த சொரூபம் இல்லையோ அது பிரம்மத்திற்கு வேறாகும். ஈசுவரன் சச்சிதானந்த சொரூபமாய் இருப்பதால் பிரம்மத்திற்கு வேறானவன் அன்று. கடம் வியவகாரத்தில் சச்சிதானந்த சொரூபம் அல்லாததால், பிரம்மத்திற்கு அன்னியமாகும். ஜீவன் சச்சிதானந்த சொரூபமாய் இருப்பதால் பிரம்மத் திற்கு அன்னியம் அல்ல என்னும் அனுமானப் பிரமாண யுத்தியும், கடாகாசத்துக்கும் மடாகாசத்துக்கும், கட மட உபாதிகளை நீக்கிப் பார்க்கில் பேதம் இல்லாதது போலப், புத்தி மாயை ஆகிய உபாதிகளை நீக்கிப் பார்க்கில் ஜீவப் பிரம்மங்களுக்குப் பேதம் தோன்றுகிறதில்லை என்னும் உவமானப் பிரமாண யுத்தியும், இங்கு

நாநா என்பது சிறிதும் இல்லை என்னும் சுருதியில் பேதம் விலக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் அபேதம் இல்லாத பட்சத்தில், இச்சுருதி வாக்கியம் ஏற்பட்டிருக்கமாட்டாது. ஒருவனை உபவாசி என்பது அவனுடைய தூல பீனத்துவத்தால் நீக்கப்படுவது போலப் பேதமானது இச் சுருதியினால் நீக்கப்படுகிறது என்னும் அருத்தாபத்திப் பிரமாண யுத்தியும் ஆகிய மூன்றும் ஆகும்.

(15.2.2) பேத பாதக அனுமானம் முதலிய யுத்தி: ஜீவப் பிரம்மங்களின் உபாதி சம்பந்தமாய் இருத்தலால் மித்தையாம். எது மித்தை அன்றோ அது ஔபாதிகமும் அன்று. வியாவகாரிக சத்தையில் கட படங்களின் பேதம் ஔபாதிகமாக இல்லாமையால் வியாவகாரிக சத்தியமாய் இருக்கிறது. ஆகையால் எவ்விடத்தில் உபாதி சம்பந்தம் இருக்கிறதோ, அவ்விடத்தில் பேதமும் மித்தையாக இருக்கிறது என்னும் அனுமானப் பிரமாண யுத்தியும், பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதம் மித்தையாய் இருப்பது போல, ஜீவப் பிரம்மங்களின் பேதமும் மித்தை என்னும் உவமானப் பிரமாண யுத்தியும், மகா வாக்கியங்களில் ஜீவப் பிரம்மங்களின் அபேதம் சொல்லப்படுகின்றது. உண்மையில் பேதம் மித்தையாக இல்லாத பட்சத்தில் மகா வாக்கியங்களில் அபேதம் சொல்லப்பட்டிருக்காது. சொல்லப்பட்டிருப்பதால், அபேதம் சித்திக்கிறது என்னும் அருத்தாபத்தி பிரமாண யுத்தியும், சாக்கிர சொப்பனங்களில் உபாதியால் ஜீவப் பிரம்மங்களின் பேதம் தோன்றுகிறது. சுழுத்தியில் உபாதி இல்லாததினால் பேதம் தோன்றுவதில்லை. ஆகையால், ஜீவப் பிரம்மங்களுக்குப் பாரமார்த்திகத்தில் பேதம் இல்லை என நிச்சயிக்கப்படுகிறது என்னும் அனுபலப்திப் பிரமாண யுத்தியும் ஆகிய நான்கும் ஆகும்.

16. தோஷங்கள்:

அதிவியாப்தி தோஷம்: எந்த இலக்கணம் எதற்கு சொல்லப்படுகிறதோ அதற்குப் பொருந்துவதோடு மற்றவற்றிற்கும் பொருந்துவது இந்த தோஷம். (உ-ம்) கோடு உடையது ஆ(பசு) என்பதில் பசுவோடு சேர்த்து எருமை, ஆடு இவைகளுக்கும் கொம்பு உள்ளதைக் குறிப்பது
அவ்வியாப்தி தோஷம்: எந்த இலக்கணம் எதற்கு சொல்லப்படுகிறதோ அதற்கே பொருந்தாமல் இருப்பது (ஏறக்குறைய பொருந்துவது). (உ-ம்) கபில நிறம் உடையது ஆ என்பதில் எல்லா பசுக்களும் கபில நிறம் உடையதாக இல்லை.
அசம்பவம்: எந்த இலக்கணம் எதற்கு சொல்லப்படுகிறதோ அதற்கும் கூட பொருந்தாமல் இருப்பது (உ-ம்) ஒற்றைக் குளம்புடையது ஆ என்பதில் ஒற்றைக் குளம்புடைய பசு எதுவும் இல்லை.
வியாகாத தோஷம்:

எங்கே தனது சொல்லால் தனது வார்த்தைக்குப் பாதமுண்டாகின்றதோ அங்கே வியாகாத தோஷம் சொல்லப்படுகின்றது. அது 'என் தாய் மலடி' என்பது போலவாம். (பரஸ்பர விருத்த தர்மங்கள் ஓர் அதிகரணத்தில் கூடுதலை வியாகாதம் என்பர்)
புநருக்தி தோஷம்:

ஒருமுறை உச்சிரிக்கப்பட்ட சத்தத்தை அல்லது அர்த்தத்தை மறுபடியும் உச்சரித்தல் புநருக்திதோஷமாகும். அது 1.சத்தப் புநருக்தி 2.அர்த்தப் புநருக்தி என இருவகை. அவற்றுள் வெவ்வேறு பொருளுடைய சத்தங்களுக்குப் புநருக்தி தோஷம் இல்லை. ஆனால் ஒரு பொருளுடைய சமான அல்லது மாறான சப்தங்களை உச்சரித்தலால் அர்த்தப் புநருக்தியாம். அது தோஷவடிவமாம்.
சய தோஷம்: புண்ணியக் குறைவால் சுவர்க்த்தினின்றும் விழுதல் அல்லது பிரளய காலத்தில் அழிதல் சய தோஷம் ஆகும்.
அதிசய தோஷம்: தனக்கு அந்நியமாகிய தேவர்களுக்குப் புண்ணிய மேம்பாட்டால், அதிக ஐசுவரியம் இருத்தல் அதிசய தோஷமாம்.

கௌரவதோஷம்: சொற்பத்தால் நிருவாகம் உண்டாகுமிடத்தில் அதிக அர்த்தத்தைக் கொண்டு நிருவாகம் செய்தல்
ஆகந்துக தோஷம்: ஒன்றன் தருமம் மற்றொன்றில் ஏறுதல். ஆகந்துகம்-செயற்கை, போக்குவரவுடையது.
அன்யோன்ய ஆசிரிய தோஷம்: இரண்டு பதார்த்தங்களுக்குத் தமது உற்பத்தியில் அல்லது தமது ஸ்திதியில் அல்லது தமது ஞானத்தில் உள்ள பரஸ்பர அபேட்சைக்குப் பெயர் (ஒன்றினை ஒன்று பற்றுதலால் வருவது) அன்யோன்ய ஆசிரிய தோஷம்.
அனவஸ்தா தோஷம்: (வரம்பின்மை)- முன் முன் உள்ள ஒன்று பின் பின் உள்ள மற்றொன்றை அபேட்சிப்பது அனவஸ்தா தோஷம் எனப்படும்.
ஆத்மாசிரய தோஷம்: தானே, அறிதலாகிய கிரியைக்குக் கர்த்தாவாகவும், தானே, கிரியாப் பிரயோசனத்தை ஏற்கும் கருமம் என்னும் செயப்படுபொருளாகவும் இருப்பது, தன்னைப் பற்றுதல் என்னும் ஆத்மாசிரய தோஷமாகும்.
சக்கிரிகா தோஷம்: ஒன்றன் ஸ்திதிக்காக இரண்டாவதின் அபேட்சையையும், இரண்டாவதானது தனது ஸ்திதிக்காக மூன்றாவதன் அபேட்சையையும், மூன்றாவதானது தனது ஸ்திதிக்காக முதலாவதன் அபேட்சையையும் கொண்டிருத்தல் சக்கிரிகா தோஷம். (முன் உள்ளது பின் உள்ளதையும் பின் உள்ளது அதற்கு அடுத்து உள்ளதையும் மூன்றாவது மறுபடியும் சக்கரம் போல முதலாவதையும் சார்ந்தும் இருப்பது இத்தகைய தோஷம் என்பர்)

17. நியாயம் (திருஷ்டாந்தம்):

கைமுதிக நியாயம்: காய்ந்த எண்ணெயில் உள்ளஆகாயத்தின் பிரதிபிம்பத்திற்கு தாபத்தின் சம்பந்தம் இல்லை எனின், அப்போது ஆகாயத்தில் தாபத்தின் சம்பந்தம் எங்கிருந்து உண்டாகும்? என்னும் வடிவினதாகிய நியாயத்தினைக் கைமுதிக நியாயம் என்பர். அதுபோல இங்கு சிதாபாசனிடத்திலும் எப்போது வாஸ்தவ சுரம் இல்லையோ அப்போது கூடஸ்தனிடத்துச் சுரம் எங்கிருந்து உண்டாகும் என்னும் ஆகாரம் உடையது.

சிம்மாவலோக நியாயம்: சிம்மம் எப்படித் தனது இடத்தினின்றும் தாவி இடையிலுள்ள பூமியினைக் கடந்து பின் தனது இடத்தைப் பார்க்கின்றதோ, அது போல எங்குப் பிரகிருத அர்த்தத்தை விட்டு இடையில் வேறு அர்த்தத்தைக் கூறிப் பின் பிரகிருத அர்த்தத்தின் அநுசந்தானம் உண்டாமோ, அங்கு சிம்மாவலோக நியாயம் சொல்லப்படுகின்றது.

காகதாளீய நியாயம்: 1.ஒரு புருஷன் இரண்டு கைகளினாலும் தாளம் போடுங்காலத்து அவனது கைகளின் இடையில் தெய்வகதியாகக் காகபட்சி வந்துவிடுமாயின் அது காகதாளீய நியாயம் எனப்படும்.

2. அல்லது தாலவிருட்சம் (பனைமரம்) விழத்தக்கதாய் இருக்க அதன் பேரில் காகம் வந்து உட்காரவே பனை விழுந்துவிடுமாயின் அதனைக் காகதாளீய நியாயம் என்பர்.

அதனைப் போல பிராந்தி ஞானத்தினால் விரும்பிய பயன் கிடைத்தலால் அது சம்வாதிப் பிரமம் எனப்படுகின்றது.

குணோபசங்கார நியாயம்: பிரம்மத்தின் வாசகமான ஆனந்த முதலிய பதங்களை ஒரு வாக்கிய வடிவமாய் இருக்கும் படி உச்சரித்தல் உபசங்காரம் எனப்படும். அது குணோபசங்கார நியாயத்தால் ஆகின்றது. எங்ஙனம்: நான்கு நபர்கள் ஒன்றாகச் சேர்ந்து தலா ஆயிரம் ருபாய் முதல் வைத்து வியாபாரம் தொடங்கினால், கேட்பவர்களுக்கு ஒவ்வொருவரும் எல்லா தொகையையும் கூட்டி 'நான் நாலாயிரம் ருபாய்க்கு வியாபாரம் செய்கிறேன்' என்று சொல்வதுண்டு. அதுபோல, வெவ்வேறு சாகைகளில் உள்ள குணங்கள் (தர்மங்கள்) அல்லது அங்க(சாதன)ங்கள் அல்லது விசேஷணங்கள் ஒன்று என்பதனைப் புத்தியில் பதியவைத்தல் குணோபசங்கார நியாயம். (குண+உபசங்காரம்)

கரம்லேடி நியாயம்: ஓர் கிரகஸ்தன் வீட்டில் பந்தியில் போஜனத்தின் பொருட்டு உட்கார்ந்துள்ள ஒரு பிராமணனுக்குச் சர்வ சாதாரணமாக ஒரு லட்டு கிடைத்தது. பின்பு அன்னம் வந்தது. எப்போது கிடைத்த அந்த லட்டினைப் பின்புறம் மறைத்து எனக்கு லட்டு கிடைக்கவில்லை என்று சொன்னானோ, அப்போது அவனுக்கு வேறு லட்டு கிடைக்கவில்லை. பின்புறம் வைத்ததையும் நாய் கொண்டு போயிற்று.

பின் கையை நக்கிக் கொண்டிருந்தான். இதனைச் சாத்திரத்தில் கரம்லேடி நியாயம் என்பர்.

உஷ்டிரலகுடிகா நியாயம்: உஷ்டிரமாகிய ஒட்டை மதம் கொண்ட காலத்து அவ்வொட்டையின் பேரில் வைக்கப்பட்டிருக்கும் விறகினாலே அதைத் தெளிவித்தல் அன்றி வேறு சாதனங்களால் ஆகிறதில்லை. ஆகையால் இந்த நியாயமாகிய திருஷ்டாந்தத்தை உஷ்டிரலகுடிகா நியாயம் என்பர்.

ஸ்தாலிபுலாக நியாயம்: ஸ்தாலிபுலாக நியாயத்தாலாவது ஒரு வீட்டில் உள்ள ஆகாயத்தின் திருஷ்டாந்தத்தினாலாவது தேகத்திற்கு உள்ளிருக்கும் அந்தர் முக நிச்சயமாகிய விருத்தியால் சேதனத்துவம், ஆனந்தத்துவம், அத்வைதத்துவம், பூர்ணத்துவம், நித்திய முக்தத்துவம் முதலிய பிரம்மத்தின் விசேஷணங்களோடு கூடிய பிரத்தியகாத்மாவைக் கிரகித்தலால் பிரத்தியகாத்மாவிலுள்ள அவித்தையின் அம்சம் நீங்கவே பிரத்தியகபின்ன பிரம்மம் சுயம்பிரகாசமாகத் தோற்றும். இப்படி ஏகதேச தோற்றத்தால் அத்வைத நிச்சயம் உண்டாகின்றது. ஒரு அன்னத்தினது பாகத்தைப் பரிட்சித்தால் சகல அன்னங்களின் பாகமும் நிச்சயமாகின்றது. இந்த திருஷ்டாந்தத்தை ஸ்தாலிபுலாக நியாயம் என்பர். ஒரு வீட்டில் உள்ள ஆகாயத்தின் அசங்கத்தன்மை முதலிய நிச்சயத்தினால் சகல பிரம்மாண்ட முதலியவற்றிலும் உள்ள ஆகாயத்தினது அசங்கத்துவ முதலியவற்றின் நிச்சயம் உண்டாகின்றது. அதனைப் போலவாம்.

ஸ்தூணாகநந நியாயம்: ஸ்தூணா – கம்பம் கநநம் - புதைத்தல் நியாயம்-திருஷ்டாந்தம்

ஸ்தூணா என்பது குதிரை முதலியவற்றைக் கட்டுவதற்குரிய கம்பம். அதன் கநநம் என்றால் அதனைத் திட அதிடத்தைப் பரிட்சித்தலோடு (அசைத்தலோடு) பூமியில் நாட்டுதல்.

மார்ச்சால நியாயம்: மார்ச்சாலம் - பூனை. தாய்ப் பூனை தன் குட்டிகள் இருக்கும் இடத்தைத் தானே தேடிச்சென்று வாயில் கெளவி எடுத்துக்கொண்டு போய் காப்பாற்றுவதாம்.

மர்க்கட நியாயம்: மர்க்கடம் - குரங்கு. குரங்குக் குட்டி தன் தாய்க் குரங்கு எங்கே தாவினும் தான் அதனை விடாது பற்றியிருத்தலாம்.

சுந்தோபசுந்த நியாயம் : ஒரு சொல்லின் சப்தத்தால் அடுத்த சொல்லின் சப்தம் நாசமாதல்

தூலாருந்ததி நியாயம்: ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைக் காட்டி, அவற்றுள் ஏழு கூட்டமாக உள்ளதைச் சுட்டிக்காட்டி, அவைகளில் பக்கம் பக்கமாக இரண்டு நட்சத்திரங்கள் இருப்பதைக் குறிப்பிட்டு, ஒன்று வசிட்டர், மற்றொன்று அருந்ததி என்று அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டும் வழிமுறை

சாகாசந்திர நியாயம்: மேற்கில் ஏரிக்கரையைப் பார்! அதில் ஆலமரம் இருக்கிறதா! அதில் தென்மேற்கு பக்கமாக ஒரு கிளை பிரிகிறது பார்! அக்கிளையின் நுனி தெரிகிறதா? அந்த நுனிக்கு மேலே நேராக ஆகாசத்தைப் பார்! மூன்றாம் பிறை தெரிகிறது, பார்! என்று மரக்கிளையைக் காட்டி பிறையைக் காட்டுவது. (சாகை=கிளை).

பிரமரகீட நியாயம்: பிரமரம் என்ற குளவி பச்சை நிறமுள்ள ஒருவகைப் புழுவைக் கொட்டிப்பார்த்து மிகத் துடிப்பதையும் துடியாமல் கிடப்பதையும் ஒழித்து மத்திம துடிப்பு உடையதைப் பிடித்து வந்து தனது கூண்டிற்குள் வைத்துச் சிலகாலம் வரை ஒவ்வொரு நாளும் தனது கூர்மையான மூக்கினால் அப்புழுவைக்கொட்ட, அந்த வருத்தத்தைப் பொறுக்கமாட்டாமல், வருத்தமுற்று, அந்தக் குளவி வந்து கொட்டுமே என்று பயமுற்று அந்த நினைவினாலேயே சிலகாலத்தில் அந்த குளவியின் வடிவமாய் விடுகிறது. இவ்வாறு நானே பிரம்மம் என்று இடையீடு இன்றி நினைப்பவன் பிரம்மமாக ஆகி விடுகிறான் என்பது. (பிரமரம்-ஒருவகையான வண்டு(குளவி). கீடம்-புழு)

குடஜிஹ்வா நியாயம்: ஒருதாய் தன் குழந்தைக்கு நாவில் வெல்லம் பற்றிய விரலைத் தடவிக் கசப்பான மருந்தில் தித்திக்கும் என்னும் புத்தியை உண்டுபண்ணிக் கசப்பு மருந்தைச் செலுத்தி விடுகின்றாள். இது குடஜிஹ்வா நியாயம் எனப்படும். அவ்வாறே வேதமாகிய தாய் பாமர சீவர்களாகிய குழந்தைகளுக்குத் தன் கரும பலத்தைத் துதிக்கும் வசனங்களாகிய அர்த்த வாத வாக்கியங்கள் வடிவ வெல்லம்

பற்றிய விரலை நக்க வைத்து சுவர்க்கம் முதலியவைகளை அடைவதாகிய கர்ம பலத்தைப் போதித்து, அக்கர்ம பலத்தில் ஈடுபடச் செய்கிறது. (தாற்பரியம்: சுவர்க்காதி பலத்தில் இல்லை என்பது)

அஸ்த பூஷண நியாயம்: முன்னரே பெறப்பட்டு நாசமின்றி இருப்பது. (உ-ம்)சீவன்முத்தி

சூசி கடாஹ நியாயம்: இரும்பு ஊசியையும், இரும்பு கொப்பரையையும் ஒரு கொல்லனிடம் செய்யச் சொல்ல, அவன் சிறியதான ஊசியை முன்னே செய்துவிட்டுப் பிறகு பெரியதான கொப்பரையைச் செய்தல். (சூசி-ஊசி, கடாஹம்-கொப்பரை)

18. சம்பந்தம்:

அபாவ (இன்மை) சாதிருசியங்களுக்கு (ஒற்றுமைக்கு) வேறாகிய, பிரதியோகியின் (எதிர்மறையின்) அபேட்சையோடு கூடிய பிரதீதியின் (தோற்றத்தின்) விஷயம் சம்பந்தம் எனப்படும். எதில் மற்றொன்றன் சம்பந்தம் இருக்கின்றதோ அது சம்பந்தத்தின் அநுயோகியாம். எதன் சம்பந்தம் மற்றொன்றில் இருக்கின்றதோ அது சம்பந்தத்தின் பிரதியோகியாம். பிரதியோகியின் பிரதீதி பூர்வகமாய் எதன் பிரதீதி உண்டாகின்றதோ அப்படிப்பட்டவைகளோ அபாவமும் சாதிருசியமுமாம். ஆனால் அவை அவற்றினின்றும் வேறு அன்று.

சையோக சம்பந்தம்: இரண்டு திரவியங்களின் சம்பந்தம் சையோக சம்பந்தம் எனப்படும். இது மூன்று வகைப்படும். 1.கர்மஜ (கர்மத்தால் ஆகிய) சையோகம். 2. சையோகஜ (சையோகத்தால் ஆகிய) சையோகம் 3.சகஜ (உடன் தோன்றிய) சையோகம் என்பன.

(18.1) கர்மஜ சையோகம்: எதன் உற்பத்தியில் கிரியை அசமவாயி காரணம் ஆகின்றதோ அது இந்த வகை சையோகம். இது இரண்டு வகை.

<u>அந்நியதர கர்மஜ சையோகம்:</u> சையோகத்தின் உபாதான காரணமாகிய ஆசிரயம் இரண்டாம். அவற்றுள் ஒன்றன் தொழிலால் எந்தச் சையோகம் உண்டாகின்றதோ அது அந்நியதர கர்மஜமாம். பறவை மரத்தின் ஒரு கிளையில் அமர்வதால் மரத்திற்கும் பறவைக்கும் மரத்திற்கும் உண்டாகும் சையோகம் (சேர்க்கை அல்லது சம்பந்தம்).

<u>உபயதர கர்மஜ சையோகம்:</u> இரண்டின் செய்கையாலும் உண்டாகும் சையோகம் இந்த வகையாம். இரண்டு ஆட்டுக்கடாக்கள் மோதிக்கொள்வதால் உண்டாகும் இரண்டு ஆட்டுக்கடாக்களின் சையோகம்போல.

(18.2) சையோகஜ சையோகம்: கைக்கும் மரத்திற்கும் உள்ள சையோகத்தால் தேகத்திற்கும் மரத்திற்கும் உள்ள சையோகம் இது.

(18.3) சகஜ சையோகம்: சையோகம் உடையதின் பிறப்போடு உண்டாகிய சையோகம் இது. பொன்னில் பார்த்திவ (பிருதிவியின் காரிய) பாகமும், தைஜஸ (தேயுவின் காரிய) பாகமும் இருக்கின்றன. அவற்றிற்குள்ள சையோகம் சகஜமாம். பொன்னில் உள்ள மஞ்சள் நிறத்திற்கும் குருத்துவத்திற்கும் (திண்மைக்கும்) ஆசிரயமாகிய பார்த்திவ பாகமும், அக்கினியின் சையோகத்தால் நாசமாகாத திரவத்துவத்திற்கு (நெகிழ்ச்சிக்கு) ஆசிரயமாகிய தைஜஸபாகமும் இருக்கின்றன.

(18.4) சமவாயம்: நித்திய சம்பந்தத்திற்குச் <u>சமவாய சம்பந்தம்</u> என்று பெயர். அது நியாய மதத்தில் குண குணிக்கும், ஜாதி வியக்திக்கும், கிரியை கிரியை உடையதற்கும், உபாதான காரண காரியத்திற்கும் பரஸ்பரம் ஒப்பப்பட்டிருக்கின்றது.

(18.5) தாதாத்மியம்: நியாய மதத்தில் சொரூப சம்பந்தத்திற்குத் <u>தாதாத்மியம்</u> என்று பெயர். பூர்வ மீமாம்சையின் வார்த்திககாரராகிய பட்டர் மதத்தில் சிறிது பேதத்தோடு கூடிய அபேத (பேதாபேத)த்தைத் <u>தாதாத்மியம்</u> என்பர்.

சர்வ சிரோமணியாகிய வேதாந்த சித்தாந்தத்தில் பேதாபேதங்களுக்கு விலட்சணம் ஆகிய சம்பந்தம் <u>தாதாத்மியம்</u> எனப்படும். அதனையே அநிர்வசனீய (கற்பித) தாதாத்மியம் என்று கூறுவர். இங்கே பேதத்திற்கு விலட்சணம் என்று சொல்வதால் வாஸ்தவ அபேதமும், அபேதத்திற்கு விலட்சணம் என்பதனால் கற்பித பேதமும் கொள்ளப்படும். ஆகையால் சித்தாந்தத்தின் கற்பித பேதத்தோடு கூடிய வாஸ்தவ அபேதம் <u>தாதாத்மிய சம்பந்தம்</u> ஆகும்.

இவ்வாறு சையோகம் சமவாயம் தாதாத்மியம் என மூன்று சம்பந்தங்கள் சொல்லப்பட்டன. தவிரவும் பிரத்யட்ச பிரமை உண்டாவதில், சம்பந்தம் அல்லது சேர்க்கையானது 1.சம்யோகம், 2.சம்யுக்த சமவாயம், 3.சம்யுக்த சமவேத சமவாயம், 4.சமவாயம், 5.சமவேத சமவாயம் 6.விசேஷண-விசேஷியபாவம் என்று ஆறுவகையாக (சன்னிகர்ஷம்) நியாய சாத்திரமாகிய தர்க்க சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

19. பதார்த்த விவேகம் : (4)

பாரமார்த்திகம்	:	சேதனம் ஒன்றே பாரமார்த்திக பதார்த்தம். சேதனம்-அறிவு
வியவகாரிகம்	:	மாயா பிரபஞ்சம் வியவகாரிக பதார்த்தம்
பிராதிபாஸிகம்	:	கயிறில் பாம்பு, கானல் நீர், சொப்பன பிரபஞ்சம் முதலானவைகள்
துச்சம்	:	மலடி மகன், முயல் கொம்பு முதலானவைகள் துச்சம் - அசத்து

துச்சம்=இல்லாதது=அசத்து. வியவகாரிகம் + பிராதிபாசிகம்= மித்தை

பகுதி-2

20. திருக்கு – திருசியம் : (2)

திருக்கு	:	சேதனம் ஒன்றே திருக்கு (திருக் - அறிவு)
திருசியம்	:	ஏனையவை திருசிய பதார்த்தம் (திருசியம்-அறியப்படும் பொருள்)

(20.1) திருஷ்டா: எந்தச் சுயம்பிரகாச வடிவ சாட்சியாகிய ஆத்மா பஞ்சகோசங்களையும் பிரகாசிப்பிக்கின்றதோ, எதற்குச் சகல இந்திரியங்கள், பஞ்சகோசங்களாகிய கூட்டங்களும் காணப்படுவதாக இருக்கிறதோ அது திருஷ்டாவாம்.

(20.2) சுயம்பிரகாசம்: (1)எது எப்போதும் அபரோட்ச வடிவமாய் (2)எந்த ஞானத்திற்கும் விஷயமாகாததாய், இருக்கின்றதோ அது சுயம்பிரகாசம் எனப்படும்.

21. ஆத்ம வகை (அவிவேககாலம்):

1. மித்தையாத்மா 2. கௌண ஆத்மா 3. சீவாத்மா 4. முக்கியாத்மா என்பன.

<u>மித்தையாத்மா:</u> அவிவேக காலத்தில் சேதன ஆத்மா தன்னை அசத்து ஜட துக்க வடிவமும், மல முத்திராதிகளால் நிறைந்ததும், பஞ்சகோசங்களோடும் இந்திரியங்களோடும் கூடியதுமான மித்தையான தேக சங்காதங்களுக்கு (கூட்டங்களுக்கு) அபின்னமாக (வேறாக இன்றி) மதித்து, கர்த்திருத்துவ-போக்திருத்துவ-சுகித்துவ-துக்கித்துவ-பிறப்பு இறப்பு முதலான அநாத்ம தர்மங்களைத் தன்னுடைய தருமமாகக் கருதுவதால் தூல தேகமே <u>மித்தையாத்மா</u> எனப்படும்.

<u>கௌணஆத்மா:</u> மனைவி புத்திரன் தனம் முதலியவைகள் <u>கௌண ஆத்மா</u> எனப்படும்.

<u>சீவாத்மா:</u> ஒருவன் உறுதியான நற்கதியை அடைய விரும்பித் தேக போகங்களை வெறுத்து ஒழித்துத் தவம்புரியும் தருணத்தில் <u>சீவாத்மா</u> அவனுக்கு முக்கியமாம்.

<u>முக்கியாத்மா:</u> நாமருப பிரபஞ்சம் தனது காரணமாகிய அஞ்ஞானத்தோடு ஒழியும் மோட்ச காலத்தில் அதாவது எதற்கு மகாவாக்கியங்களால் சொல்லப்படும் பூரணானந்தப் பிரம்மத் தோடு அபின்னத் தன்மை இருக்கின்றதோ அது <u>முக்கியாத்மா</u> எனப்படும்.

<u>22. பேதங்கள் : (3)</u>

அந்நியோந்நியாபாவமாகிய ஒன்றில் ஒன்று இல்லாமையின் பெயர் பேதம் எனப்படும்.

சுவகதபேதம்	:	ஒரு மரத்திற்கு அதனது உறுப்பாக உள்ள இலை,மலர்.பழம் முதலியன வேறாக இருத்தலே சுவகத பேதம் (தனக்குள் பேதம்)
சஜாதீயபேதம்	:	அந்த மரத்திற்கு அதே இனத்தைச் சேர்ந்த மற்றொரு மரம் வேறாக இருத்தல் (தன் இனத்திற்குள் பேதம்)
விஜாதீயபேதம்	:	அந்த மரத்தினைக் காட்டிலும் வேறான இயல்புடைய கல், மண் முதலியன (வெவ்வேறு இனங்களுக்குள் பேதம்)

திருக்குவிவேகம்	:	மேற்கண்ட மூன்று பேதங்களும் இல்லாதிருப்பது

<u>23. கற்பிதம் : (2)</u>

அத்தியாரோபம்	:	இருக்கின்ற கிளிஞ்சலில் இல்லாததாகிய வெள்ளி கற்பிதமாகத் தோன்றுதல் போல சத்து வடிவ பிரம்மத்தில் அசத்து வடிவ பிரபஞ்சம் கற்பிதமாக தோன்றுதல். வஸ்துவில்(கயிற்றில்) அவஸ்து(பாம்பு) தோன்றுதல்
அபவாதம்	:	இது வெள்ளி அன்று கிளிஞ்சலே என்று விசார வாயிலாக மெய் பொய்களைத் தெளிவாக அறிவது போல, மாயாபிரபஞ்சம் சத்து அன்று பிரம்மமே சத்து என்று சத்து அசத்துக்களைத் தெளிவாக அறிதலே. அதிஷ்டான சேஷம் (கயிறு மிஞ்சுதல்) அபவாதம்.

24. பிரம்மத்தின் சப்த விசேஷணங்கள்:

பிரம்மத்தினிடத்து உண்மையில் ஓர் அனாத்ம வஸ்துவின் தாதான்மியமும் இல்லை யாயினும் மயக்கத்தால் அந்தப் பிரம்மத்தினிடத்து அனாத்ம வஸ்துவின் தாதான்மியம் தோன்றுகிறது. மயக்கத்தால் பெறப்பட்ட தாதான்மியத்தை நித்திய முதலிய விசேஷணங்கள் நீக்குகின்றன.

நித்தியம்: காரியப்பிரபஞ்சத்தின் தாதான்மியத்தை நித்தியம் என்னும் விசேஷணம் நீக்குகிறது. பிரம்மத்தின் நித்தியத் தன்மை 'ஆகாயம் போல எங்கும் நிறைந்தவன் நித்தியன்' என்னும் சுருதி பிரமாணங்களால் பெறப்படும்.

சுத்தம் : காரியப்பிரபஞ்சத்தினது தர்மங்களின் தாதான்மியத்தைச் சுத்தம் என்னும் விசேஷணம் நீக்குகின்றது. பிரம்மத்தின் சுத்தத் தன்மை 'நரம்பற்றது சுத்தம் பாபமில்லாதது' என்பது முதலான சுருதி பிரமாணங்களால் சித்தமாம்.

புத்தம்: இராகத்துவேஷம் முதலிய விகாரங்கள் இல்லாமையே பிரம்மத்தினிடத்து சுத்த தன்மையாம். காரணமயமான அஞ்ஞானத்தின் தாதான்மியத்தை புத்தம் சுத்தம் என்னும் விசேஷணம் நீக்குகின்றது. எப்போதும் ஏகரச ஞான வடிவத்தன்மை புத்தத் தன்மை எனப்படும். இத்தன்மை 'பிரஞ்ஞானகனன்' என்பன முதலிய சுருதிப் பிரமாணங்களால் பெறப்படும்.

முக்தம்: அஞ்ஞானத்தாலாய ஆவரண முதலியவைகளின் தாதான்மியத்தை முக்தம் சுத்தம் என்னும் விசேஷணம் நீக்குகின்றது. பந்தம் இல்லாத தன்மை முக்தத்தன்மை எனப்படும். பிரம்மத்தின் முக்தத்தன்மை 'முக்தன் விடுபடுகின்றான்' என்பன முதலிய சுருதிப் பிரமாணங்களால் பெறப்படும்.

சத்தியம்: மித்தியாத்தன்மையை சத்தியம் சுத்தம் என்னும் விசேஷணம் நீக்குகின்றது. முக்காலத்திலும் பாதமாகாதது சத்தியம் எனப்படும். இத்தன்மை 'பிரம்மம் சத்யம் ஞானம் அநந்தம், இது முன் சத்தாகவே இருந்தது' என்பன முதலிய சுருதிப் பிரமாணங்களால் பெறப்படும்.

ஆனந்தம்: ஆனந்தம் என்னும் விசேஷணம் பிரம்மத்தின் புருஷார்த்தத்தைச் சொல்கின்றது. பிரம்மத்தின் ஆனந்த வடிவத் தன்மை 'ஆனந்தம் பிரம்மம் என்று அறிதல் வேண்டும், விஞ்ஞான ஆனந்தமாய் உள்ளது பிரம்மம்' என்பன முதலிய சுருதிப் பிரமாணங்களால் பெறப்படும்.

அத்வயம்: அத்வயம் என்னும் விசேஷணம் பிரம்மத்தின் அகண்ட ஏகரசத் தன்மையைச் சொல்கின்றது. துவைதம் இல்லாதது அத்வயம் எனப்படும். அதாவது பேத வாதிகளால் கற்பிக்கப்படும் ஐவகைப் பேதங்கள் அற்றது அத்வயம் ஆகும்.

25. சத்து வடிவ பிரமத்தை அறிதற்குரிய இலக்கணம் : (3)

அதத்வியாவிருத்தி இலட்சணம்	:	தேகம், புலன்கள், பிராணன் இவைகள் அன்று, இது அல்ல இது அல்ல என்ற உத்தியால் நேதிசெய்து ஆத்மாவை அறிவிப்பது
தடஸ்த இலட்சணம்	:	மரக்கிளையைக் காட்டி அதன் நுனிக்கு மேலே 3-ஆம் பிறை சந்திரனைக் காட்டுவது போல, பஞ்ச பூதங்களைக் காட்டி பிரம்மத்தை அறிவிப்பது அல்லது ஒருகாலத்தில் இருப்பதாய் வியாவர்த்தகம் (பிறவற்றிலிருந்தும் வேறு பிரித்து அறிவிப்பது) யாதோ அது தடத்த லட்சணமாகும். (உ-ம்) காகம் அமர்ந்திருக்கும் வீடு இராமனுடையது.
சொருப லட்சணம்	:	நேரடியாக சூரியன் உஷ்ணப் பிரகாசம் உடையவன் என்பது போல ஆத்மாவின் நிஜ வடிவம் இது என்று கூறி அறிவிப்பது அல்லது எப்போதும் இருப்பதாகிய வியாவர்த்தகம் சொருப லட்சணமாகும். (உ-ம்)வெண்ணிறத்தோடு கூடியது இராமனின் வீடு.

26. ஆத்மாவின் சொருப லட்சணம் : (5)

சத்து	:	அறிவு-அறியாமையிலும். நினைத்தல்-மறத்தலிலும், காமாதி விருத்திகள் தோன்றல்-தோன்றாதபொழுதும், நனவு-கனவு-ஆழ்துயில் எனும் மூன்று அவஸ்தைகளிலும் தனக்கொரு கேடு இன்றி இருப்பது. முக்காலத்தும் பொய் என்று நிச்சயிக்கப்படாதது சத்தாம்.
சித்து	:	மூன்று அவஸ்தைகளிலும் தோன்றும் விஷயங்களை அவற்றிற்கு வேறாக நின்று அறிவது. முக்காலத்தும் சர்வத்தையும் அறிவது சித்தாம்.
ஆனந்தம்	:	பரமப் பிரீதிக்கு விஷயமாவது. முக்காலத்தும் மிகு பிரியத்திற்கு விஷயமாய் இருப்பது ஆனந்தம்.
நித்தியம்	:	எக்காலத்தும் நிலைபெற்றிருப்பது. முக்காலத்தும் கேடின்றி இருப்பது நித்தியம்
பூரணம்	:	திருசிய(அறியப்படும்) பொருள் அனைத்திற்கும் அதிஷ்டானமாக இருக்கும் வகையால் (கடத்தில் மண் போல) அறியப்படும் பொருள் அனைத்திலும் சம்பந்தமாய்இருப்பது கடத்தில் மண்நிறைந்திருப்பது போல, மாயா பிரபஞ்சத்தில் நிறைந்திருப்பது பூரணம்

(26.1) சொருப பஞ்சக லட்சணத்தில் உபாதியால் பேதம்:

(26.1.1) சத்து பேதம்: (3)

வியாவ காரிக சத்து	:	சுழுத்தி அவத்தையில் தோன்றாது, சாக்கிர அவத்தையில் தோன்றி, விதேகமுத்தி பெறும்அளவும் விளங்கும் குட முதலியவற்றின் இருப்பு. ஆத்ம ஞானத்தால் பொய் என்று நிச்சயித்தற்கு உரியது
பிராதி பாசிக சத்து	:	சொப்பன அவத்தையில் தோன்றி அழியும் கட முதலியவற்றின் சத்தே பிராதிபாசிக சத்து. கயிற்றில் பாம்பு கானல்நீர் முதலியன. இவையும் அறியும் காலத்து அன்றி வேறு காலத்தில் தோன்றாது. ஆத்ம ஞானம் இன்றியே பொய் என்று நிச்சயித்தற்குரியது.

பாரமார்த்திக சத்து	:	மாயை அதன் காரிய உலகம் என்னும் சர்வ கற்பனைக்கும் அதிஷ் டானமாய் உற்பத்தியும் நாசமும் இல்லாதுள்ள பிரம்மமே இந்த சத்து. முக்காலத்தும் பொய்என்று நிச்சயித்தற்கு உரியதாக ஆகாதது

(26.1.2) அசத்து: எக்காலத்தும் இல்லாதது. (உ-ம்) முயற்கொம்பு, மலடி மகன், ஆகாயத் தாமரை முதலானவை. சத்து எக்காலத்தும் இருப்பது-அசத்து அதற்கு எதிர்மறையானது. <u>மித்தை:</u> சத்து-அசத்து இவ்விரண்டின் இடையில், வியாவகாரிக சத்தும், பிராதிபாசிக சத்தும் தெரிகின்றன. ஆனால் சத்தியமானவை அல்ல. அதனால் சத்திலும் சேர்க்க முடியாது, அசத்திலும் சேர்க்க முடியாது. ஆகவே மித்தை என்று சொல்லப்படும். மித்தையில் வியாவகாரிக சத்தும், பிராதிபாசிக சத்தும் உள்ளடங்கும்.

(26.1.3) சித்து பேதம்: (4)

ஜீவன்	:	குட நீரில் பிரதிபிம்பித்துள்ள ஆகாசம் போல அவித்தை (அ) அந்தக்கரணத்தில் (புத்தி/அகங்காரத்தில்)பிரதிபிம்பித்துள்ள சேதனம்
ஈசன்	:	மேகநீரில் பிரதிபிம்பித்துள்ள ஆகாசம்போல மாயையில் பிரதிபிம்பித்துள்ள சேதனம்
கூடஸ்தன்	:	கட(குட)த்தோடு கூடியுள்ள ஆகாசம் போல அவித்தை/அந்தக்கரணத் தோடு கூடியுள்ள சேதனம்
பிரம்மம்	:	மகா ஆகாசம் போல எங்கும் உள்ள சேதனம்

(26.1.4) ஆனந்த பேதம்: (8)

விஷயானந்தம்	:	மனைவி மக்கள் முதலிய விஷயங்களை அடைவதால் தோன்றுவது
பிரம்மானந்தம்	:	சுழுத்தி அவஸ்தையில் தோன்றுவது
வாசனானந்தம்	:	உறக்கம் தெளிந்தும் தெளியாதுள்ள பொழுது தோன்றுவது
முக்கியானந்தம்	:	விருப்பு வெறுப்பு இன்றியதாய் உபேட்சா புத்தியில் தோன்றுவது

நிஜானந்தம்	:	யோகாப்பியாசத்தால் மனம் லயமான இடத்தில் தோன்றுவது
ஆத்மானந்தம்	:	மனைவி மக்கள் முதலிய பிரிய வஸ்துக்களில் யானே பிரிய சொருபன் என்று உணர்ந்த போது தோன்றுவது
அத்துவிதானந்தம்	:	மாயையும் அதிலிருந்தும் விரிந்துள்ள நாமருப பிரபஞ்சம் அனைத்தும் மித்தையாம், ஆத்மா சத்தியம் என்னும் விவேகஞானம் உண்டான போது தோன்றுவது
வித்தியானந்தம்	:	வேதமுடிவிலுள்ள தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களின் அர்த்தங்களின் விசார ஞானத்தால் தோன்றுவது

(26.1.5) நித்தியத்தின் பேதம் - அபாவ சதுஷ்டயம் : (4)

பிராகபாவம் (முன்னின்மை)	:	உற்பத்தி இன்றி நாசம் உடையது. கடம் தன் உற்பத்திக்கு முன் இல்லாமையானது அதற்கு எதிர் மறையாய கடம் உண்டான போது கெடுகின்றது. நித்தியம் அன்று
பிரத்துவம்சாபாவம் (பின்னின்மை)	:	உற்பத்தியாய் நாசம் இன்றியது. கடம்தன் நாசத்தின் பின் இல்லாமை. இதுவும் நித்தியம் அன்று.
அந்நியோந்நியாபாவம் (ஒன்று ஒன்றாகாமை)	:	உற்பத்தி நாசமின்றிய அபாவம். கடம் படம்(துணி) அன்று என்னும் போது கடத்திலிருக்கும் துணியின் பேதமே இந்த அபாவம்
அத்தியந்தாபாவம் (என்றுமின்மை)	:	உற்பத்தி நாசமின்றிய அபாவம். தீயில் குளிர்ச்சி என்றும் இல்லை என்பதில் தீயிலுள்ள குளிர்ச்சியே இந்த அபாவம்.

(26.1.6) பூரணத்தில் சேராதவை - பரிச்சேத திரயம்: (3)

கால பரிச்சேதம்	:	ஒரு வஸ்து ஒரு காலத்துண்டு, பிறிதொரு காலத்தில்லை என்பதே.
தேச பரிச்சேதம்	:	ஒரு வஸ்து ஒரு தேசத்துண்டு, பிறிதொரு தேசத்தில்லை என்பதே.
வஸ்து பரிச்சேதம்	:	ஒரு பொருள் பிறிதொரு பொருள் ஆகாது என்பதே.

(26.2) ஆத்மாவின் விசேஷணம்:

1. விதேயம் (சாட்சாத்போதகம்), 2. நிஷேத்தியம் (பிரபஞ்சத்தின் நிஷேத வாயிலாக அறிவிப்பது) என்னும் பேதத்தால் இரண்டு வகையாம்.

விதேய விசேஷணம்	சத்து,சித்து, ஆனந்தம், பிரம்மம், சுயம்பிரகாசம், கூடஸ்தன், சாட்சி, திருஷ்டா, உபதிருஷ்டா ஏகம் என்னும் இவை முதலியன.
நிஷேத்திய விசேஷணம்	அனந்தம், அகண்டம், அசங்கம், அத்துவிதீயம், அஜன்மம், நிருவிகாரம், நிராகாரம், அவ்வியக்தம், அவ்வியயம், அட்சரம் என்னும் இவைமுதலியன

27. சைதன்னிய சப்தகம்: (7)

சுத்த சைதன்னியம்	:	மாயா ரகித சைதன்னியம் (சுத்தப் பிரம்மம்)
ஈஸ்வர சைதன்னியம்	:	மாயா சகித சைதன்னியம்
சீவ சைதன்னியம்	:	அவித்தியா சகித சைதன்னியம்
பிரமாத்துரு சைதன்னியம்	:	அந்தக்கரண சகித சைதன்னியம்
பிரமாண சைதன்னியம்	:	அந்தக்கரண விருத்தி சகித சைதன்னியம்
பிரமேய சைதன்னியம்	:	அப்பிரத்தியட்ச விஷய சகித சைதன்னியம்
பல சைதன்னியம்	:	பிரத்தியட்ச விஷய சகித சைதன்னியம்

28. ஜீவ நாமாதி வியவகார கற்பனை:

ஜீவன்:- விசுவன், தைசதன், பிராஞ்ஞன் என மூன்று பேதமாக விளங்குகின்றான். அவர்களின் பரியாய நாமங்கள்: (பரியாயம் - ஒரே பொருள் கொண்டவை)

விசுவன்	:	தூல சரீர வியட்டி அபிமானி. வேறு பெயர்கள்: வியாவகாரிக ஜீவன், புத்திப்பிரதி பல சைதன்னியன், சிதாபாசன், விட்சேபருபன், பிரமாத்துரு, கர்த்துரு, போத்துரு, விஞ்ஞான மயன், குடும்பி, சரீரி, துவம்பத முக்கியார்த்தன் (சேத்ரக்ஞன்) விஷயி, பாவாத்மா). சாக்கிர அவஸ்தை அபிமானி
தைசதன்	:	சூக்கும சரீர வியட்டி அபிமானி. வேறு பெயர்கள்: பிராதிபாசிக ஜீவன் சொப்பன கற்பிதன்.. சொப்பன அவத்தையின் அபிமானி
பிராஞ்ஞன்	:	காரண சரீர வியட்டி அபிமானி.. வேறு பெயர்கள்: அவித்தியா உபகிதன், காரிய உபாதிகன்... சுழுத்தி அவத்தை அபிமானி

29. ஆத்மத் திரயம் : (3)

ஜீவாத்மா	:	தீயில் காய்ந்துள்ள இரும்பு போல, தேக இந்திரிய பிராணன் முதலிய வற்றுள் யான் எனது என்னும் அபிமான வடிவமாகத் தொடர்பு கொண்டு சம்சார வியவகாரம் அனைத்தும் உடையவன்.
அந்தராத்மா	:	தாமரை இலை தண்ணீர் போல, சம்சார வியவகாரம் அனைத்திலும் பொருந்தியும், பொருந்தாதும் இருப்பவன்.
பரமாத்மா	:	உலக வியவகாரம் அனைத்திற்கும் சூரியன் சாட்சி மாத்திரமாக விளங்குதல் போல, ஜீவாத்மா அந்தராத்மாக்களின் வியவகாரம் அனைத்திற்கும் சாட்சி மாத்திரமாக விளங்குகின்றவன்.
	:	சுழுத்தி அவித்தையிலும், சாக்கிர சொப்பன அவத்தையின் காரியமாய் உள்ள

		அந்தக்கரணத்திலும் ஆத்மா ஜீவ ருபமாய்ப் பிரதிபலித்துள்ளது. சம்சார கற்பனை அனைத்தும் பிரதிபிம்ப வடிவ ஜீவனுக்கு அன்றிப் பிம்ப வடிவ ஆத்மாவிற்கு இல்லை.

30. ஈசுவர நாம பேதம்:

சுத்த சத்துவ குண சகித மாயை, மாயையின் அதிஷ்டான சேதனம், மாயையில் உள்ள ஆபாசம் இம்மூன்றும் ஈசுவரன் எனப்படும். ஈசுவரன் தேகத்திரய சமட்டி அபிமானத்தால் மூவகையாக விளங்குகின்றான்.

அவர்களின் பரியாய நாமங்கள்

விராட்புருஷன்	:	தூல சரீர சமட்டி அபிமானி. வைசுவாநரன்
இரணியகருப்பன்	:	இலிங்க (சூக்கும) சரீர சமட்டி அபிமானி. மகாப்பிராணன், சூத்திராத்மா
அந்தரியாமி	:	காரண சரீர சமட்டி அபிமானி. அவ்வியத்தன், காரணோபாதிகன், ஆனந்தமயன், பரதேவதை, பரமன், தற்பத முக்கியார்த்தன், அஞ்ஞான உபகித சைதன்னியன்,

31. ஈசுவரனது முக்கிய குணங்கள் : (6)

சர்வஞ்ஞத்துவம்	:	எல்லாவற்றையும் அறியுந் தன்மை
சர்வேசுரத்துவம்	:	எல்லாவற்றையும் ஆளுந் தன்மை
சர்வநியந்திருத்துவம்	:	எல்லாவற்றையும் நியமிக்குந்தன்மை
சர்வஅந்தரியாமித்துவம்	:	எல்லாவற்றுள்ளும் இருக்கும் தன்மை
சர்வ கர்த்துருத்துவம்	:	எல்லாவற்றையும் செய்யுந் தன்மை
சர்வ சக்தித்துவம்	:	எல்லா வல்லமையும் உடையதன்மை

32. ஈசுவரனது பிரபுத்துவ சாமர்த்திய குணங்கள் : (3)

கர்த்துருத்துவம்	:	செய்தல் தன்மை
அகர்த்துருத்துவம்	:	செய்யாத தன்மை
அந்நிதாகர்த்துருவம்	:	வேறு வகையாக செய்தல் தன்மை

33. ஈசுவரனது கிருத்தியம் : (5)

சிருஷ்டி	:	உலகத்தைப் படைத்தல்	விட்சேப சக்தியின் காரியம்
ஸ்திதி	:	உலகத்தைக் காத்தல்	விட்சேப சக்தியின் காரியம்
சங்காரம்	:	உலகத்தை அழித்தல்	விட்சேப சக்தியின் காரியம்
திரோபவம்	:	உயிர்களை மறைத்தல்	ஆவரண சக்தியின் காரியம்
அனுக்கிரகம்	:	உயிர்களுக்கு அருள் செய்தல்	விட்சேப சக்தியின் காரியம்

34. காரணம் இருவகை : (2)

உபாதானம்	:	எது காரியத்தின் சொரூபத்தில் பிரவேசிக்கின்றதோ, எதனை விட்டுக் காரியம் உண்டாகாதோ (காரியத்தின் உற்பத்திக்கு மட்டும் காரணம்) அது உபாதான காரணம். (மண் கடத்திற்கு உபாதான காரணம்)
நிமித்தம்	:	எது சொரூபத்தில் பிரவேசிக்கின்றதில்லையோ, ஆனால் காரியத்திற்கு வேறாக இருந்துகொண்டு காரியத்தைச் செய்கின்றதோ, எதன் நாசத்தினால் காரியம் நாசம் அடைகின்றதில்லையோ அது நிமித்தகாரணம். (உற்பத்தி-ஸ்திதி-நாசங்களுக்குக் காரணமாவது) கடத்திற்கு குயவன், தண்டம், சக்கரம் நிமித்தகாரணம்.

35. சமஷ்டி – விபஷ்டி : (2)

சமஷ்டி	:	ஒருவன் பல வேறுபாடுள்ள மரங்களின் கூட்டத்தைக் காடு என்பது போல, ஈசுவரன் பல வேறுபாடுள்ள உயிர் எல்லாவற்றையும் நான் என்று அபிமானிக்கும் அபிமானமே ஈசுவரனது சமஷ்டி வடிவமாம்.

வியஷ்டி	:	ஒருவன் அந்த காட்டில் இது ஒரு மரம் இது ஒரு மரம் என ஒவ்வொரு மரத்தையும் தனித்தனியாகக் கூறுவது போல ஜீவன் வேறு வேறாக உள்ள உடல்தோறும் வேறுவேறாக நான் நான்என்று அபிமானிக்கும் அபிமானமே ஜீவனது வியஷ்டி வடிவமாம்.

36. கூடஸ்த பரியாய நாமம்:

(விசுவன்-தைசதன்-பிராஞ்ஞன் என்னும்) ஜீவத்திரய அதிஷ்டான சைதன்னியன், அந்தரியாமி, அநுசந்தரத்துரு, சுவயஞ்சத்தார்த்தன், அவச்சின்ன ஜீவன், பாரமார்த்திக ஜீவன், துரியன், சாட்சிகன், பிரத்தியகாத்மா, துவம்பத விலக்கியார்த்தன்.

37. பிரம்மத்தினது பரியாய நாமம்:

(விராட் புருஷன்-இரணிய கருப்பன்-அந்தரியாமி என்னும்) ஈசுவரத்திரய அதிஷ்டான சைதன்னியன், பரப்பிரம்மம், பர தத்துவம், பரமாத்மா, விசுத்தசித்து, தத்பத விலக்கியார்த்தன், (சர்வாதிஷ்டாத்துரு, நிர்க்குணன், நிர்விசேஷன், நிஷ்களன், நிரவத்தியன், நிரஞ்சனன், அசங்கன், நிருப்பிலவானந்தன், நிர்மாயி, நிருபத்திரவன், சத்தாமாத்திரன், சத்தியன்)

38. திருக்கு விவேக சாரம்:

மண் ஒன்றே நாம ரூபங்களால் கடம், கலசம் முதலியனவாகப் பலவாய் விளங்குதல் போலும், பொன் ஒன்றே கடகம், குண்டலம், மகுடம் முதலிய ஆபரணங்களாகப் பலவாய் விளங்குதல் போலும், சித்து ஒன்றே உபாதி பேத கற்பனையால் ஜீவராகவும், ஈசுவரனாகவும், உலகமாகவும் விளங்குகின்றது. (திருக்கு – அறிவு)

39. பதார்த்தங்களில் ஐந்து அம்சங்கள்:

எல்லாப் பதார்த்தங்களிலும் 1.நாமம் 2.ரூபம் 3.அஸ்தி 4.பாதி 5.பிரியம் என்ற ஐந்து அம்சங்கள் உள்ளன. (உ-ம்) கடம் என்பதில் 'கடம்' என்னும் சொல் பெயர் (நாமம்). 'உருளை' அதன் வடிவம் (ரூபம்). 'கடம் இருக்கின்றது' என்பது அஸ்தி.

'கடம் பிரதீதி (தோற்றம்) ஆகின்றது' என்பது பாதி. 'கடம் பிரியமாய் (நன்றாய்) இருக்கின்றது' என்பது பிரியமாம். இந்தில் அஸ்தி, பாதி, பிரியம் மூன்றும் எல்லா பதார்த்தங்களிலும் வியாபகமாய் (பொதுவாய்) இருக்கின்றன. இவை ஆத்ம சொரூபம் ஆகும். நாம ரூபங்கள் மாறக் கூடியவை.

பகுதி-3

40. மாயாசக்தியின் இலக்கணம்:

சந்திரனை அநாதியாக சார்ந்திருந்து, அவனை முற்றும் மறையாது (ஏக தேகசமாக மறைத்து) எப்போதும் அச் சந்திரனாலேயே விளங்கப்படும் களங்கம் போல, 'என்னை யான் அறியேன்' என்னும் உலகப் பிரசித்த வியவகாரத்தால் ஆத்மாவைச் சார்ந்திருந்து அதனை முற்றும் மறையாது எப்போதும் அந்த ஆத்மாவாலேயே அறியப்படுவதாயும்,

மந்திரப் பிரயோகத்தால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் அக்கினியின் சுடும் தொழில் அக்கினியின் சொருபம் ஆகாதும், அதனினும் வேறாகத் தோன்றாதும் இருந்து கொப்புளம் முதலிய காரியங்களை உண்டாக்குவது போல, ஆத்மாவின் சொருபமாகாதும் அதனினும் வேறாகத் தோன்றாதும் இருந்து ஆகாய முதலிய காரியங்களை உண்டாக்குவதாயும், அவற்றைத் தன்னுள் மறைத்துக் கொள்வதாயும் (அந்த ஆகாய முதலிய காரியங்களால் அறியத்தக்கதாயும்),

அகடிதகடநா சாமர்த்தியம் (நிகழாததை நிகழ்த்துவிக்கும் வல்லமை) உடையதாயும், சகல அநர்த்தங்களையும் தருதற்குக் காரணமாயும் இருப்பது எதுவோ அதுவே திருசிய வடிவ மாயா சத்தியாம். (திருசியம் - அறியப்படுவது). திருக்குவிற்கு விஷயமாவது திருசியமாம். திருக்குவால் அறியப்படுவது திருசியமாம்.

கிரியாசக்தி தமோகுணப் பிரதானம். ஞானசக்தி சத்துவ குணப் பிரதானம். இச்சா சக்தி இரஜோகுணப் பிரதானம். எப்படிப் புத்திரனை உடைய இரண்டு பிராதாக்களின் புத்திரர்களை புத்திரர்கள் இல்லாத மூன்றாவது பிராதா விளையாடச் செய்கிறானோ, அதுபோலக் காரியத்தோடு கூடிய சத்துவ குண தமோகுணங்களுக்கு ரஜோகுணம் சககாரியாம். ஆதலால் இச்சா சக்தியினைப் பல வடிவமாகச் சொல்லப்படுகிறது. இம்மூன்று சக்திகளோடு கூடியது மாயா சக்தியாம்.

41. மாயா லட்சணம் : (5)

அசத்து	:	(என்றுமில்லாத) முயற்கொம்பு, (வான்தாமரை) முதலியன
ஜடம்	:	(முடமாய) கல் (கட்டை) முதலியன
துக்கம்	:	புத்தியை அடைந்துள்ள (இராசத குணத்தால் இராக மயமாய் உள்ள) கோர விருத்தியும், (தாமத குணத்தால் அஞ்ஞான மயமாய் உள்ள) மூட விருத்தியும் துக்கமாம்
அநித்தம்	:	(தோன்றிக் கெடுகின்ற) தேக முதலியன
கண்டம்	:	கால பரிச்சேதம், தேச பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் என்பன.

42. மாயா அநிர்வாச்சியப் பிரகாரம்: (9)

பின்னம் (வேறுபட்டது)	:	பிரம்மத்திற்கு அன்னியமாக இல்லாமையால் பின்னம் அன்று
அபின்னம் (வேறுபடாதது)	:	சித்தாகிய பிரம்மத்திற்கும் ஜடமாகிய மாயைக்கும் அபேதம் கூடாமையால் அபின்னம் அன்று
பின்னாபின்னம்	:	பின்னமும் அபின்னமும் தம்முள் விரோதம் உடையனவாதலால் அவ் விரண்டும் அன்று
சத்து(இருப்பது)	:	மாயையானது 'நான் பிரம்மம்' என்று தன்னை உணரும் தத்துவ ஞானத்தால் பொய் என்று நிச்சயிக்கப்படுவதாய் இருத்தலால் சத்து அன்று.
அசத்து (இல்லாதது)	:	உலக காரணமாய் இருத்தலாலும், நான் அஞ்ஞானி என்னும் அனுபவம் இருத்தலாலும், அசத்து அன்று.
சதசத்து	:	சத்தும் அசத்தும் தம்முள் விரோதம் உடையனவாதலால் அவ் விரண்டும் அன்று.
சாவயம் (அவயவம்உடையது)	:	திரவியமாயின் சாவயவமாம். அவ்வாறு இல்லாததால் சாவயவம் அன்றாம்.
நிரவயவம்	:	பிரபஞ்சமாய் பரிணமித்தலின் நிரவயவம் அன்றாம்.
சாவயவ நிரவயவம்	:	சாவயவமும், நிரவயவமும் தம்முள் விரோதம் உடையனவாம் ஆகலின் இரண்டும் அன்றாம்.

43. மாயையின் தோற்ற வகை: (3) (பிரதீதி – தோற்றம்)

துச்சம்	:	மாயையானது சுருதி(வேத) சம்பந்த ஞானத்தால் ஆகாயத்தாமரை போலத் துச்சமாகத் தோற்றும்.
அநிர்வாச்சியம்	:	யத்தி சம்பந்த ஞானத்தால் கிளிஞ்சலில் வெள்ளிபோல அநிர்வாச்சியமாகத் தோற்றும்
நித்தியம்	:	உலக சம்பந்த ஞானத்தால் ஆத்மா போல நித்தியமாகத்தோற்றும்

44. மாயா நாமங்கள் : (5)

தமம்(தமசு)	:	மாயையானது ஜீவசேதனத்தை (அதன் நிச வடிவம் அதற்கு விளங்காதவாறு) மறைத்தல் தமம்.
மாயை	:	தனக்கு வேறாகத் தோன்றுகின்ற பல கூறுபாடுகளையுடைய உலகம் அனைத்திற்கும் பரிணாமி உபாதான காரணமாய் இருப்பது
மோகம்	:	தோன்றியுள்ள உலகத்தில் ஜீவர்களுக்கு ஜகத் சத்தியம், தேகமே ஆத்மா, போகமே மோட்சம் என்பதான விபரீத புத்தியை உண்டாக்குவது
அவித்தை	:	'நான் பிரம்மமாய் இருக்கின்றேன்' என்று சந்தேக விபரீதம் இல்லாது அதிகாரி புருஷர்க்குச் சற்குருவருளால் உண்டாகும் தத்துவ ஞானத்தால் (ஒளி முன் இருள் போல) கெடுவது
அநிருதம் (பொய்ம்மையுருவி)	:	சத்தாகிய பிரம்மவடிவ ஆத்மாவிற்கு அன்னியமாக இருப்பதால் அநிருதம்(=மித்தியாசொரூபி)

(44.1) மாயையின் வேறு நாமங்கள் : (5) (விசார சாகரம்)

பிரதானம்	:	சர்வ காரியங்களையும் தன்னில் லயப்படுத்திப் பிரளய காலத்தில் இருக்கின்ற உதாசீன சொரூபம் பிரதானம்
பிரகிருதி	:	சிருஷ்டியின் உபாதான யோக்கியமான தமோகுணப் பிரதான சொரூபம்
மாயை	:	தேசகாலம் முதலிய கருவிகள் இன்றி இந்திர ஜாலத்தால் துர்க்கட (நிகழ்தற்கு அரிய) பதார்த்தங்கள் உண்டாகுமிடத்து, அந்த இந்திர ஜாலத்தை மாயை என்பர். அதுபோல, அசங்க அத்விதீய பிரம்மத்தின்கண் இச்சாதிகள் துர்க்கடமாம். அவற்றைச் செய்தலின் மாயை என்பர்.
அவித்தை	:	பிரம்ம வித்தையால் நாசம் அடைவதால் அவித்தை
அஞ்ஞானம்	:	சொருபத்தை மறைத்தலால் அஞ்ஞானம்

(44.2) மாயையின் வேறு நாமங்கள் : (15) (விசார சந்திரோதயம்)

1	மாயை	6	மூலை	11	அஜை
2	அவித்தை	7	தூலை	12	அஞ்ஞானம்
3	பிரகிருதி	8	யோனி	13	தமசு
4	சத்தி	9	அவ்வியத்தம்	14	துச்சை
5	சத்யை	10	அவ்வியாகிருதம்	15	அநிர்வசநீயை

45. மாயையின் தர்மங்கள் : (2)

சங்கோசம்	:	சித்திர படமானது தனது விகாச தருமத்தால் (விரிவால்) வர்ண பேதத்தால் நாநாவிதமாய் உள்ள சித்திரங்களை விளங்கக் காண்பித்துத் தனது சங்கோச தருமத்தால் (குவிவால்) அந்தச் சித்திரங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் விதம் போல, மாயையும் தனது விகாச தருமத்தால் நாமருப பேதத்தால் நாநாவிதமாயுள்ள உலகங்களை விளங்கக் காண்பித்து தனது சங்கோச தருமத்தால் அவ்வுலகங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளுவதாம். அ∴து இவ்வாறு இருத்தலே அதன் தர்மத்துவயம்.
விகாசம்	:	

46. மாயையின் குணங்கள் : (2)

அசுவதந்தரத்தன்மை (சுதந்தரம் இன்மை)	:	மாயை மித்தையாய்ச் சத்து வடிவ பிரம்மத்தினும் வேறாக ஒரு பொருளாய்த் தோன்றாமையினால் அசுவதந்தரம் உடையதாம்.
சுவதந்தரத்தன்மை (சுதந்தரம்)	:	(காற்றானது கடலின்கண் அலைநுரை முதலியவற்றைக் கற்பிப்பது போல) சர்வ சாட்சியாய் உள்ள சத்து வடிவ பிரம்மத்தின்கண் ஜீவேசுவர ஜகத்தைக் கற்பித்தலால் சுதந்தரம் உடையதாம்.
		அதனால் இம்மாயை ஆத்மா போல சத்தும் அன்று. ஆகாயத் தாமரை போல அசத்தும் அன்று. ஆனால் இவ்விரண்டினும் வேறானதாம். அதாவது அநிர்வசநீயம் என்னும் மித்தையாம்.

47. சிருஷ்டி:

கிரம சிருஷ்டி: மூலப் பிரகிருதியிலிருந்து மகத் தத்துவம் உண்டாயிற்று. அதிலிருந்து அகங்கார தத்துவம் உண்டாயிற்று. அதிலிருந்து தன் மாத்திரை என்னும் சூக்கும பஞ்ச பூதம் உண்டாயின என்கிற பொழுது, மகத் தத்துவம்-அகங்காரமும்- சூக்கும பூத பஞ்சகமும் சத்தப் பிரகிருதி என்று கூறப்படுகின்றன. இந்த சத்தப் பிரகிருதியுள் சூக்கும பூத பஞ்சகத்திலிருந்து தூல பஞ்ச பூதம் உண்டாயின. அந்த தூல பூதங்களிலிருந்து பிரமாண்டங்கள், உடம்புகள் முதலியன உண்டாயின என்பது கிரம சிருஷ்டி. மகத் தத்துவம் அகங்கார தத்துவம் முதலியன காரண காரியக் கிரமமாக ஒன்றன் பின் மற்றொன்று தோன்றுதல் கிரம சிருஷ்டி. இதற்கு சிருஷ்டி திருஷ்டி என்று பெயர்.

யுகபத் சிருஷ்டி: அலையின்றிய சமுத்திரத்தில் வாயுவின் வசத்தால் ஏக காலத்தில் அலை நுரை முதலியன உண்டாதல் போல, சச்சிதானந்த வடிவப் பிரம்மத்தில் மாயையின் வசத்தால் ஏக காலத்தில் பிரமாண்டம் மற்றும் தேகங்கள் வடிவமாயுள்ள நாமருப வடிவ ஜகத்து உண்டாயிற்று என்பது யுகபத் சிருஷ்டி. அவையனைத்தும் காரண காரியக் கிரமம் இன்றி ஒரே காலத்தில் தோன்றுதல் யுகபத் சிருஷ்டி. இதற்கு திருஷ்டி சிருஷ்டி என்று பெயர்.

48.ஜகத் காரண வாதங்களும் மறுப்பும்:

அசத் காரணவாதிகள் ஜகத்தினை அகாரணம் என்று கூறுகின்றனர்:- 'ஜகத்திற்கு ஒரு காரணமும் இல்லை, ஆனால் காரணம் இன்றியே ஜகத்து உண்டாகின்றது' என்னும் பட்சத்தில் சகல கடாதி காரியங்களின் காரணம் பிரத்தியட்சமாய் காணப்படுகின்றது. ஆதலால் அதில் திருஷ்டவிரோதம் அதாவது பிரத்தியட்ச விரோதம் என்னும் தோஷம் இருக்கின்றது.

சிலர் ஜகத்தின் அபாவத்தினைக் காரணம் என்கின்றனர்:- 'ஜகத்தின் காரணம் அபாவமாம்' என்னும் பட்சத்தில் மலடி மைந்தனைப் போல அசத்து வடிவ அபாவத் திலிருந்தும் பாவ வடிவ ஜகத்தின் உற்பத்தியை அங்கீகரித்தலிலும் திருஷ்ட விரோத வடிவ தோஷமே உண்டாகின்றது.

சிலர் சூனியத்தைக் காரணம் என்கின்றனர்:- 'சூனியமே ஜகத்திற்குக் காரணம்' என்னும் பட்சத்தில் ஆகாசத்தில் புஷ்பவனமும் விதைக்காத வித்தினின்றும் தானியம் உண்டாதலும் போல அசம்பவ வடிவ தோஷம் இருக்கின்றது.

நையாயிகர் முதலியோர் பரமாணு முதலியவற்றைக் காரணம் என்கின்றனர்:- 'பரமாணு காரணம்' என்னும் பட்சத்தில் நிரவயமும் ஜடமுமாகிய பரமாணுக்களின் சையோக முதலியவற்றின் அசம்பவ வடிவ தோஷம் இருக்கின்றது.

ஜோதிடர் காலத்தினைக் காரணம் என்கின்றனர்:- 'காலமே காரணம்' என்னும் பட்சத்தில் காலம் இருக்கும் போதும் எல்லாக் காரியங்களின் உற்பத்தியும் எப்போதும் உண்டாகிறதில்லை. ஆதலால் அகாரணத் தன்மையின் அடைவு வடிவ தோஷம் இருக்கின்றது.

சார்வாகர் சுவபாவத்தினைக் காரணம் என்கின்றனர்:- 'சுவபாவம் காரணம்' என்னும் பட்சத்தில் மலடி முதலியோரிடத்துக் கர்ப்பம் முதலிய காரியத்தினை உண்டுபண்ணும் வீரிய முதலியவற்றினது சுபாவம் கெடுதலால் வியபிசார வடிவ தோஷம் இருக்கின்றது. (வியபிசாரம்- பிறழ்ச்சி)

மீமாம்சகர் நியதியாகிய அதிருஷ்டத்தினைக் காரணம் என்கின்றனர்:- 'புண்ணிய பாப வடிவ அதிருஷ்டம் காரணம்' என்னும் பட்சத்தில் இக்காரணத்தினின்றும் இக் காரியம் உண்டாகும், இதனின்றும் உண்டாகாது என்னும் அந்வயவியதிரேகத்தின் வியபிசார வடிவ தோஷம் இருக்கின்றது.

பிரத்தியட்ச வாதிகள் நேர்ந்ததைக் காரணம் என்கின்றனர்:- 'காகதாலீய நியாயம் போல நேர்ந்தது காரணம்' என்னும் பட்சத்தில் பிருதிவி முதலிய பூத வடிவ தர்மிகள் இன்றிக் கேவலம் நேர்தல் வடிவ தர்மத்திற்குக் காரணத்தன்மை அசம்பவ வடிவ தோஷம் இருக்கின்றது.

பிரத்தியட்சப் பிரமாண வாதிகள் பிருதிவி முதலிய பஞ்சபூதங்களைக் காரணம் என்கின்றனர்:- 'பிருதிவி முதலிய பூதம் காரணம்' என்னும் பட்சத்தில் கட முதலிய வற்றைப் போல ஜடமும் சாவயமும் ஆகிய பூதங்களுக்கு அந்நிய காரணம் வேண்டி யிருத்தலால் காரணத்தன்மையின் அசம்பவ வடிவ தோஷம் இருக்கின்றது.

சாங்கிய மதஸ்தர் மூன்று குணங்களின் சாமியாவஸ்தை வடிவப் பிரகிருதியைக் காரணம் என்பர்:- 'பிரகிருதி காரணம்' என்னும் பட்சத்தில் கடத்தினைப் போல ஜடப் பிரகிருதிக்குக் காரியத்தில் தானே பிரவிருத்தித்தலின் அசம்பவ வடிவ தோஷம் இருக்கின்றது.

யோகிகள் இரண்ய கர்ப்ப முதலிய வடிவ அசங்க புருஷனைக் காரணம் என்பர்:-

'புருஷன் காரணம்' என்னும் பட்சத்தில் அசங்கமும் நிர்க்குணமுமாய் இருத்தலின் வியாபாரம் இன்றிய அந்தப் புருஷனுக்குக் காரணத் தன்மையின் அயோக்கிய தன்மை வடிவத் தோஷம் இருக்கின்றது.

சிலர் கால முதலியவற்றின் சையோகத்தைக் காரணம் என்கின்றனர்:- 'அவற்றின் சையோகம் காரணம்' என்னும் பட்சத்தில் அது ஜடமாய் இருத்தலால் அதற்கு அந்நியத்தின் அபேட்சை வடிவ தோஷம் இருக்கின்றது.

சிலர் பிரதிபிம்ப வடிவ பரிணாமி புருஷனைக் காரணம் என்கின்றனர்:- 'பரிணாமி புருஷன் காரணம்' என்னும் பட்சத்தில் அந்தச் சீவனுக்குச் சுகப்பிராப்தி துக்க நிவிருத்தியின் சாமர்த்தியம் இன்மை காரணமாதலின் அயோக்கியத் தன்மை வடிவ தோஷம் இருக்கின்றது.

பிரம்மவாதியராகிய வேதாந்திகள் உபநிடதங்களை அநுசரித்துப் பிரம்மத்தினை ஜகத் காரணம் என்கின்றனர்:- 'சுத்த அதாவது மாயா சக்தி இன்றிய பிரம்மம் காரணம்' என்னும் பட்சத்தில் பிரம்மத்தின் நிர்விகாரித் தன்மை அசங்கத்தன்மை நிரவயவத் தன்மை முதலிய விசேஷணங்களின் பங்க வடிவ தோஷம் இருக்கின்றது.

இவ்வாறு அந்நிய காரண வாதங்களில் தோஷம் இருக்கின்றது. **ஆதலால் மாயா விசிஷ்ட பிரம்மமே ஜகத்தின் காரணமாம் என்னும் பட்சம் தோஷம் இன்றியதாம்.**

49. ஈசுவர சிருஷ்டி-ஜீவ சிருஷ்டி:

ஈசுவர சிருஷ்டி	:	அண்டங்கள். மலை, கடல், நதி, தாவரம் முதலிய பொதுவானவை
ஜீவ சிருஷ்டி	:	ஆசை, கோபம், பொறாமை, வெறுப்பு, உலோபம் போன்றவை

(49.1) கர்த்தா:

காரியத்தினது உபாதானத்தின் அபரோட்ச ஞானமும், அக்காரியத்தைச் செய்யும் இச்சையும், அவ்விச்சையால் தோன்றும் முயற்சி எனப்படும் கிருதியும் ஆகிய மூன்றையும் உடையவனே கர்த்தா எனப்படுவான்.

50. தத்துவங்கள் உற்பத்தி:

சுத்தப்பிரம்மம் → பரப்பிரம்மம்

→ ஆனந்தரூபசக்தி (பரமானந்தர்)

→ சித்துருபசக்தி (தேசோமயர்)

→ சத்துருபசக்தி (பரிபூரணப் பரப்பிரம்மம்)

இந்த பரிபூரணப்பரப்பிரம்மத்துடன் மூலப்பிரகிருதியும் சுத்த சத்துவம், சுத்த ரஜஸ், சுத்த தமஸ் ஆகிய முக்குண வடிவாக உள்ளது.			
இந்த முக்குணங்கள் ஒன்றை ஒன்று அமிழ்த்தி மேலெழும். அதாவது ஒரு கணத்தில் ஒரு குணம் மட்டுமே மேலோங்கி நிற்கும்.			
சத்துவம் அமிழ்த்தப்படாமல் உள்ள போது மாயை எனப்படும்		இரஜோகுணம் மேலோங்கிய போது அவித்தை எனப்படும்	
மாயையில் பிரதிபிம்பம் ஈசுவரன்		அவித்தையில் பிரதிபிம்பம் சீவர்கள்	
காரண தேக தத்துவம் - 5 : பிரம்மம், ஈசுவரன், மாயை, சீவன், அவித்தை			
பின்பு, முக்குணங்களும் தம்முள் ஒன்றோடு ஒன்று கலந்து விடுகின்றன			

						காரண தேகம்					
சத்	சத்துவம்	மிகும்	ஈசுவரன் பிரதி	விஷ்ணு		ரஜ	சத்துவம்	மிகும்	சீவன் பிரதி பலிக்	தத்துவ ஞான நிஷ்டன்

துவத்தால்	இரஜஸ்	போது	பலிக்க பிரதிபிம்பம்	அயன்		சில்	இரஜஸ்	போது	க பிரதிபிம்பம்	கர்ம நிஷ்டன்
	தமஸ்			ருத்ரன்			தமஸ்			சோம்பல், மயக்கம் உடையவன்

தமோகுணம் இரண்டாகப் பிரிகிறது	1. ஆவரணம் (மூடல்)
	2. விட்சேபம் (தோற்றம்)

சூக்கும தேகம்

முதலில், சூக்கும பூதங்கள் என்ற அபஞ்சீகிருத பூதங்கள் ஐந்தும் தோன்றுகின்றன					
சமட்டி	தமோகுணத்தில்	சத்துவம்	மிகும்போது	அந்தக்கரணங்கள்	5
வியட்டி	தமோகுணத்தில்		மிகும்போது	ஞானேந்திரியங்கள்	5
சமட்டி	தமோகுணத்தில்	இரஜஸ்	மிகும்போது	வாயுக்கள்	5
வியட்டி	தமோகுணத்தில்		மிகும்போது	கர்மேந்திரியங்கள்	5
ஆக மொத்தம்					20

காரண தேக தத்துவம்	..	5
சூக்கும தேக தத்துவம்	..	20
தூல பூதங்கள்	..	5
தூல தேக தத்துவம்	..	6
மொத்தம்	..	36

51. அந்தக்கரணம்: (5)

பஞ்ச பூத அம்சமாக பஞ்ச அந்தக்கரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (அந்தக்கரணத்தில் உள்ளம் என்பதைச் சேர்க்காமல் நான்கு என்றும் கணக்கிடுவர்)

பூதம்	அந்தக்கர	உடலில்	தேவதை	தொழில்

	ணம்	உள்ள இடம்		
ஆகாயம்	உள்ளம்	சிரம்	சதாசிவன்	தரித்தல்
காற்று	மனம்	கண்டம்	சந்திரன்	நினைத்தல்
நெருப்பு	புத்தி	இருதயம்	பிரமன்(அயன்)	நிச்சயித்தல்
நீர்	சித்தம்	நாபி	விஷ்ணு	சிந்தித்தல்
மண்	அகங்காரம்	உடலெங்கும்	உருத்திரன்	அபிமானம்

சாக்கிர அவத்தையில் நகநுனி முதல் சிகைவரையிலும் தேகத்தில் வியாபித்துள்ள கர்த்தா வடிவமாய் இருப்பது **புத்தி**. தேகத்தில் யான் என்பதையும் வீடு முதலியவற்றில் எனது என்பதையும் செய்துகொண்டு இந்திரிய வாயிலாக வெளியே செல்வதாய் கரண வடிவமாயும் பரிசமின்றி செயலுடையதாயும் இருப்பது **மனம்**.

52. ஞானேந்திரியம்: (5)

பூதம்	கரணம்	உடலில் உள்ள இடம்	தேவதை	தொழில்
ஆகாயம்	காது	காது	திக்கு	கேட்டல்
காற்று	தோல்	தோல்	வாயு	பரிசம்
நெருப்பு	கண்	கண்	சூரியன்	காண்பது
நீர்	நாக்கு	நாக்கு	வருணன்	ருசித்தல்
மண்	மூக்கு	மூக்கு	அசுவினி	முகர்தல்

53.பிராணாதி வாயுக்கள் : (5)

பூதம்	கரணம்	உடலில் உள்ள இடம்	தேவதை	தொழில்
ஆகாயம்	வியானன்	உடலெங்கும்	விசுவயோனி	தாங்குதல்
காற்று	பிராணன்	இருதயம்	விசிட்டன்	மூச்சுவிடல்
நெருப்பு	அபானன்	குதம்	விசுவகர்த்தா	சீரணித்தல்
நீர்	சமானன்	நாபி	சயன்	உணவை இழுத்துசெல்லுதல்
மண்	உதானன்	கண்டம்	அயன்	உணவைக் கடைதல்
இவை உள்வாயு. இவ்வைந்தும் ஞானேந்திரியம் ஐந்தினையும் இயங்கச் செய்வன.				

(53.1) உப வாயுக்கள் : (5)

நாகன்	சோம்பலையும் கொட்டாவியையும் உண்டாக்குவது
கூர்மன்	விக்கலையும் ஏப்பத்தையும் உண்டாக்குவது
கிருகரன்	தும்மலையும் இருமலையும் உண்டாக்குவது
தேவதத்தன்	சிரித்தலையும் வசனித்தலையும் உண்டாக்குவது
தனஞ்செயன்	சோகத்தையும் மோகத்தையும் உண்டாக்குவது. இவ்வாயு தேகத்தில் இருந்து பிராணன் நீங்கிய பின்னும், அத்தேகத்தில் ஐந்து நாட்கள் இருந்து அதனை வீங்கச்செய்து, அதன் தலையை வெடிக்கப்பண்ணிப் போவதாம்
இவை வெளிவாயு. இவ்வைந்தும் கர்மேந்திரியம் ஐந்தினையும் இயங்கச் செய்வன.	

54. கர்மேந்திரியம் : (5)

	பூதம்	கரணம்	உடலில் உள்ள இடம்	தேவதை	தொழில்
கர்மேந்திரி யங்கள்	ஆகாயம்	வாக்கு	வாய்	அக்கினி	பேசுதல்
	காற்று	கை	கை	இந்திரன்	கொடுத்தல் வாங்குதல்
	நெருப்பு	பாதம்	கால்	உபேந்திரன்	நடத்தல்
	நீர்	குதம்	குதம்	யமன்	கழித்தல்
	மண்	பிறப்புறுப்பு	குய்யம்	பிரஜாபதி	ஆனந்தித்தல்

55. பஞ்சீகரணம் :

அரைப்பங்கு (50%)	அரைப்பங்கு (50%)			
பூதங்களின் ½ அரைப்பங்கு	1/8 பங்கு	1/8 பங்கு	1/8 பங்கு	1/8 பங்கு
ஆகாயம்	காற்று	நெருப்பு	நீர்	மண்
காற்று	ஆகாயம்	நெருப்பு	நீர்	மண்
நெருப்பு	ஆகாயம்	காற்று	நீர்	மண்
நீர்	ஆகாயம்	காற்று	நெருப்பு	மண்
மண்	ஆகாயம்	காற்று	நெருப்பு	நீர்

56.பஞ்சீகிருத (அ) தூல பூதங்கள் : (5)

1. ஆகாயம் 2.காற்று 3. நெருப்பு 4. நீர் 4. மண்

ஆகாயத்தின் சப்தம் (பிரதித் தொனி) எதிரொலியாம் (ஒரு சத்தத்தைப் போல வேறு சத்தம் செய்தற்குச் சத்தத்தின் அநுகரணம் (அநுகாரம்) என்று பெயர்) வாயுவில் 'வீசி' என்னும் சப்தம் இருக்கின்றது. வாயுவில் குளிர்ச்சியும் வெப்பமும் இல்லாத பரிசம் இருக்கின்றது. அக்கினியில் புகுபுகு என்னும் சத்தமும் உஷ்ணமாகிய பரிசமும் ஒளியாகிய உருவமும் இருக்கின்றன. தண்ணீரில் 'புளுபுளு' என்னும் சப்தமும் குளிர்ச்சியாகிய பரிசமும், வெண்மை உருவமும், இனிமையாகிய சுவையும் உள்ளனவாம். மண்ணில் 'கடகட' என்னும் சத்தமும், கடினத்தன்மை பரிசமும், நீல முதலிய சித்திர உருவமும், தித்திப்பு, புளிப்பு முதலிய இரசமும் இருக்கின்றனவாம். இதில், *இலவணம்(உவர்ப்பு), கைப்பு(வேம்பு முதலியவற்றில் உள்ளது), துவர்ப்பு(கடுக்காய் முதலியவற்றில்), கார்ப்பு (மிளகாய் முதலியவற்றில்) என்பவையும் கொள்ளப்படும். இந்த அறுசுவையும் மண்ணில் இருக்கின்றன.*

(56.1) பஞ்ச மகா பூதங்களின் 25 தத்துவங்கள்:

பூதங்களின் அம்சம்	பஞ்ச மகா பூதங்கள்				
	ஆகாயம்	காற்று	நெருப்பு	நீர்	மண்
ஆகாய அம்சம்	சோகம்	விரிதல் (நிமிர்தல்)	நித்திரை	உமிழ்நீர்	உரோமம்
காற்றின் அம்சம்	காமம்	ஓடுதல்	தாகம்	வியர்வை	தோல்
நெருப்பின் அம்சம்	குரோதம்	இருத்தல்	பசி	மூத்திரம்	நரம்பு
நீரின் அம்சம்	மோகம்	நடத்தல்	காந்தி(ஒளி)	சுக்கிலம்	மாமிசம்
மண்ணிண் அம்சம்	பயம்	சுருங்குதல் (வளைதல்)	சோம்பல்	சோணிதம் (உதிரம்)	எலும்பு

57. தூல தேக தத்துவம் : (6)

1	சருமம் (தோல்)	தாயின் சுரோணி தத்தால் உருவானவை	4	சனாயு (நரம்பு)	தந்தையின் சுக்கிலத்தால் உருவானவை
2	உதிரம் (ரத்தம்)		5	அஸ்தி (எலும்பு)	
3	மாமிசம் (சதை)		6	மஜ்ஜை (எலும்பில் உள்ள மூளை)	

58. சூக்கும தேக தத்துவங்கள் இருபதும், ஆறு தத்துவமாய் உள்ள தூல தேகத்தில் அடங்கியுள்ள விவரம்:

வ எ	இருக்கும் இடம்	மொத்தம்	அந்தக் கரணம்	ஞானேந்திரியம்	வாயுக்கள்	கர்மேந்திரியம்
1	வாய்	2	--	நாக்கு	--	வாக்கு
2	கண்டம்	2	மனம்	--	உதானன்	--
3	இருதயம்	2	புத்தி	--	பிராணன்	--
4	நாபி (தொப்புள்)	2	சித்தம்	--	சமானன்	--
5	குதம்	2	--	--	அபானன்	பாயுரு
6	சர்வாங்கம் (உடல்முழுவதும்)	3	அகங்காரம்	தோல்	வியானன்	--
7	உச்சி	1	உள்ளம்	--	--	--
8	கருவிழி நுனியில்	1	--	கண்	--	--

9	காதினுள்	1	--	காது	--	--
10	மூக்கு நுனியில் (கழுத்துமேலேயும்)	1	--	மூக்கு	--	--
11	கை	1	--	--	--	கை
12	கால்	1	--	--	--	கால்
13	ஜனனேந்திரியம்	1	--	--	--	பிறப்பு உறுப்பு
	மொத்தம்	20	5	5	5	5

59. போக சாதனங்கள்:

போக சாதனங்களான பிராணாதி (வாயுக்கள்-5+ஞானேந்திரியம்-5+கர்மேந்திரியம்-5+அந்தக்கரணம்-4 ஆக) பத்தொன்பது முகங்களில், செவி முதலான 10 இந்திரியங்களும் அந்தக்கரணம் -4ம் ஆகிய 14-ம் தத்தம் விஷயங்களின் சகாயத்தையும், தத்தம் தேவதைகளின் சகாயத்தையும் விரும்புகின்றன. தேவதை, விஷயம் இவைகளின் சகாயம் இன்றிப் போகம் உண்டாவதில்லை. இவைகள் விராட் ரூப விசுவனுடைய முகங்கள் எனப்படும். முகம்-தேவதை-விஷயம் என்னும் மூன்றன் கூட்டத்திற்குத் திரிபுடி எனப்பெயர்.

இந்த முறையில் கிரியா சக்தி உடையனவும், ஞான சக்தி உடையனவுமாகிய இந்திரியமும் அந்தக்கரணமும் அத்தியாத்மம் எனபப்படும். அவற்றின் விஷயம் அதிபூதம் எனப்படும். அவற்றின் சகாயமான தேவதை அதிதைவம் எனப்படும்.

அத்யாத்மம்	இந்திரியம்	காது	தோல்	கண்	நாக்கு	மூக்கு
அதிபூதம்	விஷயம்	சப்தம்	பரிசம்	ரூபம்	சுவை	கந்தம்
அதிதைவம்	தேவதை	திக்கு	வாயு	சூரியன்	வருணன்	அசுவினி குமாரர்

அத்யாத்மம்	இந்திரியம்	வாக்கு	கை	பாதம்	குதம்	உபஸ்தம்
அதிபூதம்	விஷயம்	வசனித்தல்	இடுதல் ஏற்றல்	நடத்தல்	மல விஸர்ஜனம்	ஆனந்தித்தல்
அதிதைவம்	தேவதை	அக்கினி	இந்திரன்	விஷ்ணு	யமன்	பிரஜாபதி

அத்யாத்மம்	இந்திரியம்:	மனம்	புத்தி	சித்தம்	அகங்காரம்
அதிபூதம்	விஷயம்:	சங்கற்ப விகற்பம்	நிச்சயம்	ஸ்மரணை	அபிமானம்
அதிதைவம்	தேவதை:	சந்திரன்	பிரகஸ்பதி	விஷ்ணு (சேத்ரக்ஞன்)	ருத்திரன்

60. ஜன்ம வகை:

(60.1) நால்வகைப் பிறப்பு:

1	கருப்பையில் பிறப்பன	சராயுஜம்
2	முட்டையில் பிறப்பன	அண்டஜம்
3	வியர்வையில் பிறப்பன	சுவேதஜம்
4	(பூமியைப் பிளந்து) விதைமுதலியவற்றில் பிறப்பன	உத்பிச்சம்

(60.2) மூவகைச் சாதி:

1	உத்தம சாதி	(இகலோக பரலோக புத்தி உடைய) மானுடம்
2	மத்திம சாதி	(பரலோக புத்தி மறைந்து, இகலோக புத்தியுடைய) பசு,பட்சி முதலியன
3	அதம சாதி	(இரண்டும் இல்லாத) மரம், செடி, கொடி முதலியன

இத்தூல தேக தத்துவம் மண்ணில் தோன்றுபவை. இதே போல் மற்ற பூதங்களில் தோன்றுபவைகளில் மூவகைச் சாதி:

1	உத்தம சாதி	சந்திரன், நட்சத்திரமாகத் தோன்றும் பிதிர்கள்,சூரியன், சித்தர்,யட்சர்
2	மத்திம சாதி	காமதேனு, ஐராவதம், அன்னப்பறவை, கருடன்
3	அதம சாதி	கற்பக விருட்சம், பாரிஜாதம்

நீர் - பிதிர்லோகம் நெருப்பு - தேவலோகம்
காற்று – யட்ச, கந்தர்வ லோகம் ஆகாயம் - சித்தர்லோகம்

61. உயிரினங்களின் பேதம்: (7)

1. தேவர்களின் பேதம் 14 லட்சம். 2.மனிதர்களின் பேதம் 9 லட்சம் 3.விலங்குகளின் பேதம் 10 லட்சம். 4.பறவைகளின் பேதம் 10 லட்சம் 5.நீர்வாழ்வன பேதம் 10 லட்சம் 6.ஊர்வன பேதம் 11 லட்சம். 7.தாவர பேதம் 20 லட்சம் ஆக மொத்தம் 84 லட்சங்கள்.

<u>ஓர் அறிவு உயிரினம்:</u> மெய்யினால் பரிசத்தை மாத்திரம் அறிவதாகிய புல், செடி, கொடி, மரம் முதலியவற்றில் உள்ள உயிரினங்கள்.

<u>இரண்டு அறிவு உயிரினம்:</u> மெய்யோடு நாவினாலும், பரிசத்தோடு இரதத்தையும் அறிவ தாகிய இப்பி, சங்காதிகளிலுள்ள உயிரினங்கள்.

<u>மூன்று அறிவு உயிரினம்:</u> மெய், நாக்கோடு மூக்கினாலும், பரிச இரதங்களோடு கந்தத்தையும் அறிவதாகிய கறையான், எறும்பு முதலிய உயிரினங்கள்.

<u>நான்கறிவு உயிரினம்:</u> மெய், நாக்கு, மூக்கோடு கண்ணினாலும், பரிச இரத கந்தத்தோடு ரூபத்தையும் அறிவனவாகிய தும்பி, வண்டு முதலிய உயிரினங்கள்.

<u>ஐந்தறிவு உயிரினம்:</u> மெய், நாக்கு, மூக்கு, கண்ணோடு செவியினாலும், பரிச இரத கந்த ரூபத்தோடு சப்தத்தையும் அறிவதாகிய விலங்கு, பறவை முதலிய உயிரினங்கள்.

<u>ஆறு அறிவு உயிரினம்:</u> மெய், நாக்கு, மூக்கு, கண், செவியோடு சித்தத்தினாலும், பரிச இரத கந்த ரூப சப்தத்தோடு நன்மை தீமைகளைப் பகுத்தறிவதாகிய மக்கள் தேவர் முதலிய உயிரினங்கள்.

சட்பாவ விகாரங்கள்: கருவாகத் திரளுதல், பிறத்தல், வளர்தல், பருத்தல், குறைதல், இறத்தல் ஆகிய இவைகள் தூல தேகத்திற்கான ஆறு விகாரங்கள்.

சட்கோசத்துவம்: உரோமத்தால் சருமமும், சருமத்தால் உதிரமும், உதிரத்தால் மாம்சமும், மாம்சத்தால் நரம்பும், நரம்பினால் எலும்பும், எலும்பினால் மஜ்ஜையும் மறைக்கப்பட்டிருத்தலால் தூல தேகத்தைச் சட்கோசம் உடையது என்பர்.

<u>*62. மூன்று அவஸ்தைகளில் சீவனும், ஈசுவரனும்*</u>

அவஸ்தை	சீவன்			ஈசுவரன்		
	தேகம்	பெயர்	சாட்சியாய் இருக்கும் பிரம சைதன்னியம்	தேகம்	பெயர்	அதிஷ்டான சைதன்னியம்
சாக்கிரம்	வியட்டி தூல தேக	விசுவன், வியவகாரிகன்	சீவாத்மா	சமட்டி ஈசுவர தூல தகம்/	வைசுவா நரன்	பிரமன்

	ம்			விராட்டு தேகம்		
சொப்பனம்	சூக்கும தேகம்	தைஜசன், பிராதிபாசிக சீவன், சொப்பன கற்பிதன்.	அந்தராத்மா	சமட்டி ஈசுவர சூக்கும தேகம் / இரண்ய கருப்பம்	சூத்திராத்மா	விஷ்ணு
சுழுத்தி	காரண தேகம்	பிராஞ்ஞன், பாரமார்த்திக சீவன்	சுழுத்திக்குசாட்சி-பரமாத்மா. அவஸ்தாத்திரயத் திற்கு சாட்சி-ஞானாத்மா/ கூடஸ்தன்	சமட்டி ஈசுவர காரண தேகம் / அவ்யாகிருதம்	அந்தர்யாமி	உருத்திரன்

(62.1) சாட்சி: அந்தக்கரணத்தை உபாதியாக உடைய சேதனம் (அ) அதனை உதாசீனமாய்ச் சமீபத்திருந்து அறிவதாகிய சேதனம் (அ) அந்தக்கரணத்திலும் அதன் விருத்தியிலும் உள்ள சேதன மாத்திரம் சாட்சியாம்.

63. மூன்று அவஸ்தைகளில் சீவன்-ஈசுவரன் வியவகாரத்தில் செயல்படும் தத்துவங்கள்

அவஸ்தை	வியவகார தேகம்	சீவன்		ஈசுவரன்	
சாக்	தூல	தூல தேக		சமட்டி தூல தேக	6

கிரம்	தேகம்	தத்துவம் சூக்கும தேக தத்துவம் காரணதேக தத்துவம்	6 20 5 31	தத்துவம் சூக்கும தேக தத்துவம் காரண தேக தத்துவம் தூல பூதங்கள்	20 5 5 36
சொப் பனம்	சூக்கும தேகம்	சூக்கும தேக தத்துவம் காரண தேக தத்துவம்	20 5 25	சமட்டி சூக்கும தேக தத்துவம் காரண தேக தத்துவம் சூக்கும பூதங்கள்	20 5 5 30
சுழுத்தி	காரண தேகம்	காரண தேக தத்துவம்	5	ஈசுவரன், மாயை, பிரம்மம்	3
	சீவ விவ காரத்திற்கு	சீவன், ஈசுவரன், பிரம்மம்	3	....	
	ஈசுவரவிவ காரத்திற்கு	....		ஈசுவரன், பிரம்மம்	2
	சாட்சி விவகாரம்	சாட்சி	1	....	
	பிரம்ம விவகாரம்	....		பிரம்மம்	1

இந்திரிய விவகாரத்திற்கு		மனோ ராச்சிய விவகாரத்திற்கு	
இந்திரியம்	1	அந்தக்கரணம்	5
தூல தேக தத்துவம்	6	காரண தேக தத்துவம்	5
அந்தக்கரணம்	5		
வாயுக்கள்	5		
காரண தேக தத்துவம்	5		
	22		10

<u>36 தத்துவங்களில்--</u>

தானாகவே (எப்போதும்)காணப்படுகின்ற தத்துவம்	1	பிரமம்
தனக்கு அன்னியமாகவே (எப்போதும்) காணப் படுகின்ற தத்துவம்	7	பூதங்கள் -5, ஈசுவரன்-1, மாயை-1
தானாகவும், (ஞானம் வந்தபோது) தனக்கு அன்னியமாகவும் காணப்படும் தத்துவங்கள்	28	அவித்தை-1, சீவன்-1, சூக்கும தேக தத்துவம்-20, தூல தேக தத்துவம்-6

இதிலும் பூதம்-5, மாயை-1, ஈசுவரன்-1, பிரம்மம்-1 ஆக எட்டும் சகல பிராணிகளுக்கும் பொது. மீதமுள்ள 28-ம் அவனவனுக்குத் தனியானது.

(63.1) இந்திரியம், விஷயம், அதிதேவதை என்பவனவற்றில் ஆத்தியாத்மிகம் முதலியன :

1	ஆதிஆத்மிகம்	அந்தக்கரணம்-4 (உள்ளம் தவிர), ஞானேந்திரியம்-5 கர்மேந்திரியம்-5 ஆக 14 இவை ஆதிஆத்மிகம்
2	ஆதிபௌதிகம்	அவற்றின் விஷயம்
3	ஆதிதெய்வீகம்	அவற்றின் அதிதேவதைகள்

இவைகளுக்கு வேறு விளக்கம் :

1	ஆதிஆத்மிகம்	ஆத்மாவைச் சார்ந்துள்ள தூலசூக்கும சரீரம் (தூல தேகத்திற்கு வரும் வியாதி,பசி முதலியவற்றால் உண்டாகும் துக்கமும் ஆம்)
2	ஆதிபௌதிகம்	ஆத்மாவினது தேகம் முதலிய கூட்டங்களுக்கு வேறாய், கண் இந்திரியத்திற்கு விஷயமாய் இருப்பது (கண்ணுக்குப் புலப்படும் திருடன், புலி, பாம்பு போன்றவைகளால் வரும் துக்கமும் ஆம்)

3	ஆதிதெய்வீகம்	ஆத்மாவினது தேகம் முதலிய கூட்டங்களுக்கு வேறாய், கண் இந்திரியத்திற்கு விஷயமாகாது இருப்பது (கண்ணுக்குப் புலப்படாத யட்ச, ராட்சச, பேய் மற்றும் குளிர்-வெயில் போன்றவைகளால் வரும் துக்கமும் ஆம்)

64.ஈசுவர ஜீவ காரண காரிய உபாதி:

ஈசனுக்கு உபாதியாய் உள்ள மாயை காரண உபாதி. இது சமட்டி வடிவம்.

ஜீவனுக்கு உபாதியாய் உள்ள அந்தக்கரணம் அதன் சம்ஸ்காரம் என்னும் இவற்றோடு கூடிய அவித்தை காரிய உபாதி. இது வியட்டி வடிவம்.

ஈசுவர காரண உபாதி: சர்வஞ்ஞத்துவம், சர்வ காரணத்துவம், சர்வ இந்திரியாமித்துவம், சர்வேசுரத்துவம், சர்வ சிருட்டித்துவம், சர்வ ஸ்தித்துவம், சர்வ சங்காரத்துவம் என்னும் ஏழும் ஈசுவரனுக்குக் காரண உபாதி.

ஜீவனுக்குக் காரிய உபாதி: 1.ஞானேந்திரியம், கர்மேந்திரியம், தூலதேகம் 2.மேற்படி இந்திரியங்களின் விஷயங்கள் 3.மனம் 4.புத்தி 5.சித்தம் 6.அகங்காரம் 7.பிராணாதி வாயுக்கள் ஐந்து என்னும் இந்த ஏழும் ஜீவனுக்குக் காரிய உபாதியாம்.

65.அட்டப் பிரகாசங்கள்: (8)

1.சூரியன் 2.சந்திரன் 3.நட்சத்திரம் 4.அக்கினி 5.மின்னல் 6.சீவன் 7.புத்தி 8. இந்திரியங்கள் என்பன. இவைகளில் முதல் ஐந்தும் பாகியப் (வெளிப்) பிரகாசங்கள். கடைசி மூன்றும் ஆந்தரப் (உள்)பிரகாசங்கள் ஆகும்.

66.ஒடுக்கம்:

தூல தேகம் தூல பூதத்தில் ஒடுங்கும். தூல பூதம் ஐந்தும் சூக்கும பூதங்களில் ஒடுங்கும். சூக்கும பூதங்களில் அந்தந்த பூதங்களின் அம்சமாகத் தோன்றியவை அந்தந்த சூக்கும பூதங்களில் ஒடுங்கும். *(மண்ணின் அம்சமாகத் தோன்றிய அகங்காரம், உதானவாயு, மூக்கு, குய்யம் நான்கும் மண்ணிலும், நீரின் அம்சமாகத் தோன்றிய சித்தம்,*

சமானன், நாக்கு, குதம் நீரிலும், அக்கினியின் அம்சமாகத் தோன்றிய புத்தி, அபானன், கண், கால் நெருப்பிலும், காற்றின் அம்சமாகத் தோன்றிய மனம், பிராணன், தோல், கை காற்றிலும், ஆகாயத்தின் அம்சமாகத் தோன்றிய உள்ளம், வியானன், காது, நாக்கு இவைகள் ஆகாயத்திலும் ஒடுங்கும்). சூக்கும பூதங்களில் மண் நீரில் கரைந்தொடுங்கும். நீர் அக்கினியில் வற்றி ஒடுங்கும். அக்கினி வாயுவில் அணைந்து ஒடுங்கும். வாயுவும் ஆகாயத்தில் ஒடுங்கும். ஆகாயமும் விட்சேபத்தில் ஒடுங்கும். ஆவரணமும் விட்சேபமும் மூலப் பிரகிருதியின் தமோகுண மாத்திரமாய், ஆலமரம் ஆல விதையில் ஒடுங்கினால் போல, பின்னுமொரு சிருஷ்டிக்கு வித்தாக அவித்தையிலும் மாயையிலும் ஒடுங்கும்.

இந்த மாயையும் அவித்தையும் அதி நுண்மையான மூலப்பிரகிருதி என்னும் தத்துவமாக ஒடுங்கும். அவ்விந்து தத்துவமும் பாம்பு பழுதை மாத்திரமாக ஒடுங்கியது போல தனக்கு அதிட்டானமான பிரம்ம சைதன்னிய மாத்திரமாய் ஒடுங்கும்.

67.பிரளய வகை: (4)

நித்தியப் பிரளயம்: தீபச் சிகையினைப் போல கணந்தோறும் சகல பதார்த்தங்களுக்கும் உற்பத்திக்குப்பின் எந்த நாசம் உண்டாகின்றதோ, அது நித்தியப் பிரளயம். அல்லது சுழுத்தியில் சகல பதார்த்தங்களுக்கும் அவித்தையில் இலயம் உண்டாகின்றது அது நித்தியப் பிரளயமாம்.

நைமித்திகப் பிரளயம்: ஆயிரம் மகாயுகம் (சதுர்யுக) அளவுள்ள பிரம்மதேவனது பகல் குறையும்கால் வாய்க்கின்ற ஆயிரயுகங்களின் இரவு வடிவ நிமித்தத்தால் சகலப் பிராணிகளின் சரீரத்தோடு மூன்று லோகங்களின் நாசம் உண்டாகின்றது. அது நைமித்திகப் பிரளயம் ஆகும். இதனை அவாந்தரப் பிரளயம் எனவும் சொல்வர். *(அதாவது ஒவ்வொரு யுகத்தின் ஆண்டுகள் கலியுகம் 432000+துவாபரயுகம் 864000+திரேதாயுகம் 1296000+கிருதயுகம்1728000= ஆக மொத்தம் 4320000*

ஆண்டுகள் ஒரு மகாயுகம் எனப்படும். ஆயிரம் மகா யுகங்கள் 4320000x1000=432 கோடி ஆண்டுகள். பிரம்மதேவனுக்கு ஒருபகல் 432 கோடி ஆண்டுகள்+ஒரு இரவு 432 கோடி ஆண்டுகள்= ஒருநாள் 864 கோடி ஆண்டுகள். இந்த பிரளய காலத்தில் ஏழுலோகங்களில் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் மூன்று மட்டும் அழியும்)

பிராகிருதப் பிரளயம்: பிரம்ம தேவனது ஆயிர வருஷங்களால் பஞ்சமகா பூதங்கள், அகங்காரம், மகத் தத்துவம் என்பவற்றிற்குத் தமது உபாதானமாகிய பிரகிருதியில் இலயம் உண்டாகின்றது. அது பிராகிருதிகப் பிரளயம் எனப்படும். இதனை மகா பிரளயம் எனவும் சொல்வர். *(அதாவது பிரம்ம தேவனது ஆயுட்காலம் 100 ஆண்டுகள். ஒருநாள் என்பது 864 கோடி ஆண்டுகள். இதன்படி கணக்கிட, 864 x365 x100= 31536000 கோடி ஆண்டுகள். இதன் முடிவில் ஏழுலோகங்களில் அவாந்தரப் பிரளயத்தில் அழியும் மூன்று லோகங்களுடன் மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்யலோகம் இவைகளும் அழியும்)*

ஆத்தியந்திகப் பிரளயம்: தத்துவ ஞானத்தினால் காரண சகித சகலப் பிரபஞ்சத்திற்கும் எந்தப் பாதம் உண்டாகின்றதோ, அது ஆத்தியந்திகப் பிரளயம் ஆகும். அதனையே ஆத்தியந்தக நிவிருத்தி என்றும் கூறுவர்.

முதல் மூன்று பிரளயங்களில் உபாதானத்தோடு காரியத்தின் அபாவம் உண்டாகிறதில்லை. ஆனால் உபாதானத்தில் காரியம் சம்ஸ்கார வடிவமாக நிலைக்கின்றது. மறுபடியும் காலாந்தரத்தில் அதன் உற்பத்தி உண்டாகின்றது. ஆதலால் அஞ்ஞான திருஷ்டியினால் வெளிப்படாத தசையிலாவது வெளிப்பட்ட தசையிலாவது ஜகத்தின் இருப்பு இருக்கின்றது.

நான்காவது பிரளயத்தில் உபாதானத்தோடு காரியத்தின் நாசம் உண்டாகின்றது. மறுபடியும் அதன் உற்பத்தி உண்டாகிறதில்லை. ஆதலால் ஞான திருஷ்டியினால் வெளிப்படாத தசையிலாவது

வெளிப்பட்ட தசையிலாவது ஜகத்தின் இருப்பு இல்லை. ஆனால் காரணத்தோடு ஜகத்தின் மூன்று காலத்திலும் அத்தியந்த அபாவம் இருக்கின்றது.

68. சேதனம் நால்வகை:

தேகத்தின் மத்தியில் உள்ள அந்தக்கரணத்தால் வளைபட்ட சேதனம் பிரமாதா சேதனம் ஆகும்.

அந்த அந்தக்கரணமே கண் முதலிய இந்திரிய வாயிலாக வெளிப்பட்டு எது வரையிலும் கடாதி விஷயங்கள் இருக்கின்றனவோ அது வரையிலும் நீண்ட பரிணாமத்தை அடைகின்றது. பின்னர் விஷயங்களாகிய கடாதிகளோடு கூடி கடாதிகளின் ஆகாரம் எப்படியோ அப்படியே அந்தக்கரணத்தின் ஆகாரம் உண்டாகின்றது. தடாகத்தில் உள்ள நீர் மடை வழியாய் வெளிப்பட்டு நீண்ட வாய்க்காலின் ஆகாரம் அடைந்து வயலில் செல்கின்றது. வயலில் பாய்ந்து வயலாகாரத்தை அடைகின்றது. அதுபோல, அந்தக்கரணமும் இந்திரியமாகிய துவாரத்தின் வாயிலாக வெளிப்பட்டுச் சென்று விஷய ரூபமான வயலை அடைகின்றது. அவ்விடத்தில் தேகம் முதல் கடாதி விஷயம் வரையில் உள்ள அந்தக்கரணத்தின் வாய்க்கால் போன்ற நீண்ட பரிணாமம் எதுவோ அது விருத்தி ஞானம் எனப்படும். அவ்விருத்தியால் வளைபட்ட சேதனம் பிரமாணசேதனம் எனப்படும்.

விருத்திஞான வடிவ அந்தக்கரணத்தின் பரிணாமம் பிரமாணம் எனப்படும். வயலில் பாய்ந்த நீர் வயல் ஆகாரமாவது போலக் கடாதி விஷயங்களில் சென்ற விருத்தி கடாதிகளின் சமானாகாரத்தை அடைகின்றது. இச்சமானாகாரத்தால் வளைபட்ட சேதனம் பிரமா சேதனம் எனப்படும்.

ஞானத்திற்கு விஷயமான கடாதிகளால் வளைபட்ட சேதனம் விஷய சேதனம் அல்லது பிரமேய சேதனம் எனப்படும்.

ஏரியில் நிரப்பிய ஜலம் கலிங்கின் வாயிலாக வெளிப்பட்டு வாய்க்கால் வடிவமாய் வயலில் சென்று அதன் சமான

வடிவுடையதாகின்றது. அதுபோல, தேகத்தின் உள்ளிருக்கும் அந்தக்கரணம் இந்திரியமாகிய கலிங்கின் வாயிலாக வெளிப்பட்டு வாய்க்காலின் சமானவடிவமாய் வயல் ஸ்தானத்துக் குட முதலிய விஷயங்களின் சமான வடிவமாகின்றது. அதில்---

அவச்சேத வாதத்தின்படி---

1. அந்தக்கரண விசிஷ்ட சேதனம் பிரமாதா சேதனமாம்

2. இந்திரிய முதல் விஷய பரியந்தம் உள்ள விருத்தி விசிஷ்ட சேதனம் பிரமாண சேதனமாம்.

3. கட முதலியவற்றால் அவச்சின்ன சேதனமும் அறியப்படாததாய் இருக்கும்கால் விஷய சேதனம் என்றும், பிரமேய சேதனம் என்றும் சொல்லப்படும்

4. அதுவே அறியப்பட்டதாகும்கால் பலசேதனம் எனப்படும். அதனையே பிரமிதி சேதனம் என்றும் பிரமா சேதனம் என்றும் கூறுவர்.

இவ்வாறு நால்வகைச் சேதனம் உண்டு.

ஆபாச வாதத்தின்படி---

1. சிதாபாசனோடு கூடிய அந்தக்கரண விசிஷ்ட சேதனம் பிரமாதா சேதனம்

2. ஆபாசனோடு கூடிய விருத்தி விசிஷ்ட சேதனம் பிரமாண சேதனம்

3. கட முதலியவற்றால் அவச்சின்ன சேதனம் விஷய சேதனம். அதனையே பிரமேய சேதனம் என்றும் கூறுவர்.

4. விருத்தியின் சம்பந்தத்தால் கட முதலியவற்றில் உண்டாகும் சேதனத்தின் பிரதி பிம்பம் அதாவது ஆபாசம் பல சேதனமாம். கடமுதலியவற்றால் அவச்சின்ன பிரம்ம சேதனம் பலம் அன்று. இவ்வளவு பேதம் உண்டு.

(68.1) சேதனமும் ஆகாசமும்: (4)
கடகாசம்: ஒரு கடம் அதனுள் தண்ணீர் முழுவதுமாக நிரம்புவதற்கு எவ்வளவு இடம் தருமோ அந்த அளவு ஆகாசத்தினைக் கடாகாசம் என்பர்.

ஜலகாசம்: நீர் நிறைந்துள்ள கடத்தில் நட்சத்திர மேகங்களோடு கூடிய ஆகாசத்தின் பிரதிபிம்பம் உண்டாகின்றது. அந்த ஆகாசப் பிரதிபிம்பமும், கடாகாசமும் ஆகிய இரண்டையும் சேர்த்து ஜலாகாசம் என்பர்.

மேகாகாசம்: மேகத்திற்கு எந்த ஆகாசம் அவகாசம் (இடம்) கொடுக்கின்றதோ, மேக ஜலத்தில் எந்த ஆகாசப் பிரதிபிம்பம் உண்டாகின்றதோ அவ்விரண்டினையும் மேகாகாசம் என்பர்.

மகாகாசம்: உள்ளும் புறமும் எல்லாவற்றிலும் ஏகாகாரமாய் வியாபகமாகிய ஆகாச சொருபத்தினை மகாகாசம் என்பர்.

69. காரிய உதயம் : (4)

விருத்தி	:	உபாதான காரணத்திலிருந்தும் காரியம் சூக்குமத் திரிபால் உண்டாவது. (உ-ம்) ஆடை வீடு உருவமாக அமைதல். வீடு மீண்டும் தன் உபாதான காரணமான ஆடையின் வடிவமாவது. விருத்தி –சூக்கும பரிணாமம்(திரிவு)
பரிணாமம்	:	ஒரு வஸ்து தன் சொருபத்தை விட்டு வேறு சொருபத்தை அடைவது. (உ-ம்) பால் தயிராதல். தயிர் மீண்டும் பாலாக மாறுவதில்லை. இது தூல பரிணாமம்.
ஆரம்பம்	:	பல அவயவங்களாகிய பல காரணங்களிலிருந்தும் பல அவயவங்களோடு கூடிய ஒரு காரியம் உண்டாவது. (உ-ம்) பல அவயவங்களாகிய பல நூல்களிலிருந்தும்

		பல அவயவங்களோடு கூடிய ஒரு ஆடை உண்டாவது.
விவர்த்தம்	:	ஒரு வஸ்து தன் சொரூபத்தை விடாது வேறு சொரூபத்தை தன்னிடத்துக் காட்டுவது. (உ-ம்) கயிற்றில் பாம்பின் தோற்றம்.
		பிரம்மத்திலிருந்து உலகம் உண்டாவதற்கு உதாரணமாக கயிற்றில் பாம்பு, கானல் நீர் முதலியனவற்றைக் கொள்ளல் வேண்டும்.

(69.1) காரியத்தின் நாசப்பிரிவுகள்: 1.*பா*தம் 2. இலயம்.

பாதம்	:	அதிஷ்டானத்தின் வாஸ்தவ சொருபத்தின் சாட்சாத்காரத்தால் காரியம் தனது உபாதான காரணமாகிய அஞ்ஞானத்துடன் நாசமாதல் பாதம். (கிளிஞ்சலின் ஞானத்தால் வெள்ளியாகிய காரியம் நாசமாதல்)
இலயம்	:	உபாதான காரணம் இருந்தாலும் காரியம் மறைவுபடுவது மாத்திரம் இலயம். (சொப்பன ரதம் முதலிய பதார்த்தங்கள்)

<u>*70. விஷயம் மூவகை : (3)*</u>

பிரீதிக்கு விஷயம்	:	பெண், பொன், மண் முதலியன
துவேஷத்திற்கு விஷயம்	:	புலி, சிங்கம், பாம்பு முதலியன
உபேட்சைக்கு விஷயம்	:	தெருவில் கிடக்கும் துரும்பு, சிறு கந்தை முதலியன

(70.1) **இச்சைக்கு விஷயமாவது:** எந்த வஸ்து இச்சைக்கு விஷயமாகின்றதோ அந்த வஸ்து அநுகூலம் எனப்படுகின்றது. சுகம், துக்காபாவம், அவ்விரண்டின் சாதனம் என்பவற்றின் இச்சை

உண்டாகின்றது. பிறவற்றின் இச்சை உண்டாகிறதில்லை. ஆதலால் சுகம், துக்காபாவம், இவ்விரண்டன் சாதனம் என்னும் நான்கும் அநுகூலம் ஆகும். ஆனால் அவற்றில் இவ்வளவு பேதமுண்டு---

1. ஆத்மா எதனால் நித்திய நிரதிசயசுகம் துக்காபாவம் என்னும் வடிவமாய் இருக் கின்றதோ, அதனால் அதிசயத்திலும் அதிசயமான அநுகூலமாம். இதனாலேயே பரமப் பிரேமைக்கு விஷயமாதலால் பிரியதமமாம்.

2. இவ்வுலக பரலோக விஷயங்களிலிருந்து உண்டாகிய சுகம் எதனால் அநித்தியம் சாதிசய முதலிய அனந்தத் துக்கங்களால் விழுங்கப்பட்டிருக்கின்றதோ, அதனால் அதிசய அநுகூலமாம். இதனாலேயே சாதனத்தின் அபேட்சையால் அதிகப் பிரியத்திற்கு விஷயமாய் இருத்தலால் பிரியதரமாம்.

3. சுகம், துக்காபாவம் என்பவற்றின் சாதனம் எதனால் சொரூபமாகச் சுகம் அல்லது துக்கத்தின் அபாவம் என்னும் வடிவமாய் இல்லையோ, ஆனால் அவற்றின் உற்பத்தியில் அல்லது ஆவிர்பாவத்தில் உபயோகியாய் இருக்கின்றதோ அதனால் அநுகூலமாம். இதனாலேயே பிரீதி மாத்திரத்திற்கு விஷயமாய் இருத்தலால் பிரியமாம்

4. இந்நான்கினும் வேறான வஸ்து இச்சைக்கு விஷயம் அன்று. ஆதலால் அநுகூலம் அன்று. ஆனால் அநுகூல பிரதிகூலங்களுக்கு வேறானதாம். இதனாலேயே பிரீதிக்கு விஷயமாகையால் பிரியம் அன்று. ஆனால் உபேட்சைக்கும் துவேஷத்திற்கும் விஷயமாதலால் உபேட்சியமும் துவேஷியமும் ஆகும்.

(70.2) பிரியம்-மோதம்-பிரமோதம்:

அந்தக்கரணத்தின் சாத்துவிக விருத்தி இருவகைத்து. 1. நிச்சய விருத்தி 2. சுகாகார விருத்தி (சுக+ஆகார). நிச்சய விருத்தி உடைய அந்தக்கரணம் புத்தி எனப்படும். புத்தி விஞ்ஞானமய கோசமாவதால் அந்தப் புத்தியை உபாதியாக உடைய ஜீவாத்மா, கர்த்தா, ஞாதா, பிரமாதா எனப்படுகின்றான்.

இரண்டாவதான சுகாகார விருத்தி உடைய அந்தக்கரணம் ஆத்மாவின் போக்தாத் தன்மைக்கு உபாதி. அதாவது வாஸ்தவத்தில் ஆத்மா அபோக்தா வாயினும் அச்சுகாகார விருத்தி உடைய அந்தக்கரணத்தோடு விசிஷ்டனாய்ப் போக்தா எனப்படுகின்றான். அச்சுகாகார விருத்தி தைத்திரிய உபநிடதத்தில் பிரியம்-மோதம்-பிரமோதம் என்னும் பெயரால் சொல்லப்படுகின்றன.

இஷ்ட வஸ்துவைப் பார்ப்பதால் உண்டாகும் சுகம் பிரியம் எனப்படும். இஷ்ட வஸ்துவை அடைவதால் உண்டாகும் சுகம் மோதம் எனப்படும். இஷ்ட வஸ்துவை அனுபவிப்பதால் உண்டாகும் சுகம் பிரமோதம் எனப்படும்.

71. கிரந்தி (முடிச்சு அல்லது கட்டு): (3)

இருதயக் கிரந்தி	:	அகங்காரத்தை ஆத்மாவாக அத்தியாசத்தால் நிச்சயித் திருத்தல். இது அகங்காரக் கிரந்தி எனவும் சொல்லப்படும்.
சம்சயக் கிரந்தி	:	ஆத்மா ஏகமா? அநேகமா? சித்தா? ஜடமா? என்பது போன்றவற்றில் சந்தேகம் கொண்டிருத்தல்
கர்மக் கிரந்தி	:	ஆத்மா சஞ்சிதம்-பிராரப்தம்-ஆகாமியம் என்னும் கருமங்களை உடையதாய் இருக்கின்றது என்பது

(71.1) அகங்காரம்: தேகாதிகளில் யான் எனது என்னும் அபிமான ஆகாரமாக எழுகின்ற அந்தக்கரண விருத்தியே அகங்காரமாகும். இந்த அகங்காரம் தன் சொரூபத்தைப் பற்றி எழுவது சுத்த அகங்காரம் எனவும், தேகம் முதலிய அனாத்மாக்களைப் பற்றி எழுவது அசுத்த அகங்காரம் எனவும் இரண்டு விதமாம். இவை அன்றி, சாமானியம், விசேஷம், முக்கியம், அமுக்கியம் என அகங்காரத்தை நான்கு விதமாகவும் கூறுவர்.

சாமானிய அகங்காரம்: தேகாதிகளின் உத்தேசம் இல்லாமல், தனிமையாக நான் என்று எழுகின்ற அகங்காரம்.

விசேஷ அகங்காரம்: தேகாதிகளின் சாதி பெயர் முதலிய தருமங்களின் உத்தேசத்தால் நான் என்று எழுகின்ற அகங்காரம்.

முக்கிய அகங்காரம்: தேகாதிகளோடு சங்கமாய் உள்ள சிதாபாசனையும், அசங்கமாய் உள்ள கூடத்தனையும், ஒன்றுபடுத்திக்கொண்டு, அஞ்ஞானத்தால் முன்சொல்லிய அனைத்தினும், "நான் போனேன், வந்தேன், கண்டேன், கேட்டேன்" என்னும் சத்தத்தோடு நான் என்று எழுகின்ற அகங்காரம். சத்தி விருத்தியால் அறியத்தக்க அகம் சத்தத்தின் அர்த்தத்தை விஷயம் செய்யும் அகங்காரம் ஆகும்.

அமுக்கிய அகங்காரம்: ஞானியிடத்து விவகார தசையில், தேகாதிகளோடு கூடிய சிதாபாசன் மாத்திரத்தில், "நான் போனேன், வந்தேன்" என்னும் சத்தத்தோடும், பார மார்த்திக தசையில், கூடத்தன் மாத்திரத்தில், "நான் அசங்கன் சின்மாத்திரன்" என்னும் சத்தத்தோடும் நான் என்று எழுகின்ற அகங்காரம். இவ்விரண்டும் இலட்சணா விருத்தியால் அறியத்தக்க அகம் சத்தத்தின் அர்த்தத்தை விஷயம் செய்யும் அகங்காரம்.

72. ஜன்மத்திற்குக் காரணமான கர்மத்தின் ஆரம்பகம்:

1. சுக துக்கத்திற்குக் காரணம் தேகம்
2. தேகத்திற்குக் காரணம் தர்ம அதர்ம வடிவ அதிருஷ்டம்
3. அதிருஷ்டத்தின் காரணம் சுப அசுபக்கிரியை (நல்வினை தீவினை)வடிவ கர்மம்
4. கர்மத்தின் காரணம் இராகத்துவேஷம்
5. இராகத் துவேஷத்தின் காரணம் அநுகூலத் தன்மை உணர்ச்சியும் பிரதிகூலத்
   தன்மை உணர்ச்சியும் ஆகும்.
6. அந்த ஞானங்களின் காரணம் பேத ஞானம்
7. பேத ஞானத்தின் காரணம் பிரத்தியகபின்ன பிரம்மத்தின் அஞ்ஞானம்

பிரத்தியகபின்ன பிரம்மத்தின் ஞானத்தினால் பேத ஞானமும், அநுகூலத் தன்மை பிரதிகூலத் தன்மைகளின் ஞானம் நீங்குதல் வாயிலாக இராகத்துவேஷமும் நீங்கவே உதாசீனக் கிரியை இருந்தும் வரும் ஜன்மத்திற்குக் காரணமான இராகத்துவேஷ பூர்வகமான கர்மம் சம்பவியாமையால் ஞானிக்கு வரும் ஜன்மம் உண்டாகாது.

73. புரியஷ்டகம்

சூக்கும தேககமே 1.அவித்தை 2.காமம் 3.கர்மம் என்னும் இந்த மூன்றுடன் கூடியதாய்ப் புரியஷ்டகம் என்று சொல்லப்படுகின்றது. அஷ்டபுரிகளின் கூட்டத்திற்குப் புரியஷ்டகம் என்று பெயர். அந்த அஷ்டபுரிகள்: 1.ஞானேந்திரியங்கள் 2.கர்மேந்திரியங்கள் 3.அந்தக்கரணங்கள் 4.பிராணாதி வாயுக்கள் 5.சூக்கும பூதங்கள் 6.அவித்தை 7.காமம் 8. கர்மம்.

<u>அவித்தை:</u> அவித்தை என்னும் சப்தத்தால் காரிய அவித்தையைக் கொள்ளவேண்டும். அக்காரிய அவித்தையும் நான்கு விதமாம். 1.நித்தியம் அல்லாததில் நித்திய புத்தி 2.சுசியல்லாததில் சுசி புத்தி 3,சுகம் அல்லாததில் சுகபுத்தி 4. ஆத்மா அல்லாததில் ஆத்ம புத்தி.

1.கரும உபாசனைகளுக்குப் பயனாவதால் நித்தியம் அல்லாதனவான சுவர்க்கம் பிரம்ம தேவனது லோகம் முதலியவைகளிடத்துள்ள நித்திய புத்தி முதலாவது அவித்தை
2.மல முத்திராதிகளோடு நிறைந்திருப்பதால் சுசி அல்லாதனவான தன் தேகத்திலும் ஸ்திரீ புத்திரர்களது தேகங்களிலும் சுசி புத்தி இரண்டாவது அவித்தை.
3.பீடையாகிய துக்கத்தில் சுகபுத்தியும், அச்சுகத்திற்குச் சாதனங்களான பிரம்மஹத்தி சுராபானம் முதலியவைகளில் உள்ள சுகசாதன புத்தி மூன்றாவது அவித்தை
4.ஆத்மா அல்லாதவனவாகிய தேகேந்திரியாதிகளில் நான் என்னும் ஆத்மபுத்தி நான்காவது அவித்தை.

இவ்வஸ்து நமக்குக் கிடைக்கவேண்டும் என்னும் அந்தக்கரண விருத்தி விசேஷம் <u>ராகம்</u> எனப்படும். அந்த ராகமே <u>காமம்</u> எனப்படும்.

கர்மமோ சஞ்சிதம்-ஆகாமியம்-பிராரப்தம் என மூவகைப்படும். இக்கர்மங்களும் 1.விகிதம் 2.நிஷித்தம் என்னும் பேதத்தால் மீண்டும் இருவகையாம்

சாத்திரங்கள் எக்கருமத்தைச் செய்ய விதித்திருக்கின்றனவோ அக்கர்மம் விகிதம் எனப்படும். சந்தியாவந்தனம், அக்கினிஹோத்திரம் முதலான கர்மங்களைப் போல. சுருதிஸ்மிருதியாகிய சாத்திரங்கள் எக்கர்மத்தை விலக்கியிருக்கின்றனவோ அக்கர்மம் நிஷித்தம் எனப்படும். அக்கர்மங்கள் பிரம்மஹத்தி, சுராபானம் முதலான கர்மங்களைப் போலவும்.

74. கர்மம் மூவகை

1.புண்ணியம் 2. பாவம் 3.மிசிரம் (இரண்டும் கலந்தது)

இவை ஒவ்வொன்றிலும் உக்ருஷ்டம், மத்திமம், சாமானியம் என மூன்றுபிரிவுஉண்டு

இவைகள் ஒவ்வொன்றுக்கும் சித்திக்கும் தேகங்கள்:

புண்ணிய உக்ருஷ்டம்	:	இரணிய கருப்பாதி தேகம்
புண்ணிய மத்திமம்	:	தேவேந்திரன் முதலிய தேகம்
புண்ணிய சாமானியம்	:	யட்ச ராட்சச கின்னர கிம்புருட தேகங்கள்
பாப உக்ருஷ்டம்	:	துக்கத்தை உண்டாக்கும் தேள்,பாம்பு,கொசு,புலி,கரடி முதலியன
பாப மத்திமம்	:	புளியமரம், மாமரம், எருமை, பருந்து போன்றவை
பாப சாமானியம்	:	பசு, யானை, குதிரை, அரசு, துளசி போன்றவை
மிசிர உக்ருஷ்டம்	:	சீவன் முத்தி சுகத்தைப் பெறத்தகுதியான தேகம்
மிசிர மத்திமம்	:	சுயஆசிரமத்திற்கு உசிதமான காமிய கர்மத்திற்குத் தகுதியான தேகம்
மிசிர சாமானியம்	:	சண்டாள பாண்ட குஷ்ட பெருவியாதி முதலிய தேகம்

(74.1) வினை நால்வகை: 1.தனக்குப் பயன்தரும் வினை 2.பிறருக்குப் பயன்தரும் வினை 3.தனக்கும் பிறருக்கும் பயன்தரும் வினை 4.தனக்கும் பிறர்க்கும் பயன்தராதவினை

இந்நான்கில் ஞானிகளது உலக உபகாரமாகிய வினை ஈசுவரனது பஞ்ச கிருத்தியமாகிய வினை போலப் பிறர்க்குப் பயன்தரும் வினையாம். *(உலகியலில் கர்மத்தை ஐந்து பிரிவாக வகுத்துள்ளனர். 1.நித்தியம்: எப்போதும் செய்ய வேண்டிய கர்மம்-ஸ்நானம், சந்தி முதலியன 2. நைமித்திகம்: ஏதேனும் ஓர் நிமித்தத்தை முன்னிட்டு செய்ய வேண்டிய கர்மம் கிரகண சிரார்த்தம் முதலியன 3.காமியம்: காமத்தின் பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம் யாகம் முதலியவைகள் 4.பிராயச்சித்தம்: பாவ நிவிருத்தியின் பொருட்டு விதிக்கப்பட்ட கர்மம் 5.நிஷித்தம்: செய்யாமல் இருக்கும்பொருட்டு சொல்லப்பட்ட கர்மம் - பிரஹ்மஹத்தி)*

(74.2) கர்மத்தின் ஆசிரயம்:

சஞ்சித கர்மம்: சஞ்சித கர்மங்களுக்கு அந்தக்கரண உபகித சாட்சியை ஆசிரயித்து இருக்கின்ற அஞ்ஞானத்தின் சத்தியாகிய ஆவரண சத்தி ஆசிரயமாகும்.

பிராரப்த கர்மம்: பிராரப்த கர்மங்களுக்கு அஞ்ஞானத்தின் சத்தியாகிய விட்சேப சத்தி ஆசிரயமாகும்.

(74.3) கர்மங்களின் பலன்: கர்மங்கள் எங்ஙனம் இருந்து பலன்களைக் கொடுக்கின்றன என்றால், கர்த்திரு கரண சம்பந்தமாகச் தேகம் வரை பலன்களை விரும்பிச் செய்யும் காரணத்தால் ஆகாமியம் எனப்பெயர் பெற்று, அளவில்லாமல் சேர்ந்து, பரிபக்குவ காலம் வரை கட்டுபட்டிருத்தல் காரணமாக, சஞ்சிதம் எனப் பெயர் பெற்றிருந்து, பின் பரிபக்குவமாய்ப் பிரிவுற்று, பிராப்பியங்களை அனுபவித்தற்குக் காரணமாக இருத்தல் பற்றி, பிராரப்தங்கள் எனப் பெயர் பெற்று பலன்களைக் கொடுக்கின்றன. இவைகளில் ஆகாமியம் வர்த்தமான (நிகழ்கால) தேகத்தில் செய்யப்படுவன ஆகும். சஞ்சிதம் முந்தைய தேகத்தில் செய்யப்பட்டுப் பலன் கொடுத்தற்குப் பரிபக்குவப்படாமல் கட்டுப்பட்டிருப்பன ஆகும். பிராரப்தம் பரிபக்குவப்பட்டு வர்த்தமான (நிகழ்கால) தேகத்தில், சுக துக்க பலன்களைக் கொடுப்பனவாம்.

75. இராகத் துவேஷம்: (16)

இராகம்	:	பெண் முதலிய விஷயமான சித்த விருத்தி
துவேஷம்	:	பழிவாங்க வேண்டும் என்ற சித்த விருத்தி
காமம்	:	மேன்மேலும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற சித்தவிருத்தி
குரோதம்	:	தன்செயலுக்குத் தடை வரும்போது அதன்மீது உண்டாகின்ற சித்தவிருத்தி
லோபம்	:	சம்பாதித்ததைச் செலவு செய்யாமல் வைத்திருக்கும் சித்தவிருத்தி
மோகம்	:	சம்பாதித்த பொருள்களின் மீது மிகுபிரியம் உள்ள சித்தவிருத்தி
மதம்	:	கர்வம் அடைந்து செயல்படும் சித்த விருத்தி
மச்சரம்	:	தன்னைவிட அதிகசெல்வம் உடையவனைக் கண்டு பொறுக்காமல் வரும் சித்த விருத்தி
இரீட்சை	:	பிறருக்கு துக்கம் வரவேண்டும் தனக்கு வரக்கூடாது என்று எண்ணும் சித்த விருத்தி
அசூயை	:	தன்னைப் போல பிறரும் சுகம் பெறுவாரோ என்று கருதும் சித்தவிருத்தி
டம்பம்	:	தன் செய்கையை பிறர் மெச்ச வேண்டும் என்ற சித்த விருத்தி
தர்ப்பம்	:	தானே உயர்ந்தவன் தனக்கு மற்றவர் நிகர் ஆவார்களா என்று கருதும் சித்த விருத்தி
அகங்காரம்	:	நான் நினைத்ததை முடிப்பவன் எனக்கு நிகர் யார் என்று வரும் சித்தவிருத்தி
இச்சை	:	சொல்வதற்கு இயலாத காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற சித்தவிருத்தி
பத்தி	:	குரு தேவதைகளிடத்தில் வருகிற பிரீதி
சிரத்தை	:	குரு வேதாந்த வாக்கியம் அதன் தொடர்பான செய்கைளிடத்தில் வருகிற விவகார சித்த விருத்தி

76. வியாபகம் இருவகை: (2)

தேசத்தினால் அந்தமில்லாதது வியாபாகம்.

ஆபேட்சிக வியாபகம்: எந்த வஸ்து எப்பதார்த்தத்தை அபேட்சித்து வியாபகமாக இருக்கின்றதோ, எப்பதார்த்தத்தை அபேட்சித்து வியாபகமாக இல்லையோ அது ஆபேட்சிக வியாபகம் உடையதாம். எங்ஙனம்: பிருதிவி முதலியவற்றை அபேட்சித்து மாயை வியாபாகமாய் இருக்கின்றது. சேதனத்தை அபேட்சித்து அவ்வாறில்லை. ஆகையால் மாயை ஆபேட்சிக வியாபகம் உடையதாம்.

நிராபேட்சிக வியாபகம்: எந்த வஸ்து எல்லாவற்றையும் அபேட்சித்து வியாபகமாக இருக்கின்றதோ அது நிராபேட்சிக வியாபகம் உடையதாம். எங்ஙனம்: பிருதிவி முதலிய எல்லாவற்றையும் அபேட்சித்துச் சேதனம் (பிரம்மம்) வியாபகமாய் இருக்கின்றது. ஆகவே அது நிராபேட்சிக வியாபகம் உடையதாம்.

77. பிரபஞ்ச இருவகை : (2)

சாஸ்திரப் பிரபஞ்சம்	:	ஆத்மப் பிரம்ம விசாரமே சாஸ்திரப் பிரபஞ்சம்.
அசாஸ்திரப் பிரபஞ்சம்	:	தீவிரம் - மந்தம் என இருவகையாகும்.
1. தீவிர அசாஸ்திர பிரபஞ்சம்	:	காமக் குரோதாதிகள் (காமம்,வெகுளி, கடும்பற்று உள்ளம், மானம், உவகை என்பன)
2. மந்த அசாஸ்திர பிரபஞ்சம்	:	மனோ கற்பிதமாய் உள்ள ஜாதி (ஆசார) கரும முதலியன

அசாஸ்திரப் பிரபஞ்சம் இரண்டும் ஆத்மாவை உணர்வதற்குத் தடையாக இருப்பதால் அவைகளை ஞான அப்பியாசத்திற்கு முன்னர் விடத்தக்கனவாம். விடப்பட வில்லை எனில், ஆத்ம சாட்சாத்காரம் கெட்டுப்போக, மோட்சம் சித்திக்காது.

சாஸ்திரப் பிரபஞ்சம் தத்துவ ஞானம் உண்டாதற்குச் சிறந்த சாதனமாய் இருப்பதால், ஆத்ம சாட்சாத்காரம் உண்டான பின், பயனற்றதாய் இருத்தலின் முற்றும் விடத்தக்கதாம்.

பிரபஞ்சம் இருவகை என்பதை 1.பாகியப் பிரபஞ்சம் 2.ஆந்தரப் பிரபஞ்சம் என்றும் சொல்வர். பாகியப் (வெளிப்) பிரபஞ்சம் என்பது சீவனுக்கு வெளியில் உள்ள பஞ்ச பூதங்களும், அண்டங்களும் புவனங்களும், நால்வகை யோனியில் பிறந்தவைகளின் கூட்டமும் ஆகும். ஆந்தரப் (உள்) பிரபஞ்சம் என்பது பஞ்சகோசம், மூன்று தேகம் அவற்றின் சம்பந்தமான ஆறு விகாரங்கள், சூக்கும தேக தத்துவம்20, அவற்றின் வியாபாரங்கள், மூன்று அவத்தை, அவற்றின் அபிமானியாகிய சீவன், சமாதி-மூர்ச்சை-மரணம் என்ற அவத்தைகள், காமக் குரோதம் முதலிய ஆறு, முக்குணங்கள், பஞ்ச கிலேசங்கள் போன்றவை அடங்கியவை.

<u>78. அதிட்டானம் - ஆரோபம்:</u>

<u>அதிட்டானம்:</u> எது பிராந்தி காலத்தில் தோற்றுவதில்லையோ மற்றும் எதனது தோற்றத்தால் பிராந்தி நிவர்த்தியாகின்றதோ அது அதிட்டானம் ஆகும். மற்றும் எது நிர்விகார சொருபமாகவும், அவித்தையால் செய்யப்பட்ட கற்பித காரியங்களுக்கு ஆசிரயமாகவும் இருக்கின்றதோ அதுவும் அதிட்டானம் ஆகும்.

<u>ஆரோபம்:</u> பிராந்தி காலத்தில் தோற்றம் உடையதாயும், அதிட்டான ஞானம் உண்டான காலத்தில் தோற்றம் இல்லாதிருப்பதும் ஆரோபம் ஆகும்.

(78.1) ***ஆதாரம்: சமம்-விசேடம்***

இந்த	...	சமஆதாரம்	அஞ்ஞானகாலத்திலும் ஞானகாலத்திலும் விளங்குவது
கயிற்றில்	...	விசேடஆதாரம்	அஞ்ஞான காலத்தில் தோன்றுவதில்லை, ஞான காலத்தில் தோன்றுகிறது.
பாம்பின் தோற்றம்	...	ஆரோபம்	அஞ்ஞான காலத்தில் தோன்றுகிறது, ஞான காலத்தில் தோன்றுவதில்லை

79. அநாதி

உற்பத்தி விகாரமாகிய காரியத்துக்கு உட்படாதவைகள் அனைத்தும் அநாதியாம். இது கற்பித அநாதி, வாஸ்தவ அநாதி என இருவகைப்படும்.

கற்பித அநாதி: உற்பத்தி விகாரமாகிய காரியத்துக்கு உட்படாமல் மற்றைய விகாரங் களாகிய காரியங்களின் உட்படுவதாயும், ஒன்றை ஆதாரமாக உடைய ஆதேயமாகவும், குணசகிதமாயும், சாவயமாயும் உள்ளது கற்பித அநாதியாம்.

வாஸ்தவ அநாதி: உற்பத்தி விகாரம் முதலிய பல விகாரங்களாகிய காரியத்தினுக்கு உட் படாததாயும், நிராதாரமாயும், குணரகிதமாயும், நிரவயமாயும் உள்ளது வாஸ்தவ அநாதி.

அநாதி பதார்த்தம்:(6) 1.சீவன் 2. ஈசன் 3.சுத்த சேதனம் 4.அவித்தை 5.சேதனாவித்தைகளின் சம்பந்தம் 6.அவற்றின் பேதம்

80. அவச்சேதகம்: (4)

வேறு பிரித்தறிவிப்பதான வியாவர்த்தகத்தினை அவச்சேதகம் என்பர். அவை 1.விசேஷணம் 2.உபாதி 3.உபலட்சணம் 4.உபரஞ்சகம் ஆகியவை

(80.1.1) **விசேஷணம்:** தனது ஆசிரயத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, அந்த ஆசிரயத் தினைப் பிற பதார்த்தங்களினின்றும் வேறு பிரித்தறிவிப்பது (உ-ம்) நீலக்குடத்தில் உள்ள நீல நிறம் தனது ஆசிரயமாகிய குடத்தின் சொரூபத்தில் பிரவேசித்து, அக்குடத்தை மற்ற வெண்மை குட முதலியவற்றிலிருந்தும் வேறு பிரித்து அறிவிப்பது போல.

(80.1.2) உபாதி: எந்த வஸ்து தான் எவ்வளவிடத்தில் எந்தக்காலத்தில் இருக்கின்றதோ அவ்வளவிடத்திலுள்ள வஸ்துவை அந்தக்காலத்தில் மற்றவைகளினின்றும் வேறு பிரித்தறிவித்துத் தான் வேறாய் இருக்கின்றதோ அதாவது அவற்றுள் எண்ணப்படுகின்றதில்லையோ, அது உபாதி எனப்படும். (தனது ஆசிரயத்தின் சொரூபத்தில் பிரவேசியாது, அந்த ஆசிரயத்தினைப் பிற பதார்த்தங்களில் இருந்தும் வேறு பிரித்து அறிவிப்பது. (உ-ம்) தனது ஆசிரயமாகிய கடாகாயத்தின் சொரூபத்தில் பிரவேசியாது,

அந்தக் கடகாயத்தினை மற்ற மடாகாய முதலியவற்றிலிருந்தும் வேறு பிரித்து அறிவிப்பதாய் இருப்பது போல). இது மூவகைப்படும்.

அவச்சின்ன உபாதி	:	ஆத்மா சுழுத்தி வடிவாய் உள்ள அஞ்ஞானத்தோடு கூடியிருத்தலே அதற்கு அவச்சின்ன உபாதியாம்
பிரதிபிம்ப உபாதி	:	அந்த அஞ்ஞானத்தின் காரியமாய் உள்ள புத்தியின்கண் சிதாபாச வடிவமாகப் பிரதிபிம்பித்திருத்தலே அவ்வாத்மாவிற்கு பிரதிபிம்ப உபாதியாம்
அத்தியாச உபாதி	:	அந்த புத்தியின்கண் இருக்கின்ற சுக துக்கங்களை ஆத்மா அனுபவிப்பது போன்றிருத்தலே அத்தியாச உபாதியாம்.

(80.1.3) உபலட்சணம்: யாதானும் ஓர் காலத்தில் ஓர் தேசத்தில் இருப்பதாய்த் தனது ஆசிரயத்தைப் பிறவற்றினின்றும் வேறு பிரித்து அறிவிப்பது. (உ-ம்) காகம் யாதேனும் ஓர் காலத்து ஓர் தேசத்து இருப்பதாய்த் தனது ஆசிரயமான தேவதத்தனது வீட்டை மற்றைய வீடுகளினின்றும் வேறு பிரித்து அறிவிப்பதாய் இருப்பது போல.

(80.1.4) உபரஞ்சகம்: இயல்பாய்ப் பெறப்பட்ட தர்மமாய்த் தனது ஆசிரயத்தை வேறு பிரித்து அறிவிப்பது. (உ-ம்) நிரவயத்தன்மை, விபுத்தன்மை, சேதிக்கப்படாமை முதலியன இயல்பாய்ப் பெறப்பட்ட தர்மமாய்த் தம் ஆசிரயமாகிய ஆகாயத்தை வேறு பிரித்தறிவிப்பது போல.

(80.2) அவச்சேத்தியம்: வேறு பிரித்து அறிவித்தலாகிய அவச்சேதம் உடையதனை அவச் சேத்தியம், அவச்சின்னம், வியாவிருத்தம், வியாவர்த்தியம், வியாவர்த்தனீயம் என்பர்.

அவச்சேத்தியம், வியாவர்த்தியம், வியாவர்த்தனீயம்=வேறு பிரித்து அறிவிக்கத் தக்கது

அவச்சின்னம்=வியாவிருத்தம்=வேறு பிரித்து அறிவிக்கப்பட்டது

விசிஷ்டம்: விசேஷணம் உடையது
உபகிதம்: உபாதி உடையது
உபலட்சிதம்: உபலட்சணம் உடையது
உபரஞ்சிதம்: உபரஞ்சகம் உடையது

81. அத்தியாசம்:

(81.1) அத்தியாச இலக்கணம் :

ஒரு பொருளில் மற்றொரு பொருளை அறிதல் அத்தியாசம். கிளிஞ்சலில் வெள்ளியின் தோற்றத்தை அறிதல். அதிஷ்டானத்தின் (கயிற்றின்) விஷம (வேறாய) சத்தின் (பாம்பின்) அவபாசம் (தோற்றம்) அத்தியாசமாம் அல்லது (பாம்பு) தனது அபாவ அதிகரணத்தில் (கயிற்றில்) அவபாசம் அத்தியாசமாம். பிராந்தி (மயக்க) ஞானத்திற்கு விஷயமாகிய மித்தியா வஸ்துவிற்கும் (கயிற்றில் தோன்றிய பாம்பிற்கும்) அதனது பிராந்தி ஞானத்திற்கும் அத்தியாசம் என்றும் சொல்லப்படும்.

(81.2) அத்தியாசத்துக்கு உபாதான-நிமித்த காரணம்:

அதிட்டானத்தின் விசேஷ ரூபத்துள்ள அஞ்ஞானம் உபாதான காரணம் ஆகும். 1.சஜாதீய வஸ்து ஞான ஜன்னிய சம்ஸ்காரம், 2.லோப பயம் முதலிய பிரமாதா (அந்தக்கரணம்) தோடம், 3.பித்த காமாலை முதலிய பிரமாண (கண் இந்திரிய) தோடம், 4.கயிற்றில் பாம்பின் தோற்றம், பூமி வெடிப்பு, நீர் தாரை முதலியனவும், கிளிஞ்சலில் பிரகாச வடிவமுமாகிய சாதிருசிய ரூபப் பிரமேய (பிரமாணத்தால் அறிதற்கு யோக்கிய அதிட்டான) தோடம், 5.இது எனும் சாமானிய ரூப ஞானம் ஆகிய ஐந்தும் நிமித்த காரணம் ஆகும்.

(81.3) அத்தியாசத்துக்கு ஏது, சொரூபம், காரியம், அவதி, பலம்:

ஏது: மேற்சொன்ன அதிட்டானத்தின் உபாதான காரணமும், நிமித்த காரணமும் அத்தியாசத்துக்கு ஏது ஆகும்.

சொரூபம்: அனாத்மாக்களாகிய அஞ்ஞானம், அஞ்ஞான தருமம், அகங்காரம், அகங்கார தருமம், இந்திரியம், இந்திரிய தருமம், தேகம், தேக தருமம் ஆகிய இவை களுக்கும் இவைகளைப் பிரகாசிப்பிக்கும் ஆத்மாவுக்கும் உள்ள தாதாத்மியம்.

<ins>காரியம்:</ins> பிரியம் அப்பிரியம் முதலிய வியவகாரங்கள் காரியம் ஆகும்.

<ins>அவதி:</ins> புத்திரர் முதலியவற்றில் உள்ள ஆத்மப் பிராந்தி அவதி ஆகும்.

<ins>பலம்:</ins> ஜனன மரண சம்சாரங்கள் பலம் ஆகும்.

(81.4) அத்தியாசங்கள்

அர்த்த அத்தியாசம் - ஞான அத்தியாசம்

இந்த அத்தியாசம் அர்த்தாத்தியாசம், ஞானாத்தியாசம் என்று இருவகைப்படும். கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுதல் அர்த்த அத்தியாசம். அதனை அறிதல் ஞான அத்தியாசம். *(தோன்றினாலும் அதனுடன் மனதும் புலனும் ஒன்றவில்லையானால் அதனை அறிய முடியாது. அதனால் அதனை அறிவது தனியாக ஒரு அத்தியாசமாகச் சொல்லப்பட்டது).*

<ins>அத்தியாசம் : (4)</ins>

1. மித்தியாத்தியாசம் 2. இதராத்தியாசம்
2. இதரேதராத்தியாசம் 4. சத்தியாத்தியாசம் என்பன.

மித்தியாத்தியாசம்:

அக்கினியின் சம்பந்தத்தால் நீருக்கு உஷ்ணம் உண்டாதல் போல், சர்வ சாட்சியாய் உள்ள ஆத்மாவின் முன்னிலையில் அதாவது சம்பந்தத்தால் தூல தேகத்திற்கு நடத்தல், காணல், நினைத்தல், அறிதல் என்பவை நடைபெறுகின்றன. காண்பது இந்திரியங்களுக்கும், நினைத்தல் மனதிற்கும், அறிதல் புத்திக்கும் உரியன என்றாலும் தூல தேகத்தை வைத்துக்கொண்டு நடைபெறுவதால் அவையும் தூலதேகத்திற்கு உரியனவாகக் கூறப்பட்டன. ஆத்மா நடக்காது, நினைக்காது, அறியாது, ஆனால் தூல தேகத்தில் நடைபெறுவதை ஆத்மா செய்வதாகக் கருதுவதால் தூலதேகம் மித்திய அத்தியாசம்.

<u>இதராத்தியாசம்:</u>

ஞானேந்திரியம், கர்மேந்திரியம் என்னும் இருவகை இந்திரியங்களும் பிரத்தியக் ஆத்மாவின் கண் இதராத்தியாசமாம்.

இந்திரியங்களில் பிரத்தியக் ஆத்மா சொருபமாக அத்தியாசம் ஆகாது. அதன்கண் இந்திரியங்கள் சொருபமாக அத்தியாசமாய் இருத்தலின், அவை பிரத்தியக் ஆத்மாவின்கண் இதராத்தியாசம். (இதர +அத்தியாசம்)

(இதராத்தியாசம் - அந்நியதராத்தியாசம். இரண்டில் ஒன்றனது அத்தியாசம் அந்நிய தர அத்தியாசம். அந்நியதரம் - இரண்டில் ஒன்றாம்)

இதரேதராத்தியாசம்:

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படும் அந்தக்கரணங்கள் பிரத்தியக் ஆத்மாவினிடத்தில் அத்தியாசம் ஆவது. நான் செய்பவன்(கர்த்தா), அனுபவிப் பவன்(போக்தா) என்று சொல்லும் போது இவைகள் அந்தக்கரணங்கள் செய்வதே. இந்த கர்த்தா தன்மையும் போக்தா தன்மையும் அந்தக்கரணத்தின் விசேஷணம் ஆகும். ஆனால் இவைகள் ஆத்மாவே செய்கின்றது, அனுபவிக்கின்றது என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. அதே சமயம், சாட்சியாய் உள்ள ஆத்மாவின் விசேஷணம் இருத்தல் (சத்து), விளங்குதல்(சித்து) ஆகும். அந்தக்கரணம் இருப்பதால் தான் இந்த சத்தும் சித்தும் தெரியவருகிறது. அதனால் அந்தக்கரணத்தில் சத்தும் சித்தும் தோன்றுகிறது அதாவது அத்தியாசம் ஆகிறது. இதில் ஒன்றற்கு ஒன்று (அந்தக்கரணம் ஆத்மாவிலும், ஆத்மாவின் சத்து, சித்து அந்தக்கரணத்திலும்) அத்தியாசம் ஆகிறது. இதனை அந்நியோந்நிய அத்தியாசம் என்றும் சொல்லப்படும். (இதரேதராத்தியாசம் - இதரேதர + அத்தியாசம் - அந்நியோந்நியாத்தியாசம் (அந்நியோந்நிய அத்தியாசம்) அதாவது ஒன்றற்கொன்று அத்தியாசமாவது)

சத்தியாத்தியாசம் :_ பிரதம அத்தியாசம் என்று கூறப்படும் மூலாங்காரம் பிரத்தியக் ஆத்மாவின்கண் சத்தியாத்திசமாம். (சத்திய + அத்தியாசம்).

சுருதி சம்பந்த ஞானம், யுத்தி சம்பந்த ஞானம், உலக சம்பந்த ஞானம் என்னும் மூன்றனுள் உலக சம்பந்த ஞானத்தால் மூலாங்காரம் (அல்லது மாயை) சத்தியமாக விவரிக்கப்படுதலின் அது சத்தியாத்தியாசம் என்று கூறப்படுகின்றது. கயிற்றின்கண் அரவு போலப் பிரத்தியக் ஆத்மாவின்கண் கற்பிதமாய் உள்ள மூலாங்காரத்தை (அல்லது மாயையை) ஆத்ம அனாத்ம விவேகம் இல்லாதவர் பிரத்தியக் ஆத்மாவைப் போலச் சத்தியப்பொருளாக வியவகரித்தலின், அது சத்தியாசத்தியாசம் எனப்படுகிறது.

<u>அத்தியாசங்கள் : (4) வேறு வகை</u>

5. நிருபாதிகாத்தியாசம் 6. சோபாதிகாத்தியாசம் 7. தத்தருமாத்தியாசம் 8. சம்பந்த மாத்திராத்தியாசம்

நிருபாதிகாத்தியாசம் :_____ (நிருபாதிக + அத்தியாசம்)

அகங்காரத்தையும் பிரத்தியக் ஆத்மாவையும் ஒன்றாகக் கொண்டு நான் என்று கூறுதலால், அகங்காரத்திற்கும் பிரத்தியக் ஆத்மாவிற்கும் உள்ள சம்பந்தம் (கயிற்றில் பாம்பு சம்பந்தம்) போல நிருபாதிகாத்தியாசமாம். (மயக்க காலத்தில் நான் என்னும் சொல்லுக்குப் பொருளாக அகங்காரத்தையும் பிரத்தியக் ஆத்மாவையும் வேறாக அறியாது கயிற்றில் பாம்பு போல ஒன்றாக அறிதல் நிருபாதிகாத்தியாசம்)

சோபாதிகாத்தியாசம் : (சோபாதிக + அத்தியாசம்)

நான் கருத்தா என்று கூறுமிடத்து அகங்காரத்தின் தருமம் பிரத்தியக் ஆத்மாவின்கண் படிக மணியில் செவ்வரத்தம் பூவின் தருமம் (சிகப்பு) தோன்றுதல் போல் தோன்றுதலால், 'நான் கர்த்தா' என்னுமிடத்து அகங்காரத்தின் தருமமாகிய கர்த்திருத்துவம் பிரத்தியக் ஆத்மாவின் கண் கற்பிதமாக விளங்குதல்.

தத்தருமாத்தியாசம் : (தத்தரும + அத்தியாசம்)

'யான் இச்சிக்கின்றேன்' என்று கூறுவதன் கண் பிரவாக ஜலத்தின் கண் படிந்த சந்திரனது பிரதிபிம்பம் போல, அந்தக்கரண தருமமாகிய இச்சை, நான் என்னும் சொல்லிற்கு யதார்த்தப் பொருளாய் உள்ள பிரத்தியக் ஆத்மாவின்கண் தோன்றுதலால், அது (அந்தக்கரண தருமம்) பிரத்தியக் ஆத்மாவின்கண் தோன்றுதல். (தத் - அந்தக்கரணம். தருமம்-அதனது இச்சை. அத்தியாசம்-அத்தருமம் பிரத்தியக் ஆத்மாவின்கண் மித்தையாகத் தோன்றுதல்)

சம்பந்த மாத்திராத்தியாசம்: (சம்பந்த மாத்திர + அத்தியாசம்)

நான் குடும்பி (குடும்பத்தை உடையவன்) என்று கூறுவதன்கண் புத்திரர் முதலா யினரோடு பிரத்தியக் ஆத்மாவிற்கு உள்ள சம்பந்தம் ஓடத்தில் இருப்பவர் வியவகாரம் போலச் சம்பந்த மாத்திராத்தியாசம்.

அத்தியாசங்களை அறிவதன் பலன்:

நடத்தல் முதலிய வியவகாரங்களுள் யாதும் பிரத்தியக் ஆத்மாவிற்கு இல்லை என்பது மித்தியாத்தியாச முதலியவற்றை உணர்வதால் பெறப்படுதலின், அந்த ஆத்மா நிர்விகாரி (விகாரமற்றது) என்பது பெறப்படுவதாம்.

காரண அத்தியாசம் :

பிரபஞ்சத்திற்கு உபாதான (முதல்) காரணமாய மாயை சுத்த சேதனத்தில் தான் அத்தியாசமாய் இருத்தற்குத் தானே காரணமாய் இருப்பதாம். அதனால் அது காரண அத்தியாசம் எனப்படும். இது விளக்கு, தனது பிரகாசத்திற்கும் பிறவற்றினது பிரகாசத்திற்கும் தானே காரணமாய் இருப்பது போல்வதாம்.

காரிய அத்தியாசம் :

அக்காரண அத்தியாச வடிவ மாயையால் பிரபஞ்சம் சுத்த சேதனத்தில் அத்தியஸ்த (கற்பித)மாய் இருத்தல் காரிய அத்தியாசமாம். ஸ்மிருதி ரூபமாக வேறோர் இடத்தில் முன்பார்த்த வஸ்துவின் தோற்றம் அத்தியாசமாம் என்பது காரிய அத்தியாசத்தின் இலக்கணமாம்.

மித்தியா அத்தியாசம் முதல் சம்பந்த மாத்திர அத்தியாசம் வரையில் உள்ள எட்டும் காரிய அத்தியாசமாம்.

ஒன்றன்கண் மற்றொன்றின் தோற்றம் அத்தியாசமாம். அல்லது சத்திய வஸ்துவும் மித்தியா வஸ்துவும் சேர்ந்து தோன்றுவது அத்தியாசம் என்பது காரண காரிய அத்தியாசங்கள் இரண்டுக்கும் பொது இலக்கணமாம்.

அர்த்தாத்தியாசம் : (6)_ (அர்த்த + அத்தியாசம்)

1. கேவல சம்பந்த அத்தியாசம் 2. சம்பந்த சகித சம்பத்தி அத்தியாசம்
3. கேவல தர்ம அத்தியாசம் 4. தர்ம சகித தர்மி அத்தியாசம்
5. அன்னியோன்னிய அத்தியாசம் 6. அன்னியதர அத்தியாசம்

கேவல சம்பந்த அத்தியாசம் :

வெள்ளியில் கிளிஞ்சலின் தாதாத்மிய சம்பந்த அத்தியாசம் உண்டாவது போல, அனான்மாவில் (ஜடத்தில்) ஆன்மாவின் அத்தியாசம் உண்டாகின்றது. அங்கு அனான்மாவில் ஆன்மாவின் சொரூபம் அத்தியஸ்தம் ஆகாது, அதனது தாதான்மிய (ஒற்றுமை வடிவ) சம்பந்தம் அத்தியஸ்தமாம். ஆகவே, அனான்மாவில் ஆன்மாவின் சம்பந்தம் கேவல சம்பந்த அத்தியாசமாம். (அனாத்மாவில் ஆத்மாவின் சம்பந்தம் இருப்பதாகத் தோன்றுதல் மயக்கத்தால் அன்றி உண்மையில் இருப்பது அன்று என்பது இதன் கருத்தாம்). வான வளைவில் வானத்தின் சம்பந்தம் இருக்கின்றது என்பது உதாரணமாகும்.

சம்பந்த சகித சம்பத்தி அத்தியாசம் :

கயிற்றினிடத்து (அதில் தோன்றிய) பாம்பின் சம்பந்தமும் அதன் (பாம்பின்) சொரூபமும் ஆகிய இரண்டும் அத்தியஸ்தமாதல் (கற்பனையாய் இருத்தல்) போல, ஆன்மாவில் அனான்மாவின் சம்பந்தமும் (அதன்) சொரூபமும் ஆகிய இரண்டும் அத்தியாசமாகின்றன. ஆதலால் ஆன்மாவில் அனான்மாவின் சம்பந்த சகித (சம்பந்தத்தோடு கூடிய) சம்பந்தியின் அத்தியாசம் உண்டாகின்றது. சம்பந்தத்தை உடையது சம்பந்தியாம்.

கேவல தர்ம அத்தியாசம் :

நான் வெளுத்தேன், நான் இளைத்தேன் என்னுமிடத்து தூல தேகத்தின் வெண்மை முதலியனவும், நான் பார்த்தேன், நான் கேட்டேன் என்னுமிடத்துச் சூக்கும தேகத்தின் பார்வை முதலியனவும் ஆகிய தர்மங்கள் அத்தியஸ்தம் ஆகின்றன. அத்தேகங்களின் சொரூபம் அத்தியஸ்தம் ஆவதில்லை. ஆதலால் ஆத்மாவில் தூல சூக்கும தேகங்களின் கேவல தர்மத்தின் அத்தியாசம் உண்டாகின்றது. வேறு ஒன்றனை ஆசிரயித்ததாய் (பற்றுக் கோடுடையதாய்) சுதந்தரம் இன்றி இருப்பது தர்மம் எனப்படும். வெண்மை, இளைத்தல், பார்த்தல், கேட்டல் முதலியன தர்மங்களாம்.

தர்ம சகித தர்மி அத்தியாசம் :

நான் கர்த்தா நான் போக்தா என்னுமிடத்துக் கர்த்திருத்துவமும் (கர்த்தாவாம் தன்மையும்), போக்துருத்துவமும் (போகத்தை அனுபவிக்கும் தன்மையும்) ஆத்மாவின் தர்மமாய் இராது அந்தக்கரணத்தின் தர்மமாய் இருக்கின்றன. ஆத்மா நிர்விகாரமாய் இருத்தலால், அதன்கண் யாதொரு விகாரமும் இன்றாம். ஆயினும் அந்தக்கரணத்தின் கர்த்திருத்துவவாதி தர்மங்களும் (அதன்)சொரூபமும் ஆகிய இரண்டும் ஆத்மாவில் (கிளிஞ்சலில் வெள்ளித்தன்மைத் தர்மமும் அதன் சொரூபமும் கற்பனையாய் இருத்தல் போல) அத்தியஸ்தமாய் இருக்கின்றன. ஆதலால் ஆத்மாவில் அந்தக்கரணத்தின் தர்ம சகித தர்மியின் அத்தியாசம் உண்டாகின்றது. தர்மத்தை உடையது தர்மி எனப்படும்.

அன்னியோன்னியாத்தியாசம்: (அன்னியோன்னிய + அத்தியாசம்)

காய்ச்சிய இரும்பில் இரும்பின் தன்மை அக்கினியிலும், அக்கினியின் தன்மை இரும்பிலும் இருத்தல் போல, ஆத்மாவில் அநாத்மாவின் அத்தியாசமும், அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசமும் இருத்தல் இவ்வகை அத்தியாசம்.

ஆத்மாவிற்கு உரிய விசேடணங்கள்-4	அநாத்மாவுக்கு உரிய விசேடணங்கள்-4
1. சத்து 2. சித்து இவ்விரண்டும் அநான்மாவின் அசத்துவத் தையும் ஜடத்துவத்தையும் மறைக்கின்றன. அதனால் அநான்மாவாகிய அகங்காராதி களில் இது 'அசத்தாயும் ஜடமாயும் இருக்கின்றது' என்னும் ஞானம் உண்டாகாது. 'இருக்கின்றது, விளங்கு கின்றது' என்னும் ஞானம் உண்டாகின்றது.	1. அசத்து 2. ஜடம்
3. ஆனந்தம் 4. அத்வைதத்துவம்	3. துக்கம் 4. துவைத சகிதத்துவம் இவ்விரண்டும் ஆத்மாவின் ஆனந்தத் தையும், அத்வைதத்துவத்தையும் மறைக் கின்றன. அதனால் ஆத்மாவில் 'நான் ஆனந்தரூபனாயும், அத்வைத ரூபனாயும் இருக்கின்றேன்' என்னும் ஞானம் உண்டாகாது. 'நான் துக்கியாயும், ஈசுவராதிகளிலும் வேறானவனாயும் இருக் கின்றேன்' என்னும் ஞானம் உண்டாகிறது.
இவ்வாறு ஆன்ம அனான்மாக்களுக்குப் பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) அத்தியாசம் இருக்கின்றது. (இருத்தல் என்பது சத்து. விளங்குதல் என்பது சித்து)	

அன்னியதராத்தியாசம்:_ (அன்னியதர + அத்தியாசம்) (அன்னியதரம்- இரண்டில் ஒன்று)

இரண்டில் ஒன்றது அத்தியாசம். பாம்பில் கயிற்றின் சொரூபம் அத்தியஸ்தம் ஆகாது. கயிற்றில் பாம்பின் சொரூபம் அத்தியஸ்தமாதல் போல, அனான்மாவில் ஆன்மாவின் சொரூபம் அத்தியஸ்தமாகாது. ஆன்மாவில் அனான்மாவின் சொரூபம் அத்தியஸ்தமாதல் இவ்வகை அத்தியாசம்.

சொரூபாத்தியாசம் 2.சம்சர்க்காத்தியாசம்___ என்ற இருவகை அத்தியாசங்களுள் மேற்கூறிய ஆறுவகை அத்தியாசங்களும் அடங்கும்.

சொரூபாத்தியாசம் : (சொரூப + அத்தியாசம்)

தத்துவ ஞானத்தால் பொய் என்று நிச்சயிக்கத் தக்க வஸ்து(பாம்பு), அதிஷ்டானத் தில் (கயிற்றில்) சொரூபமாக அத்தியஸ்தமாய் இருக்கின்றது. தேகாதி பிரபஞ்ச அனான் மாவிற்கு அதிஷ்டான (ஆன்மா) ஞானத்தால் பாதம் (பொய் என்று நிச்சயித்தல்) உண்டாதலால், ஆன்மாவில் அதன் சொரூபாத்தியாசம் உண்டாகின்றது. ஒன்றன் முழு வடிவமும் மற்றொன்றில் அத்தியஸ்தமாதல் சொரூபாத்தியாசம்.

மேற்கூறிய ஆறில், (3-வது ஆகிய) கேவல தர்ம அத்தியாசம், (4-வது ஆகிய) தர்ம சகித தர்மி அத்தியாசம், (6-வது ஆகிய) அன்னியதர அத்தியாசம் இவை மூன்றும் இந்த அத்தியாசத்தில் அடக்கம்.

சம்சர்க்காத்தியாசம் :_(சம்சர்க்க + அத்தியாசம்) (சம்சர்க்கம் - சம்பந்தம்)

பாதிக்கத் (பொய் என்று நிச்சயிக்கத்) தகாத வஸ்துவின் சொரூபம் அத்தியஸ்தம் ஆவதின்று. ஆனால் அதன் சம்பந்தம் அத்தியஸ்தமாம். ஆதலால் அனான்மாவில் ஆத்மாவின் இந்த அத்தியாசம் உண்டாகின்றது. ஆகவே இது சம்சர்க்காத்தியாசம்.

மேற்கூறிய ஆறில், (1-வது ஆகிய) கேவல சம்பந்த அத்தியாசம் சம்சர்க்காத்தியசமே ஆகும். (2-வது ஆகிய) சம்பந்த சகித சம்பத்தி அத்தியாசம், சம்சர்க்காத்தியாச சகித(கூடிய) சொருபாத்தியாசமாம்.

(5-வது ஆகிய) அன்னியோன்னிய அத்தியாசத்தில் சம்சர்க்காத்தியாசம் + சொருபாத்தியாசம் என்னும் இரண்டும் உள்ளன. ஏனெனில், ஆத்மாவின் சொருபம் சத்தியம் ஆகலின் (பாதிக்கத்தக்கது அன்று என்பதால்) அது அத்தியஸ்தம் ஆவது அன்று. ஆனால் அதன் தாதாத்மிய சம்பந்தம் அனாத்மாவில் அத்தியஸ்தமாம். ஆகையால் அதன் சம்சர்க்காத்தியாசம் உண்டாகின்றது. அனாத்மாவின் சொருபம் மித்தையாகையால், அது ஆத்மாவில் அத்தியஸ்தம் ஆகின்றது. ஆதலால், அதன் சொருப அத்தியாசம் உண்டாகின்றது.

82. அவஸ்தைகள் : (5)

1. சாக்கிரம்	2. சொப்பனம்	3. சுழுத்தி	4. துரியம்	5. துரியாதீதம்

சாக்கிரம் :

அவஸ்தை	..	சாக்கிரம்
நிகழும் தத்துவம்	..	பஞ்சபூதம்-5, ஞானேந்திரியம் -5, கர்மேந்திரியம்-5, பிராணாதி வாயுக்கள்-5, அந்தக்கரணம்-4 ஆக 24
தேகம்	..	தூல தேகம்
குணம்	..	சத்துவம்
எழுத்து	..	அகரம்
அதிதெய்வம்	..	விஷ்ணு
இடம் (ஸ்தானம்)	..	கண்
அனுபவித்தல்	..	இருதய கமலத்தில் உள்ள அஷ்ட தளத்தில்

		விசுவன் என்ற ஜீவனும் விராட்டு என்ற ஈசுவரனும் ஏகமாய்கூடிப் பொருந்தி மனைவி முதலிய விஷயபோகம் அனைத்தையும் அந்தக்கரண இந்திரியங்கள் ஆகிய எல்லா கரணங்களாலும் அனுபவிப்பர். இவர்கள் இவ்வாறு போகங்களை அனுபவிக்கும் சமயமே சாக்கிர அவஸ்தையாம். (சாக்கிரத்தில் விசித்திரமாய் இருத்தலால் விஷயங்கள் பேதமும் ஒருவடிவமாய் இருத்தலால் அபேதமும் ஆகின்ற காலம்)

சொப்பனம்:

அவஸ்தை	..	சொப்பனம்
நிகழும் தத்துவம்	..	ஞானேந்திரியம் -5, கர்மேந்திரியம்-5, பிராணாதி வாயுக்கள்-5, மனம், அகங்காரம் - 2 ஆக 17
தேகம்	..	சூக்கும தேகம்
குணம்	..	இராசதம்
எழுத்து	..	உகரம்
அதிதெய்வம்	..	பிரம்மன் (அயன்)
இடம் (ஸ்தானம்)	..	கண்டம்
அனுபவித்தல்	..	இருதய கமல கர்ணிகையின் கதியில் (இடத்தில்) தைசதன் என்னும் ஜீவனும், இரணிய கருப்பன் என்னும் ஈசுவரனும் ஏகமாய்க் கூடிப் பொருந்தி, சாக்கிர வாசனா விஷய போகங்களை (விஷயங்களின் வாயிலாக வரும் சுக துக்கங்களை) மனம் என்னும் கரணத்தால் அனுபவிப்பர். இவர்கள் இவ்வாறு போகங்களை அனுபவிக்கும் சமயமே சொப்பன அவஸ்தையாம். (இந்திரியமாகிய கரணங்கள்

		ஒடுங்கிய விடத்துண்டாகும் சாக்கிர சம்ஸ்கார ஐந்நிய விஷயத்தோடு கூடிய ஞானம் உள்ள காலம் அல்லது இந்திரியத்தினால் பெறப்படாத ஞானத்திற்கும் அதன் விஷயத்திற்கும் ஆதாரமான காலம்)

சுழுத்தி:

அவஸ்தை	..	சுழுத்தி
நிகழும் தத்துவம்	..	தனது காரியம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு அவற்றின் வாசனையுடனே ஆத்மாவின் ஸ்தானத்தில் சாக்கிரம்-சொப்பனம் என்னும் சகல அவஸ்தை ஒழிய (நிரவஸ்தையாக) இருக்கும் பிரகிருதி வடிவமான காரண தேகத்தில் நிகழ்வது.
தேகம்	..	காரண தேகம்
குணம்	..	தாமதம்
எழுத்து	..	மகரம்
அதிதெய்வம்	..	உருத்திரன்
இடம் (ஸ்தானம்)	..	இருதயம்
அனுபவித்தல்	..	கமல கர்ணிகையின் மத்திய கதியில் (இடத்தில்) பிராஞ்ஞன் என்னும் ஜீவனும், அந்தரியாமி என்னும் ஈசுவரனும் ஏகமாய்க் கூடிப் பொருந்தி, பிரம்மானந்த வடிவ விஷய போகத்தை மாயா விருத்தி என்னும் சூக்கும கரணத்தால் அனுபவிப்பர். இவர்கள் இவ்வாறு போகங்களை அனுபவிக்கும் சமயமே சொப்பன அவஸ்தையாம்.

சாக்கிரத்தில் போகம் இந்திரிய விருத்தியாலும், சொப்பனத்தில் போகம் மனோ விருத்தியாலும், சுழுத்தியில் போகம் மாயா விருத்தி அல்லது அவித்தியா விருத்தியாலும் ஜீவேசுவரர்களால் அனுபவிக்கப்படுகின்றன. இம்மூன்று அவஸ்தைகளின் பரியாய நாமம்

அவஸ்தாத்திரயம், தாமாத்திரயம், புரத்திரயம், ஸ்தானத்திரயம், தேசத்திரயம் என்பன.

<u>துரியம் :</u>

அதிகாரி புருஷன் முற்கூறிய சாக்கிர அவஸ்தையின்கண் அந்த இருதய கமலம் நெகிழ்ந்து மனோ வியாபாரம் இன்றி இருக்க (பிரஹ்மைவாகம்- பிரம்மமே நான் என்று) பரமாத்ம சிந்தனை செய்வதே அவனுக்குத் துரிய அவஸ்தையாம். (இது சவிகற்ப சமாதி என்றும் கூறப்படுவதாம்.)

<u>துரியாதீதம் :</u>

அந்த அதிகாரி புருஷன் அத்துரிய அவஸ்தையின் கண் விளங்கும் பிரத்தியக் ஆத்மாவின்கண் மனம் (செயலற்று) ஒடுங்கி நிற்க இருத்தலே அவனுக்குத் துரியாதீத அவஸ்தையாம். (இது நிர்விகற்ப சமாதி என்று கூறப்படுவதாம்.)

(82.1) **அவஸ்தைகளின் பகுப்பு :**

1. இப்பஞ்ச அவஸ்தைகளுள், புல், மரம் முதலிய தாவரங்கள் பெறுவது சுழுத்தி அவஸ்தையாம்.
2. பசு. பட்சி முதலியன பெறுவன சொப்பன அவஸ்தையும் சுழுத்தி அவஸ்தையும்
3. இந்திரன் முதலிய இமையவர் பெறுவது சாக்கிர அவஸ்தையாம்.
4. நரர் என்னும் மக்கள் பெறுவன மூன்று அவஸ்தைகளுமாம்
5. உலக நோக்கம் இன்றி உன்மத்தர் போல் இருக்கும் சாதக புருஷர் பெறுவது துரிய அவஸ்தையாம்.
6. சிவஞான யோகிகள் பெறுவது துரியாதீத அவஸ்தையாம்.

(82.2) **அவஸ்தைகளின் தன்மை:**

இந்த அவஸ்தை ஐந்தனுள், முன்னுள்ள சாக்கிரம்-சொப்பனம்-சுழுத்தி என்னும் அவஸ்தை மூன்றும் மக்களுக்குத் தம்மில் தாமே தோன்றி அவர்களுக்குப் பந்த சாதனமாய் இருப்பனவாம். பின்னுள்ள துரியம் - துரியாதீதம் என்னும் அவஸ்தை இரண்டும் மக்களுக்கு யோகாப்பியாச பலத்தால் தோன்றி அவர்களுக்கு மோட்ச சாதனமாய் இருப்பனவாம்.

அப்பஞ்ச அவஸ்தைகளுள் சாக்கிரத்தில் மற்றைய நான்கும், சொப்பனத்தில் மற்றைய நான்கும், சுழுத்தியில் மற்றைய நான்கும், துரியத்தில் மற்றைய நான்கும், துரியாதீதத்தில் மற்றைய நான்கும் இல்லாமையாலும், அந்த அவஸ்தைகள் காலதேச நியமங்களில் தோன்றாமையாலும், அவை ஐந்தும் மித்தையாம்.

83. மூவகை தேகம்: (3)

1. தூல தேகம் 2. சூக்கும தேகம் 3. காரண தேகம்

தூல தேகம்	தூல பூதங்களால் ஆனது. கருமத்தால் தோன்றியது. சுகதுக்காதி போகத்திற்குஇடமாவது. பிறத்தல்-இருத்தல்-வளர்தல்-திரிதல்-குறைதல்-கெடுதல் என்னும் ஆறு விகாரங்களையும் உடையது.
சூக்கும தேகம்	சூக்கும பூதங்களால் ஆனது. கருமத்தால் தோன்றியது. சுகதுக்காதி போகத்திற்குச் சாதனம். ஞானேந்திரியம்-5+ கர்மேந்திரியம்-5+ அந்தக்கரணம்-5+பிராணாதி வாயுக்கள்-5 ஆக 20 தத்துவங்களோடு கூடியிருப்பது
காரண தேகம்	அநிர்வாச்சியமாய், அநாதியாய், அவித்தியா வடிவமாய், தூல சூக்கும தேகம் இரண்டிற்கும் காரணமாத்திரமாய் இருக்கும் சுவசொரூப அஞ்ஞானமாகிய நிர்விகற்ப வடிவம்

84. கோசங்கள்: (5)

தேகம்	கோசம்	
தூல தேகம்	அன்னமய கோசம்	தந்தையின் சுக்கிலமும் தாயின் சுரோணிதமும் கூடியதால் உண்டான போக வடிவ தூலதேகம்
சூக்கும தேகம்	பிராணமய கோசம்	பிராணன்+கர்மேந்திரியம்:: இராசத குண அவஸ்தை-கிரியாசத்தியுடைய காரிய வடிவம்
	மனோமய கோசம்	மனம்+ஞானேந்திரியம்:: சத்துவ-இராசத குணம் இவ்விரண்டின் அவஸ்தையாம்-இச்சா சத்தி உடைய காரண வடிவம்
	விஞ்ஞானமய	புத்தி+ஞானேந்திரியம்:: சத்துவ குண

	கோசம்	மாத்தி ரத்தின் அவஸ்தையாம்-ஞானசத்தி உடைய கர்த்தா வடிவம்
காரண தேகம்	ஆனந்த மய கோசம்	காரண தேக வடிவ அவித்தையும், சாக்கிர அவஸ்தையில் மனைவி முதலிய விஷயங்களைக் காண்டலால் வரும் பிரியமும், அவற்றை அடைதலால் வரும் மோதமும், அவற்றை அனுபவித்தலால் வரும் பிரமோதமும் என்னும் மூன்றுவித சுக விருத்திகளும் கூடியது-போக்தா வடிவம் (இஷ்ட விஷயத்தின் தரிசனத்தால் உண்டாகும் விருத்தி பிரியமாம். அதன் லாபத்தால் உண்டாகும் விருத்தி மோதமாம். அதனை அனுபவித்தலால் உண்டாகும் விருத்தி பிரமோதமாம்)

85. அகங்கார தாதாத்மியம்: (3)

அகங்காரம், தேகம், சிற்சாயை, பிரத்தியக் ஆத்மா என்னும் இம்மூன்றோடும் சம்பந்தம் உடையதாய் இருக்கின்றது. அந்த சம்பந்தம் முறையே கருமஜம், சகஜம், பிரமஜம் (பிராந்தி ஜன்னியம்) எனப்படும்.

கருமஜம்:

ஜீவன் நான் தபிக்கின்றேன் என்று கூறுவதால், பிரத்தியக் ஆத்மாவின் பிரதி பிம்பத்தைப் பெற்றுள்ள அகங்காரத்தின் சம்பந்தத்தால் தூல தேகத்தில் தோன்றும் உஷ்ணம் முதலியவற்றை அறிதல் கருமஜம் (கருமத்தால் உண்டாயது). *இதனைக் கர்மஜ தாதாத்மிய அத்தியாசம் என்பர். (வர்த்தமான தேகத்தோடு உள்ள அகங்காரத்தின் பிராரப்த கர்மத்தால் உண்டாகிய தாதாத்மிய அத்தியாசம். ஏனெனின், ஜீவித்திருக்கும் அவஸ்தையில் 'நான் மனிதன்' என்று யாவர்க்கும் அனுபவம் இருக்கின்றது. பிராரப்த*

கர்மமாகிய உபாதி குறைய, தேகத்தோடு உள்ள தாதாத்மியம் குறைதலால், தேகம் விழுந்தபின் தேகத்தில் நான் என்று கூறுதல் முதலிய வியவகாரம் காணப்படுவதில்லை. ஆதலால் கர்மஜன்னியம்)

சகஜம்:

நான் அறிகின்றேன் என்று கூறுவதால், சிற்சாயையோடு அகங்காரத்திற்கு உள்ள சம்பந்தம் சிருஷ்டி தொடங்கி மோட்ச பரியந்தம் கெடாதிருத்தலின் சகஜம் (இயல்பாய் உண்டாயது). *இதனை சகஜ தாதாத்மிய அத்தியாசம் என்பர். (சிதாபாசனோடு உள்ள அகங்காரத்தின் தாதாத்மியம் இது. ஏனெனின் அகங்காரமும் சிதாபாசனும் கூடவே தோன்றிக் கெடுதலால்)*

பிரமஜம்: (பிராந்தி ஜன்னியம்)

நான் கர்த்தா(யான் செய்பவன்) என்று கூறுவதால், அசங்கமாய் உள்ள பிரத்தியக் ஆத்மாவோடு அந்த அகங்காரத்திற்கு உள்ள சம்பந்தம் பிராந்தி ஜன்னியம் (பிராந்தியால் உண்டாயது). இதனை பிரமஜ அஞ்ஞானத்தால் ஆகிய பூர்வ பிராந்தியினால் உண்டாகிய தாதாத்மிய அத்தியாசம் என்பர். *(அசங்கசாட்சி சேதனத்தோடு உள்ள அகங்காரத்தின் தாதாத்மியம் பிரமஜ அஞ்ஞானத்தால் ஆகிய பூர்வ பிராந்தியினால் பெறப்பட்டுள்ள தாதாத்மிய அத்தியாசம். தத்துவ ஞானத்தால் பிராந்தி நிவர்த்தியாயின், தாதாத்மியம் இல்லாமையால் ஞானிக்குச் சாட்சியினிடத்து 'நான் கர்த்தா போக்தா, சுகிதுக்கி' என்னும் அபிமானம் இல்லை. அது பிரமஜமாம்)*

86. பிராந்திகள்: *(மயக்கு)*

(அந்நியோந்நியாபாவமாகிய ஒன்றில் ஒன்று இல்லாமையின் பெயர் பேதமாம்)

சீவன் இந்த உபாதியால் ஐந்து வழிகளில் மயங்கி விடுகின்றான்.

1. வேறுபாட்டு மயக்கு (பேதப் பிராந்தி)
2. வினைமுதல் நுகர்முதல் மயக்கு (கருத்திருத்துவ போக்திருத்துவப் பிராந்தி)

3. ஒட்டுதல் மயக்கு (சங்கப் பிராந்தி)

4. மாறுபாட்டு மயக்கு (விகாரப் பிராந்தி)

5. உலகு உண்மை என்ற மயக்கு (ஜகத் சத்தியத்துவப் பிராந்தி)

வேறுபாட்டு மயக்கு: இது ஐந்து வகைப்படும். (i) ஜீவ-ஈசுவர பேதம். (ii) ஜீவ ஜீவ பேதம் (iii) ஜீவ ஜட பேதம் (iv) ஈசுவர ஜட பேதம் (v) ஜட ஜட பேதம். (பேதப்பிராந்தி பிம்ப பிரதிபிம்ப திருஷ்டாந்தத்தால் நிவர்த்திஆகும்)

(i)ஜீவ ஈசுவர பேதம் : பிம்பப் பிரதிபிம்பங்களின் பேதம் மித்தையாதல் போல இந்த பேதமும் மித்தையாம். ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் பேதம் (வேறுபாடு) இல்லை. இருப்பது போல பேதம் தோன்றுவது (காணப்படுவது) கற்பனை. ஜீவன் அவித்தையையும், ஈசுவரன் மாயையையும் உபாதியாக உடையவர்கள். (அவித்தை – சிறிய அஞ்ஞானம், மாயை – பெரிய அஞ்ஞானம்) உபாதியாகிய அவித்தையையும், மாயையையும் நீக்கிப் பார்த்தால், ஜீவனும் ஈசுவரனும் ஒன்றே ஆவர். பேதம் தோன்றாது. ஈசுவரன் காரண உபாதி. ஜீவன் காரிய உபாதி. ஈசுவரன் சமட்டி (அனைத்து ஜீவர்களையும் உள்ளடக்கியவன்). ஜீவன் வியட்டி (தனித்தனியாக உள்ளவன்).

(ii) ஜீவ ஜீவ பேதம் : பல கடாகாசங்களின் பரஸ்பர பேதம் மித்தையாதல் போல, இந்த பேதமும் மித்தையாம். ஜீவனுக்கும் ஜீவனுக்கும் பேதம் கிடையாது. இதுவும் கற்பனையே. சூக்கும தேகத்தில் அந்தக்கரணங்களில் உள்ள பதிவுகளின் வேறுபாட்டினால் ஒவ்வொரு ஜீவனும் வெவ்வேறாகத் தோற்றம் அளிக்கின்றனரே தவிர உண்மையில் பேதமில்லை. குளத்து நீரை முகந்து, கொண்டு வந்து, பல குடங்களில் நிரப்பினால் ஒரு குடத்தில் உள்ள நீரும், மற்ற குடங்களில் உள்ள நீரும் பேதம் போல் தெரிகிறது. இதைப்போல இந்த பேதம் காணப்படுகிறது. இது உண்மையில் பேதம் இல்லை.

(iii)ஜீவ ஜட பேதம்_: சொப்பன ஜீவர்கட்கும் சொப்பன கடாதிகட்கும் உள்ள பேதம் மித்தையாதல் போல, இந்த பேதமும் மித்தையாம். இதுவும் கற்பனையே. ஜீவன் ஆபாசத்தோடு அதாவது எண்ணப் பதிவுகளுடன் கூடிய அந்தக்கரணத்தை உபாதியாக உடையவன். ஜடப்பொருள்களுக்கு ஆபாசம் கிடையாது. ஏனெனில் அவைகளுக்கு மனம், புத்தி கிடையாது. ஆனால் பெயர், வடிவங்களை (நாமரூபம்) உபாதியாக உடையது. இதனால் பேதம் காணப்படுகிறது. உபாதியை நீக்கிப் பார்த்தால், பேதம் தோன்றாது. கனவில் உள்ள ஜீவனுக்கும், கனவில் தோன்றும் ஜடப்பொருளுக்கும் உள்ள பேதம் போன்றது இது. உண்மையில் பேதம் கிடையாது.

(iv)ஈசுவர ஜட (ஜக) பேதம்: கயிறுக்கும் அதில் கற்பனையாய் உள்ள பாம்பிற்கும் உள்ள பேதம் மித்தையாதல் போல, இந்த பேதமும் மித்தையாம். ஈசுவரனுக்கும் ஜடப் பொருளுக்கும் பேதமில்லை. இதுவும் கற்பனையே. ஈசுவரன் ஆபாசத்தோடு கூடிய மாயையை உபாதியாக உடையவன். அதாவது ஈசுவரன் பிரம்மத்தின் பிரதிபிம்பமே. மாயையை விட்டுவிட்டால், பிரம்மத்தில் ஒடுங்கி விடுவான். ஜடப்பொருள்கள் பிரம்மத்தில் இயக்கம் ஏற்பட்ட போது தோன்றிய தமோகுணத்திலிருந்து உருவானவை. வெளியே தோன்றும் தோற்றமாகிய உபாதியை நீக்கிப் பார்த்தால் பேதம் தோன்றாது. கனவில், அக்கனவைக் காணும் சாட்சிக்கும் (காண்பவனுக்கும்) கனவில் தோன்றும் பிரபஞ்சத்திற்கும் உள்ள பேதம் போன்றது இது.

(v) ஜட ஜட பேதம்:, கயிற்றில் கற்பனையாய் உள்ள மாலை தண்டம் பாம்பு முதலியவற்றின் பேதம் மித்தையாதல் போல, இந்த பேதமும் மித்தையாம். காணப்படும் பேதம் கற்பனையே. பெயர், வடிவங்களாகிய உபாதியால் ஆனவையாக இருத்தலால் பேதம் தெரிகிறது. கயிற்றில் தோன்றும் பாம்பு, கம்பு போன்ற பேதம் போல.

கருத்திருத்துவ போக்திருத்துவப் பிராந்தி: உண்மையில், ஆத்மா ஒரு செயலையும் செய்வதில்லை. எந்தவொரு போகத்தையும் அனுபவிப்பதில்லை. 'நான் செய்கின்றேன், நான்

அனுபவிக்கின்றேன்' என்ற கர்த்தா பாவனையுடன் ஒன்றி செயல்களைச் செய்வது அந்தக்கரணத்தின் தன்மை. இது ஆத்மா செய்கின்றது, (கர்த்தா), ஆத்மா போகத்தை அனுபவிப்பது (போக்தா) போன்ற தோற்றத்தை- மயக்கத்தைத் தருவது இந்த வகைப் பிராந்தியாகும். (படிகத்தில் பூவின் செந்நிறம் தோன்றும் திருஷ்டாந்தத்தால் நிவர்த்தியாம்)

சங்கப் பிராந்தி: தேகத்தில் 'யான்', 'நான்' என்னும் புத்தி அகங்காரம் ஆகும். தேகத்திலும், பிறபொருள்களிலும் 'எனது' என்று உண்டாகும் புத்தி மமகாரம் ஆகும். இந்த அகங்கார மமகாரம் என்ற அபிமானம் ஆத்மாவினிடம் உண்டாவதாகத் தோன்றுவதே ஒட்டுதல் மயக்கு (சங்கப் பிராந்தி). ஆத்மாவுக்கு செயல் கிடையாது என்பதால் அபிமானம் தோன்றாது. ஆதலால், இந்தப் பேதமும் கற்பனையே. (கடாகாச திருஷ்டாந்தத்தால் நிவர்த்தி ஆகும்)

விகாரப் பிராந்தி: பால் எப்படி தயிராக விகாரப்படுகிறதோ அப்படி பிரம்மமே ஜகமாக விகாரப்பட்டிருக்கிறது என்று சொல்வது மாறுபாட்டு மயக்கு. தயிராகி விட்டபின்பு, மீண்டும் அது பாலாக ஆகாது. ஆனால் உலகம் ஒடுக்கம் பெறும்போது, பிரம்மத்தில் தான் ஒடுங்குகின்றது. அதனால் இந்தப் பேதமும் கிடையாது. (கயிறில் கற்பிதமாகிய பாம்பின் தோற்ற திருஷ்டாந்தத்தால் இந்தப் பிராந்தி நிவர்த்தி ஆகும்)

ஜகத் சத்தியத்துவப் பிராந்தி: ஜகம் கண்ணுக்குப் பிரத்தியட்சமாகத் தெரிவதால் பிரம்மத்திற்கு வேறாக ஜகம் உள்ளது, ஜகம் பொய் அன்று, சத்தியமே என்று கருதுவது இந்த வகைப் பிராந்தி ஆகும். (கனகத்தில் குண்டலம் தோன்றும் திருஷ்டாந்தத்தால் பிரம்மத்திற்குப் பின்னமாகத் தோற்றும் இந்தப் பிராந்தி நிவர்த்தி ஆகும்)

மேலே விவரித்த அனைத்து பிராந்தி(மயக்கங்)களும் உபாதியால் ஏற்படுவதே. நிஜத்தில் உண்மையல்ல.

(86.1) பிராந்தி நிவர்த்தி:

கர்த்திருத்துவ போக்த்திருத்துவ பிராந்தி: ஸ்படிகத்தில் செந்நிற ஆடையின் செந்நிறம் தோற்றும் திருஷ்டாந்தத்தால் இப்பிராந்தி நிவர்த்தியாகும்.

சங்கப் பிராந்தி : கடாகாச திருஷ்டாந்த்தால் இப்பிராந்தி நிவர்த்தியாகும்

விகாரப் பிராந்தி: கயிற்றில் பாம்பு திருஷ்டாந்தத்தால் இப்பிராந்தி நிவர்த்தியாகும்

ஜகத்தின் சத்தியத்துவப் பிராந்தி: கனக குண்டல (பொன்னாலாகிய குண்டலத்தின்) திருஷ்டாந்தத்தால் பிரம்மத்திற்குப் பின்னமாகிய ஜகத்தின் சத்தியத்துவப் பிராந்தி நிவர்த்தி

அநாத்மா மித்தை: திருசியமாய் இருத்தலால், கிளிஞ்சலில் வெள்ளி போல.

வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை: ஞானத்தால் நிவர்த்தியாவதால், கயிற்றில் பாம்புபோல்

பிரம பின்னம் மித்தை: திருசியமாய் இருத்தலால், கானல் நீர் போல.

சாக்கிரப் பிரபஞ்சம் மித்தை: அநாத்மாவாய் இருத்தலால், சொப்பனப் பிரபஞ்சம்போல

(86.2) பிராந்தி (வேறு): 1.விசம்வாதிப் பிராந்தி 2.சம்வாதிப் பிராந்தி

விசம்வாதிப் பிராந்தி: நிஷ்பலப் பிரவிருத்தி(பயனில்லா முயற்சி)யை உண்டுபண்ணும் பிராந்தி ஞானத்தினையும் அதன் விஷயத்தினையும் விசம்வாதிப்பிராந்தி என்பர். தீபத்தின் பிரபையில் உண்டாகும் மணியின் பிராந்தி போல்வது.

சம்வாதிப் பிராந்தி: சபலப் பிரவிருத்தி (பயனுள் முயற்சி)யை உண்டுபண்ணும் பிராந்தி ஞானத்தினையும் அதன் விஷயத்தினையும் சம்வாதிப் பிராந்தி என்பர். மணியின் பிரபையில் உண்டாகும் மணியின் பிராந்தி போல்வது.

பகுதி-4

87. ஜீவ அவஸ்தை: (7)

1.அஞ்ஞானம்	2.ஆவரணம்	3.விட்சேபம்	4.பரோட்ச ஞானம்
5.அபரோட்ச ஞானம்	6.சோகநிவர்த்தி	7.நிரங்குசதிருப்தி	

அஞ்ஞானம்:

நல்வினை தீவினைகளைச் செய்கிறவனாய், சம்சாரப் பற்றுள்ளவனாய், அவித்தை யினால் நிஜ வடித்தை அறியும் ஆற்றல் இல்லாத ஜீவன் தத்துவ விசாரத்திற்கு முன்னர் தனது நிஜவடிவமான சுயம்பிரகாச ஆத்மாவை அறியாது இருத்தல்.

ஆவரணம்:_ (மறைப்பு)

அவன் பின்பு ஒரு சமயம் ஆத்மாவின் இலக்கணத்தைக் கேட்கும் போது, ஆத்மா இல்லை, அது இருந்தால் தோன்றாதா என்னும் இரு வகையான மறைப்பும் அந்த அஞ்ஞான காரியமாய் உள்ள ஆவரணம் ஆகும்.

ஆத்மா இல்லை என்னும் வியவகாரத்திற்குக் காரணமாய் இருப்பது அசத்துவா பாதக ஆவரணம் (அசத்துத் தன்மையைச் சம்பாதித்தல்). இது நாஸ்தி எனப்படும். அது இருந்தால் தோன்றாதா என்னும் வியவகாரத்திற்குக் காரணமாய் இருப்பது அபானா பாதக ஆவரணம் (விளக்கம் இன்மையைச் சம்பாதித்தல்). இது நபாதி எனப்படும்.

விட்சேபம்:_ (தோற்றம்)

கர்த்தாவும் கர்ம பலத்தை அனுபவிக்கும் போக்தாவும் தானேயாகத் தன்னை எண்ணித் தேகாபிமானியாய் உள்ள ஜீவனே விட்பேசமாம்.

பரோட்ச ஞானம்:_ (காணாத ஞானம்)

அவன் வேதமும் குருவும் கூறுகின்ற சத்திய வசன விசுவாசத்தால் ஆத்மா உண்டு என்று அதன் இருப்பினை அறிவது, ஆத்மா இல்லை என்னும் முதல் ஆவரணமான அசத்து ஆவரணத்தை நிவர்த்திப்பது பரோட்சஞானம்.

அபரோட்ச ஞானம்:_ (கண்ட ஞானம்)

பின்பு அவன் நீயே பிரம்மம் என்று கூறும் வேத வாக்கிய விசாரப் பெருக்கத்தால் நானே ஆத்மா என்று தன்னை ஆத்மாவாக அறிவது, ஆத்மா இருந்தால் தோன்றாதா என்னும் இரண்டாவது ஆவரணமான அபானா ஆவரணத்தை நிவர்த்திப்பதாகிய அபரோட்ச ஞானம்.

சோக நிவிருத்தி: (துழல் கெடல்)

ஜீவன் ஆத்மாவின் (அபரோட்சம் என்னும்) சாட்சாத்காரத்தை அடைந்ததன் பின்னர், நான் கர்மத்தைச் செய்பவன் (கர்ம கருத்துரு), நான் கர்மத்தின் பயனை அனுபவிப்பவன்(கர்ம பல போக்துரு) என்னும் ஜீவத்துவ வடிவ துக்கம் நீங்குதல்.

நிரங்குச திருப்தி: (குளிர்மையாதல்)

அதன் பின், ஜீவன் செய்யத்தக்கனவாய் உள்ள கருமம் அனைத்தையும் செய்து, அதனால் அடையத் தக்கனவாய் உள்ள பயன் அனைத்தையும் யாம் அடைந்து விட்டனம் என்று இயல்பாகச் சுக வடிவமாகப் பொருந்தியிருத்தல்.

சோக நிவர்த்தி, நிரங்குச திருப்தி (தடையற்ற ஆனந்தம்) என்னும் இரண்டு அவஸ்தையும் அபரோட்ச ஞானத்தின் பயனாம்.

(87.1) ஜீவ அவஸ்தா சமன்வயம் :_ (தசமன் கதை)

அஞ்ஞானம்:

பத்துபேர்கள் ஒன்றாகக் கூடி நீந்திக் கடத்தற்கு உரிய ஒரு நதியை நீந்திக் கடந்து அதன் கரைமீது ஏறி நின்று, தம்மை எண்ணும்போது, அவர் தம்முள் ஒருவன் ஒன்பது பேரை எண்ணி அறிந்து, பத்தாமவன் தானாகவே இருந்தும், தன்னைப் பத்தாமவன் என்று அறியாததே அஞ்ஞானம்.

ஆவரணம்:

பின்னர் பத்தாமவன் இல்லை, அவன் இருந்தால் காணப்படானா என்னும் இருவகையான பிராந்தியும்(மறைப்பும்) அந்த அஞ்ஞான காரியமான ஆவரணமாம்.

விட்சேபம்:

நதியுள் அந்த பத்தாமவன் முழ்கி இறந்தான் என்று அவன் வருந்தி அடைந்த துக்கமே விட்சேபம்.

பரோட்ச ஞானம்:

பின்பு அந்த வழியில் செல்லும் மற்றொருவன் பத்தாமவன் இருக்கின்றான் என்று கூற, பத்தாமவன் இருக்கின்றான் என்று அறிவதே பரோட்ச ஞானம்.

அபரோட்ச ஞானம்:

பிறகு அந்த வழியில் செல்பவன் அத்தசமனை ஒன்பது பேர்களுடன் கூட்டிக் கிரமாக எண்ணி நீயே பத்தாமவன் என்று தெரிவிக்க, அவன் தன்னைத் தானே முன்னிருந்த வண்ணம் பத்தாமவன் என்று அறிவதே அபரோட்ச ஞானம்.

சோகநிவர்த்தி:

பின்பு நதியுள் அந்த பத்தாமவன் முழ்கி இறந்தான் என்று வருந்தி அவன் அடைந்த துக்கம் நீங்குதலே சோக நிவர்த்தியாம்.

நிரங்குச திருப்தி:

பின்பு அவன் தானே பத்தாமவன் என்னும் தனது நிஜநிலையில் சுகவடிவமாக விளங்குதலே நிரங்குச திருப்தியாம். (தடையற்ற ஆனந்தம்)

88. அபரோட்ச ஞானப் பிரயோசனம்:

ஒரு பொருளைக் குறித்த இரு வேறுபாடு கொண்ட இரண்டு ஞானங்கள் ஒரு அந்தக்கரணத்தில் இருக்காது. ஆதலால் ஒரே துவைதத்தின் அல்லது அத்வைதத்தின் அபரோட்ச ஞானமும் பரோட்ச ஞானமும் ஒரு அந்தக்கரணத்தில் (உள்ளத்தில்) இருத்தல் விரோதமாம். ஆனால் துவைதத்தின் அபரோட்ச ஞானத்திற்கும் அத்வைதத்தின் பரோட்ச ஞானத்திற்கும் விரோதம் இல்லை. ஆதலால் உபாசகர்களுக்குத் தேகாதி வடிவத் துவைதத்தின்

அபரோட்சப் பிராந்தி இருந்தும் பரோட்சத் தன்மையாக அத்வைதப் பிரம்மத்தின் ஞானம் கூடும்.

1.அஞ்ஞானம் பேதஞானத்திற்கும் காரணமாம்.

2.பேதஞானத்திற்கு அநுகூல ஞானமும் பிரதிகூலஞானமும் காரணமாம்.

3.அநுகூல ஞானமும் பிரதிகூலஞானமும் கிரமமாக இராகத்துவேஷங்களுக்குக் காரணமாம்.

விசாரத்தினால் பிறந்த அபரோட்ச ஞானம் உடையவனுக்கு எதனால் (ஞானத்தினால்) அஞ்ஞானம் நீங்கியிருக்கின்றதோ, அதனால் பேதஞானமும் அதன் காரியமான அநுகூல ஞானப் பிரதிகூல ஞானங்களும் இல்லை. அதனாலேயே இராகமும் துவேஷமும் இல்லை.

89.விசாரம்

1.விசாரத்திற்கு ஏது (காரணம்) ஈசுவரன், வேதம், குரு, தனது அந்தக்கரணம் என்னும் நான்கின் கருணையாம். 2.விசாரத்தின் பயன் ஆத்மாவின் திட அபரோட்ச (பிரத்தியட்ச) ஞானமாம். 3. விசாரத்தின் அவதி (எல்லை) மேற்படி ஞானம் உண்டாகும் காலம் வரையாம்.

90.பாத இலக்கணம்

ஒரு அதிஷ்டானத்தில் (ஆதாரத்தில்) மற்றொரு பொருள் தோற்றம் அளிக்கிறது என்றால், அந்த அதிஷ்டானத்தில் அந்தப் பொருள் மூன்றுகாலத்தில் என்றும் இல்லாமை என்று (அத்தியந்த அபாவ) நிச்சயம் செய்வது பாதம் எனப்படும்.

அந்தப் பாதம் 1.சாஸ்திரீயம் 2.யௌக்திகம் 3.பிராத்தியட்சிகம் என மூவகையாம்.

பிரம்மம் அதிஷ்டானம். அந்த அதிஷ்டானத்தில் சர்வப் பிரபஞ்சங்களின் அபாவத்தின் (இல்லாமையின்) நிச்சயம் சாஸ்திரீய பாதம் எனப்படும்.(அதாவது அவித்தையும் அதன் காரியமும் கயிற்றில் பாம்பு மூன்று காலத்திலும் வியாவகாரிகமாக இல்லாதது போல அதிஷ்டானப் பிரம்மத்தில் பாரமார்த்திகமாக மூன்று காலத்திலும் இல்லாமை இதனை <u>விஷயவடிவ பாதம்</u> எனவும் சொல்வர்)

மண் உபாதான காரணம். கடம் காரியம். கடம் அழிந்தால் கடத்தின் இல்லாமை (அபாவம்) நிச்சயம் செய்யப்படுகிறது. அதைப்போல, பிரம்மம், சர்வ பிரபஞ்சத்திற்கும் அபின்ன (வேறாக இல்லாத) நிமித்த உபாதான காரணம் ஆகும். இந்த பிரம்மாகிய அதிஷ்டானத்தில் தோற்றமாகக் காணப்படும் பிரபஞ்சம் மித்தை என்று நிச்சயம் செய்வதால், பிரம்மத்தின் நிச்சயம் உண்டாகிறது. இது யௌக்தி பாதம் எனப்படும். (அதாவது எப்போதுமே இருக்கும் அவித்தை முதலியவற்றின் முதல் பாதத்தில் சொல்லிய இல்லாமையை நிச்சயித்தலாகிய பாதம் விஷயிவடிவ பாதம் எனச் சொல்வர்)

எதன் பிரகாசம் உண்டாகின்றதோ அது விஷயம் எனப்படும். எது பிரகாசம் செய்வதோ அது விஷயி எனப்படும்.

அகம்பிரம்மாஸ்மி, தத்துவமசி முதலிய மகா வாக்கியத்தால் உண்டான சாட்சாத் காரத்தால் காரியமான பிரபஞ்சத்தோடும் கூடிய அஞ்ஞான நிவிருத்தி பிராத்தியட்சிக பாதம் எனப்படும். (அதாவது 'அகம் பிரம்மாஸ்மி' என்னும் நிச்சயமாகிய தத்துவ ஞானம் உண்டான பின்னர் "என்னிடத்தில் மூன்று காலத்திலும் அவித்தையும் பிரபஞ்சமும் இல்லை" என்று விருத்தி வடிவ பாதம் உண்டாகின்றது. அவித்தை முதலானவற்றின் அபாவம் ஏற்கெனவே இல்லாமல் தான் இருக்கிறது. ஆனால் இந்த விருத்தி உண்டான பின்னர் அவித்தை முதலியவை இல்லாமல் இருப்பதைப் பிரகாசத்தினால் காட்டுகிறது. அதனால் அந்த விருத்தி விஷயிவடிவ பாதமாம்)

91. விருத்தி-முக்குண விருத்தி

தாமத குணத்தால் உண்டாகும் விருத்தி மூட விருத்தி எனவும், இராசத குணத்தால் உண்டாகும் விருத்தி கோர விருத்தி எனவும், சத்துவ குணத்தால் உண்டாகும் விருத்தி சாந்த விருத்தி எனவும் பெயர் பெறும்.

[அனுபவத்தின் காரியமாகிய சம்ஸ்காரத்தினால் தோன்றும் ஞானம் ஸ்மிருதி (நினைவு) எனப்படும். உற்புத்த சம்ஸ்கார மாத்திரத்தால் உண்டாகிய ஞானத்தை ஸ்மிருதி என்பர். அந்த ஸ்மிருதி பிரமம்-யதார்த்தம் என்னும் பேதத்தால் இரண்டு வகையாம். பிரம(பிராந்தி) வடிவ அனுபவத்தின் சம்ஸ்காரத்தால் உண்டாகிய

ஸ்மிருதி பிராந்தி வடிவமாம். யதார்த்த ஞானமாகிய அனுபவத்தால் உண்டாகும் ஸ்மிருதி யதார்த்தமாம்.

அனுபவத்தினால் உண்டாகியதாய் ஸ்மிருதிக்கு ஏதுவாகிய சம்ஸ்காரம் பாவனை எனப்படும். உற்சாக விசேஷத்திற்குப் பிரயத்தனம் (முயற்சி)என்று பெயர்). இராகத்துவேஷமில்லாத விருத்தியை உபேட்சை என்பர். அதற்கு விஷயமாகும் (உபேட்சை செய்யத்தக்க) வஸ்து உபேட்சியம் எனப்படும்.

ஒரு விருத்திக்குப் பின் மற்றொரு விருத்தியிருத்தல் எதுவோ அது விருத்தியின் அநுவிருத்தி எனப்படும். தண்டத்தால் குலால சக்கரத்தைச் சுழற்றிய பின்பு சுழற்றுவதை விட்டுவிட்ட பின்னரும் குலால சக்கரம் தானே (சற்று நேரம்) சுழல்வது உண்டாகிறது. அதுபோல முற்காலத்து முயற்சி முதலியவற்றால் விருத்தியின் அநுவிருத்தி உண்டாகின்றது]

(91.1) விருத்தி திரயம்: 'இருக்கிறது' என்னும் வியவகாரத்திற்கு ஏதுவான அவித்தை அல்லது அந்தக்கரணத்தின் பரிணாமம் விருத்தி எனப்படும்.

1.துவித விருத்தி 2.சாட்சி விருத்தி 3.அகண்டாகார விருத்தி

துவித விருத்தி: பஞ்ச கோசத்துள் ஒவ்வொன்றையும் நான் என்று கொள்வது

சாட்சி விருத்தி: அவற்றுள் ஒவ்வொன்றையும் யுத்தியால் இது நானல்ல இது நானல்ல என்று நேதித்து எஞ்சி நின்ற ஆத்மாவை (சாட்சியை) நான் எனக் கொள்ளல்.

அகண்டாகார விருத்தி: அகம்பிரம்மாஸ்மி என்னும் விருத்தி.

துவித விருத்தி பந்தத்திற்கு ஏதுவாயும், சாட்சி விருத்தி சர்வ துக்க நிவிருத்தி பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்சத்திற்குச் சாட்சாத் காரணம் அன்றாயும், அகண்டாகார விருத்தி மோட்சத்திற்குச் சாட்சாத்(நேர்) சாதனமாயும் இருத்தலால், அதி

தீவிரம் உடையவர்கள் முன்னுள்ள இரண்டினையும் நீக்கி, கடைசி ஒன்றனை மாத்திரம் கொள்ளல் வேண்டும்.

அகண்டார விருத்தி மாத்திரமாய் இருத்தல் சம்பிரஞ்ஞாத (சவிகற்ப) சமாதியாம். அவ்விருத்தியும் நீங்கித் தான் மாத்திரமாக நிற்றல் அசம்பிரஞ்ஞாத (நிர்விகற்ப) சமாதி.

(91.2) பிரக்ஞை: (2) 1.ஸ்திதப் பிரக்ஞை 2.அஸ்திதப் பிரக்ஞை

<u>ஸ்திதப் பிரக்ஞை:</u> யோகப் பயிற்சியால் வசம் பண்ணப்பட்ட சித்தம் உடையவனின் புத்தி எப்பொழுது பரபுருஷனிடத்து ஆசையை உடைய பெண்ணின் புத்தியைப் போல நிரந்தரம் பிரம்ம-ஆத்ம தத்துவத்தையே சிந்திப்பதாயும், பிற பொருளைச் சிந்திக்காத தாயும் இருக்கின்றதோ, அப்பொழுது அந்தப்புத்தி ஸ்திதிப் பிரக்ஞை எனப்படும்.

<u>அஸ்திதப் பிரக்ஞை:</u> கடந்து போன பிறவிகளில் செய்யப்பட்ட நல்வினைக் கூட்டத்தின் முதிர்ச்சியால் வானிலிருந்தும் விழுந்த கனியைப் போல, மகாவாக்கியங்களைக் கேட்ட அளவில் புருஷனுக்கு ஜீவப் பிரம்மங்களின் ஐக்கியத்தை விஷயிக்கும் அகம்பிரம்மாஸ்மி என்று தோன்றிய ஞானம் எதுவோ, அது வியவகாரத்தினாலும், விஷயப்பற்றினாலும் மறக்கப்படுகின்றது. ஆகவே அது அஸ்திதப் பிரக்ஞை எனப்படும்.

<u>*92. வேதம் போதிக்கும் வாக்கிய வகை: (3)*</u>

விதி வாக்கியம்	..	யாகாதி கருமங்களைச் செய்ய வேண்டும் என்று கூறுவது
நிஷேத வாக்கியம்	..	கள்குடித்தல் முதலியவற்றை விடுதல்வேண்டும் என்று கூறுவது
சித்தார்த்த போதக வாக்கியம்	..	விதி நிஷேதம் இன்றிப் பிரம்மாத்ம ஐக்கிய வடிவ அர்த்தத்தை மாத்திரம் தெளிவாகக் கூறும் வாக்கியம். (சித்தித்த பொருளைக் கூறும் வாக்கியம் எனவும் சொல்லப்படும்)

முதலாவதான விதிவாக்கியம் மூவகைப்படும்.

அபூர்வ விதி வாக்கியம்: எய்தாதது எய்துவிப்பது அபூர்வ விதியாம்.

நியமவிதி வாக்கியம்: எய்தியது இகந்துபடாமல் காப்பது நியம விதியாம்.

பரிசங்கியா விதி வாக்கியம்: எய்தியதனை ஒருமருங்கு மறுப்பது பரிசங்கியா விதியாம்.

93. வாக்கியம்: (2)

வேத வாக்கியம் 1.அவாந்தர வாக்கியம் 2. மகா வாக்கியம் என்ற பேதத்தால் இருவகையாம்.

(93.1) அவாந்தர வாக்கியம்:

அவாந்தர வாக்கியம் 1.நிர்விகல்பம் 2.சவிகல்பம் 3. பிரகிருதி என்று மூவகையாம்.

நிர்விகல்பம்	:	சோதித தத்துவம் பதார்த்தங்களின் சொரூபத்தைப் பிரதிபாதிக்கும் "சத்தியம் ஞானம் அனந்தம் ஆனந்தம் பிரம்மமாம்" "எது ஈண்டு பிராணிகளின் இருதயத்தினுள் சோதிருப புருஷனாம்" போன்ற வாக்கியம்
சவிகல்பம்	:	தத் பத துவம் பத வாச்சியார்த்த உபயோகமாகிய கிரம சிருஷ்டியைப் பிரதிபாதிக்கும் "ஆத்மாவினின்று ஆகாசம் உண்டாயிற்று" "எதனினின்று இப்பூதங்கள் உண்டாயின" என்பதான வாக்கியம்
பிரகிருதி	:	பிரம்ம ஆத்மாவின்கண் அத்யஸ்த அனாத்மாவின் நிஷேதத்தைப் பிரதி பாதிக்கும் "நிரோதம் அன்று உற்பத்தி அன்று" "ஈண்டு நாநா அற்பமும் இன்று" என்பதான வாக்கியம்

(93.2) மகாவாக்கியம் : *(4)* (ஜீவ பிரம்ம ஐக்கியத்தை அறிவிக்கும் வாக்கியம்)

இருக்கு வேதம்	:	பிரஞ்ஞானம் பிரம்மம்	ஞானவடிவ ஆத்மா பிரம்மம்	மனன வாக்கியம்
யசுர் வேதம்	:	அகம் பிரம்மாஸ்மி	நான் பிரம்மமாய்இருக்கின்றேன்	அனுபூதிவாக்கியம்
சாம வேதம்	:	தத்துவமஸி	அது நீயாய்இருக்கின்றாய்	உபதேசவாக்கியம்
அதர்வணவேதம்	:	அயமாத்ம பிரம்மம்	இந்த ஆத்மா பிரம்மம்	சம்மத வாக்கியம்

விளக்கமாக:-

பிரஞ்ஞானம் பிரம்மம்	அறிவே பிரம்மம் என பிரம்மத்தின் இலக்கணம் கூறுவதால் லட்சண வாக்கியம்
அகம் பிரம்மாஸ்மி	நான் பிரம்மம் என்று அப்பியாசத்திற்கு உதவுவதால் அப்பியாசவாக்கியம்
தத்துவமஸி	அது நீயாகிறாய் என போதிப்பதால் உபதேச வாக்கியம்
அயமாத்ம பிரம்மம்	இந்த ஆத்மாவே பிரம்மம் என திட அபரோட்ச அனுபவம் கூறுவதால் சாட்சாத்கார அல்லது சம்மத வாக்கியம்.

(93.3) மகாவாக்கிய சம்பந்தம்: (3)

சாமாநாதி கரணிய சம்பந்தம்	:	வேறு வேறாகத் தோற்றுவதற்குக் காரணமான சப்தங்கட்கு அர்த்தம் காண்பதில் பிரவிருத்தி உண்டோ அதுவே இச்சப்தங்கட்குப் பரஸ்பரம் சாமாநாதி கரணிய சம்பந்தம். (விட்டுவிடாத இலக்கணையில், அந்த ராமனே இந்த ராமன் என்னும் வாக்கியத்தில் 'அந்த-இந்த' என்னும் இரு சப்தங்கட்கும் பரஸ்பரம்)
விசேஷண விசேஷிய பாவ	:	மேற்கூறிய வாக்கியத்திலேயே இரு சப்தங்களின் அர்த்தங்கட்கும் உள்ள பரஸ்பர விரோதத்தை நிவர்த்திப்பது விசேஷண விசேஷி பாவ சம்பந்தம்.

சம்பந்தம்		
இலட்சிய இலட்சண பாவ சம்பந்தம்	:	மேற்கூறிய வாக்கியத்தில் அந்த இடம், காலம் மற்றும் இந்த இடம், காலம் ஆகிய இரு விரோத அம்சங்களைத் தியாகம் செய்து ராமன் என்ற உடலை மட்டுமே குறிப்பிடுவது, அந்த-இந்த வாக்கியத்திற்கு இலட்சியார்த்தம். வாக்கிய அர்த்த ரூப லட்சிய ராமனோடு அந்த-இந்த என்னும் இரு பதங்கட்கும் பதார்த்தங்கட்கும் இலட்சிய இலட்சண பாவ சம்பந்தமாம்.

94. தத் துவம் பதங்களின் அர்த்தத் துவயம்: (2)

வாச்சியார்த்தம்: (இயற்பெயர்ப் பொருள்) இது முக்கியார்த்தம் என்றும், அபிதார்த்தம் (சக்கியார்த்தம்) என்றும் சொல்லப்படும்.

தத் பதம்	:	மூவகை உடல் சமட்டி வடிவினராய விராட்டு, இரணிய கருப்பன், அந்தர்யாமி என்னும் மூன்று உருவ ஈசுவரனையும் பிரம்மத்தையும் கூட்டித் தப்தாய பிண்டம் (காய்ந்துள இரும்பு) போல ஏக வடிவமாகக் காண்டல் தத்பத வாச்சியார்த்தம்.
துவம் பதம்	:	மூவகை உடல் வியட்டி வடிவினராய விசுவன்-தைசதன்-பிராஞ்ஞன் என்னும் மூன்று உருவ ஜீவனையும் பிரத்தியக் ஆத்மாவையும் கூட்டித் தப்தாய பிண்டம் போல ஏகவடிவமாகக் காண்டல்.

லட்சியார்த்தம்: (ஆகுபெயர்ப் பொருள்)

தத் பதம்	:	விராட் புருஷன் முதலிய மூவரினும் வேறாகிய நிருபாதிகப் பிரம்மமே தத் பதத்தின் லட்சியார்த்தம். இது சோதித (சுத்த) தத் பதார்த்தம் என்றும் சொல்லப்படும்.

துவம் பதம்	:	விசுவன் முதலிய மூவரினும் வேறாகிய நிருபாதிகப் பிரத்தியக் ஆத்மாவே துவம் பதத்தின் லட்சியார்த்தம். இது சோதித (சுத்த) துவம் பதார்த்தம் என்றும் சொல்லப்படும்.

95. லட்சணை பேதம்: (3)

விட்ட லட்சணை (ஜகத் லட்சணை)	:	கங்கையின்கண் இடைச்சேரி இருக்கிறது. நதி என்ற அர்த்தத்தை விட்டு கரை என்ற பொருளைக் கொள்வது
விடாத லட்சணை (அஜகத் லட்சணை)	:	குந்தம் (ஈட்டி) செல்கின்றது என்பதில் ஈட்டி என்ற அர்த் தத்தை விடாமல், அதை எடுத்துச்செல்பவனைக் குறிப்பது
விட்டுவிடாத லட்சணை (ஜகதஜகத் லட்சணை)	:	அந்த ராமனே இந்த ராமன் என்பதில் அந்த முதலிய இறந்த காலம், இந்த முதலியவற்றின் நிகழ்காலம் அனைத்தையும் விட்டு, மாறாக ராமன் என்பதை விடாமல் பொருத்தி பொருள் கொள்ளுதல். (இது அர்த்த லட்சணை, பாகத்தியாக லட்சணை, கண்ட லட்சணை எனவும் சொல்லப்படும்.)

96. வாச்சியார்த்தம்--லட்சியார்த்தம்:

வாக்கியார்த்தத்தின் ஞானத்தில் சொற்களின் ஞானம் உபயோகம் உடையது. சொற்களின் ஞானத்தில் சத்தத்தினுடைய விருத்தியின் (சக்தி இலட்சணைகளின்) ஞானம் உபயோகம் உள்ளதாம். சொற்களுக்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் விருத்தி எனப்படும். அந்த விருத்தி சக்தி விருத்தி, இலட்சணாவிருத்தி என இருவகைப்படும்.

(1)பதத்தில் குறிப்பிடும் பொருளைத் தெரிவிக்கும் சாமர்த்தியம் அந்த பதத்தின் சக்தியாம். பதத்தின் சக்தி விருத்தியால் எந்தப்

பொருளின் ஞானம் உண்டாகின்றதோ அந்தப் பொருள் சக்கியார்த்தம் அல்லது வாச்சியார்த்தம் என்பர்.

(2)சக்கியமாகிய வாச்சியார்த்தத்தின் சம்பந்தம் இலட்சணா விருத்தி எனப்படும். அந்த இலட்சணா விருத்தி விட்ட இலட்சணை-விடாத இலட்சணை-விட்டு விடாத இலட்சணை என மூன்று வகைப்படும். சத்தத்தின் இலட்சணா விருத்தியால் எந்த அர்த்தத்தில் ஞானம் உண்டாகின்றதோ அந்த அர்த்தம் இலட்சியார்த்தம் எனப்படும். பலாச மரத்தின் ஒரே சிறிய கிளையில் மூன்று இலைகள் இருப்பது போல ஒரே வேதாந்த சித்தாந்தத்தில் உத்தம மத்திம கனிஷ்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கும் பொருட்டு மூன்று பட்சங்கள் இருக்கின்றன. அவை 1.அஜாதவாதம் 2.திருஷ்டி சிருஷ்டி வாதம் 3.சிருஷ்டிதிருஷ்டி (வியாவகாரிகபட்சம் என்னும்) வாதம் என்பன.

ஒரே பாரமார்த்திக சத்தையாகிய சேதனம் அங்கீகரிக்கப்படுவது, அது வித்வான்களது திருஷ்டிக்கு விஷயமாகும் முக்கிய அஜாதவாதம் எனப்படும். இதில் ஆரோப அபவாதங்கள் இல்லாமையால் வாச்சியார்த்த லட்சியார்த்தங்களின் கற்பனை பொருந்தாது. (பிரம்மம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்போது கற்பிதமோ அல்லது முத்தியோ அதாவது சிருஷ்டி இன்மையால் வாச்சியார்த்த-லட்சியார்த்தம் தேவையில்லை)

எதில் பாரமார்த்திக சத்தை பிராதிபாசிக சத்தை என்னும் இரண்டும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவோ, அது திருஷ்டி சிருஷ்டி வாதம் எனப்படும். இதில் கனவில் வரும் கற்பனையான அரசனைப் போல ஜீவ கற்பிதமாகிய ஈசுவரன் 'தத்' பதத்திற்கு வாச்சியார்த்தமாம். அவித்தையினால் மறைக்கப்பட்ட அறியப்படாத பிரம்ம வடிவ ஜீவன் 'துவம்' பதத்தின் வாச்சியார்த்தமாம். இவ்விரண்டு பதங்களுக்கும் சுத்தப் பிரம்மம் இலட்சியார்த்தமாம்.

எதில் பாரமார்த்தம் பிராதிபாசிகம் வியாவகாரிகம் என்னும் மூன்று சத்தைகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவோ, அது வியாவகாரிகபட்சம் அல்லது சிருஷ்டி திருஷ்டி வாதம் எனப்படும். இதில் 1.பிம்பப் பிரதிபிம்பவாதம் 2.காரிய காரண உபாதி வாதம் 3.அவச்சின்ன அனவச்சின்ன வாதம் 4.அவச்சேதவாதம் 5.ஆபாசவாதம் என்னும் ஐந்து பட்சங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றுள்,

(1)பிம்ப பிரதிபிம்ப வாதத்தின்படி அஞ்ஞானத்தை உபாதியாக உடைய சுத்தப் பிரம்மமாகிய பிம்பம் ஈசுவரன் ஆவான். அது 'தத்' பதத்திற்கு வாச்சியார்த்தமாம். அந்த பிரம்மம், சமஷ்டி அஞ்ஞான சம்பந்த பிராந்தியினால் ஒரு ஜீவனாக பிரதிபிம்பம் அடைகிறது. அது 'துவம்' பதத்திற்கு வாச்சியார்த்தம். பிம்பம்-பிரதிபிம்பம் என்ற கற்பனை இல்லாத அசங்க சுத்த சைதன்னியம் அவ்விரண்டு பதங்களுக்கும் இலட்சியார்த்தம் ஆகும்.

(2)காரிய காரண உபாதி வாதத்தின்படி மாயை என்ற காரண உபாதியை உடைய சேதனம் ஈசுவரன் ஆவான். இது தத்பதத்தின் வாச்சியமாம். அந்தக்கரணமாகிய காரிய உபாதியை உடைய சேதனம் ஜீவனாம். இது துவம் பதத்தின் வாச்சியார்த்தம். காரண-காரியமாகிய இரண்டு உபாதிகளும் இன்றிய சுத்தப் பிரம்மம் அவ்விரண்டு பதங்களுக்கும் இலட்சியார்த்தம்.

(3)அவச்சின்ன அனவச்சின்ன வாதத்தின்படி அந்தக்கரண அனவச்சின்ன சேதனம் ஈசுவரனாம் (தத் பதத்தின் வாச்சியார்த்தம்). அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஜீவனாம் (துவம் பதத்தின் வாச்சியமாம்). அவச்சின்னத் தன்மை, அனவச்சின்னத் தன்மை என்னும் உபாதிகள் இன்றிய சுத்தப்பிரம்மம் இரண்டு பதங்களுக்கும் இலட்சியார்த்தம்.

(4)அவச்சேத வாதத்தின்படி மாயையினால் அவச்சின்ன (விசிஷ்ட)சேதனமாகிய (மாயையோடு கூடிய அல்லது எல்லைக்குட்பட்ட) ஈசுவரன் தத் பதத்தின் வாச்சியார்த்தம். மாயா அனவச்சின்ன (மாயை என்ற எல்லை இல்லாத) பிரம்ம சேதனம் தத் பதத்தின் இலட்சியார்த்தம். அந்தக்கரணம் அல்லது வியஷ்டி அஞ்ஞானத்தால் அவச்சின்ன (எல்லைக்குட்பட்ட) (விசிஷ்ட)

சேதனமாகிய ஜீவன் துவம் பதத்தின் வாச்சியார்த்தம். அந்தக்கரணம் அல்லது வியஷ்டி அஞ்ஞான அனவச்சின்ன (எல்லைக்குட்படாத) கூடஸ்த சேதனம் 'துவம்' பதத்தின் லட்சியார்த்தம். அவ்விரண்டு லட்சியார்த்தத்திற்கும் (பிரம்ம கூடஸ்தனுக்கு) அகண்டைகரசத்துவம் உண்டு.

(5) பஞ்சதசியில் கூறிய ஆபாச வாதத்தின்படி சாபாச சிதாபாசனோடு கூடிய மாயா விசிஷ்ட சேதனமாகிய ஈசுவரன் 'தத்' பதத்தின் வாச்சியார்த்தம். சாபாச மாயா பாகத்தை விட்டு மிஞ்சிய சுத்தப் பிரம்மம் இலட்சியார்த்தம். சாபாச அந்தக்கரண அல்லது வியஷ்டி அஞ்ஞான அம்ச விசிஷ்ட சேதனமாகிய ஜீவன் 'துவம்' பதத்தின் வாச்சியார்த்தம். சாபாச அந்தக்கரணம் அல்லது வியஷ்டி அஞ்ஞான அம்சம் என்னும் உபாதி (விசேஷண) பாகத்தை விட்டு மிஞ்சிய சேதனம் (கூடத்தன்) இலட்சியார்த்தம். இவ்விரண்டு இலட்சியார்த்தங்களுக்கும் அகண்டைகரசத்துவம் உண்டு.

மேற்கூறிய சகலப் பிரக்கிரியைகளுக்கும் ஜீவத்தன்மை ஈசுவரத்தன்மை ஜகத்து என்பவற்றை ஆரோபித்து, அவற்றின் அபவாத வாயிலாக அத்துவிதீயப் பிரம்மத்தை அறிவிப்பதில் தாற்பரியமாம்.

97. மகா வாக்கியார்த்தப் பிரதிபத்தி (விவாத) நிராகரணம்:

பேத வாத மறுப்பு:

தத்துவமசி மகாவாக்கியத்திற்கு வேறுவகையாகப் பொருள்கூறும் வாதங்களும் அவைகளுக்கான மறுப்பும்.

அர்த்த வாதம்:

மலரினால் ஈசுவரனை அர்ச்சனை செய்தால் சுவர்க்கம் (மோட்சம்) கிடைக்கும் என்று மோட்ச இச்சையைப் பக்தர்களுக்கு உண்டாக்குகின்ற வாக்கியம் போல்வது அர்த்தவாதம். இது துதியர்த்தவாதமாம். துதியை அல்லது நிந்தையை அறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதமாம். மகாவாக்கியம் துதியை அல்லது நிந்தையை அறிவிக்காமல், சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை அறிவித்தலின், அர்த்த வாதம் அன்றாம்.

(இது இரண்டு வகைப்படும். 1.பூதார்த்த வாதம் 2.அபூதார்த்த வாதம்

துதியை அறிவிப்பது:- "வச்சிரத்தோடு கூடிய கையை உடையவன் இந்திரன்" என்று இந்திரனது துதியை அறிவிக்கும் வாக்கியம் யதார்த்த அர்த்தத்தின் வாசகமாய் இருத்தலால் பூத அர்த்த வாதம். "கல் வடிவ மிதப்பு" அல்லது "இந்த யஞ்ஞஸ்தம்பம் சூரியன்" என்பது முதலான வாக்கியங்கள் யதார்த்தம் அல்லாத அர்த்தத்தின் வாசகங்களாய்ச் சுருதியை அறிவிப்பனவாய் இருத்தலால் அபூத அர்த்த வாதம்.

நிந்தையை அறிவிப்பது:- "இந்தப் புருஷன் பாபி" என்று பாபியின் நிந்தையை அறிவிக்கும் வாக்கியம் பூத அர்த்த வாதம். "இந்தப் புருஷன் பிசாசு" என்று புருஷனது நிந்தையை அறிவிக்கும் வாக்கியம் அபூத அர்த்த வாதம். சில இடங்களில் குணவாதம், அநுவாதம், பூதவாதம் என்று அர்த்த வாதம் மூன்று விதமாக மத பேதத்தால் சொல்லப்பட்டிருக்கிறது)

உபாசனாபர வாதம்:_(உபாசனை=தியானம்)

சிலையைத் தேவதை வடிவமாக உபாசிக்குமாறு கூறும் வாக்கியம் போல்வது உபாசனாபர வாதமாம். உபாசனையால் மோட்சம் உண்டென்று கூறும் வாக்கியம் உபாசனாபர வாதமாம். மகாவாக்கியம் உபாசனையால் மோட்சம் உண்டாகும் என்று அறிவிக்காமல், சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை அறிவித்தலின், அது உபாசனாபர வாதம் அன்றாம். மோட்சம் சீவ பிரம்ம ஐக்கிய ஞானத்தால் அன்றி உபாசனையால் அடையமுடியாது என்பது உணரப்பட வேண்டியதாகும்.

ஸ்துதிபர வாதம்:

மக்களுள் மேன்மையுள்ள ஒருவனை நோக்கி, இவன் இந்திரன் என்று கூறும் வாக்கியம் போல்வது ஸ்துதிபர வாதமாம். ஒருவனை ஸ்துதி பற்றி உயர்த்திக் கூறும் வாக்கியம் ஸ்துதிபர வாதமாம். மகாவாக்கியம் சீவனை ஸ்துதி பற்றி பிரம்மமாகக் கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது ஸ்துதிபர வாதம் அன்றாம்.

உபசார வாதம்:

அடிமையாய் உள்ள ஒருவனை நோக்கி இவன் அரசன் என்று கூறும் வாக்கியம் போல்வது உபசார வாதமாம். ஒன்றன் தன்மையை மற்றொன்றன் மேலேற்றிக் கூறும் வாக்கியம் உபசார வாதமாம். மகாவாக்கியம் பிரம்மத்தின் தன்மையை சீவன் மேலேற்றி, சீவன் பிரமமாம் எனக் கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது உபசார வாதம் அன்றாம்.

குணசாதிருசிய வாதம்:

சுத்தம் ஒழுக்கமுடைய மாணவன் ஒருவனை நோக்கி, இவன் அக்கினி என்று கூறும் வாக்கியம் போல்வது குணசாதிருசிய வாதமாம். (சாதிருசியம்=ஒப்பு). ஒரு பொருளோடு மற்றொரு பொருளைக் குண ஒப்புமை நோக்கி அபேதமாக்கிக் கூறும் வாக்கியம் குண சாதிருசிய வாதமாம். மகாவாக்கியம் பிரம்மத்தோடு சீவனைக் குண ஒப்புமை நோக்கி அபேதமாக்கிக் கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது குணசாதிருசிய வாதம் அன்றாம். தத்பத லட்சியார்த்தமாய் உள்ள பிரம்மமும், துவம்பத லட்சியார்த்தமாய் உள்ள சீவ (கூடஸ்த)னும் நிர்க்குணமாய் இருத்தலின், அவற்றிற்கு ஐக்கியம் கூறுதல் குண ஒப்புமை பற்றியாம் என்பது ஒருவிதத்தாலும் யுக்தியோடு பொருந்துவது அன்றாம்.

ஜாதி வியக்திபர வாதம்:

இது கோவி(ஆவி)னுடம்பு என்று கூறும் வாக்கியம் போல்வது ஜாதி வியக்திபர வாதம். பசுத்தன்மை என்பது ஜாதி, இதில் உறுப்புகள் கிடையாது. இந்த ஜாதிக்கு அலை, தாடி, முதலிய உறுப்புகள் உள்ள உடம்பு எனக்கூறும் வாக்கியம் ஜாதி வியக்திபர வாதமாம். கோத்தன்மை உடையது கோ(பசு) என்னும் போது, கோத்தன்மை ஜாதியாம். அதனை உடைய கோ வியக்தியாம். ஜாதி உடையது வியக்தி எனப்படும். மகாவாக்கியம் ஜாதிக்கும் வியக்திக்கும் சமவாய சம்பந்தம் இருப்பது போல, சீவ (கூடஸ்த)னுக்கும் பிரம்மத்திற்கும் சமவாய சம்பந்தம் இருக்கின்றது என்று கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது ஜாதி வியக்தி பர வாதம் அன்றாம். ஜாதி என்பது ஊகித்து நோக்குமிடத்து

அது குணத்தினும் வேறு இல்லை. இது பின்னே கூறப்படும் குண குணி வாதத்தில் அடங்குவதாம்.

காரிய காரண வாதம்:

காரியமாய கடம் காரணமாய மண்ணிற்கு அன்னியம் இல்லை என்று கூறும் வாக்கியம் போல்வது காரிய காரண வாதமாம். காரியம் காரணத்திற்கு வேறாய் இருப்பது அன்று என்னும் வாக்கியம் காரிய காரண வாதமாம். இங்கு காரணம் என்றது முதல் (உபாதான) காரணத்தைக் குறிப்பிடுவது. மகாவாக்கியம் காரியமாய கடமும் காரணமாய மண்ணும் அன்னியமாய் இருத்தல் போல, காரியமாகிய சீவ (கூடஸ்த)னும் காரணமாய பிரம்மமும் அன்னியமாய் இருப்பது அன்று எனக் கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது காரிய காரண வாதம் அன்றாம்.

அவ்வாறே சீவன்(கூடஸ்தன்) பிரம்மம் என்கிற போது, சீவன் காரியமும் பிரம்மம் காரணமும் ஆவன் அன்றாம். ஆகாயம் உபாதி நோக்கத்தால் கடகாசம் மகாகாசம் என்று விளங்குதல் போல, சேதனமும் உபாதி நோக்கத்தால் சீவன் (கூடஸ்தன்) பிரம்மம் என விளங்குகின்றன என்பது உணரப்பட வேண்டியதாம். இதனால் சேதனம் உண்மையில் ஒன்றாக அன்றி இரண்டாக இருப்பதில்லை என்பது பெறப்படுகிறது.

குண குணி வாதம்:

நீலோற்பலம் என்று கூறும் வாக்கியம் போல்வது குணகுணி வாதமாம். குண குணி களுக்குள்ள அபேதத்தைக் கூறும் வாக்கியம் குண குணி வாதமாம். நீலோற்பலம்= நீல+ உற்பலம். நீலம் என்பது குணமாம். உற்பலம் என்பது குணியாம். நீலோற்பலம் என்பது கருங்குவளை என்பது போலப் பண்புத் தொகையாம். மகாவாக்கியம் நீலமாகிய குணமும் உற்பலமாய குணியும் அபேதமாய் இருத்தல் போல, சீவனாகிய குணமும் பிரம்மமுமாகிய குணியும் அபேதமாய் இருக்கின்றன என்று கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம ஐக்கியத்தை கூறுதலின், அது குணகுணி வாதம் அன்றாம். குணமுடையது (குணத்தோடு) அநித்தியமாம் என்பது நியமம். சீவன் குணமும் பிரம்மம் குணியுமாயின் அவ்விரண்டும் அநித்தியமாம்.

அதனால் மகாவாக்கியத்தைக் குணகுணி வாதமாகக் கொள்வார்க்கு வரும் பயன் அநர்த்தமேயாம்.

விகார வாதம்:

பால் தயிர்க்கு அபேதமாம் என்று கூறும் வாக்கியம் போல்வது விகார வாதமாம். காரணம் காரியமாக விகாரம் அடைந்திருக்கின்றது என்று கூறும் வாக்கியம் விகார வாதமாம். (விகாரம், பரிணாமம், திரிபு என்பன ஒருபொருட்சொற்கள்) காரணம் என்றது இங்கு முதற்காரணத்தை. மகாவாக்கியம் பாலாகிய காரணம் தயிராகிய காரியமாகத் திரிந்து அதனோடு அபேதமாய் இருப்பது போல, பிரம்மமாகிய காரணம் சீவ (கூடஸ்த)னாகிய காரியமாகத் திரிந்து அதனோடு அபேதமாய் இருக்கின்றது என்று கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது விகார வாதம் அன்றாம். விகாரம் அடைவது அநித்தியம் என்பது பிரசித்தமாம். பிரம்மம் சீவனாக விகாரம் அடையுமாயின் அது அநித்தியம் என்பது ஒருதலையாம்.

அம்சாம்சிக வாதம்:_(அம்ச அம்சிக வாதம்)

நீரும் அலைகளும் ஏகமாய் (ஒன்றாய்) இருக்கின்றன என்று கூறும் வாக்கியம் போல்வது அம்சாம்சிக வாதமாம். அம்சமும் அம்சியும் ஏகமாம் என்று கூறும் வாக்கியம் அம்சாம்சிக வாதமாம். (அம்சம்=கூறு. அம்சி=கூற்றை உடையது. அம்சம்-அங்கம்-அவயவம்-உறுப்பு என்பவனவும், அம்சி-அங்கி-அவயவி-உறுப்பி என்பனவும் ஒருபொருட் சொற்கள்) மகாவாக்கியம் நீரும் அலையும் அம்சாம்சிக பாவத்தால் ஏகமாய் இருத்தல் போல, சீவ(கூடஸ்த)னும் பிரம்மமும் அம்சாம்சிக பாவத்தால் ஏகமாய் இருக்கின்றன என்று கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது அம்சாம்சிக வாதம் அன்றாம். பிரம்மம் நிரவயவம் என்பது வெகு பிரசித்தமாய் இருத்தலின், அதனை நீர் (கடல்) போல அவயவியாகவும், சீவனை அலைபோல அவயவமாகவும் கூறுதல் ஒருவிதத்தாலும் பொருந்தாதாகும். அவயவம் உடையது அநித்தியம்.

பிம்பப் பிரதிபிம்ப வாதம்:

பிம்ப பிரதிபிம்பங்களுக்கு ஐக்கியம் உண்டென்று கூறும் வாக்கியம் போல்வது பிம்பப் பிரதிபிம்ப வாதமாம். பிம்பமே பிரதிபிம்பம் என்று கூறும் வாக்கியம் பிம்பப் பிரதிபிம்ப வாதமாம். ஒருவனது முகம் கண்ணாடியில் தோன்றுமிடத்து, அவனது முகம் பிம்பமாம். கண்ணாடியில் தோன்றும் முகம் பிரதிபிம்பமாம். மகாவாக்கியம் பிரதிபிம்ப முகத்திற்கும் பிம்ப முகத்திற்கும் ஐக்கியம் இருத்தல் போல, சீவ(கூடஸ்த)னுக்கும் பிரம்மத்திற்கும் ஐக்கியம் இருக்கின்றது என்று கூறாது, சுபாவ சித்தமாய் உள்ள சீவ பிரம்ம ஐக்கியத்தை கூறுதலின், அது பிம்பப் பிரதிபிம்ப வாதம் அன்றாம். சீவனும் (கூடஸ்தனும்) பிரம்மமும் கடஜலப் பிரதிபிம்ப ஆகாசமும், கடாகாசமும் போல் இராது, கடாகாசமும் மகாகாசமும் போல் இருத்தலின், அவற்றினது ஐக்கியத்தைப் பிம்பப் பிரதிபிம்ப ஐக்கியம் போல்வது என்று கூறுவது ஒருவாற்றானும் பொருந்துவது அன்றாம்.

98. சாமானாதி கரணியம் : (2)

முக்கிய சாமானாதி கரணியம்:

'நான்' என்ற சப்தத்தில் விளங்குகின்ற கூடத்தனுக்குப் பிரம்மத்தோடு எப்போதும் அபேதம் இருக்கின்றது. அது கடகாசத்திற்கும் மகாகாசத்திற்கும் எப்போதும் அபேதம் இருப்பது போலாம். இதனால் கூடத்தனுக்குப் பிரம்மத்தோடு முக்கிய சாமானாதி கரணியம் சொல்லப்பட்டுள்ளது. எந்த வஸ்துவுக்கு எந்த வஸ்துவோடு எப்போதும் அபேதம் இருக்கின்றதோ, அந்த வஸ்துவுக்கு அதனோடு முக்கிய சாமானாதி கரணியம் சொல்லப்படுகின்றது.

பாதசாமானாதி கரணியம்:

'நான்' என்ற சப்தத்தில் விளங்குகின்ற ஆபாசனுக்குப் பிரம்மத்தோடு தன் சொருபத்தைப் பாதிக்க (பொய் என்று நிச்சயிக்க) அபேதம் உண்டாகின்றது. அது முகத்தின் பிரதிபிம்பத்திற்கும் பிம்ப சொருபமான முகத்தோடு பிரதி பிம்ப முகத்தைப் பாதிக்க அபேதம் உண்டாவது போலாம். இதனால் ஆபாசனுக்குப் பிரம்மத்தோடு பாத சாமானாதி கரணியம் சொல்லப்பட்டுள்ளது. எந்த வஸ்துவுக்கு பாதம் உண்டாக எதனோடு அபேதம் உண்டாகின்றதோ, அந்த

வஸ்துவுக்கு அதனோடு பாதசாமானாதி கரணியம் சொல்லப்படுகின்றது.

99. உபாசனை (தியான) வகைகள்:

அந்நிய வஸ்துவின் வடிவ விருத்தியாகிய மறைப்பு இன்றிய தியான வஸ்துவின் ஆகாரமான விருத்தியின் தொடர் நினைப்பினை உபாசனம் என்றும், உபாசனை என்றும் கூறுவர். [தியானத்தின் கர்த்தா (சாபாஸ அந்தக்கரணம்) தியாதா. தியேய வடிவமாகிய சித்தி விருத்தியின் பிரவாகம் தியானம். தியானம் செய்யத்தக்கதாகிய தியான விஷயமான பிரம்மம் எதுவோ அது தியேயமாம்]

அது சகுணம், நிர்க்குணம் என்னும் பேதத்தால் ஒவ்வொன்றும் 1.பிரதீக வடிவம் 2.தியேயாநுசாரம் என இருவகையாம்.

1.ஓர் வஸ்துவில் பிறிதொன்றன் புத்தியாக உண்டாவது எதுவோ அது பிரதீக வடிவ உபாசனையாம். (உ-ம்):சாலிக்கிராமத்தில் விஷ்ணு புத்தியாகவும், நர்ம தேசுரத்தில் (பாணத்தில்) சங்கர புத்தியாகவும், ஸ்திரீ முதலியவற்றில் அக்கினி புத்தியாகவும் உபாசனை உண்டாகின்றது. அது பிரதீக வடிவ உபாசனை. அது பலவிதம்.

2.தியான வஸ்துவின் யதார்த்த சொருபத்தைச் சிந்தித்தல் எதுவோ அது தியேயாநுசாரமான உபாசனையாம். (உ-ம்): நிர்க்குணப் பிரம்மத்தின் அகங்கிரக வடிவ (அபேத) உபாசனையும், சாஸ்திரத்தில் நிச்சயிக்கப்பட்ட ஈசுவரனது சொரூபத்தின் தியானமும் தியேயாநுசாரமான உபாசனைகளாம். இதிலும் அநேக பேதம் உண்டு. *(எந்த வஸ்துவை தியானம் செய்தாலும், அதனை அபேத வடிவாக அதாவது 'நானே ஈசுவரன்', 'நானே பிரம்மம்' என்பதாக செய்யும் அபேத உபாசனை- தியானம் அகங்கிரக உபாசனை எனப்படும்)*

(99.1) ஞானத்திற்கும் உபாசனைக்(தியானத்திற்)கும் பேதம்:

	ஞானம்	உபாசனை(தியானம்)
1. விதி	'ஆத்மா அறியத்தக்கது' என்னும் சுருதி பிரேரகமான பிரமாண வடிவம் ஆகுதலால் விதி இருக்கின்றது. இருப்பினும் ஆத்மஞானம் பிரமேயப் பிரமாணங்கள் இன்றிப் புருஷனது இச்சையின் அநுசாரமாய் உண்டாகக் கூடாததாய் இருத்தலாலும், புருஷனது அதீனமாய் இருக்கின்ற வஸ்துவில் விதி சம்பவித்தலாலும் இச்சுருதி வாக்கியம் ஆத்மஞானத்தின் விதியின்கண் இல்லை. ஆனால் புருஷனது பிரவிருத்தியின் பொருட்டு ஆத்ம ஞானத்தினை சம்பாதிக்கத் தக்க யோக்கியதையின் கண் உளதாம்.	சாத்திர விதியை அனுசரித்து எந்த உபாசனை செய்யப்படுகிறதோ அது சாத்திரத்தில் சொல்லியபடி பயனை தருகிறது. விதியின்றித் தனது மனதினால் கற்பிக்கப்படும் உபாசனை பலத்திற்கு ஏதுவாகாது. ஆதலால் உபாசனையில் தான் விதியின் அபேட்சை உண்டு.
2. கர்த்தா வாகிய புருஷனது இச்சை	ஜிஞ்ஞாசை வடிவ இச்சையும் மகா வாக்கிய வடிவப் பிரமாணம் இன்றிப் போதத்தின்	புருஷனது இச்சை இருக்கு மாயின் இருக்கும். இச்சை இல்லையாயின் இராது. வேறு விதமாகச் செய்ய

	உற்பத்தியில் சாமர்த்தியம் உடையது அன்று. ஆதலால் கடத்தின் காரணமான குலாலன் முதலியோர் களைப் போல ஞானத்தின் நியமித காரணம் அன்று. ஆனால் குலால பத்தினி முதலியோரைப் போல் அந்நியதாசித்தமாம் (வேறோர் வகை யால் பெறப்படுவதாம்)	இச்சை இருக்குமாயின் அவ்வித மாகவும் உபாசனை உண்டாகும். ஆதலால் உபாசனையில் புருஷனது இச்சையின் தேவை உண்டு
3. அடம்	சிரவணாதிப் பிரயத்தினத்திற்கு ஏது வாகிய அடத்திற்குச் சிரவணாதிகளின் காரணமாம் தன்மை உண்டு. ஆனால் மகா வாக்கிய சிரவணம் இன்றி அடமாத்திரத்தால் ஞானத்தின் உற்பத்தி இன்மையாலும், ஞானத்தின் உற்பத்திக்குப் பின் கணமாத்திரத் தினால் அஞ்ஞானம் நாசமாகவே பின் அடத்தினால் ஞானத்தின் ஸ்திதியில் சாத்திரத்தின் விதி இன்மையாலும்	வெளிமுகப்பட்ட மனதை அடத்தினாலேயே தியான வஸ்துவை நினைப்பதாலேயே உண்டாகின்றது. ஆதலால் அடமும் வேண்டியதாம்.

	ஞானத்தில் அடம் காரணமாதல் இல்லை.	
4. விசுவாசம்	குரு வேதாந்த வாக்கியங்களில் சிரத்தை வடிவ விசுவாசமும் சிரவணத்தில் உபயோகம் உள்ளதாம். ஆனால் ஞானத்தின் காரணம் அன்று. பரோட்ச ஞானத்தின் காரணம் விசுவாசம் ஆயினும் அபரோட்ச ஞானத்தின் காரணம் அன்று. ஏனெனின் விசாரம் இன்றி விசுவாசம் மாத்திரத்தினால் அபரோட்ச ஞானம் உற்பத்தியாகுதல் காணப்படாமையின்.	'இச்சாலிக்கிராமம் விஷ்ணு' இந்நர்மதேசுவரர் சங்கரன்' என்று இவ்வாறு சாத்தி ரங்களில் எழுதப்பட்டு உள்ளது. அங்கு விசாரித்துப் பார்க்குமிடத்து விஷ்ணுவின் நாற்புயம் முதலிய குறிகள் சாலிக்கிராமத்தில் இல்லை. சிவனது திரிநேத்திராதி குறிகள் நர்மதேசுவரர் இடத்தில் இல்லை. ஆனால் அந்த சாத்திர வாக்கியத்தில் விசுவாசம் செய்து விஷ்ணு வடிவமாகவாவது சிவரூப மாகவாவது அவற்றின் சிந்தனை செய்யப்படுகின்றது. ஆகையால் விசுவாசத்தின் அபேட்சையும்இருக்கின்றது.
	இவ்விதத்தால் பிரம்மத்தின் ஞானம் பிரமேயப் பிரமாணங்களின் அதீனமாம்.	இவ்விதமாக உபாசனை கர்த்தா முதலியோரது அதீனமாம்.

100. *வைராக்கியம்*

விடுதலின் இச்சை அல்லது இச்சையின்மை வைராக்கியத்தின் சொருபம் ஆகும். இது பரம், அபரம் என இரண்டு விதமாகும்.

வைராக்கியம்	பரம்		
	அபரம்	1. யதமானம்	
		2. வியதிரேகி	
		3. ஏகேந்திரியம்	
		4. வசீகாரம்	1. மந்தம் 2. தீவிரம் 3. தீவிரதரம்

<u>பரம்:</u> அடைந்த அணிமாதி ஐசுவரியங்களை விடுதலின் இச்சையினை அல்லது சத்துவாதி குணமாத்திரத்தின் ஆசையை விடுதலைப் பரவைராக்கியம் என்பர். இது நிருவிகற்ப (அசம்பிரஞ்ஞாத) சமாதிக்கு அந்தரங்க சாதனம் ஆகும்.

<u>அபரம்:</u> அதனின் வேறாயதை அபர வைராக்கியம் என்பர். இது அட்டாங்க யோகத்துக்குக் காரணமாய் இருப்பதும் அன்றி, சவிகற்ப (சம்பிரஞ்ஞாத) சமாதிக்கு அந்தரங்க சாதனமும், நிருவிகற்ப (அசம்பிரஞ்ஞாத) சமாதிக்கு விருத்தியோடு கூடிய தாரணை-தியானம்-சமாதிகள் போல, பகிரங்க சாதனமும் ஆகும். இது நால்வகையாம்.

<u>யதமான வைராக்கியம்:</u> தோஷ திருஷ்டி வடிவ மந்த விவேகம்

<u>வியதிரேகி வைராக்கியம்:</u> தனது சித்தத்தில் எவ்வளவு குணங்கள் பரிபக்குவமாயினவோ அவற்றைக் கண்டு சந்தோஷித்து, மறுபடியும் பிறகுணங்களுக்குப் பிரயத்தனம் செய்தல்.

<u>ஏகேந்திரிய வைராக்கியம்:</u> இருதயத்தில் சூக்குமமான ராகம் இருக்க வெளியில் இந்திரி யங்களை நிக்கிரகித்தல்.

<u>வசீகார வைராக்கியம்:</u> இருதயத்தின்கண்ணுள்ள வாசனை வடிவ சூக்கும ராகத்தின் அபாவத்தினை வசீகார வைராக்கியம் என்பர். இது மூவகைப்படும்.

மேற்கண்ட நான்கில் யதமானம்-வியதிரேகம்-ஏகேந்திரியம் ஆகிய முதல் மூன்றும் சவிகற்ப சமாதிக்குப் பகிரங்க சாதனமும், நான்காவதான வசீகார வைராக்கியம் மாத்திரம் அந்தரங்க சாதனமும் ஆகும்

(100.1) விராகம்: (3) 1. மந்தம் 2.தீவிரம் 3. தீவிரதரம்

மந்தம்: மனைவி மக்கள் இறத்தலாலும், உள்ள பொருளை இழத்தலாலும், பிறவகையால் கொடிய துக்கம் உண்டான காலத்தில் அதனால் இச்சம்சாரம் மிகக் கொடியது, இதனை எப்படியாவது விட்டு அகல வேண்டும் என்று அப்போது மாத்திரம் சம்சாரத்தை வெறுக்கும் விராகம் மந்த விராகம் (வைராக்கியம்).

தீவிரம்: பிராரப்த கன்ம வசத்தால் இத்தேகம் இறவாது இருக்கும் அளவும் தாரம் தனம் முதலிய சம்சாரம் நமக்கு வேண்டாம் என்று அவற்றை விராகத்தால் விட்டிருத்தல்.

தீவிரதரம்: பெரும் புண்ணியத்தால் கிடைப்பதான பிரம்மதேவனது லோகம் கிரியை உடையதாயும் நாசம் உடையதாயும் இருத்தலின் மித்தையாம். அது நமக்கு வேண்டாம் என்று அதனையும் வெறுத்து இருத்தல்.

(100.2) சந்நியாசம்:

விராகம்	சந்நியாசம்			
மந்தம்	...	...	...	...
தீவிரம்	குடீசகம்			
	வெகூதகம்			
தீவிரதரம்	ஹம்சம்			
	பரம ஹம்சம்	சிஞ்ஞாசு (விவிதிஷா)	இதில் இருவகை	
		ஞானவான் (வித்வத்)		

குடீசகம்: யாத்திரை செய்யச் சக்தி இன்மையால் எங்கேனும் ஒரு குடிசை ஏற்படுத்திக் கொண்டிருத்தல் குடீசகம்.

வெகூதகம்: சந்நியாச ஆசிரமத்தின் கர்மத்தைச் செய்து கொண்டு யாத்திரை செய்தல்.

ஹம்சம்: அக்கினியால் சாதிக்கப்படும் கர்மத்தினை விட்டுப் பிரணவ ஜப முதலியவற்றை அனுஷ்டித்தல். ஹம்ச சந்நியாசிக்கு தத்துவ ஞானத்தால் சித்திக்கும் மோட்சம் இம்மையில் சித்தியாது மறுமையில் பிரம்மதேவரின் லோகத்தில் அந்தக்கரண சுத்தி வாயிலாகத் தத்துவ ஞானம் உண்டாவதால் சித்திக்கின்றது என்பது சாத்திர நியமமாம்.

பிரணவ உபாசனை இருவகை: 1.பரப்பிரம்ம ரூபமாக பிரணவத்தைச் சிந்தித்தல். இத்தகையவன் மோட்சத்தை அடைகின்றான். 2.அபரப் பிரம்ம ரூபமாகப் பிரணவத்தை சிந்தித்தல். இத்தகையவன் பிரம்மதேவனது லோகத்தை அடைகின்றான். அங்கு இரணிய கருப்பனுக்குச் சமானமாகப் போகங்களை அனுபவித்துப் பின் ஞானம் உண்டாக மோட்சத்தை அடைகின்றான்.

பரம ஹம்சம்: இதில் இருவகை 1.விவிதஷா சந்நியாசம் 2.வித்வத் சந்நியாசம்

விவிதிஷா சந்நியாசம்: ஞானத்திற்கு முன், தத்துவ ஞானம் உண்டாதல் பொருட்டு பிரபஞ்சத்தின் தோஷ திருஷ்டி பூர்வகமாக உண்டாகும் தீவிரதர வைராக்கியத்தினால் ஜிஞ்ஞாசுவினால் செய்து கொள்ளப்படும் சந்நியாசம்.

வித்வத் சந்நியாசம்: தத்துவ ஞானம் உண்டான பின்னர், பிரபஞ்சத்தின் தோஷ திருஷ்டி மித்தியா திருஷ்டி பூர்வகமாக உண்டாகும் தீவிரதர வைராக்கியத்தினால் வாசனைகளின் அழிவு மனோநாசம் தத்துவ ஞானங்களின் அப்பியாச வாயிலாக சீவன் முத்தி விலட்சணானந்தத்தின் பொருட்டு வித்துவானால் (ஞானியால்) செய்து கொள்ளப்படும் சந்நியாசம்.

ஜிஞ்ஞாசுக்களில் 1.சிலர் எனது என்னும் அபிமானத்தால் பந்த வடிவமாயுள்ள மனைவி, புத்திரர், திரவியம், பூமி, தாசன்,தாசி, பசு, வீடு, தானியம் என்னும் தனத்தைப் புத்தி பூர்வகமாகத் துறந்து யதிகளாய்ச் (சந்நியாசி) சற்குருவை அடுத்திருந்து சிரவணா திகள் செய்வதன் மூலமாக தத்துவ ஞானத்தை அடைவர். 2.சிலர் நான்கு வருணத் தார்களில் ஒருவராய் கருமங்களை நிஷ்காமியமாகச் செய்து, அகத்துறவு உடையராய் சற்குருவை அடுத்திருந்து சிரவணாதிகளால் தத்துவ ஞானத்தை அடைவர்.

101. தோஷ திருஷ்டி

1.பிறப்பு 2.மரணம் 3.முப்பு 4.வியாதி என்பவற்றில் துக்கத்தையும் தோஷத்தையும் அடிக்கடி காணுதல் அதாவது சாத்திரத்தையும் தனது அனுபவத்தையும் அனுசரித்து ஆலோசித்தல் எதுவோ அது தோஷ திருஷ்டி எனப்படும். இது வைராக்கியத்திற்கு ஏதுவாம்.

102. முத்தி சித்திக்கும் வழி

ஒருவன் தனது நித்திரா தோஷத்தாலாய சொப்பனத்தின்கண் தோன்றும் பெண்ணைக் கூடுதலால், அவனுக்குச் சத்தியமான வீரிய வீழ்ச்சி உண்டாதல் போலவும், மக்கள் தெய்வ வடிவ விக்கிரங்களை தெய்வமாகப் பாவித்து வணங்குதலால் அவர்களுக்குச் சத்தியமான இஷ்ட பிராப்தி உண்டாதல் போலவும், மித்தியா வடிவப் பிரபஞ்சத்துள் அதிகாரி புருஷர்க்குச் சுருதி விசார ஞானத்தால் பரமார்த்தமான முத்தியும் சித்திப்பதாம். மோட்சம் (முத்தி) என்பது காரண சகித ஜகத்தின் நிவர்த்தியும் பரமானந்தமாகிய பிரம்மத்தின் பிராப்தியும் ஆகும்.

103. பாவனாத் திரயம்: (3)

1.சம்சய பாவனை 2.அசம்பாவனை 3.விபரீத பாவனை

சம்சய பாவனை	:	கம்பத்தைப் பார்த்து, இது கம்பமா மனிதனா என்று வருகிற சித்த விருத்தி
அசம்பாவனை	:	போகிற வழியில் கம்பம் இருக்கக் காரணம் இல்லையே. கம்பம் வராதே என்று வருகிற சித்த விருத்தி
விபரீதபாவனை	:	கம்பம் இல்லை, இது மனிதனே என்று நிச்சயமாய் வருகிற சித்தவிருத்தி
பிரமாணகத சம்சயம்	:	வேதம் கர்மத்தைச் சொல்லுகின்றதா அல்லது ஏகாத்ம பிரம்மத்தைப் பற்றிச்சொல்லுகின்றதா என்று வருகின்ற சித்த விருத்தி
பிரமாணகத அசம்பாவனை	:	பிரம்மம் சித்தவஸ்து. ஆகையால் பிரமாணங்களினால் பிருதிவி முதலியவற்றை அறியப்படுகிறபடியினால் வேதம் சித்தப்

		பிரம்மத்தை எப்படிச் சொல்லும்? அப்படிச்சொல்லாது என்ற சித்த விருத்தி
பிரமாணகத விபரீதம்	:	பிரம்மம் சித்து. வேதங்களுக்கு இதைச் சொல்வதில் கருத்தில்லை. இதைச் சொல்லுமிடத்து புருஷனுக்குப் பிரவிருத்தி-நிவிருத்தி காணாது. ஆதலால் பிரயோசனம் இருக்காது. உலகில் பிரவிருத்தி பூர்வகமாய் புருஷார்த்தம் கண்டோம். ஆகவே எல்லா வேத அர்த்தங்களும் கர்மம் பிரம்மமே என்று வருகிற சித்தவிருத்தி
பிரமேயகத சம்சயம்	:	பிரம்மமே ஜகத் காரணமோ அல்லது மாயை முதலானவை ஜகத் காரணமோ என்று வருகிற சித்த விருத்தி
பிரமமேயகத அசம்பானை	:	ஜகத்துக்குப் பிரம்மம் அன்னியமாய் வேறாக இருக்கிறபடியால் ஜகத் திற்குப் பிரம்மம் காரணம் ஆகாது. மாயை முதலியவையே ஜகத் காரணம் என்று வருகிற சித்த விருத்தி
பிரமேயகத விபரீதம்	:	உலகில் புடவை நூலினிடத்தில் காரிய காரணங்களுக்கு ஏகரூபம் கண்டோம். அதுபோல அசுத்தம் முதலிய விகாரங்களுடன் கூடி யுள்ள ஜகத்திற்குக் காரணமான பிரம்மமும் அவ்வாறு விகாரங்களுடன் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமையால் மாயை முதலியவையே ஜகத் காரணம் என்று திடமாய் வருகிற சித்த விருத்தி
பிரத்தியேகாத்ம விஷய சம்சயம்	:	நான் பிரம்மம் ஆவேனோ ஆகமாட்டேனோ என்று வருகிற சித்த விருத்தி
பிரத்தியேகாத்ம விஷய அசம்பாவனை	:	கர்த்திருத்துவம் முதலிய இயல்புகள் உடையவனாய் எல்லைக்குட்பட்டு பிறப்பு இறப்புகளோடு கூடியிருக்கும் தனக்கு பிரம்ம வடிவம் எப்படிக் கூடும், அது கூடாது என்று

		வருகிற சித்த விருத்தி
பிரத்தியேகாத்ம விஷய விபரீத பாவனை	:	தான் அகர்த்தாவானால், தன்னைக் குறித்து வேதம் இதைச் செய், இதைச் செய்யாதே என்று விதிருபமாக சொல்லாது. சொல்கின்ற படியால் நான் கர்த்தா என்பதில் சந்தேகம் இல்லை என்று கர்த்திருத்துவ அபிமானாதிகளுக்குப் பிரீதி உண்டாக்குவதாய் வருகிற சித்தவிருத்தி

104. *முத்தி விக்கினம்:* (3)

அஞ்ஞானம்	:	நான் பிரம்மம் அல்லன் என்று பாவனை செய்வது
சந்தேகம்	:	நான் அந்தப் பிரம்மம் ஆவேனோ? ஆகேனோ? என்ற பாவனை
விபரீதம்	:	சுருதி யுக்திகளால் நான் பிரம்மம் என்பது விளங்கினாலும், யான் எனது என்னும் அபிமான வடிவ சீவத்துவம் நீங்காததால், நான் சீவனே என்று பாவனை செய்தல்

(104.1) முத்தி விக்கினப் பரிகாரம்: (3)

சிரவணம்	:	சுருதியின் கரும காண்ட விசாரணையால் சூதக முதலியவற்றில் திட புத்தி உண்டாதல் போல, திட புத்தி உண்டாக ஜீவ பிரம்ம ஐக்கியத்தைக் கூறுகின்ற வேதத்தின் ஞான காண்ட வாக்கியத்தின் தாற்பரியத்தைக் கேட்பது. (யுக்தியினால் வேதாந்த வாக்கியத்தின் தாற்பரியத்தை நிச்சயம் செய்வது சிரவணம்). இது அசம்பாவனை என்னும் அஞ்ஞானத்தைக் கெடுப்பதாம்.
மனனம்	:	சிரவணம் செய்த (கேட்ட) வேத வாக்கியத்தின் தாற்பரியப் பொருளை யுத்தி தருக்க அனுமானங்களால் ஆராய்ச்சி செய்து நோக்குதல். (ஜீவப் பிரம்மங்களின் அபேதத்திற்குச் சாதனமான

		யுத்திகளாலும், பேதத்திற்குப் பாதகமான யுத்திகளாலும் அத்விதீயப் பிரம்மத்தைச் சிந்தனை செய்தல் மனனம்). இது சம்சயபாவனை என்னும் சந்தேகத்தைக்கெடுக்கும்.
நிதித் தியாசனம்	:	சிரவண மனனங்களால் நிச்சயித்து அறிந்த பொருளின்கண் சித்தம் நிச்சலமாய் இருத்தல். (அனாத்மாகார விருத்தியின் மறைப்பின்றிய பிரம்மாகார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாசனம்). இது விபரீத பாவனை என்னும் விபரீதத்தைக் கெடுக்கும்.

105. சிரவணாதிகளின் ஏது, சொருபம் முதலியன:

சிரவணம்:

ஏது	:	தீவிரதர முமுட்சுத்துவம்
சொருபம்	:	அத்வைத ஆத்ம தத்துவத்தைக் கூறும் வேதாந்த வாக்கியங்களை இடைவிடாது கேட்டல்
காரியம்	:	ஆத்மா அன்று என்னும் அசத்துவாபாதக ஆவரணம் ஒழிவது
அவதி (எல்லை)	:	ஒழிந்து போன அந்த ஆவரணம் மீண்டும் வராதிருக்கும் பரியந்தம் அவ்வாக்கியங்களைக் கேட்பது
பலம்	:	ஆத்மாவின் திட பரோட்ச ஞானம்

மனனம்:

ஏது	:	நித்திய அநித்திய வஸ்து விவேகம்
சொருபம்	:	அத்வைத ஆத்ம தத்துவத்தை விசாரிப்பது
காரியம்	:	ஆத்மாவின் அபானாபாதக ஆவரணம் ஒழிவது
அவதி (எல்லை)	:	ஒழிந்து போன அந்த ஆவரணம் மீண்டும் வராதிருக்கும் பரியந்தம் அந்த ஆத்ம தத்துவத்தைச் சிந்திப்பது
பலம்	:	ஆத்மாவின் அபரோட்ச ஞானம்

நிதித்தியாசனம்:

ஏது (காரணம்)	:	சாதன சதுஷ்டயத்துடன் கூடி அவதி பரியந்தம் செவ்வையாக அனுஷ்டிக்கப்பட்டுள்ள சிரவணம் மனனம் ஆகும்.
சொரூபம்	:	சிவோகம் என்று இடைவிடாது தியானம் செய்வது
காரியம்	:	அகமும் புறமும் விஷயக் காட்சியின்றி தியான மாத்திரமாய் இருப்பது
அவதி	:	பாலில் கூடிய நீர்போன்று பிரம்மத்தில் ஏகரசமாதல்
பலம்	:	ஆத்மாவின் பிரதிபந்தரகித அபரோட்ச ஞானம்.

106.சிரவண சககாரி காரணம்:

சிரவணத்தால் உண்டாகிய சீவப் பிரம்ம ஐக்கிய ஞானத்தால் ஆத்ம சாட்சாத்காரம் உண்டாவதாம். அந்த முக்கியத்தால் சிரவணம் அங்கியாம். ஏனைய மனனமும் நிதித்தியாசனமும் அந்த சிரவணத்தால் உண்டாய ஞானம் கெடாதிருத்தற்குச் சககாரிகளாய் (துணையாய்) இருத்தலின் அதற்கு அங்கங்கள் ஆகும்.

பொருள்களை விளங்கச் செய்கின்ற விளக்கு காற்றால் அசையுமாயின், அதற்கு பொருள்களை விளங்கச் செய்யும் காரிய சாமர்த்தியம் இல்லையாம். அதனால் காற்றைத் தடுக்கும் திரை போல்வதாம் மனனம். அவ்விளக்கு மேலோங்கிப் பிரகாசிக்கும்படி அதனது திரியைத் தூண்டுகோலால் தூண்டிவிட்டு அவ்விளக்கைப் பிரகாசிக்கச் செய்தல் போல்வதாம் நிதித்தியாசனம். சிரவணம் விளக்கு. மனனம் திரை. நிதித்தியாசனம் தூண்டுகோல். லோக வாசனை, தேகவாசனை, சாத்திர வாசனை என்பன காற்று.

சிரவணம்: 1.அங்கி (பல)சிரவணம், 2.அங்க (சாதன) சிரவணம் என இருவகை. சற்குரு கூறும் மகாவாக்கியத்திற்கும் சீடனது காதிற்கும் உள்ள சம்பந்தம் அங்கி சிரவணமாம். அந்த வாக்கியத்தின் விசாரவடிவ சிரவணம் அங்க சிரவணமாம்.

(106.1) சட்வித லிங்க தாற்பரியம்: (6)_ (சிரவண தாற்பரியம்)

உபக்கிரம உபசங்காரம்:

சாந்தோக்ய உபநிடதங்கள் முதலியவற்றில் முதலில் சிருஷ்டிக்கு முன் பிரபஞ்சம் சத் ருபப் பிரம்மமாக இருந்தது. அந்த சத் ருபப் பிரம்மத்திற்குச் சுவகத முதலிய பேதத் திரயங்கள் இல்லை என்று அதற்கு அகண்டாகாரத்தைக் கூறுவது உபக்கிரமம்.

கடையில் (நாம ருப வடிவமாக உள்ள) பிரபஞ்சத்தைச் சத் ருப பிரம்மத்திலே (காரண காரிய ஆராய்ச்சி வாயிலாக) இலயம் செய்து, பிரத்தியக் ஆத்மாவிற்குச் சத் ருபப் பிரம்மத்தோடுள்ள ஐக்கியத்தைப் போதித்து அந்தப் பிரம்மம் அத்வைதமாம் (இரண்டாவது இல்லாததாம்) என்று அத்வைதத்தைக் கூறுவதே உபசங்காரம். இவை இரண்டும் ஒரு லிங்கமாம்.

அப்பியாசம்:

இடையில் பிரத்தியக் ஆத்மாவே பிரம்மமாம் என்று அதனைத் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களால் மீண்டும் மீண்டும் (அடிக்கடி) தெளிவுண்டாகக் கூறுவது அப்பியாசம்

அபூர்வதை:

அந்தப் பிரத்தியக் ஆத்மா (உபநிடதப் பிரமாணத்தால் அன்றி மற்றைய) பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களுக்கு விஷயமாகாது என்று அதனைக் கூறுவது.

பலம்:

பிரத்தியக் ஆத்மா ஒன்றனை அறியவே சர்வமும் அறியப்பட்டனவாம் என்று அதனைக் கூறுவது பலமாம்.

அருத்த வாதம்:

பிரத்தியக் ஆத்ம வடிவ நிர்விகாரப் பிரம்மத்திற்குச் சிருஷ்டி-ஸ்திதி-சங்காரம்-திரோபவம்-அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்திய கர்த்திருத்துவம் கூறுவதே அருத்தவாதம். (பிரம்மம் நிர்விகாரமாய் இருத்தலின், அது யாதொன்றனையும் செய்வதும் இல்லை, செய்விப்பதும் இல்லை. அவ்வாறுள்ள அதற்கு சகத்தின் சிருஷ்டி முதலான கிருத்தியங்களைக் கூறுவது)

உப பத்தி:

கடத்திற்கு மண்ணும் நூலுக்குக் கோசகாரப் புழுவும் (பட்டுப் பூச்சி) காரணமாய் இருக்கின்றன என்று அவற்றைக் கூறுதல் போல, உலகத்திற்குப் பிரம்மமே காரணமாய் இருக்கின்றது என்று அதனைக் கூறுதலே உபபத்தியாம்.

107. மனன சககாரி: (3)

(சககாரி-துணைக்காரணம்)

யுத்தி: இது கூடும், இது கூடாது எனத்தோன்றும் ஆராய்ச்சி வடிவ புத்தி யுத்தியாம். இதனைத் தருக்கத்தில் அடக்கியும் கூறுவர். இது கூடும் என்பது அந்வயம்(உடம்பாடு). இது கூடாது என்பது வியதிரேகம் (எதிர்மறை).

அது இருந்தால் அது இருக்கும் என்பது அந்வயம். புகையாகிய காரியம் இருந்தால் தீயாகிய காரணம் இருக்கும் என்பது அந்வயம். அது இல்லாததாயின், இது இருக்காது என்பது வியதிரேகம். தீயாகிய காரணம் இன்றாயின், புகையாகிய காரியம் இருக்காது என்பதாம்.

இவ்வாறே ஆரோபமாகிய மாயாப் பிரபஞ்சம் இருந்தால் அதிஷ்டானமாகிய பிரம்மம் இருக்கும் என்பது அந்வயமாம். அதிஷ்டானமாகிய பிரம்மம் இன்றாயின், ஆரோபமாகிய மாயாப் பிரபஞ்சம் இருக்காது என்பது வியதிரேகமாம்.

தருக்கம்: தருக்கித்துப் பேசுதல் தருக்கமாம். அதாவது அநிஷ்டத்தைக் (இஷ்டமாகா ததைக்) கூறுதலாம். இத்தருக்கத்தால் அதிஷ்டானமாகிய பிரம்மம் இன்றாயின், ஆரோபமாகிய மாயாப் பிரபஞ்சம் இருக்காது. ஆரோபமாகிய மாயாப் பிரபஞ்சம் இருந்தால் அதிஷ்டானமாகிய பிரம்மம் இன்றியமையாதிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுவதாம்.

அனுமானம்: அனுமிதிப் பிரமையின் கரணம் அனுமானம். இம்மலை தீயுடையது. புகை உடைமையால் என்று சொல்கிற பொழுது, புகையின் ஞானம் அனுமானமாம். அதனால் உண்டாகும் ஞானம் அனுமிதிப் பிரமையாம். பிரமை-யதார்த்த ஞானம்.

இவ்வாறு அநுமனாத்தால், பிரம்மம், வியாபாகமாய் இருத்தலால் தேச பரிச்சேதம் இல்லாதது, நித்தியமாய் இருத்தலால் கால பரிச்சேதம்

இல்லாதது, திருசியமாய் உள்ள எல்லாவற்றின் சொருபமாய் இருத்தலால் வஸ்து பரிச்சேதம் இல்லாதது என்று தெளிவது.

108. நிதித்தியாசன யோக பஞ்சகம்: (5)

மந்திர யோகம்: மனம் ஓம் என்னும் பிரணவம் முதலிய மந்திரங்களை இடைவிடாது சிந்தனை செய்வது வாயிலாகப் பிரத்தியக் ஆத்ம சொருபப் பிரம்மத்தின் கண் இலயமாவதே மந்திர யோகம்.

ஸ்பரிச யோகம்: அந்த மந்திர யோகத்தோடு மனமும் பிராண வாயுவும் ஒன்றாய் மூலாதாரத்திலிருந்து சுழிமுனை நாடி மார்க்கத்தில் ஏறி நின்றபின், சிரசின் நடுவிலுள்ள பரமாத்மப் பிரகாசத்தில் மனம் இலயமாவதே ஸ்பரிச யோகமாம்.

பாவ யோகம்: மனம், சுவர்க்கமே சிரசும், திக்குகளே செவிகளும், சந்திர சூரியர்களே கண்களும், அக்கினியே முகமும், ஆகாயமே நாபியும், பூமியே பாதமும் ஆக உடைய பரமேசுவரனது விராட் புருஷ சொருபத்தையாவது அல்லது இரண்டு நான்கு என்ற அளவுள்ள தோள்களோடும், சூலம் முதலிய ஆயுதங்களோடும், ஆபரணங்களோடும் பொருந்தியுள்ள பரமேசுவரனது சொருபத்தையாவது தியானம் செய்து, பின் அந்த அவயவங்களை ஒவ்வொன்றாக விட்டு, எஞ்சி நின்ற அவயவி மாத்திரமாய் உள்ள சத் ருபப் பிரம்மத்தில் விலயமாவதே பாவ யோகமாம்.

அபாவ யோகம்: மனம், விஷயங்களில் சென்று கூடுகின்ற செவி முதலிய கரணங்களுக்கு விஷயம் ஆகாதுள்ள (பிரமாணாதீதமான நிருபாதிகப்) பிரம்மத்தில் விலயமாவதே அபாவ யோகமாம்.

மகா யோகம்: மனம், உலகோற்பத்தி லயங்களிலும் (யாதாவது ஒன்றனை) அறிதல் அறியாமைகளிலும் (தனக்கொரு கேடின்றி) ஒரு தன்மையதாக விளங்கும் (ஜீவனது நிஜ வடிவமாய் உள்ள) பிரத்தியக் ஆத்மப் பிரம்மத்தில் விலயமாவதே மகாயோகமாம்.

109. பிரதிபந்தம் : (3)

பூதப்பிரதிபந்தம்: ஒருவன் முத்தி விருப்பத்தோடு சிரவண-மனன-நிதித்தியாசனங்களைச் செய்தாலும், முன்னர் இல்லறத்தில் இருந்து அனுபவித்த மனைவி முதலிய விஷய சுகம் சம்ஸ்கார பலத்தால் நாடோறும் வந்து சுகதுக்கங்களைத் தருவது வாயிலாக அவனது

மனநிலையைக் கலங்கச் செய்து, ஆத்ம சாட்சாத்காரம் உண்டாகதபடி செய்வது. (பூதம்-இறந்தகாலம். பிரதிபந்தம் - தடை)

வர்த்தமானப் பிரதிபந்தம்:_ ஒருவன் தத்துவ விசாரம் செய்திருந்தும் சோம்பல் அல்லது ஜடபுத்தி, விஷய இச்சை, யான் எனது என்னும் அபிமானம், குதர்க்கம் (தருக்க நெறி கடந்து பேசுதல்), கீழ்மக்களோடு சேர்தல், ஸ்திர புத்தி இன்மை (சபலத்துவம்) முதலியன தோன்றி அவனுக்கு ஆத்ம சாட்சாத்காரம் உண்டாகாதபடி செய்வது. (வர்த்தமானம் - நிகழ்காலம்)

ஆகாமியப் பிரதிபந்தம்:__ ஒருவன் தக்காரோடு கூடி வேதாந்த (உபநிடத) அருத்தங் களை ஆராய்ந்து அறிந்திருந்தாலும், அவன் எனக்கு இன்னும் சில ஜன்மம் வந்தால் அல்லாமல், பிரம்மதேவாதி உலகங்களின் மீதுள்ள இச்சை ஒழியாது என்று கருதும் தோஷம் தோன்றி அவனுக்கு ஆத்ம சாட்சாத்காரம் உண்டாகாதபடி செய்வது. (ஆகாமியம் - எதிர்காலம்)

பூத பௌஷ்ய வர்த்தமான வடிவ மூவகைப் பிரதிபந்தங்களும் ஞானத்தின் உற்பத்தியில் பிரதிபந்தமாம். சம்சயமும் விபரீத பாவனையும் ஞானத்தின் உற்பத்தியில் பிரதிபந்தம் அன்று. ஆனால் மாதா பிதாக்களின் சேவையில் சக்தி இன்றிய ரோகமுடைய புத்திரனது ரோகத்தினைப் போல, ஞானத்தின் பலத்திலாவது அல்லது பலத்தோடு கூடிய திடஞானத்திலாவது பிரதிபந்தமாம். ஞான உற்பத்திற்குப் பின் பிராரப்த பரியந்தம் நஷ்டமாகாத அவித்தையின் விட்சேப ஏதுவான சக்தியினால் தோன்றிய அத்தியாச வடிவ விட்சேபம் எதுவோ அது ஞானத்தின் பயனாகிய ஜீவன் முத்தியிலும் விதேக முத்தியிலும் பிரதிபந்தம் அன்று. ஆனால் ஜீவன் முத்தியின் (ஆவரணம் இன்றிய பரிபூரணமான விருத்தியோடு கூடிய ஆனந்தம் எனப்படும்) விலட்சணானந்தத்தில் பிரதிபந்தமாம். ஆதலால் அத்தியாசத்தைச் செய்யாமை வடிவ விரதம் இல்லாதிருக்கினும் ஜீவன் முத்தியின் விலட்சணானந்தத்தின் பொருட்டு அடிக்கடி பிரம்ம விசாரம் செய்ய வேண்டியதாம்.

110. வாசனைகளும் பிரிவுகளும்:

காமம் வெகுளி முதலிய விருத்திகள் உண்டாவதற்கு ஏதுவாய சித்தத்தின் சூட்சும அவஸ்தையாகிய சம்ஸ்காரம் வாசனையாம்.

1.சுத்தவாசனை				
2.மலினவாசனை	1.லோகவாசனை			
	2.சாத்திர வாசனை	1.பாடவாசனை	2.அர்த்த வாசனை	3.அநுஷ்டான வாசனை
3.தேகவாசனை	1.தேகத்தை விஷயப்படுத்துவது			
	2.தேக சம்பந்தியான குணங்களை விஷயப்படுத்துவது	1.சாஸ்திரீயம்	1.குணத்தைச் சம்பாதிப்பது	2.தோஷத்தைப் போக்குவது
		2.லௌகீகம்	1.தேக அழகைத் தேடுதல்	2.உடல் உபாதையைச் சரிசெய்தல்

சுத்த வாசனை - பிறவி நிவர்த்திக்குக் காரணமாகின்றது. எந்த வாசனை மறுபிறவியின் மூலத்தை நசிப்பித்து வறுத்த விதையைப் போலத் தேக ஸ்திதியின் பொருட்டு நிற்பதாமோ, மேலும் எந்த வாசனையினால் அளவு கடந்த ஏகரச இன்ப வஸ்துவானது அறியப்படுமோ அந்த வாசனை சுத்த வாசனை எனப்படும்.

மலின வாசனை- பிறப்பிற்குக் காரணமாகின்றது. பிரம்மத்தின் சொருபத்தை மறைத்துள்ள அஞ்ஞானத்தினால் திரண்டதான ஆகாரம் உடைய கன அகங்காரத்தோடும் கூடிய

வாசனையை மலின வாசனை என்பர். இந்த மலின வாசனை 1.லோக வாசனை 2. சாத்திர வாசனை 3.தேகவாசனை என மூவகைப்படும். இவைகளில் எந்தவொரு வாசனையாவது ஒருவனுக்கு உண்டாகியிருந்தால், அவனுக்கு அவ்வாசனையாகிய இடையூற்றின் வசத்தால் ஆத்மாவின் மெய்யுணர்வு உண்டாகின்றதில்லை.

லோகவாசனை:_ எவ்வாறு நடந்து கொண்டால் அனைவரும் நம்மைத் துதிசெய்வாரோ, ஒருவரும் நம்மை நிந்திக்க மாட்டாரோ, அவ்வாறு நடக்க வேண்டும் என்னும் துர் அபிமானம் உலக வாசனையாம்.

சாத்திர வாசனை: சாத்திரத்தின் கருத்தை அறியாமல் அச்சாத்திரங்களை ஓதுவது முதலிய வாசனைகள் சாத்திர வாசனை எனப்படும். இது 1.பாடவாசனை, 2.அர்த்த வாசனை, 3.அநுஷ்டான வாசனை என்னும் வேறுபாட்டால் மூவகையாகும்.

பாட வாசனை: ஆயுள் முழுவதும் வேத சாஸ்திர பாடங்களை அவைகளின் தாற்பரியம் அறியாமல் அத்தியயனம் செய்தல்.

அர்த்த வாசனை: வேத சாஸ்திரங்களின் தாற்பரியத்தை அறியாமல் வாழ்நாள் முழுமையும் அவ்வேத சாஸ்திரங்களின் அர்த்தத்தை அத்தியயனம் பண்ணுதல்.

அநுஷ்டான வாசனை: சுருதி ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்கள் எவையோ, அக்கர்மங்களை அநுஷ்டித்துக் கொண்டே வாழ்நாள் முழுவதும் கழித்தல்.

தேக வாசனை: பூதங்களின் கலப்பான இத்தூல தேகத்தில் உள்ள அபிமானம் தேகவாசனை எனப்படும். இது இருவகையாம். 1.தேகத்தை விஷயப்படுத்துவது. 2. தேக சம்பந்தியான குணங்களை விஷயப்படுத்துவது.

தேகத்தை விஷயப்படுத்துவது: நான் மனிதன், நான் மறையோன் என்று இவ்வாறான வாசனை.

தேக சம்பந்தியான வாசனை: இது இருவகைப்படும். 1.சாஸ்திரீயம் 2.லௌகீகம் இவ்விரண்டில் சாஸ்திரீய வாசனையும் இருவகையாம். 1. குணத்தைச் சம்பாதிப்பது 2.தோஷத்தைப் போக்குவது.

சாஸ்திர விகிதமாக் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடல், தேகத்தில் சற்குணங்களை வளர்த்துக்கொள்வதுமாய் உள்ள வாசனை குணத்தைச் சம்பாதிக்கும் வாசனை ஆகும். சௌசம், ஆசமனம் முதலியவற்றால் தேகத்தின் அழுக்குகளை நீக்கும் வாசனை தோஷத்தைப் போக்கும் வாசனையாம்.

தேக சம்பந்தியான வாசனையில் இரண்டாவதான லௌகீக வாசனையும் இருவகை ஆகும். முதலாவது:-எண்ணெய் குடித்தல், மிளகைத் தின்னுதல் முதலியவற்றால் தேகத்தில் சௌந்தர்ய முதலியவைகளைப் பண்ணிக்கொள்ளும் வாசனை. இரண்டாவது:- மலநிவர்த்தியைச் செய்யும் மருந்துகளாலும், நீராலும் தேகத்தின் மலங்களைக் கழிக்கும் வாசனை. (உடல் உபாதைகளைச் சரிசெய்து கொள்ளும் வாசனை)

111. அஞ்ஞானத்தின் நாசம்

தத்துவ ஞானத்தால் அஞ்ஞானத்தின் ஆவரண சத்தியும், தத்துவ ஞானத்தின் சம்ஸ்காரத்தால் அஞ்ஞானத்தின் விட்சேப சத்தி என்னும் அவித்தியாலேசமும் கெடுகின்றன என்பது சாஸ்திரார்த்தம்.

112. பிரதிபந்த நிவர்த்தகம்: (3)

1. ஞானம் 2. வைராக்கியம் 3. உபரதி

1. ஞான காரணம் : ஞானத்திற்கு அகம் பிரம்மாஸ்மி என்னும் தத்துவ ஞானம் உண்டாவதற்குக் காரணம் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பனவாம்.

ஞான சொரூபம் : ஞானத்திற்குச் சொரூபம் பிரத்தியக் ஆத்மாவையும் மூலாங்காரத்தையும் வேறாகப் பிரித்தறிவதேயாம்.

ஞான காரியம் : ஞானத்திற்குக் காரியம் அகங்காரத்தோடு கூடியுள்ள ஜீவனுக்கு (அதிகாரி புருஷன்) தான் சாட்சியாக விளங்குவதேயாம்.

ஞான அவதி: ஞானத்திற்கு அவதி தேகாத்ம பாவம் (தேகமே ஆத்மா என்னும் புத்தி) திடமாய் இருந்தமை போல, பிரம்மமே நான் என்னும் போதம் திடமாய் இருத்தலேயாம்.

2. வைராக்கிய காரணம் : வைராக்கியத்திற்குக் காரணம் மனைவி முதலிய விஷயங்களில் நிலையாமை (அநித்தியத்துவ) முதலிய குற்றங்களைக் காண்பதேயாம்.

வைராக்கிய சொரூபம் : வைராக்கியத்திற்குச் சொரூபம் அந்த மனைவி முதலிய விஷயங்களை எவ்விதத்தாலாயினும் விடுவதேயாம்.

வைராக்கிய காரியம் : வைராக்கியத்திற்குக் காரியம் அந்த மனைவி முதலிய விஷயங்களின் பின் செல்லாமையேயாம்.

வைராக்கிய அவதி: வைராக்கியத்திற்கு அவதி பிரம்மதேவனது லோக முதலிய பதவிகளை ஒரு சிறு துரும்பிற்குச் சமானமாகக் கருதுதலேயாம். (அவதி – எல்லை)

3. உபரதி காரணம் : உபரதிக்குக் காரணம் இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், (சவிகற்ப) சமாதி என்னும் அஷ்டாங்க யோகமேயாம்.

[இயமம்: 1. அகிம்சை (கொல்லாமை) 2. சத்தியம் (மெய்யுரை) 3. அஸ்தேயம் (திருடாமை) 4. பிரம்மச்சரியம் 5. ட்சமை (பொறை) 6. திருதி (தைரியம்) 7. தயை 8. ஆர்ஜவம் (நேர்மை) 9. மித ஆகாரம் 10. சௌசம் (சுத்தம்-உள்ளும் புறமும் தூய்மை) – இதன் பயன் துர்ச்சங்கத்தை விடுதலும் நற்சங்கத்தைக் கொள்ளலும் ஆகும்

நியமம்: 1. தவம் 2. சந்தோஷம் 3. ஆஸ்திக்கியம் (விசுவாசம்) 4. தானம் 5. ஈசுவர பூசை 6. சித்தாந்த (உபநிடத) வாக்கிய சிரவணம் 7. லஜ்ஜை (நாணம்) 8. மதி (சிரத்தை) 9. ஜபம் 10. விரதம்-- இதன் பயன் சன்மார்க்கப் பிரவிருத்தியும் துன்மார்க்க நிவர்த்தியும்

ஆசனம்: யோகாசனம். பிராணாயாமம்: மூச்சுப் பயிற்சி. பிரத்தியாகாரம்: சுபாவமாக விஷயங்களில் செல்லும் இந்திரியம் அனைத்தையும் நிரோதம் செய்வது (திருப்புதல் அதாவது தடுப்பது).

தாரணை: மறைப்பின்றி அந்தக்கரணம் நிலைத்தல் (தாரணை – நிறுத்துதல்)

தியானம்: மறைப்போடு கூடி சகுண அல்லது நிர்க்குணப் பிரம்மத்தில் செல்லும் அந்தக்கரண விருத்தியின் பிரவாகம்.

சமாதி: எழுந்த சம்ஸ்காரங்களின் விஷய சிந்தனைகளின் அடக்கமும் அடங்கிய சம்ஸ் காரங்களின் ஆத்ம சிந்தனைகளின் வெளிப்பாடும் உண்டாய் அந்தக்கரணம் ஏகாக்கிரமாய் பரிணமித்தல்]

உபரதி சொரூபம் : உபரதிக்குச் சொரூபம் மனம் ஒடுங்கி ஆத்மாவையே நோக்கி ஒருமுகமாய் இருத்தலேயாம்.

உபரதி காரியம் : உபரதிக்குக் காரியம் (நிர்விகற்ப சமாதியின் பெருக்கத்தால் இலௌகிக-வைதிகம் என்னும்) பாகிய கரும வியாபாரங்களில் மீண்டும் மீண்டும் செல்லும் மயக்கம் நீங்குவதேயாம். அதாவது பாகிய கரும வியாபாரம் இன்றி பிரத்தியக் ஆத்ம சொரூபத்தில் அழுந்தி இருப்பதே.

உபரதி அவதி: உபரதிக்கு அவதி சுழுத்தி அவத்தை அடைந்திருப்பவன் (எந்தக் காரியத்தையும் செய்ய நினையாது மறந்திருப்பது) போல, கருமம் அனைத்தினையும் செய்ய நினையாது மறந்திருப்பதேயாம். (அவதி – எல்லை)

(112.1) மோட்ச காரணம்: ஞானம், வைராக்கியம், உபரதி மூன்றினுள் ஞானமே மோட்ச காரணமாம். ஒருவனுக்கு வைராக்கியம் + உபரதி இரண்டும் கூடியிருக்க, ஞானம் கூடாதாயின், மோட்சம் சித்திப்பதில்லையாம். ஆனால் மகா சுகஸ்தானமாய் உள்ள பிரம்மதேவனது லோகத்தை அடைதல் சித்திப்பதாம்.

ஒருவன் ஞானம் மாத்திரம் ஒன்றை அடைந்து வைராக்கியம்-உபரதி இரண்டினையும் அடையாதிருப்பானாயின், தேகாந்தத்தில் மோட்சத்தைப் பெறுவன். அந்த மோட்சம் சித்திக்கும் அளவும் அவனுக்கு அவனது தேகம் உண்டாவதற்கு அமைந்த பிராரப்த கருமத்தால் உண்டாகின்ற சுக-துக்க அனுபவம் உண்டாதல் தவறாது.

அதனால் மோட்ச காரணம் பிரம்ம ஞானமேயாம். வைராக்கியம், உபரதி அன்று.

113. அஞ்ஞான பூமிகள்: (7)

(பூமி - நிலை)

1. பீஜ ஜாக்கிரம்: (தனி வித்து நனவு) சிருஷ்டியின் ஆரம்பத்தில் அல்லது சாக்கிரத்தின் ஆரம்பத்தில் மாயையோடு கூடிய சேதனத்தினின்றும் வெளிப்பட்ட ஆபாச சேதனமே (சீவனே) பிரதம அவத்தையான பீஜ சாக்கிரம். (பீஜம், வித்து, விதை, மூலம் என்பன ஒரு பொருள் சொற்கள்)

2. ஜாக்கிரம்: (நனவு) இந்த ஆபாச சேதனத்தில் முன்னில்லாத அக-மமதை (யான் எனது என்னும் தன்மை)கள் அங்குரம் (முளை) போலச் சூக்குமமாக எழுதல் சாக்கிரம்.

3. மகா ஜாக்கிரம்: (பெருநனவு) இந்த ஆபாச சேதனத்தில் அக மமதைகள் பிறவிதோறும் இடைவிடாது சம்ஸ்கார வாயிலாக வந்து திடதரமாய் உண்டாதலே மகா சாக்கிரம்.

4. ஜாக்கிர சொப்பனம்: (நனாக் கனவு) இச்சேதனம் சாக்கிர அவத்தையில் அக மமதை காரணமாக முன்னர்த் தான் அறிந்துள்ள விஷயத்தைப் பற்றியாவது பூரணமாய் அறியாத விஷயத்தைப் பற்றியாவது அதனதன் மயமாய் நின்று மனோராச்சியம் (வீண் எண்ணம்) செய்தல் சாக்கிர சொப்பனம்.

5. சொப்பனம் (கனவு): இச்சேதனம் உண்டு உறங்கி விழித்து அற்ப காலத்தில் (தமது உற்பத்திக்கு இயன்ற கால தேசங்களைப் பெறாத) அநேக விஷயங்களைக் கண்டறிந்தோம் என்று சிந்திப்பதே சொப்பனம்.

6. சொப்பன ஜாக்கிரம்: (கனா நனவு) இச்சேதனம் பூர்வம் சொப்பனத்தில் கண்டு மறந்த விஷயங்களை மீண்டும் சிந்தித்து நினைப்பதே சொப்பன சாக்கிரம்.

7. சுழுத்தி: (ஆழ்துயில்) மேற்கூறிய ஆறு அவத்தைகளும் நீங்கப்பெற்று, மேல் அனுபவிக்கத் தக்க சுப அசுப கருமங்களின் சம்ஸ்காரம் இருத்தற்கு இடமாகிய அஞ்ஞான வடிவ இருளால் மூடப்பட்டுள்ள நிலைமையே சுழுத்தியாம்.

<u>க்ஷீண சுழுத்தி:</u> புருஷன் எதினின்றும் விழிப்பித்தல் இன்றித் தானே விழித்துக் கொள்கின்றானோ அது க்ஷீண சுழுத்தியாம்.

காட சுழுத்தி: புருஷன் எதினின்றும் விழிப்பித்தால் அன்றி விழிக்கிறதில்லையோ அது காட சுழுத்தியாம்.

சாக்கிரம்: 1. வர்த்தமான (நிகழ்கால) சாக்கிரத்தில் உண்டாகும் சொரூப சாட்சாத்காரம் சாக்கிர சாக்கிரம். 2. சாக்கிரத்தில் உண்டாகும் சென்ற அல்லது இனிவரும் விஷயங்களைச் சிந்தித்தலாகிய மனோராச்சியம் சாக்கிர சொப்பனம். 3. சாக்கிரத்தில் பிராந்தியால் உண்டாகும் ஜடசொருபமாகிய விருத்தி சாக்கிர சுழுத்தி.

சொப்பனம்: 1. யதார்த்தமாகிய பொருளைச் சொப்பனத்தில் காண்டல் சொப்பன சாக்கிரம். 2. சொப்பனத்தில் கயிற்றில் பாம்பு முதலிய பிராந்திகளைக் காண்டல் சொப்பன சொப்பனம். 3. கண்ட சொப்பனத்தின் மறதி சொப்பன சுழுத்தி.

சுழுத்தி: 1. சாத்வீக விருத்தி பூர்வமாகிய சுக சுழுத்தி சுழுத்தி சாக்கிரம். 2. இராஜச விருத்தி பூர்வமாகிய துக்க சுழுத்தி சுழுத்தி சொப்பனம் 3. தாமச விருத்தி பூர்வமாகிய காட (ஆழ்ந்த) சுழுத்தி சுழுத்தி சுழுத்தியாம்.

114. ஞான பூமிகள்: (7)

1. சுபேச்சை: ஒருவன் யான் இதுகாறும் ஆத்ம-அனாத்ம விவேகம் இல்லாத மூடனாய் இருந்தமைக்குக் காரணம் யாது? இனி அதனைச் வேத வாக்கியத்தாலும், ஆசிரியர் உபதேசத்தாலும் அறிவேன் என்று கருதுவதே. (சுபேச்சை- நன்மையை விரும்புதல்)

2. விசாரணை: அதன் பின், அவனுக்கு வேத வாக்கியத்தாலும், ஆசிரியரின் உபதேசத்தாலும் சிறிது தோன்றும் (ஞான) வைராக்கிய பலத்தால் உண்டாகும் சதாசாரப் பிரவிருத்தியே (சீவ பிரமங்களின் அபேதத்தை உணர்த்தும் வேதாந்த வாக்கியங்களின் பொருள்களை யுத்தியினால் ஆராய்ந்து நோக்குதலே) விசாரணையாம்.

3. தநுமானசி: அப்பால் அவனுக்குச் சுபேச்சை, விசாரணைகளின் அப்பியாச பலத்தால் மனம் விஷயப் பற்று நீங்கிச் சூக்குமத் தன்மை அடைவது அதாவது சித்தம் சிறுகல் தநுமானசியாம். (இவ்வாறுள்ள மனம் தான் சமாதி செய்தற்கு உரியது)

4. சத்துவாபத்தி: (சத்துவ + ஆபத்தி) அப்பால் அவன் மனம் சுபேச்சை-விசாரணை-தநுமானசி ஆகிய மூன்றின் அப்பியாச

பலத்தால் சாக்கிரப் பிரபஞ்சத்தைச் சொப்பனப் பிரபஞ்சம் போல்வது என்று உள்ளவாறு உணர்ந்து, ஆத்மாவே சத்தாக இருப்பது என்று சிந்தனை செய்வது. *(நான்காம் பூமியாகிய ஞானத்திற்கு அதிகாரிகள் இரு வகையாவர். (அ) கிருதோபாசனன்: ஞானத்திற்கு முன் உபாசனைப் பூரணமாகச் செய்தவன். நல்ல வைராக்கியாதி சாதனங்களோடு கூடியிருப்பவன். ஞானத்திற்குப் பிறகு சொற்ப அப்பியா சத்தால் சடுதியாக ஐந்தாவது முதலிய பூமியில் ஏறுகின்றான்.*

(ஆ) அகிருதோபாசனன்: ஞானத்திற்கு முன் உபாசனை செய்யாதவன். இவனிடத்தில் எல்லா சாதனங்களும் வெளிப்படையாகத் தோற்றுகிறதில்லை. ஆனால் ஒன்றிரண்டு வெளிப்படையாகவும், மற்றவை மறைமுகமாகவும் இருக்கும். ஆதலால் அவன் புத்தி உடையவனாய் இருந்தால் நான்காம் பூமியாகிய தத்துவ ஞானத்தை அடைகின்றான். ஆனால் வெகுகால அப்பியாசத்தால் எப்போதாவது ஐந்தாவது முதலிய ஏதேனும் ஓர் பூமியில் ஆருடன் ஆகின்றான். சீக்கிரத்தில் ஆகிவிடுகிறதில்லை)

5. அசம்சத்தி: அப்பால் அவன் பிரபஞ்சத் தோற்றம் இன்றிச் சுழுத்தி அவத்தை அடைந்தவனைப் போலச் சின்மாத்திர சொருபமாக நிலைபெற்றிருத்தல். (சம்சத்தி – சம்பந்தம். அது இல்லாமை அசம்சத்தி. அசங்கம், அசம்சத்தி ஒருபொருள் சொல்)

6. பதார்த்தாபாவனை: அப்பால் அவன் (சுத்த-அசுத்த) வாசனை அனைத்தும் நீங்கக் காட சுழுத்தி அடைந்தவனைப் போல ஆத்மானந்தத்தின்கண் அடங்கி இருப்பதே. (பதார்த்த அபாவனை) (பதார்த்தம் - வெளி + உள் பதார்த்தம்)

7. துரியகாமி: அப்பால் அவன் ஒன்று உண்டு என்றும் பிறிதொன்று இல்லை என்றும் வியவகாரம் செய்யாதும், தேகமே யான் என்னும் வியவகாரமாகிய அகங்கிருதியும், தேகம் யான் அன்று என்னும் வியவகாரமாகிய நிரகங்கிருதியும் தோன்றாதும், சின்மாத்திரமாய் உள்ள அத்வைத நிலையில் வெறும் கடம்போல அகத்தும் புறத்தும் சூனியமாய் இருத்தல்.

வாசனையின் விலயம்.

முதல் பூமி	கெட்ட சகவாசம் நீங்கி பிரம்ம ஞானம் விரும்பும் இச்சை	தத்துவ ஞானத்திற்கு சாதனம்	சாதன சதுட்டய பூமி (ஜிஞ்ஞாசு)	சாக்கிரம்
2-ஆம் பூமி	வேதாந்த தத்துவங்களை சிர வணம்செய்து மனனம் செய்தல்		சிரவண மனன பூமி(ஜிஞ்ஞாசு)	சாக்கிரம்
3-ஆம் பூமி	நிதித்தியாசனம் செய்து மனைவி வீடுகளில் பற்று விடல்		நிதித்தியாசன பூமி(ஜிஞ்ஞாசு)	சாக்கிரம்
4-ஆம் பூமி	தன்னைஅறிதல் ஆத்மசாட் சாத் காரம் உண்டாதல்	சீவன்முத்தி விதேக முத்திக்கு சாதனம்	பிரம்ம வித்து பூமி	சொப்னம்
5-ஆம் பூமி	பிரம்மத்தில் நிலைக்க நாம ரூபங்களை நினையாதிருத்தல்	சீவன் முத்தியின் விலட்சணானந் தத்திற்குச் சாதனம்	பிரம்ம வரன் பூமி	சுழுத்தி
6-ஆம் பூமி	அத்துவிதானந்தம் மேலிட திரிபுடி நீங்கிவிடல்		பிரம்ம வரியான் பூமி	துரியம்
7-ஆம் பூமி	ஆன்மாவில் லயித்து மோன நிட்டையில் இருத்தல்		பிரம்ம வரிட்டன் பூமி	துரியா தீதம்

115. மன நிக்ரகம்: (2)

(மனதைக் கட்டுப்படுத்துதல்)

1.கிரம நிக்ரகம் 2.ஹட நிக்ரகம்

கிரம நிக்ரகம்: அத்யாத்ம வித்தையின் பிராப்தி, சாது சங்கம், மலின வாசனையின் தியாகம், பிராணன்களின் நிரோதம் என்னும் இந்த நான்கு யுத்திகளால் மனதின் நிக்ரகம் செய்தல் கிராம நிக்ரகம் எனப்படும். அதுவே சிறந்ததாம்.

ஹட நிக்ரகம்: சிறந்த குருவின் யுத்தி இன்றி நடத்தல், கண் முதலிய புலன்களின் நிரோத மாத்திரத்தால் மன நிக்ரகம் செய்தல் ஹட நிக்ரகம் எனப்படும். இம்முறையில் மனம் எதனால் இந்திரியங்கள் போல கிரகிக்க திறன் இல்லை என்பதாலும், அதன் கோளக இருதய கமலத்தை நிரோதம் செய்வதற்குப் பலம் இல்லையாதலாலும், ஆசாரியர்களால் இந்த முறை கண்டிக்கப்பட்டிருப்பதாலும் முமுட்சுகள் இதனை விட்டுவிட வேண்டியதாம்.

(115.1) மன நாசம்: 1. உருவ நாசம் 2. அருவ நாசம்

உருவ நாசம்: தனது இயற்கை வடிவமான சத்துவ குணமாய் மனமானது சேடித்து நிற்கத் தமோகுணமும் இரசோ குணமும் நசித்து விடுதல் மனதின் உருவ நாசமாம். இது சீவன் முத்தரிடத்தில் பொருந்தி இருப்பது.

அருவ நாசம்: அந்த சத்துவ குணமும் சூக்கும தேகம் உலையிரும்புண்ட நீர்போல் துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தில் நசிக்கும் போது நசித்து விடுதலே மனதின் அருவ நாசம். இது விதேக முத்தரிடத்தில் பொருந்தி இருப்பது.

116. சமாதி

1.சவிகற்ப சமாதி. 2.நிருவிகற்ப சமாதி. இவ்விரண்டில் சவிகற்ப சமாதியானது சப்தாநுவித்தம் (சப்த அநுவித்தம்), சப்தாநநுவித்தம் (சப்த அநநுவித்தம் - சப்த அன்அநுவித்தம்) என இரண்டு வகையாகும். இவைகளில் அகம்பிரம்மாஸ்மி என்னும் சப்தத்தோடு கூடியது சப்தாநுவித்த சமாதியாகும். (திரிபுடியாகிய விகற்ப சகிதமாக இருத்தலால் சவிகற்ப சமாதி எனப்பெயர்)

சப்த ரகிதமாய் (சப்தத்தோடு கூடாததாய்) உள்ள சப்தாநநுவித்த சமாதியாகும். இந்த சப்தாநநுவித்த சவிகற்ப சமாதியானது 1.பாகிய திருசியாநுவித்தம் 2.பாகிய சத்தாநுவித்தம் 3.ஆந்தர திருசியாநுவித்தம் 4.ஆந்தர சத்தாநுவித்தம் என நால்வகை. நிருவிகற்ப சமாதியானது பாகிய நிருவிகற்பம், ஆந்தர நிருவிகற்பம் என இரண்டாம்.

(116.1) சட்சமாதி: (6)

பாகிய திருசியாநுவித்த சவிகற்ப சமாதி: கடம்-படம் முதலிய விஷய கூட்டத்துள் யாதாவது ஒன்றனைக் குறித்துக்கொண்டு, அதனது நாம ரூபமான மாயாம்சங்கள் இரண்டினையும் மிச்சமில்லாமல் நீக்கி, அதன் கண்ணுள்ள அஸ்தி-பாதி-பிரியம் என்னும் சச்சி தானந்தமாகிய பிரம்மாம்சத் திரயங்களை விடாது அநுசந்தானம் செய்வதே இந்த சமாதி. (அஸ்தி – இருத்தல், பாதி – விளங்கல், பாகியம் - வெளி, திருசியம் - காணப்படு பொருள், அநுவித்தம் - கூடியது. திருசியாநுவித்தம் = திருசிய + அநுவித்தம்)

பாகிய சத்தாநுவித்த சவிகற்ப சமாதி: அகண்ட சச்சிதானந்த அத்வீதீய சொருபமாய் இருப்பதே பிரம்மம் என்று உணர்ந்து அதனைத் தியானம் செய்வது இந்த சமாதி. (சத்த + அநுவித்தம். சத்தம் = அகம்பிரம்மாஸ்மி என்னும் மகாவாக்கியம்)

பாகிய நிர்விகற்ப சமாதி: முதல் மற்றும் இரண்டாம் சமாதிகளின் அப்பியாச பலத்தால் தோன்றும் பிரம்மானந்த அனுபவத்தில் மனம் சென்று ஒடுங்கி நிச்சலமாய், அலையின்றிய சமுத்திரம் போல இருப்பதே இந்த சமாதி. (நிர்விகற்பம்-வேறுபாடின்மை)

ஆப்பியந்திர திருசியாநுவித்த சவிகற்ப சமாதி: மனத்தின் கண்ணுள்ள காமக்குரோத முதலிய திருசியங்களுக்கு நான் சாட்சியாக இருக்கின்றேன் என்று ஆத்மாவைத் தியானம் செய்வது இந்த சமாதி.

ஆப்பியந்திர சத்தாநுவித்த சவிகற்ப சமாதி: அசங்க சச்சிதானந்த சுவயம்பிரகாச அத்வைத சொருபமே நான் என்று தன்னைத் தியானம் செய்வது இந்த சமாதி.

ஆப்பியந்திர நிர்விகற்ப சமாதி: மேற்கூறிய 4 மற்றும் 5-ஆம் சமாதிகளின் அப்பியாச பலத்தால் சுவாநுபவரசம் (ஆத்மானந்த அனுபவம்) உண்டாவதாம். அதனால் மேற்சொன்ன அவ்விரண்டு சமாதிகளையும் விட்டு அசைவில்லாத தீபம் போல நிச்சிந்தையாக (மனோ விருத்தி சிறிதும் இன்றி) இருப்பதே இந்த சமாதி. எல்லாவற்றிலும் உள்ளாகிய அத்வைதப் பிரம்மத்தைச் சிந்தித்தல் இவ்வித சமாதி. இது 1.சாட்சாத்கார வடிவம் 2.அசாட்சாத்கார வடிவம் என்னும் இருவகைப் பேதம் உடையது.

குருவிடமிருந்து அர்த்தத்தோடு கூடிய மகாவாக்கியத்தின் சிரவண மனன நிதித் தியாசன வடிவ விசார பூர்வமாக அத்வைதப் பிரம்மத்தைச் சிந்தித்தலால் பிரம்ம ஆத்மாவின் ஏகத்துவம் அபரோட்சமாக உண்டாவது சாட்சாத்கார வடிவ ஆந்தர நிர் விகற்ப சமாதியாம்.

விசாரத்தினால் அத்வைதப் பிரம்மத்தின் சிந்தனையாலும், ஏகத்துவத்தின் பரோட்சமா அறிவதால் உண்டாவது அசாட்சாத்கார வடிவ சமாதியாம். இந்த சமாதி முதலாவதான சாட்சாத்கார வடிவ சமாதிக்கு சாதனமாம். ஆதலால் அது நிதித் தியாசனத்தில் அடங்கும். வேறு சாதனம் அன்று.

(சாட்சாத்காரம் மற்றும் அசாட்சாத்கார நிருவிகற்ப சமாதிகளுக்கு வேறு விளக்கமும் சொல்லப்படுகிறது. ஆந்தர நிருவிகற்ப சமாதி 1.அத்வைத பாவனா ரூபம் 2.அத்வைத அவஸ்தான ரூபம் என இருவகைப்படும்.

அத்வைதப் பிரம்மாகாரம் ஆகிப் பிரம்மத்தை ஞாதம் பண்ணாமல், பாவனா மாத்திரமாக இருக்கின்ற அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தி சகித நிருவிகற்ப சமாதி அத்வைத பாவனா ரூப நிருவிகற்ப சமாதி எனப்படும். இந்த சமாதியின் அப்பியாச மிகுதியால், பிரம்மாகார விருத்தியும், காய்ந்த இரும்பின் மீது தெளிக்கப்பட்ட ஜலத் திவலை அந்த காய்ந்த இரும்பிலேயே லயமாகி விடுவது போல, அத்தியந்தப் பிரகாச மயமான பிரம்மத்தில் தானே லயமாகி விடுகிறது, ஆதலால் விருத்தி லயமாய் உள்ள நிருவிகற்ப சமாதி அத்வைத அவஸ்தான ரூப நிருவிகற்ப சமாதி எனப்படும். முதலாவது சாதனமும் இரண்டாவது பலமும் ஆகும்.)

சாட்சாத்கார சமாதி ஒரு கணத்தில் உதயமாகின்றது. இரண்டாவது கணத்தில் நிலைத்து ஆவரணத்தைக் கெடுக்க ஆரம்பிக்கின்றது. மூன்றாவது கணத்தில் ஆவரணம் நாசமாகின்றது. அதனால் ஜீவன் முத்தி உண்டாகின்றது. முதலில் ஒரு கணமே இருப்ப தாயினும் ஆவரணத்தைக் கெடுக்கின்றது. ஆதலால் வித்துவானிடத்தில் மறைந்துள்ள வைகளைக் காணும் உண்மை உணர்ச்சி முதலிய சித்தி உண்டாகுவதில் ஐயம் இல்லை. கடத்தினை நேரடியாகக் கண்ட அப்பொழுதே கடத்தின் ஆவரணம் கெடுகின்றது, அதன் பொருட்டு பின் புத்தியைத் தடுப்பதால் பிரயோசனம் இல்லை. அவ்வாறே பிரம்மத்தின் ஆவரணம் நாசமானபின் அடத்தினால் விருத்தியைத் தடுப்பதால் பிரயோசனம் இல்லை. இவ்வாறு உண்டான பின்னரும், ஏழாவது பூமி பரியந்தம் எந்த விருத்தி நிரோதம் செய்யப்படுகின்றதோ, அந்த நிரோதம் வாசனாசயம் மனோநாசம் வாயிலாக, மனதின் தூலத்தன்மையின் நிவிருத்தி வாயிலாக, ஜீவன் முத்தியின் விலட்சணானந்தத்திற்கு ஏதுவாம். ஆவரண பங்கத்திற்கு ஏதுவன்று. இவற்றால் சமாதி நிதித்தியாசனத்தில் அடங்குகிறது.

(116.2) சமாதிக்கு உதாரணம்: அக்கினியின் உபாதான காரணம் வாயுவாம். அதனால் அக்கினியின் உற்பத்தி ஸ்திதி நாசங்கள் வாயுவின் அதீனமாம். ஆகையால் வாயு முழுதும் இல்லாவிட்டாலும் தீபம் நிலைக்காது. இதனால் அசைவு வடிவமாக வாயுவில்லாததும் சூக்கும (அசைவற்ற) வடிவமாக வாயு உள்ளதுமாகிய அறை முதலிய இடங்களில் தீபம் அசையாதிருக்கின்றது. அதுபோல சமாதியிலும் அந்தக்கரணம் முழுதும் இல்லா விட்டால், தேகம் நிலையாமல் விழுந்துவிடும். ஆகையால் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் விருத்திகளை விட்டுச் சூக்கும (மூலாந்தக்கரண) வடிவமாகச் சமாதியில் அந்தக்கரணம் நிலைத்திருக்கின்றது. (சமாதி காலத்தில் விருத்திகள் இருக்கின்றன. எழுந்த காலத்தில் அந்தச் சமாதியின் நினைவு உண்டாகின்றதால். நித்திரையைப் போல. எது எது நினைக்கப்படுகின்றதோ அது அது முன் அனுபவிக்கப்பட்டதாம்)

(116.3) நிருவிகற்ப சமாதிக்கு விக்கினங்கள்: (4)

1. லயம் 2. விட்சேபம் 3. கஷாயம் 4. ரசாஸ்வாதம் என்பன.

லயம்: சோம்பலால் அல்லது நித்திரையினால் விருத்தி இல்லாமல் இருத்தற்கு லயம் என்று பெயர். அதனால் சுழுத்திக்குச் சமானமான அவத்தை உண்டாக, சமாதி சித்திக்காது.

விட்சேபம்: தினந்தோறும் பழகிய சாக்கிர சம்ஸ்கார பலத்தால் அற்ப காலமேனும் ஏகாக்கிரமாய் இருக்க முடியாமையாலும், சேதனம் அதிசூக்குமம் ஆனபடியாலும் பிரம்மானந்தத்தை அனுபவியாமல் விஷயங்களையும் விஷய போகங்களையும் கருதி விருத்தி பகிர்முகமாய் வெளிவந்து விடுவது விட்சேபம் ஆகும்.

கஷாயம்: ராகாதி தோஷத்தினைக் (ராகத் துவேஷ முதலியவற்றின் சம்ஸ்காரத்தைக்) கஷாயம் என்பர். இது பாகியம் மற்றும் ஆந்தரம் என இருவகைப்படும். புத்திரன், மனைவி, தனம் முதலிய விஷயங்கள் இருப்பின் அவை பாகியமாம். சென்ற காலத்திய அல்லது வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை வடிவான மனோராச்சியம் ஆந்தரம் எனப்படும்.

இவைகள் இருப்பின் சமாதி சம்பவிக்காது. காரணம்: அந்தக்கரணத்திற்கு 1. ஷிப்தம் (உழல்நிலை) 2. மூடம் (உறக்கநிலை) 3. விஷிப்தம் (இருமைநிலை) 4. ஏகாக்கிரம் (ஒருமைநிலை) 5. நிருத்தம்(தன்னிலை) என ஐந்து பூமிகள் (அவத்தைகள்) உள்ளதால் சமாதி சித்திக்காது.

மூவாசைகள் முதலிய ரஜோ குணத்தின் பரிணாமங்களாகிய திட அனாத்ம வாசனையை ஷிப்தம் என்பர். நித்திரை, சோம்பல் முதலான தமோகுண பரிணாமங்களை மூடம் என்பர். (இவ்விரண்டிற்கும் சமாதியில் அதிகாரம் இல்லை). தியானித்தில் உள்ளே சென்ற சித்தம் ஒருகாலத்தில் வெளியே செல்லுதல் விஷிப்தம் எனப்படும் (இந்த அந்தக்கரணத்திற்குத் தியானத்தில் அதிகாரம் இருக்கின்றது). அந்தக்கரணத்தின் அதீத பரிணாமமும், நிகழ்கால பரிணாமமும் சமனாகாரம் ஆவது ஏகாக்கிரம் ஆகும். அந்த ஏகாக்கிரத் தன்மையின் விரிவை நிரோதம்(நிருத்தம்) என்பர். (கடைசி இரண்டும் சமாதி காலத்தில் உண்டாவதாகும்).

ரசாஸ்வாதம்: சமாதியில் விட்சேபத்தால் உண்டான துக்க நிவிருத்தியினால் எந்த ஆனந்தம் உண்டாகின்றதோ அதன் அனுபவத்திற்கு ரஸாஸ்வாதம் எனப்பெயர்.

(116.4) விக்கின நிவர்த்தி: லயத்துக்குக் காரணமாகிய சோம்பலானது அசீரணம், அதிக போஜனம் தேக சிரமங்களால் உண்டாவதால், சரியான அளவு உணவு, சரியான அளவு தொழில் போன்றவற்றை செய்தலும், நித்திரையானது குறைவற நித்திரை செய்தல், விழிப்புணர்வுடன் இருத்தல் போன்றவற்றை செய்தலும் லய நிவர்த்திக்கு ஏதுவாகும்.

விட்சேப நிவர்த்தி--- போக்கிய விஷயங்களில் தோஷ திருஷ்டி, சாக்கிர-சொப்பனம் இரண்டும் சுழுத்தியில் இல்லாதது போல் அசத்து ரூபமாகிய போக்கிய விஷயங்கள் யாவும் சத்து வடிவ பிரம்மத்தில் இல்லை என்பதாகிய வாத திருஷ்டி, விஷயங்களில் மித்தியா திருஷ்டி, நுரை-அலை-குமிழி-திவலை அனைத்தும் கடலே என்பது போல் காணப்படும் பிரபஞ்சம் அனைத்தும் நாமே எனக்காண்கின்ற தன்மய திருஷ்டி இவைகளால் உண்டாகும்.

கஷாய நிவர்த்திக்கு விஷயங்களில் தோஷதிருஷ்டியோடு கூடிய பிரயத்தனம் தேவை

அதி சூக்குமமாகச் சித்த சலனம் இன்றி யூகிக்கின்ற விவேகத்தினாலும், இந்த அவத்தையில் உண்டாகும் ஆனந்தத்தைத் தியாகம் செய்வதினாலும் ரசாஸ்வாதத்திற்கு நிவிர்த்தி உண்டாகும்.

117. ஞான பல சதுஷ்டயம்: (4)

1. துக்காபாவம் 2. சர்வகாமாப்தி 3. கிருத கிருத்தியத்துவம் 4. பிராப்தப் பிராப்பியத்துவம் என்பன.

(117.1) துக்காபாவம் : 1. இகலோக துக்காபாவம் 2. பரலோக துக்காபாவம் என்பன. (துக்க +அபாவம்)

இகலோக துக்க அபாவம்: (1)தூல தேகத்தில் உள்ள அழகின்மை, துர்க்கந்தம் (கபம்-குன்மம்-சயம்-சூலை முதலிய) வியாதி முதலியனவும், (2)சூக்கும தேகத்தில் உள்ள காமக்குரோத முதலியனவும் (3)காரண தேகத்தில் உள்ள அவ்வாதி வியாதிகளுக்குப் பீஜமாய (வாசனை என்னும்) சம்ஸ்காரமும் இகலோக துக்கமாம்.

ஞானிக்கு ஆத்மஞானத்தை அடைந்ததன் பின்னர், இந்த இகலோக துக்கம் மூன்றும் தோன்றாது இருத்தலே துக்காபாவமாம்.

பரலோக துக்கபாவம்: புண்ணியம் எப்போது உண்டாகுமோ? பாவம் எப்போது ஒழியுமோ? என்று கருதுகின்ற சிந்தனையே பரலோக துக்கம். ஞானிக்கு இவ்விதமான சிந்தனை அவனிடத்துத் தோன்றாது இருத்தலே பரலோக துக்காபாவமாம்.

(117.2) சர்வ காமாப்தி: சார்வ பௌமன் முதல் இரணியகருப்பன் ஈறாக உள்ளவர் பதினோரு பேர்கள் ஆவர். அவர்கள் 1.சார்வ பௌமன் (சர்வ பூமியையும் ஆளும் சக்கர வர்த்தி) 2.மநுட கந்தருவன் 3.தேவ கந்தருவன் 4.பிதிரர் 5.ஆஜாந தேவர் 6.கரும தேவர் 7.முக்கிய தேவர் 8.இந்திரன் 9.பிருகஸ்பதி 10.பிராஜாபதி 11.இரணிய கருப்பன். இவர்களது ஆனந்தம் முறையே நூறு நூறு மடங்கு அதிகமாக இருப்பதாம். ஞானி யான் எனதென்னும் செருக்கு இல்லாது மேற்சொன்ன ஆனந்தம் அனைத்தையும் அடைந்திருப்பதனால் அவனுக்கு வேற்றுமையில்லாத அகண்டானந்த சித்தி உண்டாவதே சர்வகாமாப்தி ஆகும். (சர்வ+காம+அப்தி. சர்வ ஆனந்தத்தையும் அடைவது)

(1) சார்வபௌமன்: யௌவனனாய், ரூபவானாய், வித்தை-அரோகம்-திடசித்தம் என்பனவற்றை உடையவனாய், சேனா சமுகங்களுடன் கூடிச் சர்வப் பிருதிவியையும் பரிபாலனம் செய்பவன். மனித சுகத்திற்கு முடிவு இவனிடத்தேயாம்.

(2) மநுட கந்தர்வன்: இந்தக் கற்பத்திலே (சிருஷ்டியிலே) மனிதனாய் இருந்து புண்ணிய விசேஷத்தால் கந்தர்வ பதம் அடைந்தவன். இவன் சார்வ பௌமனிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவன் ஆவன்.

(3) தேவ கந்தர்வன்: முன் கற்பத்தில் செய்த புண்ணிய விசேஷத்தால் இந்தக் கற்பத்தின் ஆதியிலேயே கந்தர்வத் தன்மை அடைந்தவன். இவன் மநுட கந்தர்வனிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவன் ஆவன்.

(4) பிதிரர்: தமது உலகின்கண் வெகுகால அளவு வசிக்கின்ற அக்கிநிஷ்வரத்தர் முதலியோர் பிதிரர். இவர் தேவ

கந்தர்வனிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(5) <u>ஆஜாந தேவர்:</u> கற்பத்தின் ஆதியிலேயே தேவத் தன்மை அடைந்தவர். இவர் பிதிரரிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(6) <u>கரும தேவர்:</u> இந்தக் கற்பத்தில் அசுவமேதாதி கருமங்களைச் செய்து, மகத் பதத்தை அடைந்து, ஆஜாந தேவரால் சேவிக்கப்பட்டிருப்பவர். இவர் ஆஜாந தேவரிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(7) <u>முக்கிய தேவர்:</u> அஷ்ட வசுக்கள், துவாதசாதித்தியர், ஏகாதச ருத்திரர் என்னும் இம்முப்பத்தொருவரும் முக்கிய தேவர். இவர் கரும தேவரிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(8) <u>இந்திரன்:</u> தேவராஜன். இவன் முக்கிய தேவரிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவன் ஆவன்.

(9) <u>பிருகஸ்பதி:</u> தேவ குரு. இவர் இந்திரனிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(10) <u>பிரஜாபதி:</u> விராட்டு. இவர் பிருகஸ்பதியிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(11) <u>இரணியகருப்பன்:</u> பிரம்மதேவர். இவர் பிரஜாபதியிலும் நூறுபங்கு அதிகமான சுகம் உடையவர் ஆவர்.

(117.3) **கிருத கிருத்தியத்துவம்:** அந்த ஞானிக்குத் தத்துவ ஞானம் உண்டாவதற்கு முன்னர் இவ்வுலக சம்பந்தமான இஷ்ட பிராப்தி அநிஷ்ட நிவிர்த்தியின் பொருட்டு உழவு-வாணிப முதலியனவும், சுவர்க்க முதலிய புண்ணிய லோகங்களை அடைதற்காக யாகம் உபாசனை முதலியனவும், மோட்ச சாதனமாய் உள்ள தத்துவ ஞான சித்தியின் பொருட்டு சிரவண மனன முதலியனவும் செய்யத்தக்தனவாய் இருந்தன. அவன் தத்துவ ஞானத்தால் பிரம்மானந்தத்தை அடைந்த பின்னர் அவனுக்கு மேற்சொன்ன மூன்றும் செய்ய வேண்டியது இல்லையாம். அதனால் ஞானி இங்ஙனம் இருத்தலே கிருத கிருத்தியத்துவம். (கிருத கிருத்தியத்துவம் - செய்தற்குரிய செயல் அனைத்தையும் செய்து முடித்தமையாம்)

(117.4) பிராப்தப் பிராப்பியத்துவம்: விசிட்ட புண்ணிய பரிபாகம் (சிறப்புடைய புண்ணிய கருமம் தன் பயனைத் தருதற்குப் பக்குவமாய் இருத்தல்), முமுட்சுவத்துவம், குருபாத சேவை, வேதாந்த சாத்திர சிரவண மனன நிதித்தியாசனம், ஆத்ம அனாத்ம விவேகம், அஞ்ஞான நிவர்த்தி, ஆத்ம சாட்சாத்காரம், சம்சார துக்க நிவர்த்தி, நிஜானந்தப் பிராப்தி என்பன ஞானிக்கு முறையாக உண்டாதலே பிராப்தப் பிராப்பியத்துவம் (அடைய வேண்டிய அனைத்தையும் அடைதல்) ஆகும்.

118. ஞானியின் லட்சணம்

தூல அந்தக்கரண வடிவ உபாதானத்தின் சம்பந்தம் இருக்க அநுகூல பதார்த்த வடிவ நிமித்தத்தின் சம்பந்தம் உள்ள காலத்து இடைவிடாத் தன்மையாக இராகம் இல்லாமை அதிடராகம் எனப்படும். இதுவே ஞானியின் லட்சணம். இந்த லட்சணத்திற்கு இது பரிட்சை:-

1. அந்தக்கரணத்தின் சம்பந்தமோ அஞ்ஞானிக்கும் இருக்கின்றது, ஆனால் இராகத்தின் இன்மை இல்லை.

2. இராகத்தின் இன்மையோ எல்லோருக்கும் சுழுத்தியிலும் இருக்கின்றது, ஆனால் அங்கு அந்தக்கரணத்தின் சம்பந்தம் இல்லை.

3. சூக்கும (சம்ஸ்கார வடிவ) அந்தக்கரணத்தின் சம்பந்தமும் இராகத்தின் அபாவமுமோ சுழுத்தியிலும் இருக்கின்றது. ஆனால் அங்கு தூல அவத்தையுடைய அந்தக்கரணத்தின் சம்பந்தம் இல்லை.

4. தூல அந்தக்கரணத்தின் சம்பந்தம் இருக்க ஒருகால் உத்தியோக காலத்தில் இராகத்தின் அபாவமோ அஞ்ஞானிக்கும் இருக்கின்றது. ஆனால் அங்கு அநுகூல பதார்த்தத்தின் ஸ்மிருதியாவது சந்நிதியாவது இல்லை.

5. தூல அந்தக்கரணமும் அநுகூல வஸ்துவின் சம்பந்தமும் இருக்க ஒருகால் (அவிசார தசையில்- விசாரம் இன்றிய காலத்தில்) இராகமோ ஞானிக்கும் உண்டாகின்றது. ஆனால் நிரந்தரமாய் இல்லை.

6. தூல அந்தக்கரணமும் அநுகூல பதார்த்தத்தின் சம்பந்தமும் இருக்க ஒருகால் இராகத்தின் இன்மையோ உபாசகர்ஆதி சுத்த

சித்தம் உடைய அஞ்ஞானிகட்கும் காணப்படுகின்றது. ஆனால் அந்த அபாவம் புறம்பாக (தூல ராகத்தினதாக) உண்டாகின்றது. உள்ளாக (சூக்கும ராகத்தினதாக) உண்டாகிறதில்லை. இவ்வார்த்தை "இரச (சூக்கும ராக)மும் இப்புருஷனுக்குப் பர(பிரம்ம)த்தை அறிந்து நீங்குகின்றது" என்னும் கீதையின் இரண்டாவது அத்தியாத்துள்ள 59-வது சுலோக வடிவ வாக்கியத்தினால் அறியப்படுகின்றது.

ஆதலால் சொல்லப்பட்ட அதிடராக வடிவ ஞானியின் லட்சணம் எதுவோ அது தோஷம் இன்றியதாம். இவ்வாறே அதிட துவேஷம் முதலியவற்றினும் அறிந்து கொள்க. இங்கே அதிடராக முதலிய சப்தத்தால் திடராகம் முதலியவற்றின் அபாவம் கொள்ளப் படுகின்றது. ஏனெனின் அதிடராகம் இருக்குக அல்லது இல்லாதிருக்குக. ஆனால் திட ராகத்தின் அபாவம் உடையவன் ஞானி என்னும் ஞானியின் லட்சணம் சகல பூமிகளிலும் நிகழ்தலால்.

119. மோட்சம் (முத்தி)

அனர்த்தத்தின் நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தி என்ற பேதத்தினால் முத்தி (மோட்சம்) இருவகைப்படும்.

<u>அனர்த்தத்தின் நிவர்த்தி:</u> விசாரிக்கப்பட்ட மகாவாக்கியத்தினால் உண்டான அபரோட்ச ஞானத்தினால் சோதிக்கப்பட்ட ஆத்மாவில் எந்த அத்தியஸ்த கர்த்திருத்வாதி சகல பந்தத்தின் நிவர்த்தியாம் அது பிரதம மோட்சம் ஆகும். எதற்குப் பிராரப்த கர்மத்தினால் பிரதிபந்தம் இருப்பதாலும், ஞானத்திற்கு உண்மையாக வஸ்து பிரகாச சுபாவத் தன்மையால் தொம்சரூப நிவர்த்தியை உண்டாக்காததாலும், நிவர்த்தி என்பது மித்தியாப் பிரதீதி சொரூப நாசம் அன்று.

<u>ஆனந்தப் பிராப்தி:</u> பூமியின் பேதத்தினால் எது விருத்தியோடு கூடியதும், விருத்தி இன்றியதுமான இரண்டுவித ஆனந்தத்தின் பிராப்தியாம். அது இரண்டாவது மோட்ச வகையாகும். பிராப்தி என்பது இருவித ஆவரண பங்க பூர்வகம் சொப்பிரகாசத் தன்மையால் உண்டாவதாம். ஆனந்தத்தை ஆத்ம ரூபத் தன்மையால் சதா அடைந்திருத்தலால் வித்தியானந்தம் விருத்தியோடு கூடிய ஆனந்தமாம். அது பிரம்ம வித்திற்குப் பிராப்தமாம். எதனால் பிரம்மானந்தம் விருத்தி இன்றிய ஆனந்தம் ஆகும், அது ஜீவன் முக்தனுக்குப் பிராப்தமாம் அதனால்.

_(119.1) முத்தி மார்க்கம்: 1.கிரம முத்தி மார்க்கம் 2.சத்தியோ முத்தி மார்க்கம்

(119.1.1) கிரம முத்தி மார்க்கம்: குறித்த இடத்திற்குக் கிரமம் கிரமமாக ஊர்ந்து செல்லுவதாகிய பிபீலிகா (எறும்பு) மார்க்கம் போல, இவ்வுலகத்ததில் இந்தத் தேகத்தில் இருந்து அக்கினி முதலான தேவதைகளை அந்தந்த தேவதைகளாக உபாசியாமல் பிரம்மமாகவே உபாசித்து, அந்தந்த தேவதைகளின் லோகங்களை அடைந்து, இந்தப் பிரகாரம் கிரமமாக மேன்மேலும் உயர்ந்து இரணிய கருப்பரின் லோகம் அடைந்து, இரணிய கருப்பர் பிரம்மத்தில் ஐக்கியமாகும்போது கூடவே பிரம்மத்தில் ஐக்கியமாவது, இது வாம தேவரால் பின்பற்றப்பட்டு முத்தி பெற்றதால், வாமதேவ மார்க்கம் எனப்படும்.

(119.1.2) சத்தியோ முத்தி மார்க்கம்: இந்த இடத்தை விட்டுப் பறந்து சென்று, குறித்த இடத்தையே அடைவதாகிய பட்சி மார்க்கம் போல, தன்னால் உபாசிக்கப்பட்ட தேவதா சொருபம் எதுவோ, அதற்குள்ள மாயா உபாதியையும், தனக்குள்ள அவித்தியா உபாதியையும் நீக்கித் 'தானே அது, அதுவே தான்' ஆகிய பிரம்மம் என உபாசித்து சீவன் முத்தனாகி, பிராரப்த தேகம் நீங்கினவுடனே, விதேக முத்தியாகிய பிரம்ம கைவல்யத்தை அடைவது. இது சுகரால் பின்பற்றப்பட்டு முத்தி பெற்றதால், சுகர் மார்க்கம் எனப்படும்.

120.முத்தித் துவயம் : (2)

1. ஜீவன் முத்தி 2. விதேக முத்தி

ஜீவன் முத்தி: தேகாதிப் பிரபஞ்சம் தோற்றிக் கொண்டிருக்கும்போதே பிரம்ம (அத்வைத) சொருபமாக நிலைத்தல் அதாவது யான் எனதென்னும் ஜீவத்துவம் விடுபட்டிருத்தல். தேகாதி அபிமானம் இன்றிய போதும், கடம் உண்டாய பின்னரும் சுழலுகின்ற குலாலனது சக்கரம் போல, பிராரப்த கரும வாசனா பலத்தால் சஞ்சரிப்பது ஜீவன் முத்தியாம்.

விதேக முத்தி: ஞானிக்குப் பிரம்ம ஞானோதயமான பின்னர் சூரியோதயத்தின் முன் இருள் கெடுவது போல அந்தப் பிரம்ம ஞானத்தால் அஞ்ஞானத்தோடு அதன் காரியமாய் உள்ள தேக முதலியஅனைத்தும் கெடுவதே. தேகாதிப் பிரபஞ்சம் பொய்யாகவேனும் தோன்றுதல் இன்றிப் பிரம்ம (அத்வைத) சொரூபமாக நிலைத்தல் விதேக முத்தியாம்.

(பிரஹ்மத்தில் உள்ளது எதுவோ அது பிராஹ்மி எனப்படும். இப்படிப்பட்ட ஸ்திதி அதாவது எல்லாக் கருமங்களையும் விட்டுப் பிரஹ்ம சொருபமாக நிலைத்தல் பிராஹ்மீ ஸ்திதி எனப்படும். இதுவே பிரஹ்ம நிஷ்டை)

121. ஞானப் பிரபாவம் - கரும விசாரம்:

(121.1) ஜீவன் முத்தனது கருமங்கள்:

ஜீவன் முத்தனுக்குச் சஞ்சித கருமம் அக்கினியை அடைந்த உலர்ந்த புல்லைப் போல, தத்துவ ஞானத்தால் ஒழிவதாம். பிராரப்த கருமம் அவன் அதன் பயனை அனுபவிக்க ஒழிவதாம். ஆகாமிய கருமம், அவன் கர்த்தா போக்தா என்ற விபரீத புத்தி இல்லாதவனாய் இருத்தலால் கருமத்தைச் செய்தற்கு அதிகாரம் இல்லாதவனாய் இருக்கின்றான் என்பதால் உண்டாகாது.

சஞ்சித கருமம்	:	சென்ற தேகங்களில் (பிறவிகளில்). செய்யப்பட்டு பலனுக்கு வராது இருக்கின்ற கருமம்
ஆகாமிய கருமம்	:	எதிர்காலத்தில் செய்யப்படும் கருமம்
பிராரப்த கருமம்	:	சென்ற தேகங்களில் செய்யப்பட்டு நிகழ்கால தேகத்திற்கு ஏதுவாயுள்ள கருமம்

ஒருவனுக்கு வறுத்த விதையானது புசிப்பதற்கு மாத்திரம் உபயோகம் ஆகுமே தவிர, மறுபடியும் விதைப்பதற்கு பயன்படாதது போல, தத்துவ ஞானத்தால் ஒழிந்த சஞ்சித கருமம் தனது மீதமாகிய பிராரப்த கரும போகத்தை அனுபவித்தலால் ஒழியும். அதைத் தவிர இனி ஒரு பிறப்புக்குக் காரணம் ஆகாது. அக்கினியால் எரிக்கப்பட்ட மடித்து வைக்கப்பட்ட ஆடை காற்று

வந்து அலைக்கழிக்கும் வரையில் தன் வடிவம் கெடாது இருப்பது போல, ஞான அக்கினியால் எரிக்கப்பட்ட சஞ்சித கருமமும் தனது மீதமாகிய பிராரப்த கருமத்திற்கு நாசம் வரும் அளவும் தனது வடிவம் கெடாதிருக்கும்.

(121.2) **ஜீவன் முத்தனுக்கு உரிய சற்குணங்கள்:**

1. மைத்திரி 2.கருணை 3.முதிதை 4.உபேட்சை என்பன.

மைத்திரி: சத் புருஷரோடு நட்பு கொள்ளுதலே மைத்திரியாம்.
கருணை: துன்பத்தில் உள்ள பிராணிகளைக் கண்டபோது அவைகளிடத்தில் இரக்கம் கொள்ளுதல்
முதிதை: புண்ணிய புருஷரைக் கண்டபோது, அவர்களின்பேரில் விருப்பம் உண்டாவது
உபேட்சை: தீய காரியங்களைச் செய்யும் பாவிகளை விருப்பு வெறுப்பு இன்றி விட்டு நீங்குவதே உபேட்சையாம்.

(121.3) **ஜீவன் முத்தனுக்குரிய பஞ்சப் பிரயோசனம்:**

1. ஞானரட்சை	2.தவம்	3.சர்வசம்வாதம்	4.துக்க சயம்	5.சுகாவிர்ப்பாவம்

(121.3.1) **ஞானரட்சை:** வாசனா சயத்தாலும் மனோநாசத்தாலும் புத்தி நிர்மலமாய் இருப்பதே ஞான ரட்சையாம். தத்துவ ஞானத்தால் சித்தத்தின்கண் உள்ள ராகத்துவேஷ முதலிய வாசனைகள் கெடுதல் வாசனா சயமாம். வாசனா சயத்தால் சித்தம் ஆத்ம சொருபத்தை நோக்கி நின்றடங்கிக் கிடத்தல் மனோநாசமாம். தத்துவ ஞானம்-வாசனாசயம்-மனோநாசம் இம்மூன்றும் ஒன்றற்கு ஒன்று காரண வடிவமாய் இருப்பனவாம்.

அகம்பிரம்மாஸ்மி ஞானம் தத்துவ ஞானம். இந்த தத்துவ ஞானம் உண்டா வதற்குச் சிரவணாதிகள் சாதனங்களாம்.

காமக்குரோத முதலிய விருத்தி உண்டாவதற்கு காரணமாய் உள்ள சித்தத்தின் சூக்கும அவத்தையாகிய சம்ஸ்கார வடிவ வாசனை

கெடுவதற்கு மைத்திரி முதலிய வாசனையின் பழக்கம் சாதனம். இவ்விருத்தி உண்டாகாது இருப்பதே வாசனா சயமாம்.

மனம் நாசமாவதற்குத் தியானம் சாதனமாம். மனம் விருத்தி வடிவமாகப் பரிணமிப்பது ஒழிந்து, ஒடுங்கி நிற்பதே மனநாசமாம்.

(121.3.2) **தவம்:** மனதிற்கும் இந்திரியங்களுக்கும் ஏகாக்கிரம் (ஒருமுக மாதல்) வருவதே தவம். (மனம் ஒருமுகமாதல் சமம். இந்திரியங்கள் ஒருமுகமாதல் தமம்)

(121.3.3) **சர்வ சம்வாதம்:** ஞான திருஷ்டியை உடையவனாய் இருத்தலால் இவன் தத்துவ ஞானி என்று கூறி, அவனைப் பாலர் முதல் பண்டிதர் வரையுள்ள உலகத்தார் யாவரும் துதி நமஸ்கார முதலியவற்றைச் செய்வதே சர்வ சம்வாதம்.

(121.3.4) **துக்க நாசம்:** மனக்கிலேசம் அற்றிருப்பதே துக்க சயமாம். மனக் கிலேசம் என்பது பஞ்சக் கிலேசங்களாம்.

அவித்தை	(2)அஸ்மிதை	(3)இராகம்	(4)துவேஷம்	(5)அபினிவேசம்

அவித்தை: விசாரிக்கும் இடத்து எது இருக்கிறதில்லையோ அல்லது எது ஆவரண விட்சேப சக்திகளை உடைய அநாதி உண்மை வடிவமாய் இருக்கிறதோ அது அவித்தையாம்.

(1)அவித்தை----- இது இரண்டு வகைப்படும்	(அ) முல அவித்தை- இது இரண்டு வகைப்படும்	I.காரண அவித்தை	
		II.காரிய அவித்தை - இது நான்கு வகைப்படும்	(i) ஆத்மபுத்தி
			(ii) நித்தியபுத்தி
			(iii) சுகபுத்தி
			(iv) சுசிபுத்தி
	(ஆ)தூல அவித்தை		

(அ) முலஅவித்தை	சுத்த சைதன்னியத்தை முடிக்கொண்டிருப்பது.

(ஆ)தூல அவித்தை	கடபட முதலிய உபாதிகளையுடைய சைதன்னியத்தை மறைப்பது
I.காரண அவித்தை	ஆவரண விட்சேப சக்திகளோடு கூடி அநாதிபாவ ரூபமாய் இருப்பது
II.காரிய அவித்தை	ஒன்றில் மற்றொன்றின் புத்தி வடிவத் தோற்றம்
(i) ஆத்மபுத்தி	அநாத்மாவாகிய தேக முதலியவற்றில் உள்ள புத்தி
(ii) நித்தியபுத்தி	அநித்தியமாகிய ஆகாய முதலியவற்றில் உள்ள புத்தி
(iii) சுகபுத்தி	துக்க ரூப தனாதிகளில் உள்ள புத்தி
(iv) சுசிபுத்தி	அசுசியான தேக முதலியவற்றில் உள்ள புத்தி

அஸ்மிதை: புத்தி ஆத்மாக்களின் ஒருமை உணர்ச்சி அஸ்மிதை. இது சாமானிய அகங்காரம் என்றும் கூறப்படும்.

இராகம்: அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தால் உண்டாகும் புத்திவிருத்தி

துவேஷம்: பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தால் உண்டாகும் புத்தி விருத்தி

அபினிவேசம்: மரணபயத்தால் தேகத்தைக் காத்தலில் உண்டாகும் ஆக்கிரகம்.

(121.3.5) **சுகாவிர்ப்பாவம்:** ஞானரட்சை முதலிய அச்சாதனங்கள் சித்தித்திருத்தலால் தான் பிரதிபந்தம் அற்றிருப்பதே சுகாவிர்ப்பாவமாம். (சுக ஆவிர்ப்பாவம் - ஆத்மானந்தம் வெளிப்படுதல் அதாவது பூதப்பிரதிபந்தம் முதலானவை இன்றி பரமானந்தக் கடலாய் விளங்குவார் என்பது பொருள்)

(121.4) ஜீவன் முத்தனுக்குரிய தச சின்னங்கள்: (10)

1.அக்குரோதம் (கோபம் இல்லாமை)	6.ஜனப்பிரியத்துவம் (அனைவரிடமும் பிரியமாய் இருத்தல்)
2.வைராக்கியம்	7.அலோபம் (உலோபகுணம் இல்லாமை)
3.ஜிதேந்திரியத்துவம்	8. கொடை (ஈகை)
4.சமை (சமம்)	9. அபயம் (பயமின்மை)
5.தமை (தமம்)	10. நிர்மதம் (யான் எனது என்ற செருக்கு

	இல்லாமை)

122. ஞானியால் மக்களுக்கு உண்டாகும் நன்மை: (4)

- ஞானியைப் பிரத்தியட்சமாகக் கண்ட பரமசிவன் என்று நம்புகின்ற சீடர்க்கு முத்தி உண்டாவதாம்.
- அவனை அன்போடு வணங்கித் துதிக்கும் பக்தர்க்கு புண்ணியம் உண்டாவது
- அவனது பரிசுத்தமான சரித்திரத்தை (ஒழுக்கத்தை)க் கண்டறிந்த உதாசீனர்க்கு

அதனால் புண்ணிய கருமம் செய்வதன்கண் விருப்பம் உண்டாவதாம்.

(உதாசீனர்- விருப்பு வெறுப்பு இல்லாதவர்)

- அவனது வடிவத்தைத் தரிசித்தல், பரிசித்தல் முதலியவற்றை உடைய பாவிகளுக்கு

அவற்றால் பாவம் கெடுதல் உண்டாவதாம். (ஞானியை இகழ்பவனுக்கு அவனது புண்ணியம் கெடும்)

123. பிராரப்த கருமம்

(123.1) பிராரப்த பஞ்சகம்: (5)

உத்தமம்	:	பிறப்பு முதல் இறப்பு வரை நிவிர்த்திக்கு ஏதுவான பிராரப்தம்
மத்திமம்	:	முன்னர்ப் பிரவிர்த்திக்கும் பின்னர் நிவிர்த்திக்கும் ஏதுவான பிராரப்தம்
கனிஷ்டம்	:	எப்போதும் பிரவிர்த்திக்கு ஏதுவாய் உள்ளது (கனிஷ்டம்-அதமம்)
அதமதரம்	:	முன்னர் நிவர்த்திக்கும் பின்னர் பிரவிர்த்திக்கும் ஏதுவாய் உள்ளது
அதமதமம்	:	விரும்பியவாறு நடத்தல்,புசித்தல், பேசுதல் என்னும் பிரமாதத்திற்கு ஏதுவாய் உள்ள பிராரப்தம்

(123.2) பிராரப்த கரும சம்ஸ்கார சதுஷ்டயம்:

காணுதல் தொடுதல் முதலிய கிரியைகள் இன்றிப் பிராரப்த கர்மத்தின் பல அனுபவம் பொருந்தாது.

தீவிர பிராரப்த கரும சம்ஸ்காரம்: ஒருவன் ஐயத்தினின்றும் நீங்கித் தெளிந்த ஞானியாய் இருப்பினும், அவன் விஷய போகத்திலே அழுந்தி, பசுவைப்போல ஆத்மப் பிரீதிமாத்திரமாய் இருப்பதே இந்த சம்ஸ்காரம்.

மத்திய பிராரப்த கரும சம்ஸ்காரம்: ஞானி விஷய போகங்களை மிகுதியாகப் பெற்றாலும், ஆத்மாவிலேயே கருத்து உள்ளவனாய்ப் பாலரைப் போலப் பல விளையாடலைச் செய்து கொண்டிருப்பதே இந்த சம்ஸ்காரம்.

மந்தப் பிராரப்த கரும சம்ஸ்காரம்: ஞானி விஷய போகம் அனைத்தையும் மாற்றி, மிதுனம் (காதலனும் காதலியும் கருத்து ஒருமித்துக் கூடி அனுபவிக்கும் இன்பம்) போல ஆனந்தம் உற்றிருப்பதே இந்த சம்ஸ்காரம்.

சுத்தப் பிராரப்த கரும சம்ஸ்காரம்: ஞானி உலக வியவகாரம் செய்வதிலிருந்தும் நீங்கி, நிருபாதிக ஆத்மாவின்கண்(சுத்தப் பிரமத்தின்கண்) பொருந்திய கருத்துடையவனாய் விதேக முத்தனைப் போலப் பேரானந்தத்தோடு இருப்பதே இந்த சம்ஸ்காரம்.

(123.3) பிராரப்தத் திரயம்: (3)

இச்சாப் பிராரப்தம்: ஒருவன் அபத்தியம் செய்வது (பத்தியம் தவறுதல்) தனக்குத் துன்பம் தருவதாம் என்று அறிந்திருந்தாலும், அதனைச் செய்விப்பதே (அவன் அபத்தியத்தை இச்சை மிகுதியால் விடாது செய்யுமாறு செய்வதே) இச்சாப் பிரரரத்தம்.

அநிச்சாப் பிராரப்தம்: ஒருவன் கொலை முதலியவற்றைச் செய்ய யான் விரும்ப மாட்டேன் என்றிருந்தாலும், அரசரது கட்டளை போல அவற்றைச் செய்விப்பதே (அரச கட்டளை போல கொலை முதலியவற்றைக் கட்டாயமாகச் செய்யுமாறு செய்வதே) அநிச்சாப் பிராரப்தம்.

பரேச்சாப் பிராரப்தம்: ஒருவன் எதனிடத்தும் இச்சையும் அநிச்சையும் இல்லாதிருந்தாலும் பிறரது இச்சை காரணமாக அவனுக்குச் சுக துக்கங்களை அனுபவிக்கச் செய்வதே (பிறரது இச்சை காரணமாக

அவன் பத்திய-அபத்தியங்களைச் செய்து, அவற்றால் சுக துக்கம் அடையுமாறு செய்வதே) பரேச்சாப் பிராரப்தம்.

124. ஜீவன் முத்தர் நால்வகை

1.பிரம்ம வித்து	2.பிரம்ம வரன்	3.பிரம்ம வரியான்	4.பிரம்ம வரிட்டன்

பிரம்ம வித்து: மன உறுதி உடையவராய் அஞ்ஞான சந்தேக விபரீதம் இன்றி, ஞானத்திற்கு முன்னர் இருந்த வருணாசிரம தர்மங்களை ஞானத்திற்குப் பின்னும் விடாது, கர்த்தா போக்தா என்ற புத்தி இல்லாதவனாய், சஞ்சிதம் நசிக்க, ஆகாமிய வினையைச் சேரவிடாமல் பிராரப்த வினை கழிய, நிஷ்காமமாய், உலக உபகாரமாகச் செய்துகொண்டு சாட்சி பாவனையில் வாழ்பவர். இத்தகையோர் பெரும்பாலும் இல்லற ஞானிகளாய் இருப்பர்.

பிரம்ம வரன்: வெளிக்கருமங்கள் அனைத்தையும் விடுத்து, ஏகாந்த நிட்டையிலே இருப்பவராய்த் தேக நிலைத்தற் பொருட்டு தானாகவே நிட்டை கலைந்து உணவு கொள்ளக் கருதும் சீவன் முத்தர்.

பிரம்ம வரியான்: வெளிக்கருமம் சிறிதும் இன்றி, ஏகாந்த நிட்டையிலே இருப்பவராய் மற்றவர்களின் முயற்சியால் சமாதியிலிருந்து விழித்து உணவு கொள்ளும் சீவன் முத்தர்.

பிரம்ம வரிட்டன்: பிரம்ம வரனைப் போலத் தன் உணர்தலும், வரியானைப் போலப் பிறரால் உணர்தலும் இன்றி எப்போதும் அசம்பிரஞ்ஞாத சமாதியில் இருக்கும் சீவன்முத்தர் இவர் உணவு கொள்வது சிறு குழந்தை உறங்கிக் கொண்டே உணவு கொள்வது போல் இருக்கும்.

125. விதேக முத்தி

தத்துவ ஞானத்தால் அஞ்ஞானம் நிவர்த்தியாகிப் பிராரப்த போகத்திற்குப் பின்னர் தூல சூக்கும சரீர ஆகாரமான அஞ்ஞானம் சேதனத்தில் தெளிந்தவிடத்துக் கயிற்றில் பாம்பு போல இலயமாதல் விதேக முத்தி எனப்படும். அதாவது சீவன்முத்தர் தேகாதிப்

பிரபஞ்சம் மித்தையாகவேனும் தோற்றுதல் இன்றி சரீரத்திரயமும் நீங்கிப் பிரம்ம சொருபமாகவே நிலைத்தலாம்.

ஞானியின் தூல தேகம் பிண வடிவாய் விழுகின்ற காலத்து அவனது சூக்கும தேகம் அஞ்ஞானியின் சூக்கும தேகம் போன்று வேறு உலகத்திற்காவது இவ்வுலகத்தின் வேறு தேகத்திற்காவது போகாது காய்ச்சிய இரும்பில் தெளித்த நீர்த்துளி சொருபம் இல்லாது கெடுவது போல ஆன்ம சொருபத்தில் இலயமாய்க் கெடுகின்றது. (இது கைவல்ய நவநீத நூலின் கூற்று)

சூக்கும தேகம் நிர்விகார வடிவப் பிரம்மத்தில் இலயமாதல் சம்பவியாது. ஆகவே பிருதிவியின் காரியமான இரும்பில் நீர்த்துளி இலயம் அடையாது, அதனோடு கூடிய நெருப்பில் இலயம் அடைவது போல, சூக்கும தேகம் சுத்த சேதனத்தில் இலயம் அடையாது, அதனோடு கற்பிதமாகக் கூடியுள்ள அவித்தையில் இலயமாகின்றது என்று பொருள். அந்நூலில் ஆதேயத்தில் இலயமாகும் சூக்கும தேகத்தை ஆதாரத்தில் இலயமாவதாகக் கூறியது உபசார வழக்கமாம்.

(125.1) விதேக முத்தி அடையும் கிரமம்:

அதிகாரி புருஷன் எக்காலத்திலும் எத்தேசத்திலும் யாதொரு தேகமும் அடையாது ஏகமாய் உள்ள சச்சிதானந்த சொருபமாக விளங்குதலே விதேக முத்தியாம்.

முமுட்சுவிற்கு (அதிகாரி புருஷனுக்கு)-----

1) நித்திய கர்ம அனுஷ்டானத்தால் புண்ணியம் (தருமம்) உண்டாவதாம்
2) அதனால், பாவம் (அதருமம்) ஒழிவதாம்
3) அதனால், சித்த சுத்தி உண்டாவதாம்
4) அதனால், சம்சார தோஷ தரிசனம் உண்டாவதாம்
5) அதனால், உண்மையாய துறவு (விஷய விரக்தி) உண்டாவதாம்
6) அதனால், முத்திவிருப்பு (மோட்சஅபேட்சை என்ற முமுட்சுத்துவம்) உண்டாவதாம்
7) அதனால், பாகிய கருமங்களைச் செய்வது ஒழிவதாம்
8) அதனால், ஞான யோக அப்பியாச முயற்சி உண்டாவதாம்

9) அதனால், பிரத்தியக் ஆத்மாவின்கண் பிரியம் உண்டாவதாம்
10) அதனால், தத்துவமசி மகாவாக்கிய விசாரம் உண்டாவதாம்
11) அதனால், அத்துவித ஞானம் உண்டாவதாம்
12) அதனால், அவித்தியா நாசம் உண்டாவதாம்
13) அதனால், துவிதமயக்கு ஒழிதல்(துவைதப்பிராந்தி நஷ்டம்)உண்டாவதாம்
14) அதனால், சுகதுக்க சங்கற்ப நாசம் உண்டாவதாம்
15) அதனால், விருப்பு வெறுப்பு அறுதல் உண்டாவதாம்
16) அதனால், விதி விலக்கு ஒழிதல் உண்டாவதாம்
17) அதனால், புண்ணிய பாவங்களின் கேடு உண்டாவதாம்
18) அதனால், தேகாத்ம புத்தி முற்றும் ஒழிதல் உண்டாவதாம்
19) அதனால், பஞ்சக்கிலேச பாசம் அனைத்தும் ஒழிதல் உண்டாவதாம்
20) அதனால், பரப்பிரம்மமாயும், சகல சாத்திரங்களுக்கும் முடிவாயும், பெயரும் ஜாதியும், குறியும் (அடையாளமும்) பெறாததாயும், ஒன்றாயும், வாக்கு மனம் இறந்து (அவாங்மனோ கோசர) நித்தியானந்த மயமாயும், புனராவிர்த்தி (திரும்பி வருதல்) இல்லாததாயும் உள்ள விதேக முத்தி உண்டாவதாம்.

****

உபநிஷத் பாஷிய கீதா பாஷிய சூத்திர பாஷியங்களும், அவற்றின் வியாக்கியானங்களும் பிரமேய கிரந்தம் என்றும், பர மத கண்டனமும், சுவ மத ஸ்தாபனமும் செய்யும் கண்டனம், சித்சுகி, அத்வைதசித்தி கௌடப் பிராஹ்மா நந்தீய முதலியன ஆகர கிரந்தம் என்றும் சொல்லப்படுகின்றன.

வேதாந்த நூல்களின் பட்டியல்

வ.எ.	நூலின் பெயர்
1	நாநா ஜீவ வாத கட்டளை
2	விசார சந்திரோதயம்
3	கைவல்ய நவநீதம்
4	சசிவன்ன போதம்
5	விவேக சூடாமணி
6	மகாராஜா துறவு
7	வாசுதேவ மனனம்
8	விசார சாகரம்
9	வேதாந்த சூடாமணி
10	ஞான வாசிட்டம்
11	வேதாந்த பரிபாஷை
12	அத்துவித உண்மை
13	சொரூப சாரம்
14	முக்தி சோபானம் (மோட்ச சோபானம்)
15	விருத்திப் பிரபாகரம்
16	தத்துவானுசந்தானம்

17	பஞ்சதசி
18	ரிபு கீதை
19	அஷ்டாவக்ர கீதை
20	வேதாந்த பரிச்சேதம்
21	ஜீவ பிரம்ம ஐக்கியம்
22	தத்துவாமிர்தம் - தத்துவராயர்
23	ஞானவெட்டியான்
24	ஜீவன் முக்திப் பிரகரணம்
25	ஒழிவில் ஒடுக்கம்
26	பிரபோத சந்திரோதயம்
27	குறுந்திரட்டு - தத்துவராயர்
28	வார்த்திகாமிர்தம்
29	பெருந்திரட்டு - தத்துவராயர்
30	ஸருந்திரட்டு

நியாய சாத்திரத்தின் சுருக்கத் தொகுப்பு

பதார்த்தம்: 7

1.திரவியம்	2.குணம்	3.கருமம்	4.சாமானியம்
5.விசேடம்	6.சமவாயம்	7.அபாவம்	

இவைகளில் திரவியம்-குணம்-கர்மம் மூன்றும் சத்தான பதார்த்தம். இவற்றை இருக்கிறது என்று காட்ட முடியும். அது தான் 'சத்' . மீதி நான்கும் அப்படிக் காட்ட முடியாதது.

திரவியம் (பொருள்): தூலமாகக் காட்டக் கூடியது.
குணம் (பண்பு): ஞானம், ஆசை, சந்தோஷம், துக்கம் முதலான குணங்களைத் தனியாகக் காட்ட முடியாது. இவைகள் எல்லாம் ஒன்றைச் சார்ந்தே (ஆசிரயித்தே) இருக்கும். தனியாகப் பிரிக்க முடியாது. தாமரையின் குணம் சிவப்பு. அதைத் தனியாகப் பிரித்துக் காட்ட முடியாது. இவ்வாறு ஒரு ஆசிரயத்தை ஒட்டிக்கொண்டு இருப்பது தான் குணம். அது எதை ஆசிரயத்திருக்கிறதோ அந்த ஆசிரயம் தான் திரவியம்.
கர்மம் (தொழில்): என்பது காரியம். சலனம், போதல், ஒடுதல் போன்றவை. இவையும் திரவியத்தைச் சார்ந்தே இருக்கும்.
சாமானியம் (பொதுமை): ஜாதியைக் குறிப்பது. பல மாடுகள் உள்ளன. அவற்றுள் மாட்டுத் தன்மை என்னும் ஒரு பொதுமை இருக்கிறது. அதை 'ஜாதி' என்கிறோம். அது எல்லாப் பசுக் களிடத்திலும் உள்ளது. இது சாமானியம்.

விசேஷம் (சிறப்பு): ஒரே மாதிரி இருந்தும் வெவ்வேறாக இருப்பது 'விசேஷம்' . பசுக்கள் ஒரே ஜாதியாக இருந்தும் அவைகளிடத்தில் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்துக்காட்டக் கூடிய சில 'விசேஷ' அடையாளங்கள் இருக்கின்றன.
சமவாயம் (ஒற்றுமை சம்பந்தம்): திரவியத்தையும், குணத்தையும், திரயவியத்தையும் அதன் காரியத்தையும் தனித்தனியானவற்றையும், பொதுமையையும் ஒரு முழு வஸ்துவையும் அதன் உறுப்புகளையும்

பிரிக்க முடியாமல் ஒட்டி வைத்திருப்பது தான் 'சமவாயம்'. அக்கினியில் பிரகாசமான ரூபம் இருக்கிறது. அதைப் பிரிக்க முடியாது. அது சமவாயம்.

திரவியமும் திரவியமும் சேர்ந்தால் அது 'சம்யோகம்'. இவை ஒன்றோடு ஒன்று சேராமல் தனித்தும் இருக்க முடியும். திரவியமும் குணமும் சேர்ந்தால் சமவாயம். திரவியமும் கர்மாவும் சேர்ந்தால் அதுவும் சமவாயம் தான். ஏனெனில், இந்தக் குணமும் கர்மாவும் ஒரு திரவியத்தைச் சேராமல் தனித்து இருக்க முடியாது.

அபாவம்: இன்மை, இல்லாதது, இருக்கிறது என்பது 'பாவம்'. இல்லாதது 'அபாவம்'. அபாவம் அதாவது இல்லை என்பது எப்படி பதார்த்தம் ஆகும்? பதத்தின் அர்த்தம் பதார்த்தம். 'இல்லை' என்ற பதத்திற்கும் அர்த்தம் இருக்கிறது. பூக்கூடையில் புஷ்பம் இல்லை. அதாவது புஷ்பத்தின் அபாவம் இங்கே இருக்கிறது.

திரவியம்: (9)

1.பிருதிவி	2.அப்பு	3.அக்கினி	4.காற்று	5.ஆகாயம்
6.காலம்	7.திக்கு	8.ஆன்மா	9.மனம்	

திரவியத்திற்கு லட்சணம்: திரவியத்தன்மை ஜாதி உள்ளது (அ) குணத்தன்மை உடையது (அ)சமவாயி காரணத் தன்மை உள்ளது

பிருதிவி: வாசனை உடையது. நித்தியம் - பரமாணு. அநித்தியம் - காரியரூபம்

தார்க்கிக மதத்தில் பரமாணுவானது நித்தியம். இந்த இரண்டு பரமாணு சேர்வதால் 'த்வியணுக்' ஆகின்றது. இரு 'த்வியணுக்கள்' சேர்ந்து 'திரேஸ்ரேணு' ஆகின்றது. இந்த நிலையே (சேர்க்கை) காரிய ரூபம் ஆகின்றது. (த்வியணுக் முதலி சிருஷ்டி வரையில்)

சரீரம் : நம்மனோர்க்கு உள்ளது. இந்திரியம்: மூக்கு. வாசனையைக் கவர்வது. நாசி நுனியில் இருப்பது. விடயம்: மண், கல் முதலியன (நெய், எண்ணெய், பால், கருப்பஞ் சாறு, சர்க்கரை, உப்பு, ரத்தம் முதலியன)

நீர்: குளிர்ந்த பரிசம் உடையது. நித்தியம் - பரமாணு. அநித்தியம் - காரியரூபம்

சரீரம் வருணலோகத்தில் உள்ளது. இந்திரியம்: நாக்கு. சுவையைக் கவர்வது. நாவின் நுனியில் இருப்பது. விடயம்: ஆறு,கடல் முதலியன (ஓடை, பனி, மேகம், வியர்வை முதலியனவும்) பனிக்கட்டி கல் போன்று இருப்பதால் பிருதிவி எனக்கூற முடியாது. நீரிலும் உப்பு நீர், சுவை மிகுந்த நீர் - பிருதிவி எனக்கூற முடியாது. சுவையற்ற நீரில் பிருதிவியின் அம்சம் சேர்வதால் சுவை காணப்படுகிறது.

நெருப்பு: சுடும் பரிசம் உடையது. நித்தியம் - பரமாணு. அநித்தியம் - காரியரூபம்

சரீரம் சூரிய லோகத்தில் உள்ளது. நெருப்பு மயமான உடல். இந்திரியம்: கண். உருவத்தைக் கவர்வது. அது கண்ணில் கருமணியின் நுனியில் உள்ளது

விடயம்: நான்கு வகை.

1. பௌமம் (மண்ணில் உள்ளது) நெருப்பு முதலியவை (செடி, கனிகளில் உண்டாகும் நெருப்புத் தன்மை

2. திவ்யம் (விண்ணில் உள்ளது) மின் முதலியவை (அபிந்தனம் முதலியவை அதாவது நீர் எதற்கு இந்தனம்(எரிபொருள்) ஆகிறதோ அது. சூரியன், சந்திரன் முதலியன

3. ஔதர்யம் (வயிற்றில் உள்ளது) உண்ட உணவு சீரணமாவதற்குக் காரணமாயிருப்பது

4. ஆகரஜம் (ஆகரத்தில் உள்ளது) ஆகரம்=தோண்டுதல். பூமியைத் தோண்டிக் கிடைக்கும் பொருட்கள் தங்கம் முதலியன. இது பூமியில் கிடைப்பதால் பிருதிவி என்று சொல்லமுடியாது. காரணம் நெருப்புடன் சுடும்போது தங்கமானது முழுதும் அழிந்து போகாமல் திடத்தன்மை அழிந்து திரவத் தன்மையை அடைகின்றது. உடனே திரவத்தன்மை என்பதால் 'நீர்' என்பது கூடாது. காரணம் நீரில் திரவத்தன்மை இயல்பானது. வேறு எதனாலும் தூண்டப்பட்டு உண்டாவது கிடையாது.

வாயு: உருவம் இன்றிப் பரிசம் உடையது. நித்தியம்-பரமாணு. அநிததியம்-காரியருபம்
சரீரம் வாயுலோகத்தில் உள்ளது. இந்திரியம்: தோல். பரிசத்தைக் கவர்வது. உடல் எங்கும் இருப்பது. விடயம்: (மர முதலியன) அசைதற்கு ஏதுவாய் உள்ளது. சரீரத்தின்
உள் சஞ்சரிக்கும் வாயு பிராணன் எனப்படும். அது ஒன்றாயினும் உபாதி வேறுபாட்டால் பிராணன், அபானன் முதலிய பெயர்பெறும்.
ஆகாயம்: சப்தகுணம் உடையது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தியமாய் இருக்கும். பட்ட மதத்தில் (பூர்வ மீமாம்சையில்) சப்தமானது திரவியம் என்று ஏற்பதால், இங்கு குணம் என்ற சொல் கொடுக்கப்பட்டது.

சர்வமூர்த்த திரவிய சம்யோகித்வம்: எல்லா மூர்த்தமான (திடமான) பொருள் களிலும் சம்பந்தம் இருக்கும் தன்மை. 'திடமான' என்று சாமானியமாகக் கூறப்பட்டாலும் அதன் லட்சணம் 'பரிச்சின்ன பரிமாணவத்வம் கிரியாவத்வம் வா' – வரையறுக்கப்பட்ட அளவு உடையும் தன்மையோ செயலுடைய தன்மையோ ஆகும் என்பதே. இப்படிப்பட்ட விபுவாக இருப்பதாலேயே ஆகாயம் ஆத்மாவைப் போன்று நித்தியம், மூர்த்த திரவியம் விபுவின் லட்சணத்தில் கூறப்பட்டது அல்லவா! இவை: பிருதிவி, நீர், நெருப்பு, வாயு மற்றும் மனம் ஆகியவை ஆகும்.
காலம்: கடந்த காலம் முதலிய (முக்) கால வியவகாரத்திற்குக் காரணமாய், ஒன்றாய், வியாபகமாய்(விபு), நித்தியமாய் இருக்கும். காலம் ஒன்று என்று கூறப்பட்டாலும் உபாதி யினால் தினம், கணம் முதலியவை உடையன.
திக்கு: கிழக்கு முதலிய வியவகாரத்திற்குக் காரணமாய் இருப்பது. ஒன்றாய், வியாபகமாய், நித்தியமாய் இருக்கும்.
ஆன்மா: ஞானத்திற்கு அதிகரணம் (ஆதாரம்)–இடமாய் உள்ளது. அது பரமான்மா, சீவான்மா என இருவகைப்படும். பரமான்மா – ஈசுவரன் முற்றறிவாளன். ஒருவனே.
சீவான்மா – தேகந்தோறும் வேறாய் வியாபகமாய் நித்தியமாய் இருக்கும். ஆத்மா சுகம் முதலியவற்றில் சாட்சாத்காரத்திற்கு சமவாயி காரணம்.

<u>மனம்:</u> சுகம் முதலிய அனுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். உயிர்தோறும் நியதமாய் இருத்தலின் அநேகமாய், பரமாணு ருபமாய், நித்தியமாய் இருக்கும். பரிசம் இன்றி செயல் உடைத்தாதல் மனதின் இலக்கணம்.

<u>குணம்:</u> (24)

உருவம்	வேற்றுமை	திரவத்துவம் (நெகிழ்ச்சி)	இச்சை
ரசம் (சுவை)	சையோகம் (சேர்க்கை)	சிநேகம்	வெறுப்பு
கந்தம் (மணம்)	விபாகம் (பிரிவு)	சப்தம்	முயற்சி
பரிசம்	பரத்துவம் (முன்மை)	புத்தி (அறிவு)	தர்மம்
சங்கை(எண்ணிக்கை)	அபரத்துவம் (பின்மை)	சுகம்	அதர்மம்
பரிமாணம் (அளவு)	குருத்துவம் (திண்மை)	துக்கம்	சம்ஸ்காரம் (வாசனை)

<u>கருமம்: (5)</u>

1	எழும்பல்	:	உத்சேபணம்-மேலே உள்ள இடத்துடன் சம்யோக காரணம்
2	வீழ்தல்	:	அபசேஷணம் - கீழே உள்ள இடத்துடன் சம்யோக காரணம்
3	வளைதல்	:	ஆகுஞ்ஜனம்-தேகத்தினை நெருங்கி வருவதான சம்யோக காரணம்
4	நிமிர்தல்	:	பிராசரணம்- தேகத்தினை விடுத்துப்போவதான சம்யோக காரணம்
5	நடத்தல்	:	கமனம் - மற்ற எல்லாமும், சுழற்சி முதலியன எல்லாம் இதிலடங்கும்

கருமமானது சையோகத்தின் வேறாய்ச் சையோகத்திற்கு அசமவாயி காரணமாய் உள்ளது. கருமத் தன்மையாகிய சாதி உடையது.

<u>சாமான்யம்:</u> நித்தியம், ஒன்று, பலவற்றில் இருப்பது.
திரவியம், குணம், கர்மத்தில் இருத்தல் உடையது.
இருவகை: பரசாமான்யம் - இருத்தலிலும்
அபரசாமான்யம்- திரவியத்தன்மை
முதலியவற்றிலும் உள்ளது

<u>விட்சேபம்:</u> நித்திய திரவியத்தில் இருப்பவை. பிரிவு உண்டாக்குபவை. எண்ணிறந்தன.
பரமாணு முதலிய நித்திய திரவியங்களில் இருப்பது என்பதால் அதனை மற்றவற்றில் இருந்து வேறுபடுத்துவது. <u>நித்திய திரவியம்:</u> பிருதிவி, நீர், நெருப்பு, வாயு ஆகிய நான்கின் பரமாணு, ஆகாயம் முதலிய ஐந்தும். (இங்கு காலம், திக்கு, ஆத்மா, மனம் இவையும் நினைவு கூறவேண்டும்)

<u>சமவாயம்:</u> நித்திய சம்பந்தம், ஒன்று. <u>பிரிக்க முடியாத</u> --- அவயவம் மற்றும் அவயவி, குணம் மற்றும் குணி, கிரியா மற்றும் கிரியா உடையது, ஜாதி மற்றும் வியக்தி, விசேஷ, நித்திய திரவியத்திலும் இருப்பது.

வேதாந்த அருஞ்சொற் பொருள்

அகங்கிரக	யான் என்பதைக் கொள்ளும்
அகடிதகடனா சாமர்த்தியம்	நிகழாததை நிகழ்த்துவிக்கும் வல்லமை
அகிருதாப்யாகமம்	செய்யப்படாத புண்ணிய பாவங்கள் அகஸ்மாத்தாய் பலன் தருதல்
அங்கம்	உறுப்பு
அங்கி	உறுப்புடையது
அங்குரம்	முளை
சத்து	இல்லாதது
அசம்பவக்குற்றம்	தனது இலக்கியத்தினடமும் இல்லாதது
அசாதாரண தர்மம்	சிறப்பு இயல்பு
அசித்தம்	பேறல்லது
அசுக்கில கிருஷ்ணம்	சுப அசுபங்கள்
அசேதனம்	ஜடம்
அஞ்ஞாத	அறியப்படாத
அஞ்ஞாதம்	மறைவு, அறியப்படாதது
அண்டஜம்	முட்டையில் பிறப்பன
அதிகரணம்	ஆதாரம்
(அதி)கரணம்	(மிகச்) சிறந்த காரணம்
அதிசந்நிஹித	மிகச்சமீபத்தில்
அதிரிக்தமான	மீறின
அதிவியாப்தி	ஒன்றுக்குப் பொருந்துவது மற்றொன்றுக்கும்

	பொருந்தும்
அதீதம்	மிகை, கழிந்த, சென்றது
அதீனமாக	உரித்தாக
அதோமுகம்	தலை கீழ்
அத்தியந்தாபாவம்	என்றும் இன்மை
அத்தியாபகன்	ஓதுவிப்போன்
அத்தியாயம்	படலம், நூல்பிரிவு
அத்தியஸ்தம்	கற்பிதம்
அத்வைதம்	இரண்டற்றது
அநர்த்தம்	கேடு, பயனின்மை
அநாதி	தொடக்கம் இல்லாதது
அநாவிருத	மறைப்பின்றிய

அநித்தியம்	அழிவது
அநிருதம்	பொய்மையுருவி (மித்தியா சொருபி), பொய்
அநிஷ்டம்	விரும்பப்படாதது
அநுகதம்	உள்ளீடு,சம்பந்தம்
அநுகூலம்	நன்மை, கைகூடுதல், பயன், உதவி
அநுசரன்	வேலைக்காரன்
அநுசூதம்	உள்ளீடாய்
அநுசூதமாய் இருத்தல்	தொடர்ச்சியாய் இருத்தல்
அநுப சங்காரி	முடிவு பெறாமை
அநுபலத்தி	விளங்காமை

அநுபபன்னமாதல்	பொருந்தாது ஆதல்
அநுபூயமான	அநுபவிக்கப்பட்ட
அநுர்தம்	அசத்து
அநுவர்த்தனம்(அநுவிருத்தி)	பிரவேசம்
அநுவியவசாய ஞானம்	ஞானத்தின் ஞானம்
அநுவிருத்தி	தொடர்ச்சி
அநுற்பன்னம்	உண்டாகாதது
அநுஷ்ணாசீதம்	தண்மை(சீதம்) உஷ்ணம் இல்லாத
அநேகாநுகதம்	பலவற்றில் இருப்பது
அந்தம்	முடிவு
அந்தத்துவம்	தோற்றாமை (குருட்டுத் தன்மை)
அந்தரம்	ஆகாயம்
அந்தராயம்	மறைப்பு
அந்தர்க்கதம்	அடக்கம்
அந்தர்ப்பாவம்	அடக்கம்
அந்தியஜர்	கடைச்சாதியர்
அந்நியதரம்	இரண்டில் ஒன்று
அந்நியோந்நியாபாவம்	ஒன்று ஒன்றாக ஆகாமை
அந்நுவய	உடன்பாடு

அந்யதாசித்தம்	வேறோராற்றால் பெறப்படுவது

அந்வயம்	கொண்டு கூட்டு, யோசனை, பொருத்தம்
அந்வயம்	உண்மை (உடன்பாடு)
அபகிருஷ்ட	தாழ்ந்த
அபகிருஷ்டதர	அதனினும்(எல்லாவற்றினும்) தாழ்ந்த
அபரிச்சின்னம்	எல்லையற்றது
அபவர்க்கம்	மோட்சம்
அபவாதம்	முத்தி
அப(ட்)சயம்	குறைவு
அப(ட்)சேபணம்	வீழ்தல்
அபாகச	பாகத்தால் உண்டாகாத
அபாதிதம்	பாதிக்கப்படாதது
அபாவம்	இன்மை
அபானாம்சம்	தோற்றாமைக்கூறு
அபிதேயம்	பெயரிட்டு வழங்குதல்
அபிநிவேசம்	மரணபயம்
அபிபவம்	அடக்கம், ஒடுக்கம், கீழ்ப்படுத்தல்
அபிபூதம்	அமிழ்த்தப்பட்டது
அபிப்ராயம்	உட்கருத்து
அபியுபகம்	அங்கீகாரம்
அபிவியக்தி	வெளிப்படுதல்
அபிவியங்கியம்	வெளிப்படுத்தப்படுவது
அபிவியஞ்சகம்	வெளிப்படுதல், வெளிப்படுத்துவது
அபின்னம்	வேறுபடாதது
அபேட்சை	அவா, விருப்பம், நோக்கம்
அபௌருஷேயம்	மனிதனால் செய்யப்படாதது
அப்பியாந்தரம்	உள்ளே

அப்பு	நீர்
அமுத்திரம்	அவ்வுலகம்
அமுர்தம்	வடிவம் இல்லாதது
அம்சம்	கூறு
அம்சி	கூற்றை உடையது
அலாதி	தனி
அவகாசம்	இடம்
அவச்சின்னமான	அளவுபடுத்தப்பட்ட
அவதாரணம்	நிச்சயம், துணிவு
அவதி	முடிவு
அவபாசம்	தோற்றம்
அவயவம்	உறுப்பு
அவயவி	உறுப்பு உடையது
அவசேஷம்	எஞ்சுதல்
அவாங்மனோ கோசரம்	மனோ வாக்கிற்கு எட்டாதது
அவாந்திர (திசை)	மத்திய திசைகள்
அவிகீதம்	பழிப்பில்லாதது
அவிநாபாவம்	இன்றியமையாதது
அவேது	ஏது இன்மை
அவ்வியவகிதம்	மறைப்பின்றிய
அவ்வியாப்தி	தனது இலக்கியத்தின் ஏகதேசத்திருப்பது
அவிர்த்தி	பிறிதொன்றில் இருத்தல் இன்மை (எந்த சம்பந்தமும் இன்றியது)
அழிவுபாட்டபாவம்	பின்னின்மை
அற்பீயத்துவம்	அற்பம்
அனதிகதம்	அறியப்படாதது
அனவஸ்தா தோஷம்	வரம்பின்மை

அனுக்கிரகம்	அருள்செய்தல்
அனுபபத்தி	பொருந்தாமை,சம்பவியாமை
அனுவர்த்தனம்	பிரவேசம்
அஜகத் லட்சணை	விடாத லட்சணை
அஸ்தம்	கரம், கை
அஸ்தி	இருத்தல், எலும்பு
அஸ்தூலம்	பருமன் இல்லாதது
அஸ்மிதை	சாமானிய அகங்காரம்
ஆகந்துகம் .	போக்குவரவுடையது, ஒன்றன் தருமம் மற்றொன்றில் ஏறதல், செயற்கை
ஆகரம்	தோண்டுதல்
ஆகரஜம்	பூமியைத் தோண்டுவதால் கிடைப்பது
ஆகாமி	இனிவரும்
ஆகாரம்	வடிவம்
ஆகுஞ்ஜனம்	வளைதல்
ஆக்கிரகம்	மேற்கொள்ளல்
ஆக்கிராணம்	முக்கு
ஆசங்கை	ஐயம்
ஆசத்தி	அண்மை
ஆச்சாதனம்	மறைத்தல்
ஆசியம்	பரிகாசம்
ஆசிரியம்	இருப்பிடம்
ஆதுனிக	நவீன
ஆந்தரம்	உள்ளே
ஆபத்தி	அடைவு
ஆப்தன்	உண்மை கூறுவோன்
ஆப்பியம்	அசையத் தகுந்தது

(புத்தியில்)ஆருடமாகாது	(புத்தியில்) ஏறாது
ஆர்த்திக்யம்	பொருள் சார்பினது
ஆர்ஜவம்	நேர்மையான (நடை)
ஆலசியம்	சோம்பல்
ஆலம்	ஆகாயம்
ஆலம்பனம்	தியானம்/உபாசனை
ஆலோகம்	ஒளி
ஆலோபம்	தீபம்
ஆவரணம்	மறைப்பு
ஆவரித்தல்	மறைத்தல்
ஆவாரகம்	மறைப்பு
ஆவிர்பவித்தல்	வெளிப்படுதல்
இதமாகார	இஃதெனும் வடிவம்
இந்தனம்	எரிபொருள்
இப்பி	கிளிஞ்சல்
இராகம்	திடவாசை (பேராசை)
இராஸன	ரஸனேந்திரிய
இரேதசு	வீரியம்
இலிங்கம்	குறி, அடையாளம்
இலட்சியார்த்தம்	ஆகபெயர்ப் பொருள்
இலயம், லயம்	ஒடுக்கம், அழிவு
இலௌகீகம்	உலக நடை
உசுவாச நிவாசம்	மூச்சுவிடல்
உத்கர்ஷ அபகர்ஷ	உயர்வு தாழ்வு
உத்கிருஷ்ட	உயர்ந்த
உத்தரோத்தர	பின் பின்
உத்பீஜம்	(பூமியைப்பிளந்து)விதை முதலியவற்றில் பிறப்பன

உபோற்காதம்	சொல்லத்தக்க பொருளைப் புத்தியில் கொண்டு, அதன் பொருட்டு வேறு பொருளைக் கூறுதல்
உச்சாஸ்திரிதம்	சாஸ்திரத்தை மீறியது
உபபத்தி, உபசந்நத்துவம்	சரணம் அடைதல்
உபராமம்	ஒய்வு
உபலட்சணமாக	இலக்கணையால் கொள்வதாக
உபலத்தி	விளக்கம், விளங்குவது
உபாதானம்	முதல்
உபாந்திய	ஈற்றயல்
உபேட்சை	விருப்பு வெறுப்பு இல்லாத நொதுமல் நிலை
உற்பாத்தியம்	உண்டு பண்ணத் தகுந்தது
உற்போதகம்	வாசனையை எழுப்புவன
ஏகபவிக வாதம்	மோட்சத்திற்கு சாதனமான கர்மத்தைச் சொல்லுதல்
ஓதப்புரோதாவம்	குறுக்கு நெடுக்குத் தன்மை
ஓஷதி	தாவரம்
ஔதர்யம்	வயிற்றில் உள்ளது
ஔபாதிகத் தன்மை	உபாதியினால் ஆகும் தன்மை
ஔபாதிக லயம்	உபாதியின் லயத்தோடும் கூடிய லயம்
கடஅவச்சின்ன	கடத்தோடு கூடிய
கதநம்	சொல்லல்
கநநம்	புதைத்தல்
கபாலம்	ஓடு
கமனம்	நடத்தல்

கர்த்தவ்வியிசம்	செய்ய வேண்டியதாம்
கர்த்தவ்யம்	செய்யத்தக்கது
கர்த்தா	செய்பவன்
கர்ம கர்த்திரு	கர்மத்தைச் செய்பவன்
கர்மஜம்	கர்மத்தால் உண்டானது
கர்ஷணம்	உழுதல், பிளப்பு
கலக்கிரக ஞாயம்	தொண்டையைப் பிடித்தல் எனும் ஞாயம்
கல்லோலங்கள்	அலைகள்
கவருடை	நாநா கூறுபாடு உடைய
களகம்பளம்	அலைதாடி (பசுவுக்கு)
கனிஷ்ட	அதம
காட சுழுத்தி	அழுந்திய உறக்கம்
காரியபர	தொழில் மேற்றாய
காரியாபி முகமாகுதல்	காரியத்திற்கு எதிர்முகமாகுதல்
கிஞ்ஞிஞ்சர்	அற்ப-சிற்றறிவு உடையவர்
கியாதி	புத்தி
கிரந்தம்	நூல்
கிரந்தி	முடிச்சு
கிராஹகம்	கவருவது
கிராஹ்யம்	கவரப்படுவது
கிரியமாணம்	ஆகாமியம்
கிருகம்	வீடு
கிருசம்	இளைப்பு
கிருதநாசம்	செய்த புண்ணியபாவம் அனுபவம் இன்றிகெடுதல்
கிருதார்த்தன்	செய்ய வேண்டியதை செய்து முடித்து அடைய வேண்டியதை அடைந்தவன்
கிருதோபாசனன்	ஞானத்திற்கு முன்

	சகுணப்பிரமத்தின் சாட்சாத் கார பரியந்தம் உபாசனை உண்டாகி இருப்பவன்
கிருத்தியம்	ஸ்நான, சந்தியா வந்தனம் முதலிய கருமங்கள்
கிருத்திரிம ஆஸ்தை	கற்பித சத்திய புத்தி
கிலேசம்	துன்பம்
குசலத்தன்மை	சாமர்த்தியம்
குடம்மை	கூடு
குட்டியம்	சுவர்
குணி	குணத்தை உடையது
குப்ஜம்	வளைவு
கைவல்யம்	மோட்சம்
கோசகாரப்புழு	பட்டுப்பூச்சி
சககாரி	துணை
சங்கம்	கூட்டம்
சங்கரம்	கலப்பு
சங்காரம்	அழித்தல்
சங்கிரகம்	சுருக்கம்
சங்கியை	எண்
சங்கோசம்	குவிவு
சசவிஷாணம்	முயல் கொம்பு
சடர்	முகத்துக்கு எதிரே பிரியமாகவும் பின்னால் புறம் கூறுபவன்
சடூர்மிகள்	பசி,தாகம்,சோகம், மோகம்,ஜரை,மரணம் இவைகள்
சட்சு	கண்
சதசத்து	இருப்பதும் இல்லாததும்

சத்தாந்தரம்	வேறு சத்தத்தை
சத்து	இருப்பது
சப்தஜம்	சத்தத்தால் பிறந்தது
சமநியத	ஒத்து உடன் நிகழும்
சமவாயி	முதல்
சமவேதித்து	ஒற்றிற்று
சமானவிபக்தி	ஒரு வேற்றுமை
சமித்து	விறகு
சமுச்சயம்	கலப்பு
சம்சயம்	சந்தேகம்
சம்சர்க்கம்	சம்பந்தம்
சம்ஞி	பொருள் (அர்த்தம்)
சம்ஞை	சொல்
சம்வத்ஸரம்	ஆண்டு
சம்வர்ஜனம்	பிரளய காலத்தில் விலயம்
சம்வித்	ஞானம்
சம்ஸ்காரம் உற்பத்தமாகின்றது	நினைவு நிகழ்கின்றது
சரம க்ஷணம்	கடைசிக்கணம்
சராயுஜம்	கருப்பையில் பிறப்பன
சருமம்	தோல்
சர்க்கம்	சிருஷ்டி
சர்வ கருத்துவம்	எல்லாவற்றையும் செய்யும் தன்மை
சர்வ சக்தித்துவம்	எல்லா வல்லமையும் உடைய தன்மை
சர்வஞ்ஞத்துவம்	எல்லாவற்றையும் அறியும் தன்மை
சர்வநியந்திருத்துவம்	எல்லாவற்றையும் நியமிக்கும் தன்மை
சர்வாந்திரியாமித்து	எல்லாவற்றினுள்ளும்

வம்	இருக்கும் தன்மை
சர்வேசுரத்துவம்	எல்லாவற்றையும் ஆளும் தன்மை
சலநாத்மகம்	அசைவு, புடைப்பெயர்ச்சி
சவ்வியபிசாரம்	பிறழ்வுடையது (அநைகாந்திகம்)
சவிஷயகம்	பிரத்தியட்ச விஷயம்
சற்பிரதிபக்கம்/ பட்சம்	மறுதலை உடையது
சனாயு	நரம்பு
சன்னிகர்ஷம்	சம்பந்தம், சேர்க்கை
சாகசக்கியாகார	இடைவிட்டு ஒளிர்தல்
சாங்கரியம்	கலப்பு
சாட்சாத்	நேரே
சாட்சாத்கரித்தல்	அனுபவித்தல்
சாதர்மியம்	ஒத்த வடிவம்
சாதிருசியம்	ஒப்புமை
சாத்தியம்	துணிபொருள்
சாத்தியோலப்தி கதனம்	சாத்தியம் காணப்படுவதாகக் கூறல்
சாப்த போதம்	சொல்லுணர்ச்சி
சாமக்கிரி	சாதனம்
சாமானாதி கரணியம்	ஒரு நிலைக்களம்
சாம்சித்திகம்	இயல்பாய் உள்ளது
சாம்ய அவத்தை	சமமான அவத்தை, கலப்பு அவத்தை
சாவதானம் (மனம்)	ஏகாக்கிர (மனம்)
சாவயவம்	உறுப்பு உடையது
சாவயவநிரவயவம்	உறுப்பு உடையதும் உறுப்பு இல்லாததும்
சான்மகம்	ஆன்மாவோடு கூடியது

சாஸ்திரிதம்	சாஸ்திரத்தில் அடங்கியது
சிங்குவை	நாக்கு
சித்தார்த்தபர	நிகழுந்ததன் மேற்றாய
சிராவியமா	கேட்கப்படுவதாய் இருக்கிற
சிருஷ்டி	படைத்தல்
சுகதர் (சௌகதர்)	யோகசாரர்
சுபாவமாக சித்தித்த	இயல்பாக பெறப்பட்ட
சுருதி	வேதம்
சுரோத்திரம்	காது
சுவ (சுய)	தனது
சுவதந்தரம்	சுதந்தரம்
சுபட்சதாபநகீனமாய்	சுபட்சத்தை ஸ்தாபித்தல் இன்றி
சுவநிர்விருத்தி	ஆத்மாவினிடத்துப் பிரியம்
சுவவியாகாத	தனக்கு விரோதமான
சுவார்த்த	தன்பொருட்டு
சுவேதஜம்	வியர்வையில் பிறப்பன
சுழுத்தி	ஆழ்துயில்
சேதனம்	அறிவு
சேஷம்	மிச்சம்
சைதன்னியம்	அறிவு
சையோகம்	சேர்க்கை
சையோகஜம்	கூட்டத்தால் பிறந்தது
சொப்பனம்	கனவு
சோகித்தல்	இரங்குதல்
சோத்த	சுத்த
சோபாதிகம்	உபாதியோடு கூடியது
ஞப்தி	அறிவு
ஞாதசத்தை	சாட்சி பாஸியத்தன்மை

ஞாதுரு	காண்பான்
ஞானம்	காட்சி
ஞேயம்	காணப்படும் பொருள்
தண்டுலம்	அரிசி
தந்துவாயன்	நெய்வோன்
தப்தாய பிண்டம்	காய்ந்துள இரும்பு
தர்மி	தர்மத்தை உடையது
தவனம்	துன்பம்
தற்பரனாய்	கருத்து உள்ளவனாய்
தற்புணர்	தன்னை அடைந்த
தனு	உடம்பு
தாதாத்மியம்	அபேதம் (ஒற்றுமை)
தாரதம்மியம்	ஏற்றக்குறைச்சலான
தாரை	தொடர்ச்சி
தார்க்கீகர்	நையாயிகர்
தாலம்	பூமி
தாற்பரியானுபபத்தி	தாற்பரிய உணர்வு நிகழாமை
தாஷ்டாந்தம் (உவமேயம்)	திருஷ்டாந்தத்தினால் சித்தித்த பொருள்(சித்தாந்தம்)
திகம்பரர்	சமணர்
திதிஸ்தாபகம்	நிலைபெறுதல்
திரயம்	மூன்று
திரஸ்காரம்	அமிழ்த்தல், தாழ்த்தல், கீழ் அமரச் செய்தல், இகழ்ச்சி
திருக்கு	அறிவு
திருசியம்	அறியப்படும் பொருள்
திருதி	தைரியம்
திருஷ்டி	பார்வை

திருஷ்ட நஷ்ட	காணும்போதே அழியும்
திருஷ்டம்	பார்க்கப்பட்டது
திருஷ்டாந்தம் (உதாரணம்)	உவமானம் - வாதி பிரதிவாதிகள் இருவருக்கும் சம்மதமானது
திரோபவம்	மறைத்தல்
தீனத்துவம்	இஷ்டம்
தேசம்	இடம்
தேயு	நெருப்பு
துச்சம்	வெறுமை, பாழ்
துர்லபம்	கிடைத்தற்கு அரியது
துவக்கு	தோல்
துவம்சம்	அழிவு
துவயம், துவைதம்	இரண்டு
துவாச	தொக்கிந்திரிய
துவேஷம்	குரோதம் (வெகுளி)
துவைத நிஷேதம்	மாயா பிரபஞ்சமாகிய துவைதம் உண்மையில்லை
துஷ்டி	கிடைத்தது கொண்டு மகிழ்தல்
ந இதி	இது அல்ல
நாநா	பல
நபாதி	காணப்படவில்லை, விளங்கவில்லை
நாஸ்தி	இல்லை
நிக்கிரகம்	அடக்குதல்
நிக்கிரத்தானம்	தோல்விக்கு ஏது
நித்தியம்	அழியாதது
நிமிஷாவசரம்	கண் முடும்காலம்
நியதமாய்	இன்றியமையாதது
நியாயம்	திருஷ்டாந்தம்

நியூன	குறைவு
நிரங்குசம்	தடையற்ற
நிரவயவம்	உறுப்பு இல்லாதது
நிராலம்பம்	பற்றுக்கோடு இல்லாதது
நிருபாதிகம்	உபாதி இல்லாதது
நிரோதம்	ஒடுங்குதல், தடை
நிர்லேபம்	பற்றற்றது
நிர்விகாரம்	மாறுபாடில்லாத/ கிரியை இன்றிய
நிவாத	அசைவில்லாத
நிஷேதம்	நீக்கம்/விலக்கம்
நேதி நேதி	இது அன்று இது அன்று
நேதித்தல்	தள்ளுதல்
நைமித்திகம்	நிமித்தத்தால் உள்ளது
படுத்துவம்	தெளிவு
பச்சாத் காலம்	பிற்காலம்
பதபாளி	சொற்களின் வரிசை
பரஸ்பரம்	ஒன்றற்கொன்று
பராமரிசம்	குறி ஆராய்ச்சி
பரார்த்த	பிறர்பொருட்டு
பரார்(த்)தம்	பெரிய எண்
பரிசம்	தொடுதல், தீண்டுதல்
பரிசிரமம்	துக்கம்
பரிச்சேதம்	எல்லை (அ) முடிவு
பரிசேஷம்	ஒழிபு
பரிமாணம்	அளவு
பரியவசானம் ஆதல்	முடிவு பெறுதல்
பல வியாப்தி	சீவனுக்கு விஷயமாதல்
பாகச	பாகத்தால் உண்டாய

பாகத்தியாக லட்சணை	விட்டு விடாத லட்சணை
பாகியம்	வெளியே
பாணி	கை
பாதிக்க	பொய்யென்று நிச்சயிக்க
பாதிதம்	மறுப்புடையது
பாத்திய பாதக பாவம்	வாதிக்கப்படுவது வாதிப்பது எனும்தன்மை
பாயுரு	குதம்
பார்த்திவத்வம்	பிருதிவி கூறின் தன்மை
பாதிதானுவிருத்தி	பொய் என்று நிச்சயிக்கப்பட்ட பின் நிகழும் விருத்தி
பாவம்	உள்ளது
பாவாத்துவைத பரத்துவம்	அத்துவிதம் உள்ளது என்னும் மேன்மை
பாஷ்யம்	விருத்தி உரை
பிரகடித்திருத்தல்	வெளிப்பட்டிருத்தல்
பிரகிருதத்தில்	தொடங்கிய அர்த்தத்தில்
பிரகிருஷ்டம்	மிக்க
பிரசிதில	நெருக்கமாய் இராத
பிரதக்துவம்	ஒரு வேற்றுமை
பிரதிசர்க்கம்	உபசிருஷ்டி
பிரதிபத்தி	விவாதம்
பிரதிபந்தம்	தடை
பிரதிபாதகம்	கூறுவது
பிரதிபாதகபாவம்	சொல்லப்படுவது, சொல்வது எனும் தன்மை
பிரதிபாத்தியம்	கூறப்படுவது
பிரதியவஸ்தானம்	எதிர்த்து வருவது
பிரதியோகி	எதிர்மறை

பிரதீதி	தோற்றம்
பிரதி(ட்)சேபம்	மறுப்பு, விரோதம்
(அகம்)பிரத்தியம்	(யான் எனும்) உணர்ச்சி
பிரத்தியவாயம்	பாபம்
பிரத்துவம்சாபாவம்	பின்னின்மை
பிரமாணம்	அளவை, காட்சி
பிரமாணிகத்வத்துவம்	பிரமாணத்தை உடைத்தாய் இருக்கும் தன்மை
பிரமாதா	காண்பான்
பிரமேயம்	காணப்படும் பொருள்
பிரமோஷம்	லோபம்
பிரமை	பிரமாணத்தால் உண்டாகும் ஞானம்
பிரம்சம்	நழுவுதல்
பிரயோஜ்ஜியம்	காரணத்தால் ஆகியது
பிரவாகம்	வெள்ளம்
பிராகபாவம்	முன்னின்மை
பிராக்சித்தம்	முன் பெறப்பட்டது
பிராசரணம்	நிமிர்தல்
பிராதீதகம்	தோற்றல் மாத்திரம்
பிராந்தி	மயக்கம்
பிராபகன்	பெறுபவன்
பிராப்பியம்	பேறு
பிரியதமன்	அதிகப் பிரியன்
பிருதக்தத்வம்	வேற்றுமை
பிருதிவி	பூமி, மண்
பிரேரித்தல்	அழைத்தல்
பிரேரிப்பவன்	ஏவுபவன்
பிரௌடிவாதம்	மேன்மையாகச் சொல்லுதல்
பின்னம்	வேறுபட்டது

பின்னாபின்னம்	வேறுபட்டதும் வேறுபடாததும்
பிருதக்கு	வேறு
பீதத் தன்மை	பொன்மை
பீஜம்	விதை
புநருக்தி தோஷம்	கூறியது கூறல்
புரோட்சணை	தெளித்தல்
பூயத்துவம்	அதிகம்
பூத சென்மங்கள்	கடந்து போன பிறவிகள்
பூர்வபூர்வ	முன்முன்
பூஜகன்	பூஜிப்பவன்
பூஜ்யன்	பூஜிக்கப்படுபவன்
பூஜ்ஜிய	பூஜிக்கப்படும்
பேத அக்கிரகம்	கிரகியாமை
போகம்	சுக துக்க அனுபவம்
போக்கியம்	அனுபவித்தற்குரிய பொருள்
போக்துரு	போகத்தை அனுபவிப்பவன்
போத்திய	அறியப்படுதல்
பௌமம்	மண்ணில் உள்ளது
பௌருஷேயம்	மனிதனால் செய்யப்பட்டது
மதாந்தரம்	வேறு மதம் அல்லது அபிப்ராய பேதம்
மர்க்கடம்	குரங்கு
மஹாசனத்துவம்	அடுக்களை தன்மை
மாத்தியமிகர்	பௌத்தர்
மாயாமயம்	மாயையின் காரியம்
மாயிக	மாயையின் காரியம்
மார்ச்சாலம்	பூனை
மிசிரம்	கலப்பு

மீமாம்சை	ஆராய்ச்சி
முகசும்பன்	முத்தமிடுதல்
முர்த்தம்	திடமான
மோத்தல்	முகர்தல்
யோஜகம்	காரணம்
ருதம்பரை	மறைந்துள்ளவைகளைக் காணும் உண்மை
ரூடி	இடுகுறி
லுப்தமாய்	மறைந்து
லோசனம்	கண்
வந்தியா புத்திரன்	மலடி மகன்
வர்த்தமானம்	நிகழ்காலம்
வனிதாதி	மனைவி மக்கள் முதலிய
வன்னி	நெருப்பு
வஸ்து	பொருள்
வாசாரம்பணம்	வாக்கின் காரியம்
வாச்சியார்த்தம்	இயற்பெயர்
வார்த்திகம்	செய்யுள் வடிவாய் உள்ள உரை
விகாசம்	விரிவு
விக்கிரகம்	தொகை உடையனவும் வேற்றுமையை ஈறாக உடையன வும் ஆகிய பதங்களுக்கு ஏற்ற அர்த்தத்தை அனுசரித்து அவற்றை வேறு வேறாக்கி அறிவித்தல்
விக்கினம்	இடையூறு
விசுவவிகிருதி	உலகநிலை
விட்சேபம்	தோற்றம்
விதர்மம்	வேற்றியல்பு உடையது

விதிவத் உபசந்நத்துவம்	விதிப்படி சரண் அடையும் தன்மை
விதேயம்	விதி சார்பினது
வித்துவேஷம்	விசேஷ வெறுப்பு
விநாசம்	அழிவு
விபாகம்	பிரிவு
விபாகஜம்	பிரிவால் பிறந்தது
விப்பிரலம்பகத்தன் மை	வஞ்சகத் தன்மை
விமுக்தன்	விடுபட்டோன்
வியக்தி	சாதிக்கு ஆசிரியமாய் உள்ளது
வியங்கியம்	குறிப்பு
வியதிகரணத்தன்மை ம	வேற்று நிலைக்களத்திருத்தல்
வியதிரேகம்	எதிர்மறை
வியபிசாரம்	பிறழ்ச்சி
வியபிதேசம்	பெயர்
வியயம்	குறைவு நிறைவு
வியவதானம்	தேசம், காலத்தால் மறைப்பு உடையது
வியவஹிதம்	மறைப்பு உடைய பொருள்
வியாகாதம்	விரோதம்
வியாப்பியம்	உள்ளடங்கிய, அடங்கும்
வியாவர்த்தகம்	வேறு பிரித்தறிதல்
வியுத்பத்தி	விரிதல்
விராகம்	ஆசையின்மை, வைராக்கியம்
விராத்தியத்தன்மை	துர்பிராமணத்தன்மை
விருத்தம்	மாறுகொள்வது
விருத்தி வியாப்தி	விருத்திக்கு விஷயமாதல்

விலசம்	நாசம்
விலட்சணம்	வேறுபாடு
விலம்பம்	தாமதம்
விலம்பமின்றி	ஒரு தொடராக விரவி
விவட்சிதம்	கருத்து
விவிதம்	நாநா
விவேகம்	பகுத்தறிதல்
விவேசனம்	வேறுபடுத்தி அறிதல்
விஷம	வேறாய
விஷாதம்	துன்பம்
வேத்தியத்துவம்	அறியப்படும் தன்மை
வைகல்யம் (விலகம்)	குறைவு
ஜகதஜகல் லட்சணை	விட்டு விடாத லட்சணை
ஜகத் லட்சணை	விட்ட லட்சணை
ஜகந்நியம்	தாழ்ந்தது
ஜரை	கிழத்தனம்
ஜனகம்	உண்டாக்குவது
ஜன்யம்	உண்டாவது
ஜாக்கிரம்	விழிப்பு
ஜிஞ்ஞாசை	அறியும் வேட்கை
ஸாதி (என்பது)	உற்பத்தி உடையது
ஸாதி ஸாந்தம்	ஆதி உடையதும் அந்தம் உடையதும்
ஸாந்தம் (என்பது)	அந்தம் உடையது
ஸாம்சம்	அம்சத்தோடு கூடியது
ஸ்தம்பம்	கர்வம்
ஸ்தாணு புருஷன்	கட்டையில் கள்வன்
ஸ்திதி	காத்தல்
ஸ்திரஸ்தாயி	அசையாதது

ஸ்துாணா	கம்பம்
ஸ்பாவிகம்	இயல்பு
ஸ்பூர்த்தி	விளக்கம்
ஸ்மர்யமாண	ஸ்மரிக்கப்படும்
ஸ்மிருதி	நினைவு
ஸ்வஸம் வேத்ய	தன்னால் அறியப்படுதல் தன்மையாகிய
ஸ்வஸ்த சித்தம்	வியாகூலம் இன்றிய மனம்
ஹர்ஷம்	மழை


ஸ்ரீமத் அமலானந்த சுவாமிகள்